# உயிர் வளர்(த்)தேனே



ஜெய்சக்தி

முதற் பதிப்பு : டிசம்பர், 2011
உரிமை : ஆசிரியருக்கு

- Title : UYIR VALARTHEYNAE
- By : Jeysakthi
- First Edition : December, 2011
- Paper : Book Print 11.6
- Total No. of pages : 224

விலை : 100/-

திருமகள் நிலையம்
சுகான்ஸ் அபார்ட்மெண்ட்ஸ்,
எண்: 13, சிவப்பிரகாசம் சாலை,
தியாகராய நகர், சென்னை - 600 017.
தொலைபேசி: 24342899, 24327696
e-mail: enquiry@thirumagalnilayam.com

Typesetting : RVK DESIGNERS,
Chennai - 2.
Mobile: 9710329866

Printed at : NOVENA OFFSET PRINTING CO., Chennai - 5 ✆ 28446166,

16226

# உயிர் வளர்[த்]தேனே

## அத்தியாயம் - 1

நல்ல சூழ்நிலை! இனிமையான தட்பவெப்ப நிலை!

சுபாஷ் காரை ஓட்டிக் கொண்டிருந்தான். சுற்றிலும் கண்களை ஓடவிட்டான். இளங்காற்று அவனை தழுவிச் சென்றது. இதற்காகவே ஏ.சி.யை ஆஃப் செய்துவிட்டு ஜன்னல்களை திறந்து விட்டிருந்தான். லேசாய் விசிலடித்துக் கொண்டே காரை ஓட்டிக் கொண்டிருந்தான்.

எப்போதாவது இப்படி அவன் 'மனதிற்கு மாற்றம் வேண்டும்' என நினைக்கும் போது, காரை எடுத்துக் கொண்டு வெகுதூரம் ஓட்டிவிட்டு வருவான். அப்படி அவன் இன்றைக்கு கோயம்புத்தூரிலிருந்து கல்லாறு வரைக்கும் சென்று விட்டு வரலாம் என்று எண்ணிக் கொண்டு புறப்பட்டிருந்தான்.

மேட்டுப்பாளையத்தைத் தாண்டி, ஊட்டிக்குச் செல்கிற அந்த பகுதியிலே இரண்டு புறமும் பாக்கு மரங்கள் நிறைந்திருக்கக் கூடிய அந்தத் தோப்புகளின் வழியாக செல்லுவதென்பது அவனுக்கு மிகவும் பிடித்தமான விஷயம்.

கல்லாறு பழப்பண்ணைக்குச் செல்லுவது, கல்லாறு பகுதியில் இருக்கக்கூடிய அந்த சின்ன நீர்வீழ்ச்சியில் துளைந்து விளையாடுவது இதெல்லாம் அவனுக்கு மிகவும் பிடித்தமான விஷயம். ஆனால் அப்படியெல்லாம் போக வேண்டுமென்றால், பெரும்பாலும் நண்பர்களுடன் போவான்.

இன்றைக்கு ஏனோ அவனுக்கு தனியாகக் கொஞ்ச நேரம் 'ட்ரைவ்' செய்ய வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. கிளம்பியிருந்தான்.

மேட்டுப்பாளையம் சாலையில், அதை நான்கு வழிப் பாதையாக மாற்றுவதற்காக, இரண்டு புறமும் மரங்களை வெட்டிப் போட்டிருந்ததை பார்ப்பதற்கு அவன் மனதுக்கு கஷ்டமாக இருந்தது. கோயம்புத்தூரிலிருந்து மேட்டுப்பாளையம் செல்லும் சாலை அவனுக்கு மிகவும் பிடித்தமான சாலை.

சிறு வயதிலே தந்தையோடு பஸ்ஸிலே போயிருக்கிறான், காரிலும் போயிருக்கிறான். பஸ்ஸில் டிரைவருக்குப் பக்கத்தில் எங்காவது அமர்ந்து கொண்டு, பஸ் போகும் போது வேடிக்கை பார்ப்பது அவனுக்கு மிகவும் பிடித்த விஷயம்.

ஏதோ இரண்டு புறங்களிலும் வரிசையாக நிற்கும் புளிய மரங்கள் குனிந்து அவனிடம் உறவாடுவது போலவும், சரசமாடுவது போலவும் உணர்ந்திருக்கிறான்.

இப்போது பாதையை உருவாக்குவதற்காக மரங்களை வெட்டி விட்டார்கள் என்பது அவனுக்குக் கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருந்தது. 'ஒன்றின் வளர்ச்சிக்காக இன்னொன்றை இழக்க வேண்டுமென்பது நியதி போலும்'.

திடீரென சிரித்துக் கொண்டான். என்ன இது? சிந்தனை தத்துவம் பக்கமெல்லாம் போகிறது, என்று மனதை திருப்பி சாலையில் செலுத்தினான். 'சில நேரங்களில் அஃறிணைப் பொருள்கள் கூட நம்மோடு பேசுகிறதோ?' இந்தக் கார் கூட அவனைப் பொருத்த வரைக்கும் அவன் மனதில் நினைத்ததைக் கேட்டுக் கொண்டு போவது போலத்தான் வளைந்து கொடுக்கிறது. இப்படி எதை எதையோ எண்ணிக் கொண்டே, லேசாக விசிலடித்துக் கொண்டு, வலக்கையால் ஸ்டீரியங்கைப் பிடித்துக் கொண்டு இடது கையால் டிவிடி ப்ளேயரை ஓடவிட்டான்.

திடீரென்று நினைவுக்கு வந்தது. தன்னுடைய ஒன்று விட்ட சகோதரி அன்றைக்கு சொல்லிக் கொண்டிருந்தாள்:

'தம்பி எஃப்.எம் மிலே சில நேரத்துக்கு நல்ல நல்ல புரோக்ராம் இருக்குப்பா! ஆனா சில நேரங்கள்ளே சின்டும் முடிஞ்சு விட்றாங்க' என்று.

'அப்படியா என்ன?' என்று இவன் கேட்டான்.

'ஆமாம்! ஒரு தடவை ஒரு கேள்வி கேட்டாங்க. ஒரு பொண்ணுகிட்ட கேட்கிறாங்க. உங்க வீட்ல உங்க கொழுந்தனாருக்குக் கல்யாணம் நடக்குது. அதே சமயத்துல உங்க அண்ணன் பொண்ணுக்குக் கல்யாணம் நடக்குது. எதுக்கு போவீங்க? அப்படீன்னு கேட்கறாங்க.

அதுக்கு ஒரு கிராமத்துப் பொண்ணு சொல்லுது,

'நான் யாராவது ஒருத்தர் கிட்ட பேசி தேதிய மாத்திக்கிற மாதிரி செய்வேன்' அப்படீன்னு சொல்லுது.

'இல்ல, இல்ல, தேதிய மாத்திக்க முடியாது. அப்படியான சூழ்நிலை. நடத்தியாகணும்னு வெச்சுக்கங்க. என்ன பண்ணுவீங்க?' அப்படீன்னு கேட்டா அந்தப் பொண்ணு அழகா சொல்லுது 'எங்க அண்ணன் என்னைப் புரிஞ்சுக்குவாங்க. அதனால அண்ணன் வீட்டுக்கு முதல்லயே போய் விளக்கம் சொல்லிட்டு எங்க கொழுந்தனோட கல்யாணத்துக்குதான் நான் முன்னாடி நிற்பேன். ஏன்னா நாங்க தானே அண்ணனும், அண்ணியும் முன்னாடி நின்னு நடத்தணும்', அப்படீன்னு சொல்லிச்சுப்பா.

என்று வியப்பாக பகிர்ந்து கொண்டது நினைவுக்கு வந்தது.

'இப்படியெல்லாம்கூட நிகழ்ச்சியை நடத்துகிறார்களா?'

என்று எண்ணிக் கொண்டே எஃப்.எம்.க்கு பட்டனைத் திருப்பினான்.

அழகான ஒரு குரல். இளம்பெண்ணின் குரல். 'ஹலோ! நான் உங்க பொன்மலர் பேசறேன்' என்று சொல்லிக் கொண்டிருந்தது.

மறுபடியும் விசிலடித்துக் கொண்டான். 'பொன்மலர்! நல்லா இருக்கே!' என்று எண்ணிக் கொண்டான்.

'நான் இப்ப உங்களுக்காக ஒரு அருமையான நிகழ்ச்சி கொடுக்கப் போறேன். நீங்க போன் பண்ணிப் பேசலாம். உங்களுக்கு விருப்பமான பாடல் கேட்கலாம். ஆனா, அந்தப் பாடலை ஏன் கேட்கறீங்கன்றதுக்கு ஒரு விளக்கம் சொல்லணும். செய்யலாமா?' என்று சொல்லிக் கொண்டிருந்தாள்.

அந்தக்குரலில் அவன் வசீகரிக்கப்பட்டவன் போல, தொடர்ந்து அந்த நிகழ்ச்சியைக் கேட்டான்.

அந்த முக்கியமான சாலையில் எதிரே வருகிற வண்டி களையெல்லாம் சமாளித்துக் கொண்டு இந்த நிகழ்ச்சி யைக் கேட்டுக் கொண்டு போவதுகூட ஒரு சுகமாக இருந் தது. குதூகலமாக அந்த பெண்ணிடம் பேசிக்கொண்டிருந் தார்கள்.

குழந்தைகள் கூட 'அக்கா, எனக்கு இந்தப் பாட்டு வேணும்', என்று கொஞ்சலாகக் கேட்க அவள் அதற்கு மேலாக 'ஹாய் செல்லம், குட்டி' என்று ஏதோ பிறந்ததி லிருந்தே பழகிக் கொண்டிருப்பது போல பேசிக் கொண் டிருந்ததைக் கேட்க அவனுக்கு சிரிப்பாக வந்தது.

அருமையாக பெரியவர்களிடம் தகுந்த மாதிரிப் பேசி னாள். குழந்தைகளிடம் அதற்கு தகுந்த மாதிரிப் பேசி னாள். இளம் வயதினர்களிடமும் அதற்குத் தகுந்த மாதிரிப் பேசினாள். அந்தக் குரல் அவனை ஈர்த்தது. லயித்துப் போனான்.



அவர்கள் பேசிக் கொண்டிருந்த விஷயங்களைத் தாண்டியும் கூட அந்தக்குரல் அவன் மனதை என்னவோ செய்தது. பாக்குத் தோப்புக்கள் அடர்ந்திருந்த அந்தப் பகுதியில் ஒரு ஓரமாக காரை நிறுத்திவிட்டு, காலை ஒரு விதமாக நீட்டிக் கொண்டு, சாய்ந்து கொண்டு நிகழ்ச்சி முழுவதையும் கேட்டான்.

'உடனடியாக பதில் சொல்வதற்கும் ஒரு திறமை வேண்டும். அதுவும் வார்த்தைகளில் குளறல் இல்லாமல் மிக அழகாக பதில் சொல்வதும் ஒரு திறமைதானே' என்று எண்ணிக் கொண்டான்.

'சுபாஷ் சந்திர போஸ்' தாத்தா அவனுக்கு வைத்த பெயர். தாத்தா அந்தக் காலத்துத் தியாகியாம். அதனால் மிகவும் பிடிவாதமாக இந்தப் பெயரைத் தான் வைக்க வேண்டும் என்று அப்பாவை வற்புறுத்தி இந்தப் பெயரை வைத்து விட்டார்.

அவனுக்கும் அந்தப் பெயர் பிடித்துத்தான் இருந் தது. 'பரவாயில்லை, ஒரு வீரனின் பெயரைத்தானே வைத்திருக்கிறார்கள்' என்று. நண்பர்கள் வட்டத்தில் அவன் சுபாஷ். வீட்டில் அவன் சந்துரு. இன்னும் சில பேர் போஸ் என்றும் அழைப்பார்கள். 'மூணு பங்கா பிரிச்சு மேயறாங்கப்பா' என்று சொல்லி சிரித்துக் கொள்வான். ஒரு நாள் இல்லாட்டி ஒரு நாள் பாருங்க யார் கிட்ட யாவது 'சுபாஷ் வேற, சந்துரு வேற, போஸ் வேற'ன்னு கலாய்க்கப் போறேனா இல்லையா பாருங்க' என்று நண்பர் களிடம் சொல்லிக் கொண்டு சிரித்துக் கொண்டிருப்பான்.

இப்போது திடீரென்று அவனுக்கு அந்த எண்ணம் தோன்றியது. இதுவரையில் அப்படியெல்லாம் யாரையும் அவன் போய்ப் பார்த்ததில்லை; நிகழ்ச்சிகளில் பேசியது மில்லை. செல்ஃபோனை எடுத்து அந்த எஃப்.எம்.

ரேடியோவில் சொல்லப்பட்ட எண்ணுக்கு ஃபோனை அடித்தான்.

முதலில் அடித்தபோது கிடைக்கவில்லை. 'டப்' பென்று ஆஃப் செய்துவிட்டு சிரித்துக் கொண்டான். 'இது என்ன பைத்தியக்காரத்தனமாக இருக்கிறது. ஏதோ ஒரு குரல் நன்றாக இருக்கிறது என்பதற்காக உடனே ஃபோன் செய்து பேசி விடுவதா? ஏன் பேசினால் என்ன? இதில் என்ன தப்பு இருக்கிறது? ஒரு நல்ல பேச்சை, ஒரு அழகான பெண்ணை, இனிமையான பாடலை, இந்த பாக்கு மரங்களை, இந்த மேலே பறந்து சென்று கொண் டிருக்கக்கூடிய மேகங்களை, நீண்டு கிடக்கிற சாலையை இதையெல்லாம் ரசித்தால் என்ன தப்பு? அது மாதிரித்தான் இதுவும்.' என்று தனக்குத் தானே சமாதானம் சொல்லிக் கொண்டவன், மறுபடியும் ஃபோனை எடுத்தான்.

இப்போது கிடைத்துவிட்டது. 'ஹலோ, நான் சுபாஷ் பேசறேன்' என்று அறிமுகப்படுத்திக் கொண்டான்.

'சொல்லுங்க சுபாஷ்!' என்றாள் அவள் உரிமையாக.

'இத பார்றா, ஏதோ பத்து வருஷம் பழகின மாதிரி ரொம்ப உரிமையா பேரை சொல்லி கூப்பிடறா' என்று எண்ணிக் கொண்டான்.

'நான் எந்த சுபாஷ்? தெரியுங்களா...' என்று கேட்டான். அவள் கலகலவென்று சிரித்து விட்டு, 'எனக்கு எப்படி தெரியும்? நீங்க சுபாஷ்னு சொல்லியிருக்கீங்க. எந்த சுபாஷ்னு நீங்கதான் சொல்லணும்' என்று சிரித்தாள்.

'ஒரு பெரிய பம்ப் செட் கம்பெனி உரிமையாளர் நான்' என்றான். அவளுக்கு அந்தப் பக்கம் சிரிப்பாக வந்தது. 'தாஜ்மஹாலைக் கட்டியவனே நான்தான் என்று கூட நிறையப் பேர் பேசியிருக்கிறார்கள். இவர் அந்த கேஸ் போல இருக்கிறது' என்று சிரித்துக் கொண்டு,



'அப்படீங்களா சார்! ரொம்ப சந்தோஷம் சார், நீங்க லைன்ல வந்தது. என்ன வேணும் சார்? சொல்லுங்க சார்' என்று கேட்டாள்.

'எந்த கம்பெனின்னு கேட்க மாட்டீங்களா?' என்றான் இவன்.

'கம்பெனி பேரா?' உடனே அவளுக்குத் தோன் றியது, 'இலவசமாக விளம்பரம் செய்தது போலாகிவிடும் போலிருக்கிறதே' என்று எண்ணிக் கொண்டவள், 'கம்பெனி பேரா சார்? பெரிய கம்பெனியாச்சே சார். நீங்க எஃப்.எம்.லே விளம்பரமாவே கொடுத்திருவீங்களே சார்.' என்றாள்.

அவன் 'கலீர்' என்று சிரித்து விட்டான். 'பரவா யில்லை. வேலை செய்யிற இடத்துக்கு நல்லா ஜஸ்டிஸ் பண்றீங்க' என்றான்.

அவளும் அந்தப் பக்கம் சிரித்து விட்டு, 'சார், என்ன பாடல் வேணும்னு சொல்றீங்களா?' என்றாள். உடனே இவன் 'என் பெயரே சுபாஷ்ங்க. அதுக்குத் தகுந்த மாதிரியா ஒரு தேச பக்திப் பாடல் வைங்க' என்றான்.

'அப்படியா? வச்சா போகுது. இவ்வளவு தூரம் நீங்க தேச பக்தியை பேசறத பார்க்கும்போது எங்களுக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு சார். நீங்க ஒரு இளைஞர். இளைஞர்களெல்லாம் இந்த மாதிரி தேச பக்தி சம்பந்த மான விஷயங்கள்ல ஈடுபடும்போது நாங்க எல்லோருமே ரொம்ப சந்தோஷப்படறோம்' என்று அவள் அவனுக்குத் தகுந்தாற்போல் பேசிவிட்டு, 'வைக்கப் போறேன். அப்புறம் பார்க்கலாம் சார்' என்று 'கட்' செய்துவிட்டாள். ஆனால் ஒரு தேசபக்திப் பாடலை ஒலிபரப்பினார்கள்.

வைத்ததற்குப் பிறகுதான் அவனுக்குத் தோன்றியது. 'இன்னும் பேசிக் கொண்டே இருந்திருக்கலாம் போல'

என்று. 'என்னடா இது? ஒரு குரல் தன்னை இவ்வளவு ஈர்த்து விடுமா? அந்தக் குரலுக்காக தான் யார் என்பதையெல்லாம் மறந்து... 500 பேருக்கு மேல் வேலை செய்கிறார்கள் தன்னுடைய கம்பெனியில் என்பதை மறந்து... இப்படி ஒரு பெண்ணிடம் போய் விழுவோமா என்ன?' என்று தன் தலையில் தானே செல்லமாய்க் குட்டிக் கொண்டான்.

'அடே சுபாஷ்! போதும்'. நீ நிறைய டார்கெட் வெச்சிருக்கே. நீ அடைய வேண்டிய விஷயங்கள் நிறைய இருக்கு. இப்படி டைவர்ட் ஆயிராதே தம்பி! என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டு காரை எடுத்தான்.

ஆனால் கல்லாறு பழப்பண்ணையில் போய் அந்தத் தனிமையை அனுபவித்துக் கொண்டு சுற்றிக் கொண்டு வந்த போதும் சரி, அந்த கல்லாறு நீர்விழ்ச்சியில் போய் சிறிது நேரம் அந்த பக்கம் அமர்ந்துவிட்டு வந்த போதும் சரி, திரும்ப அந்த பாக்குத் தோப்புக்களின் வழியாக காரை ஓட்டிக் கொண்டு வந்த போதும் சரி, அவன் மனம் ஏனோ அவனிடம் இல்லை. அவனுடைய சிந்தனை எல்லாம் அந்தக் குரலை நோக்கியே சென்று கொண்டிருந்தது.

'பொன்மலர்! எவ்வளவு அழகான பெயர்' என்று எண்ணிக் கொண்டான்.

'என்னத்துக்கு இப்படி யோசிச்சுக்கிட்டு இருக்கிறது? நேராகவே போய் பார்த்தர்லாம்' அன்று முடிவெடுத்துக் கொண்டான். அப்படி முடிவெடுத்துக் கொண்டவுடனேயே மனம் சமாதானமாகியது.

'ஆனால், எப்படி அந்த பெண்ணை சந்திக்கப் போகிறோம்? அந்த சந்திப்பே வித்தியாசமாக இருக்க வேண்டும்' என்றெல்லாம் திட்டமிட்டுக் கொண்டான். அருமையான திட்டம் ஒன்று அவன் மனதில் தோன்றியது. காரை விசிலடித்துக் கொண்டே ஓட்டிக் கொண்டிருந்தான்.



## அத்தியாயம் - 2

'ஏய் சொர்ணா! இன்னிக்கு ஒரு குழந்தை ரொம்ப அழகா கேள்வி கேட்டுச்சு' என்று சொன்னாள் பொன்மலர்.

'அப்படியா?' என்று அவள் சொல்வதை உள்வாங்கிக் கொண்டாள் சொர்ணா. இரண்டு பேரும் உணவு இடைவேளைக்காக அமர்ந்திருந்தார்கள்.

'என்ன கொண்டு வந்தே பொன்மலர்?' என்று கேட்டாள் சொர்ணா.

'நான் என்ன கொண்டு வர்றேன்? வழக்கமான ஸிம்ப்ளிஃபைடு வெர்ஷன். காயெல்லாம் போட்டு, கூட கொஞ்சம் பருப்பு போட்டு, வேக வைச்சு ஒரு வெஜிடெபிள் ரைஸ்' என்று டிஃபன் பாக்ஸை திறந்தாள் பொன்மலர்.

'நீ என்ன செஞ்சு கொண்டு வந்தாலும் நல்லா தாண்டி இருக்கும்.' என்று சிலாகித்துக் கொண்டாள் சொர்ணா.

'உன்னை மாதிரி வெரைட்டியா சாப்பிடறதுக்கு நான் எங்கடி போவேன். ஏதோ அப்பாவோட ஒரே வருமானம். இன்னும் ரெண்டு சிஸ்டர்ஸ் வேற இருக்காங்களே! அதனால அம்மா எப்பப் பாரு 'சிக்கனம், சிக்கனம்' னுட்டு சேமிச்சுக்கிட்டிருக்காங்க.' என்றாள் பொன்மலர்.

'ஒரு வகையில உங்க வீட்டைப் பார்த்தா எனக்கு பொறாமையா இருக்குடி.' என்றாள் சொர்ணா.

'ஏன்? இக்கரைக்கு அக்கரை பச்சை. நீ தினம் ஒரு வண்டியில வந்து இறங்கறதப் பார்த்தா எனக்கு பொறாமையா இருக்கு. ஆனா உனக்கு என்ன எங்க வீட்டப் பாத்து பொறாமை?' என்றாள்.

'இல்ல, எல்லாரும் பொதுப்படையா குடும்பம்னு பார்த்து உழைக்கிறீங்கள்ல. எல்லாருமே உக்காந்து

பொதுவா திட்டம் போடுறீங்க. உங்களுக்குள்ள ஒரு அண்டர்ஸ்டாண்டிங் இருக்குடி. எங்க வீட்ல அது இல்லடி' என்றாள் சொர்ணா.

பொன்மலர் ஒன்றும் பேசவில்லை. இவள் குடும்பத்தை அவள் விமர்சிக்கையில் தான் ஆமென்று சொன்னாலும் சங்கடம், இல்லையென்று சொன்னாலும் சங்கடம். 'ஒரு நம்பிக்கையின் அடிப்படையில் அவளுடைய சங்கடங்களைத் தன்னுடன் பகிர்ந்து கொள்கிறாள். அதை மௌனமாக கேட்டுக் கொள்வதுதான் நல்லது' என்கிற அளவுக்கு அவளுக்குத் தெளிவு இருந்தது.

லேசாகப் புன்னகைத்துக் கொண்டு, தன்னுடைய டிஃபன் பாக்ஸிலிருந்து பாதி காய் சாதத்தை எடுத்து அவளுக்கு வைத்தாள். அவளும் தன் பங்குக்கு அவள் வீட்டிலே இருந்து வந்திருந்த உணவு வகைகளை எடுத்து இவளுக்கு பரப்பினாள்.

'அய்யய்யோ சொர்ணா. எதுக்கு இவ்வளவு?' என்று மறுத்தாள் பொன்மலர்.

'இருக்கட்டும்டி சாப்பிடு. அது மட்டுமில்ல. அன்னைக்கி நீ அந்த எக் ஃப்ரைடு ரைஸ் எங்க வீட்ல செஞ்சிருந்தாங்கல்ல, அது ரொம்ப பிடிச்சிருந்ததுன்னு சொன்னியே, உன் சிஸ்டர்ஸ்க்கு எக் ஐட்டம்ஸ்'னா பிடிக்கும்னு சொன்னியே, அதனால பாரு அந்த ஹாட் பாக்ஸ் நிறைய கொண்டு வந்திருக்கேன். இன்னிக்கு நீ போகும் போது கொண்டு போவியாம்.' என்றாள்.

பொன்மலர் நெகிழ்ந்து போனாள். 'எதுக்குடி உனக்கு சிரமம்?' என்றாள்.

'எனக்கு என்ன சிரமம்? சமையல்காரர் கிட்ட சொன்னேன், அவரு செஞ்சு கொடுத்தாரு'

'இல்ல, உங்க வீட்டில ஏதாவது சொன்னாங்கன்னா?'



என்றவுடனே சொர்ணா குலுங்கி குலுங்கி சிரித்தாள். அவள் ஏன் அப்படி சிரிக்கிறாள் என்பது தெரியாதவள் போல பொன்மலர் அவள் முகத்தை உற்றுப் பார்த்தாள்.

'எங்க வீட்டிலேயா? எங்க அப்பா காலையிலேயே போர்டு மீட்டிங்னு கிளம்பிப் போயாச்சு. எங்க அம்மா ஏதோ லேடீஸ் கிளப் மீட்டிங்னு கிளம்பிப் போயாச்சு. இவ்ளோ பெரிய ஹாட் பாக்ஸ் நிறைய எடுத்துட்டு வந்திருக்கேன்னுகூட அவங்களுக்குத் தெரியாது' என்றாள்.

'யாருக்காகடி உழைக்கிறாங்க? எல்லாமே உனக்காகவும், உங்க அண்ணனுக்காகவும் தானே!' என்றாள் பொன்மலர்.

'லுக்! சமாதானம் செய்யாதே! எங்களுக்குப் பணம் நிறைய இருக்குடி ஏற்கெனவே. நானும், அவனும் என்ன எதிர்பார்க்கிறோம்? கொஞ்சம், கொஞ்ச நேரம் பிரியம். ஒரு அரை மணி நேரம் உக்காந்து பேசலாம்ல. அதுக்கு நேரமில்லை, எங்க அம்மாவுக்கும், அப்பாவுக்கும்.' என்றாள்.

'இல்லடி. உங்க மேல பாசம் இருக்கு. அதனாலதான் அவங்க அப்படி உழைக்கிறாங்க.' என்று இவள் மேலும் சொல்ல.

'நோ. அந்த டாபிக் வேண்டாம். நாம வேற பேசலாம்' என்று சொல்லிவிட்டு, 'ஹேய், இந்த காய் சாதம் நல்லா இருக்கே. என்னென்ன போட்ட?' என்று கேட்டாள்.

'தெரியலடி, கைக்கு கிடைச்சதெல்லாம் போட்டேன். கொஞ்சம் குறுமிளகுப் பொடி, கொஞ்சம் கொத்து மல்லிப்பொடி, அப்படி இப்படின்னு எல்லா பருப்பையும் கொஞ்சம் கொஞ்சம் போட்டேன். எல்லாம் சேர்ந்து என்னமோ ஒரு பிஸிபேளாபாத் மாதிரி ஆயிருச்சு. கடைசியா கொத்தமல்லியை கொஞ்சம் துருவி அதையும் தலை மேல போட்டேன்' என்றாள்.

அவள் சொன்ன விதத்திற்காக சிரித்தாள் சொர்ணா. 'எது தலை மேலடி போட்ட?'

'இதான், இந்த வடிச்சு வைச்ச சாதத்து தலை மேலதான். அது நியூட்ரிஷியஸ்னு எனக்கு தோணுச்சு. இப்படி நம்மளா இம்ப்ரவைஸ்டா பண்ணிக்கணும்' என்றாள்.

சொர்ணா சிரித்தாள்.

அதற்குள்ளாக பொன்மலர் திடீர் என்று நினைவு வந்தவள் போல, 'ஏய் சொர்ணா இன்னிக்கு ஒரு முக்கிய மான விசயம் நடந்தது தெரியுமா?' என்றாள்.

'சொல்லு, சொல்லு' என்று சொர்ணா கேட்க.

'ஏதோ பம்பு செட் கம்பெனியாம்டி, அந்த ஓனர் பேசுனாரு. பம்பு செட் கம்பெனி கூட ஏதோ சொன்னாரே... ஏதோ புஷ்பா, தீபலதா பம்பு செட் கம்பெனின்னோ என்னவோ சொன்னாரு.' என்றாள்.

சொர்ணா சாப்பிடுவதற்குக் கொண்டு போன கையை அப்படியே நிறுத்தினாள். 'யாரு, சுபாஷா?' என்று கேட்டாள்.

'ஆமா. சுபாஷ்தான். ஆனா அவரு கம்பெனி பேரு சொன்னவுடனே எனக்குக் காதுல விழுந்துடுச்சி. ஆனா நான் அதை வந்து அப்படியே கொஞ்சம் மழுப்பிட்டேன். ஏனா அது அட்வர்டைஸ்மென்ட் மாதிரி ஆயிடும்ல' என்றாள்.

'ஹேய், என்ன விளையாடுறியா? சுபாஷ் யாருன்னு தெரியுமா? பெரிய கோடீஸ்வரன்டி. மல்ட்டி மில்லியனர். அந்தாளு எஃப்.எம். ரேடியோவுக்கு ஃபோன் பண்ணினாரா?' என்று ஆச்சர்யப்பட்டாள் சொர்ணா என்கிற சொர்ணபுஷ்பா.



'ஆமாண்டி சொர்ணா' என்றாள்.

'ஓஹோ... என்னமோ விசயம் இருக்குடி' என்றாள் சொர்ணா.

'என்னத்த விசயமிருக்கு. உன் வாய்ஸும், என் வாய்ஸும் பிடிக்குதுன்னு எத்தனை பேர் போன் பண்றாங்க?! அந்த மாதிரிதான்' என்றாள் பொன்மலர்.

'இல்லடி, சுபாஷ் எல்லாம் வந்து பார்க்கிறதே கஷ்டம். அப்பாயின்மெண்ட் கிடைக்கிறதே கஷ்டம். நான் நினைக்கிறேன், அந்த ஆள் உன் வாய்ஸ்லே இம்ப்ரெஸ் ஆயிருக்கார்னு நினைக்கிறேன். ஸம்திங்.. இஸ் தேர்...' என்று இழுத்தாள் சொர்ணா.

'ஏய் சொர்ணா! ப்ளீஸ், என்னைக் குழப்பாதே. எனக்கு இந்த பிரச்சினையே வேண்டாம்.' என்று கொஞ்சம் கலங்கினாற்போல் சொன்னாள் பொன்மலர்.

'சரி, அப்ப ஒண்ணு செய்வோமா?' என்றாள் சொர்ணா.

'என்ன செய்யணும்?'

'இல்லடி, கண்டிப்பா அந்த ஆள் உன்னை மீட் பண்ண வருவாரு. எஃப்.எம். ரேடியோவுக்கு போன் பண்ணிக் கேட்கிறோமே அப்படின்னு நினைக்காம, பேசினார். அப்படின்னா, கண்டிப்பா உன்னை மீட் பண்ண வருவாரு. அப்படி வரும்போது...' என்று இழுத்தாள்.

பொன்மலர் அவளை உற்றுப் பார்த்தாள். 'அய்யோ, எனக்கு இந்தத் தலைவலியெல்லாம் வேண்டாம்டி.' என்றாள்.

'வேண்டாம்தானே!' என்றாள் சொர்ணா.

'ஆமாண்டி, வேண்டாம்,' என்று மறுபடியும் பதை பதைத்தாள் பொன்மலர்.

'அப்படின்னா ஒண்ணு செய்யி, நான்தான் பொன் மலர்னு இன்ட்ரொடியூஸ் பண்ணிடு.'

'அதெப்படி...?' என்று பொன்மலர் இழுக்க,

'ஆமாண்டி, உனக்கு அந்த ஆள் ஃப்ரண்ட்ஷிப் வேண்டாம்கிற. ஐ வாண்ட் டு டாக் டு ஹிம். ஐ வாண்ட் டு ஹேவ் ஹிஸ் ஃபிரெண்ட்ஷிப். நான்தான் பொன் மலர்னு சொல்லிரு. உன் வாய்ஸூம், என் வாய்ஸூம் கிட்டத்தட்ட ஒரே மாதிரிதானே இருக்கு. எத்தனை பேர் நீயின்னு நினைச்சு என்கிட்ட பேசியிருக்காங்க. நான் னு நினைச்சு உங்கிட்ட பேசியிருக்காங்க.' என்றாள்.

பொன்மலர், 'முதல்ல வரட்டும்டி, அப்புறம் பார்க் கலாம்' என்றாள்.

'இல்லடி அவர் கண்டிப்பா வருவாரு.' என்றாள் சொர்ணா.

'சரி, அப்படியே வச்சுக்கலாம்.' என்று பொன்மலர் ஒத்துக்கொண்ட உடனே,

சொர்ணா ஒரு பெருமூச்சு விட்டு விட்டு சொன் னாள், 'பொன்மலர் அவரைப் பொறுத்தவரைக்கும் நான் நிறைய நல்ல விசயங்கள் கேள்விப்பட்டிருக்கேன். 'மேன் ஆஃப் இன்டெக்ரிட்டி'ன்னு சொல்றாங்க. அவர் ஒருவேளை சூஸ் பண்ணி உங்கிட்ட பழகறதுக்கு வந்தார்ன்னா, அது உனக்கு உண்மையிலேயே நல்ல வாய்ப்பு. அவருக்கு ஒருவேளை பிடிச்சு, உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிறேன்னு கேட்டார்னு வெச்சிக்கோ, நீ லைஃப்ல செட்டில் ஆயிருவடீ. யோசிச்சுக்கோ எதுக் கும் என்னை இன்ட்ரொடியூஸ் பண்றதுக்கு முன்னாடி.' என்றாள்.

பொன்மலர், குபீரென்று சிரித்தாள். 'அம்மணி, கோடு போட்டா ரோடு போடறதுங்கறது இதுதான். நான்



சிம்பிளா அவர் ஏதோ எங்கிட்ட பிரியமா பேசினார்னு சொன்னா, உடனே அவருக்கு உன்னைப் பிடிச்சிருக்கு, அவர் உன்னைப் பார்க்கிறதுக்கு வருவாரு. அநேகமா உன்னைக் கல்யாணம் பண்ணிக்குவாரு அப்படீன்னு எவ்வளவு பில்ட் அப் கொடுக்கறடி நீ' என்று பொன்மலர் சிரிக்க,

'இல்ல பொன்மலர், என் மனசுக்குப் பட்டுச்சு. இன்டியூசன்னு சொல்வாங்கள்ல அது மாதிரி. அவருக்கு ஏதோ ஒரு விருப்பம் இருக்கறதுனாலதான், உன்னை வந்து பார்க்க வர்றாருன்னு நினைக்கிறேன்.' என்றாள்.

மறுபடியும் பொன்மலர் சிரித்தாள். 'பார்க்க வர்றாரா? அப்படியெல்லாம் ஒண்ணும் தகவல் வரலடி.' என்றாள்.

'வரும் பாரேன்...' என்று சொர்ணா சிரித்தாள்.

'என்னமோ நீயே சொல்லி அவரை வரச் சொல் லிருவே போல இருக்கு' என்றாள் பொன்மலர்.

'அப்படிதான் செஞ்சாலும் செய்வேன்டி. உனக்கு ஓ.கே.ன்னு சொல்லு. கண்டிப்பா நான் செய்றேன்' என்றாள் சொர்ணா.

பொன்மலர் ஒரு பெருமூச்சு விட்டாள். 'உனக்குத் தெரியும்ல, நான் ஒரு முடிவுல இருக்கேன். இந்த காதல் விவகாரங்கள், இதெல்லாம் எனக்கு வேண்டாம். எனக்கு பின்னாடி ரெண்டு சிஸ்டர்ஸ் இருக்காங்க. அம்மா ஹவுஸ் வைஃப். அப்பாவுக்குக் கொஞ்சம் உடம்பு முடியல. அவர் ஏர்ன் பண்ணிட்டு வர்றத வைச்சு எங்க குடும்பம் ஓடறதே பெரிசு. எவ்ளோதான் நாம பேசினாலும், எத்தனை கதைகள் கேட்டிருக்கோம்டி. இன்னிக்கு சரியா சீர் செய்யலங்கறதுக்காகவே எத்தனை விவாகரத்துக்கள். அதனால எனக்கு ஏ...த்த யாராவது ஒரு ஏழை ராஜ குமாரன் வருவான். பாத்துக்கலாம். அதுக்குள்ள இந்த

ரெண்டு குட்டிகளையும் படிக்க வைக்கணுமேடி' என்றாள்.

'அது சரியாப்போச்சு போ. இப்பதான் ஒருத்தி ஃபர்ஸ்ட் இயர், இன்னொருத்தி செகண்ட் இயர். இவுங் களையெல்லாம் கொண்டு போயி, இனி படிக்க வெச்சு முடிச்சு, அப்புறம் நீ 'ஞானப்பழத்தைப் பிழிந்தெடுத்து' அப்படின்னு பாட்டு பாடிட்டு போக வேண்டியதுதான். இல்லையின்னா 'அறம் செய விரும்பு' அப்படின்னு ஔவையார் மாதிரி நின்னுட்டு கிளாஸ் எடுக்க வேண்டி யதுதான்' என்றாள்.

உடனே முகத்தைக் கவலையாக வைத்துக்கொள்வது போல் வைத்துக் கொண்டாள் பொன்மலர்.

'என்னடி ஆச்சு?' என்றாள் சொர்ணா.

'அப்படி ஆனா இந்த ஆர்.ஜே. வேலை கன்டினியூ ஆகுமாடி? இந்த பார்ட் டைம் ஜாப்பும் போச்சுன்னா எப்படிநீ படிக்கிறது?' என்றாள்.

பொன்மலர் முதுகளை வகுப்புப் படித்துக் கொண் டிருந்தாள். இந்த பார்ட் டைம் ஆர்.ஜே. வேலையில் தான் அவளுக்கு வருமானம். ரேடியோ ஜாக்கி வேலை. இப்போது விடுமுறை என்பதால் பகல் நேரத்திலேயே வந்திருந்தார்கள்.

'அதெல்லாம் கிடைக்கும்டி. அழகான முதுமையான பெண்களெல்லாம் ரேடியோவுல எத்தனை பேர், டி.வி. யில எத்தனை பேர் ப்ரோக்ராம்ஸ் கொடுத்துகிட்டு இருக் காங்க. வி.ஜே.வாக போயிட வேண்டியதுதான். சமையல் கலை சொல்லிக் கொடுக்கலாம், இல்லைன்னா அழகுக் கலை சொல்லிக் கொடுக்கலாம், இல்லைன்னா அனுபவ அறிவு சொல்லிக் கொடுக்கலாம். எவ்வளவு இருக்குடி..' என்றாள் சொர்ணா.



'பரவால்லடி, நீ கொஞ்சம் இன்டெலிஜெண்ட்தான்.' என்று புகழ்ந்தாள் பொன்மலர்.

'இல்லையின்னா உங்கூட உட்கார்ந்து பேசிக்கிட்டு இருக்க முடியுமா? இதப் பாரு. அங்கொண்ணு வழிஞ்சி கிட்டு அங்க இருந்து பாத்துக்கிட்டு இருக்கு பாரு' என்று அந்தப் புறமாக இருந்த எடிட்டரைக் காட்டினாள்.

அங்கே இருந்தாலும் அவரின் கண் முழுவதும் இந்த இரண்டு பெண்களின் மேல்தான் இருந்தது. நல்லவேளை யாக கண்ணாடி தடுத்திருந்ததால், இவர்கள் பேசுவது அவருக்குக் கேட்பதற்கு வாய்ப்பில்லை.

'பாரு. பல்லைக் காமிக்கிறதை' என்று இவள் முணு முணுத்தாள்.

'பேசாம இருடி. நம்ம கெட்ட நேரம். காதுல விழுந் திருச்சுன்னா வம்பு' என்று முணுமுணுத்தாள் பொன்மலர்.

'ஏன்? ஏன் எதுக்கு பயப்படறே? அப்படி ஏதாவது ஆச்சுன்னு வெச்சுக்கோ, இந்த சொர்ணபுஷ்பா மேடத் தோட கம்பெனிக்கு மேடம் போயிருவேன். எம்.டி.யா போயிருவேன். அப்ப உன்ன நான் பி.ஏ.வா கூப்பிட்டுக் கிறேன்' என்றாள்.

பொன்மலர் உண்மையாகவே மகிழ்ச்சியாக சிரித் தாள். 'நிஜமாடி. அப்படி ஒரு வாய்ப்பு கிடைக்குமான்னு நான் எதிர்பார்த்துக்கிட்டுத்தான் இருக்கேன்' என்றாள்.

'உன்னுடைய எம்.பி.ஏ.வை முடிச்சிட்டு வா. அப்ப நான் கண்டிப்பா கூப்பிட்டுக்கிறேன்' என்றாள் சொர்ண புஷ்பா.

'பாக்கலாம்டி. நாளைக்கு என்ன நடக்குதோ?' என்று அவள் பேசி முடிப்பதற்கு முன்பாகவே, எடிட்டர் அந்தப் பக்கமாக இருந்து சைகை செய்து அழைத்தார்.

பொன்மலர் எழுந்து போனாள். 'மேடம் கூப்பிட றாங்க' என்றார்.

அந்த தனியார் சேனலை நிர்வகிக்கின்ற பெண்மணி அவளை அழைத்தார். போனாள் பொன்மலர்.

'பொன்மலர்! என்ன சர்ப்ரைஸ் ப்பா இது' என்று கேட்டார் மேடம்.

'என்ன மேடம்?' என்று இவள் கேட்க, 'இல்ல கோயம்புத்தூரோட முக்கியமான ஒரு புள்ளிப்பா... சுபாஷ் தெரியுமா? சுபாஷ்' என்று கேட்டார் அவர்.

'தெரியும் மேடம்' என்றாள்.

'நீ காம்பியரிங் பண்றதுன்னா, அவங்க ஒரு ப்ரொக் ராம் ஸ்பான்சர் பண்றதுக்குத் தயாரா இருக்காங்களாம்.' என்றார்.

பொன்மலர் புன்னகைப்பதா? வேண்டாமா? என்பது போல விழித்துக் கொண்டு நிற்க, 'என்ன விசயம்?' என்பது போல சொர்ணா வந்தாள்.

'ஏய், நீயும் வா.' என்று அழைத்தார் மேடம். சொர்ணபுஷ்பாவும் போய் அருகில் நின்றாள்.

'உட்காருங்க ரெண்டு பேரும்' என்றார். சொர்ண புஷ்பா வந்ததற்குப் பிறகுதான் தனக்கும் சேர்த்து இருக்கை அளிக்கப்படுகிறது என்பதை பொன்மலர் உணர்ந்து கொண் டாள்.

'என்ன இருந்தாலும் பணத்திற்கு ஒரு மதிப்பு இருக்கத்தானே செய்கிறது' என்று கசப்புடன் உள்ளே புன்னகைத்துக் கொண்டாள்.

'புஷ்பா! இதைக் கேட்டியா? பொன்மலர் ஆர்.ஜே.வா இருந்து ஒரு ப்ரொக்ராம் நடத்தறதுன்னா ஸ்பான்சர் பண்றாங்களாம். மிஸ்டர். சுபாஷ் தெரியும்ல?' என்றார்.



'ஆமா' என்றாள் சொர்ணபுஷ்பா.

'இன்ஃபாக்ட், அவர் வந்து பொன்மலரை சந்திக் கணும் அப்படிங்கறார்' என்றார் மேடம்.

சொர்ணபுஷ்பா குறும்பாகச் சிரித்துக் கொண்டு, பொன்மலரைப் பார்த்தாள். சற்று நேரம் பேசிவிட்டு வெளியே வந்தார்கள்.

'என்னடி? அதே முடிவுலதான் இருக்கியா?' என்று கேட்டாள்.

'எதே முடிவுல?'

'இல்ல, சுபாஷை நீ சந்திக்கிறாயா? இல்லை நான் சந்திக்கட்டுமா?' என்று கேட்டாள் சொர்ணபுஷ்பா.

'நீயே சந்திச்சுக்கடி' என்றாள் பொன்மலர் அசிரத் தையாக. 'ஆனா அதுக்கு மேடம் ஒத்துக்கணுமே! இந்த ஆள் மாறாட்டத்துக்கு' என்று பொன்மலர் கேட்டாள்.

'அதை என்கிட்ட விடு. நான் பாத்துக்கறேன். மேடம் கிட்ட பேசிக்கிறேன்' என்றாள்.

என்ன பேசினாளோ தெரியவில்லை. ஒருமணி நேரம் கழித்து அங்கே வந்த சுபாஷிடம் சொர்ணபுஷ்பா தான் பொன்மலர் என்று அறிமுகப்படுத்தப்பட்டாள்.

அவன் கண்கள் அவளை மேலிருந்து கீழ்வரையிலும் ஒருமுறை பார்த்து ஓய்ந்தது.

சொர்ணபுஷ்பா லேசான ஒரு சிலிர்ப்புடன், 'வணக் கம் சார்' என்று, அந்த அலுவலக அறைக்குப் பக்கத் திலிருந்த சோபா ஒன்றில் அமர்ந்தாள். எதிரிலே அவனும் அமர்ந்தான்.

புதியதொரு விளையாட்டு அங்கே துவங்கியது.

## அத்தியாயம் - 3

கமலாட்சி பூஜை முடித்து விட்டு வெளியே வந்தார்.

'ஏம்ப்பா வீராசாமி' என்று அழைத்தார்.

சமையல்கார வீராசாமி ஓடி வந்தார்.

'என்ன சொன்ன? நீ என்னமோ ஆரம்பிச்ச. நான் அதுக்குள்ள உள்ள போயிட்டேன்' என்றார் கமலாட்சி.

'இல்லம்மா... அந்த பொண்ணு ஏதோ பாக்கணும் னீங்களே! வரச்சொல்லவா?' என்று கேட்டார் வீராசாமி.

'வரச்சொல்லேன். பாக்கணும் எனக்கு அந்த பொண்ணை. ரொம்ப கெட்டிக்காரப் பொண்ணு. ம்... கூப்பிட்டா வீட்டுக்கு வருவாங்களா? இல்ல நம்மதான் போய்ப் பாக்கணுமா?' என்று கேட்டார் கமலாட்சி.

'அய்யய்யே, ரொம்ப நல்ல பொண்ணுங்கம்மா. எங்க வீட்டுக்குப் பின்னால வீடுதானே. நான் வரச் சொல் றேன். வருவாங்க. பெரியவங்க நீங்க போய்ப் பாக்கணும் கறதில்ல. வருவாங்க.' என்றார் வீராசாமி.

'இல்லப்பா. சில பேரு ஏன் அவங்க பெரிய பணக் காரங்கன்னா, கூப்பிட்டா போயிரணுமா?'ன்னெல்லாம் கேட்பாங்க. அந்த மாதிரி ஏதாவது வெடுக்குன்னு பேசுற குழந்தைங்களா இருந்திரப்படாதே' என்றார்.

'அப்படியெல்லாம் இல்லம்மா. நீங்க கூப்பிட்டா போதும். உங்களைச் சந்திச்சு, உங்களோட ஆசிர்வாதம் வாங்கறதுக்குக் குடுப்பினை இருக்கணுமே' என்றார் வீரா சாமி.

'சரி, சரி. ஐஸ் வைக்காதே. வரச் சொல்லேன்' என்றார். 'அது சரி சமையல் முடிச்சிட்டியா?' என்று கேட்டார்.



'சமையல் எல்லாம் ரெடியா இருக்கும்மா. சின்னையா கீழ வந்தா அவருக்கு தோசை வார்த்து கொடுக்கணும். காலையில தோசைதானே கேட்பார். இப்போ ஓடிப்போயி அஞ்சு நிமிஷத்தில வரச் சொல்லிட்டு வர்றேன்' என்றார்.

'சரி இன்னிக்கு ஞாயிற்றுக் கிழமைதானே. அவனும் லேட்டாதான் எழுந்திருப்பான். நீ வேணா போய் சொல் லிட்டு வா' என்றார் கமலாட்சி.

வீராசாமி ஆர்வமாக வெளியே போனார். போய் விட்டு ஐந்தே நிமிடத்தில் திரும்பியும் வந்தார்.

'என்னாச்சு? வந்துட்ட' என்றார் கமலாட்சி.

'குறுக்கு வழியில் போனேன்மா. சொல்லிட்டேன். அந்தப் பொண்ணு ஏதோ ஃபிரஷ் பண்ணிட்டு வர்றேன் அப்படின்னுச்சு. பத்து நிமிஷத்துல வந்துரும்.' என்றார்.

'சரி, சரி. சாப்பிடச் சொன்னா சாப்பிடுவாளா?' என்று கேட்டார் கமலாட்சி.

'அதெல்லாம் தெரியலம்மா. ஆனா நீங்க சொன்னா மருவாதிக்கு வர்றேன்னு சொல்லிருச்சி' என்றார் வீராசாமி.

'சரி, சரி' என்று சந்தோஷப்பட்டுக் கொண்டார் கமலாட்சி.

விடுவிடுவென அவர் பூஜை அறைக்குப் போய் உக்கார்ந்து, கொஞ்ச நேரம் கந்தர் கலி வெண்பா படித் தார். படித்து முடிக்கிற அந்த பதினைந்து நிமிட இடை வெளிக்குள்ளாகவே ஒரு இளம்பெண் உள்ளே வந்தாள்.

இயல்பாக வந்தாள். பார்த்தாலே அறிவுப்பூர்வமாக இருக்கிறாள் என்பது தெரிந்தது. தயக்கத்தோடோ, அல்லது வீட்டை சுற்று முற்றும் பார்த்துக் கொண்டோ வராமல் உள்ளே வந்து நின்றாள்.

'வீராசாமி அண்ணா!' என்று குரல் கொடுத்தாள்.

அதற்குள்ளாக கமலாட்சி பூஜை அறையிலே இருந்து வந்து, 'வாம்மா, வாம்மா. நீதான் அந்தப் பெண்ணா?' என்று கேட்டார்.

அவள் புன்னகையுடன், 'எந்தப் பொண்ணு?' என்று கேட்டாள்.

'அதாம்மா. நேத்து அந்த பாம்பு சமாச்சாரம்.' என்று சொல்லவும், அவள் சிரித்தாள்.

'ஏன்? அதுக்குள்ள இங்கெல்லாம் பரவிடுச்சா?' என்று கேட்டாள்.

'பின்ன. முக்கியமான விஷயம் இல்ல. அருமையான வேலை செஞ்சிருக்கியே நீ.' என்று மகிழ்ச்சியைக் காட்டிக் கொண்ட கமலாட்சி. 'உக்காரும்மா. ஸ்வீட், காரம், காஃபி... ஏதாவது சாப்பிடு.' என்றார்.

'அய்யோ, இல்லம்மா. அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம். இப்பத்தான் காலையில நான் டிஃபன் சாப்பிட்டேன். ப்ளீஸ்...' என்றாள் வந்த பெண்.

'அதெல்லாம் இல்ல. கண்டிப்பா நீ ஏதாவது கொஞ்சமாவது சாப்பிடணும்' என்று சொல்லிவிட்டு, 'வீராசாமி! இன்னிக்கு என்ன டிஃபன்?' என்றார்.

'அம்மா. அம்மா. தயவு செய்து சொன்னா கேளுங்க. எனக்கு டிஃபன்லாம் வேண்டாம்' என்று வெகுவாக அந்தப் பெண் மறுக்கவே,

'சரி கொஞ்சமா சாப்பிடு' என்று சொல்லி, சேவை செய்திருந்தார்கள். அந்த சேவையை ஒரு கப்பிலே கொண்டு வந்து கொடுத்தார்கள். கூடவே இன்னொரு கிண்ணத்திலே கொஞ்சம் ஸ்வீட்டும் இருந்தது.

அவள் ஸ்வீட்டை ஸ்டைலாக எடுத்து வாயிலே போட்டுக் கொண்டு, சுற்றும் முற்றும் பார்த்தாள். ஹாலில்



அந்தப் பக்கத்தில் இருந்த அந்த பெரிய படத்தைப் பார்த்தாள். அதிலே இருந்த இளைஞனைப் பார்த்தாள்.

அவள் கண்கள் லேசாக விரிந்தன. 'அம்மா! இது யாரு?' என்று கேட்கலாமா? என்று நினைத்தாள்.

ஆனால், ஒரு இளைஞனுடைய படத்தைப் பார்த்து, 'இது யாரு?' என்று கேட்டால், நாகரீகமாக இருக்காதே என்ற சந்தேகமும் அவளுக்கு இருந்தது.

அதற்குள்ளாக அவள் பார்வை சென்ற திசையைப் பார்த்த கமலாட்சியே சொன்னார், 'இதுதான் என் மகன் சுபாஷ் சந்திர போஸ்' என்றார். எதிரிலே அந்தப் பெண் வெகு கஷ்டப்பட்டு தன் உணர்வுகளை அடக்கிக் கொண்டாற்போல இருந்தது.

'கேள்விப்பட்டிருக்கேன்மா, பத்திரிக்கையிலெல்லாம் பார்த்திருக்கேன்.' என்றாள்.

'அது சரி. உங்க ரேடியோவுல கூட எங்க கம்பெனி புரோக்ராம் வருது போல இருக்கு.' என்றார்.

'ஆமாம்மா' என்று ஒத்துக்கொண்டாள் பொன்மலர்.

பொன்மலர்தான் 'சார், இப்ப வீட்ல...' என்று இழுத்தாள்.

'இன்னிக்கு ஞாயிற்றுக் கிழமைதானே. இன்னிக்கு ஒரு நாள் மட்டும்தான் கொஞ்சம் லேட்டா எழுந்திருப்பான். மேல தூங்கிட்டிருக்கான். வந்துருவான், இன்னும் பத்து பதினைந்து நிமிஷத்துல' என்றார்.

'சரிங்க மேடம். எனக்குக் கொஞ்சம் அவசரமா வேலை இருக்கு. நீங்க வரச் சொன்னீங்கன்றதுக்காக வந்தேன். தேங்க் யூ' என்று அவள் கிளம்ப,

'இரு, இரு' என்று உள்ளே போன கமலாட்சி ஒரு தட்டிலே ஒரு பிளவுஸ் பிட் எடுத்துக் கொண்டு வந்து, குங்குமமும் கொண்டு வந்து கொடுத்தார்.

வேறு வழியில்லாமல் வாங்கிக் கொண்ட பொன் மலர், 'தேங்க்ஸ்ம்மா, தேங்க்ஸ்' என்று சொல்லிவிட்டு வேகமாகக் கிளம்பி விட்டாள்.

'இது ஏன் இந்தப் பெண், இவன் படத்தைப் பார்த்த வுடனேயே ஓடுகிறது?' என்று எண்ணிக் கொண்ட கமலாட்சி, 'ஒருவேளை, இள வயசுப் பசங்களோட பேசற துக்குக் கூச்சப்படுவா போலருக்கு. ஆனா ரேடியோவுல நல்லா வாயடிக்கிறாளே...' என்று நினைத்துக் கொண்டே சமையலறைக்குப் போனார்.

அதே நேரம் வீராசாமி, காஃபியை மேலே எடுத்துக் கொண்டு போவதைப் பார்த்தார். 'ஆஹா! மகன் விழித்து விட்டான் என்று தோன்றவே', அவசர அவசரமாக அவன் வந்தால் சாப்பிடுவதற்குத் தயாராக, அடுப்படியில் எல்லாம் தயாராக இருக்கிறதா? என்று ஒரு மேற்பார்வை பார்த்துக் கொண்டு வெளியே வந்தார்.

அடுத்த 20 நிமிடத்திற்குள்ளாக சுபாஷ் கீழே வந்து விட்டான். ஞாயிற்றுக் கிழமை நாள்தான் காலை நேரம் டிஃபன் சாப்பிடுகிறேன் என்று டைனிங் டேபிளில் அமர்ந்து கொண்டு, அம்மாவிடம் கொஞ்ச நேரம் அரட்டை யடிப்பான்.

மற்ற நாட்களில் அவ்வளவு நேரம் அம்மாவிடம் அமர்வதில்லை என்பது, அம்மாவுக்கு வருத்தமென்பது அவனுக்கும் தெரியும். அந்த நேரத்தில்தான் கமலாட்சி தனக்கு சொல்ல வேண்டிய செய்திகள் ஏதாவது இருந் தால் சொல்லுவார்; உறவுக்காரர்கள் வீட்டு விசேஷத்தைப் பற்றி சொல்லுவார்; ஏதாவது வம்பு, தும்பு இருந்தாலும் சொல்லுவார்.

ஆனால், பொதுவாக கமலாட்சி அடுத்தவர்களுடைய அந்தரங்கங்களைப் பற்றி எல்லாம் பேசி ரசிப்பவர் அல்ல. பெருந்தன்மையானவர்தான். இன்றைக்கு அம்மா வரும் போதே முகத்திலே ஒரு ஆச்சர்யக்குறி இருப்பதைப் பார்த்த சுபாஷ், 'என்னம்மா? என்ன டிஃபன்?' என்றான்.



'சேவைடா' என்றார்.

'ஆஹா! நல்ல ஐட்டமாச்சே! ஒரே வெரைட்டியா?' என்று கேட்டான்.

'இல்லப்பா! தேங்காய் சேவை இருக்கு. லெமன் சேவை இருக்கு. உனக்கு எது வேணும்னாலும் சாப்பிட லாம். இனிப்பு தேங்காய் பால் பிழிஞ்சு வைச்சுருக்கேன். எதுன்னாலும் சாப்பிடலாம்.' என்றார்.

சேவையில் தேங்காய்ப் பால் ஊற்றி சர்க்கரை போட்டு சாப்பிடுவது என்பது அவனுக்கு மிகவும் பிடித்த மான விஷயம்.

'அப்படியா சமாச்சாரம்! கொண்டாங்க! ஒரு கை பாத்துருவோம்! என்று அவன் தயாரானான்.

'தம்பி! உனக்கு விஷயம் தெரியுமா?' என்று சுவா ரஸ்யம் கூட்டினார் கமலாட்சி.

'என்ன விஷயம்? இந்த வார செய்தி மடலா?' என்று கேட்டான்.

'இந்த வார செய்தி மடல்ல ஒரு சுவாரஸ்யமான விஷயம் இருக்கு. தெரியுமா?' என்றார் அம்மா.

'சொல்லும்மா' என்று அவன் கேட்க, அம்மா தொடர்ந்தாள்.

'அடுத்த தெருவுல, அந்த நாயக்கர் வீடு இருக்குல்ல, அந்த நாயக்கர் வீட்டுல ஒரு கலாட்டா நடந்திருக்கு. தெரி யுமா?' என்று கேட்டார்.

அந்தத் தெருவிலே தனி பங்களா டைப், ஓரளவுக்கு கொஞ்சம் பெரிய பங்களாக்கள் என்று இரண்டு பக்கமு மாக இருந்தன. பம்ப் செட் கம்பெனி நன்றாகப் போக

ஆரம்பித்தவுடன், சுபாஷ் ஒரு பாஷ். ஏரியாவிலே ஒரு பெரிய பங்களாவைக் கூட கட்டத் தயாராக இருந்தான். ஏன்... கட்ட ஆரம்பித்தும் கூட விட்டான்.

அம்மா சொன்னார்: 'நான் பழகின தெருப்பா. இங்க எல்லா வசதியும் இருக்கு. எதுக்கும் கட்டி வை. ஏன்னா... கட்டுமான செலவு ஏறிக்கிட்டே போகுது. பார்ப்போம். எனக்கும், அப்பாவுக்கும் அவ்வளவு சீக்கிரம் அங்க வர்ற துக்கு மனசு இருக்காது. யோசிப்போம்' என்று சொல்லி வைத்திருந்தாள்.

இந்தத் தெருவில் ஓரளவுக்கு மனிதர்கள் எல்லோரும் பழக்கம் என்பதால், அவருக்கு அவ்வளவு சீக்கிரமாக அந்த ஏரியாவை விட்டு விட்டுப் போக மனம் வரவில்லை. 'சரி. கட்டடம் கட்டி முடிக்கட்டும். பிறகு பார்த்துக் கொள் ளலாம்' என்று எண்ணிக் கொண்டிருந்தான் சுபாஷ்.

'சொல்லும்மா' என்றான்.

'நாயக்கர் என்ன பண்ணியிருக்காரு. அவுங்க வீட்ல பின்னாடி பக்கமா ஏதோ மேற்பார்வை பார்த்துக்கிட்டே இருந்தவரு... பின்னாடி ஒரு டாய்லெட் இருக்கு இல் லையா அங்கே போயிருக்காரு. திடீர்னு ஒரு பதினைஞ்சு நிமிஷம் கழிச்சு, 'குமாரு, குமாரு, குமாரு' ன்னு யாரோ ஒரு பயமும், பீதியும் கலந்த ஒரு குரல்ல கூப்பிட்டிருக் கிற மாதிரியே கேட்டுட்டு இருந்திருக்கு. மணி 8 மணிக்கு மேல ஆயிருச்சு போல இருக்கு. யாருமே கவனிக்கல. அந்தப் பக்கத்து வீட்ல இருந்த பொண்ணு, அந்த பக்கத்து வீடுன்னா கொஞ்சம் தள்ளி அவுட் ஹவுஸ், அந்த அவுட் ஹவுஸ்ல இருந்த பொண்ணுக்கு மட்டும் ஏதோ சந்தேகம் வந்து, வெளியே வந்து சத்தம் போட்டிருக்கா. இன் னொண்ணு தெரியுமா? நல்ல மழை வேற. சத்தம் போட்டு குரல் கொடுக்க, அந்த வீட்டுக்காரங்க திறக்கலை.



எதிர் வீட்டுக்காரங்கதான் சத்தம் கேட்டு வர, அவள் அவர்களுக்குத் தகவல் கொடுத்து, 'இந்த வீட்ல இருந்து ஏதோ சத்தம் வருது. அந்த வீட்டுக்காரங்களை வந்து என்னன்னு பாக்கச்சொல்லுங்க'ன்னு சொல்லிருக்கா.'

அம்மா விவரித்த விதத்திலே, சுபாஷுக்குக் கூட சுவாரஸ்யம் தட்டியது.

'ஹ்ம்,' என்றான்.

'கடைசியில என்னாயிருக்கு தெரியுமா? இவங்க கதவைத் திறந்து எல்லோரும் பாக்கும் போது, நாயக்கர் உள்ள இருந்து சொல்லியிருக்காரு, 'தம்பி! கதவுக்கு அடி யில ஒரு பாம்பு சிக்கியிருக்குது. நான் உள்ள இருக்கேன். பாத்து...' அப்படின்னு சொல்லியிருக்காரு.'

'அய்யோ...!' என்றான் சுபாஷ் கூட.

'ஆமாப்பா! அப்புறம் ஒரு வழியா அவுங்க மகன், அந்தப் பாம்பை அடிச்சுட்டு, அதுக்கப்புறம் அதை இழுத்து வெளியே போட்டுட்டு, அப்புறம் அவங்க அப்பாவை வெளியே கூப்பிட்டிருக்கான்.' என்றார்.

'அம்மா, இது உண்மையிலேயே அந்தப் பொண்ணை பாராட்ட வேண்டிய விஷயம்தான். அந்த மனிதருக்கு உள்ளுக்குள்ளே எவ்வளவு பீதி இருந்திருக்கும்? எவ்வ ளவு பயத்தோட அந்த நேரத்துல இருந்திருப்பாரு? அவர் கூப்பிட்டது இவங்களுக்கு கேட்கலையா?' என்று கேட் டான்.

'இல்லப்பா. இவங்கள்ளாம் ஏதோ முன்னாடி பக்கமா டி.வி. பார்த்துக்கிட்டு இருந்திருக்காங்க. நல்லவேளை அந்தப் பொண்ணு கொஞ்சம் அலர்ட்டா இருந்ததுனால இதைச் செய்ய முடிஞ்சது' என்றார் அம்மா.

'குட். ரியலி குட்.' என்று அவன் பாராட்டிக் கொண் டான்.

'உனக்குக் கூட அந்தப் பொண்ணு தெரிஞ்சிருக்க லாம்பா. அது பேரு பொன்மலராம். உங்க கம்பெனி விளம்பரம் கூட அந்த ரேடியோவுல வருதே... எஃப்.எம். ரேடியோ கம்பெனி, பிரைவேட் கம்பெனி, ஸ்டார் கம் பெனியோ? என்னவோ அதில்தான் அந்தப் பொண்ணு வேலை செய்யுது.' என்றார் அம்மா.

'பொன்மலர்' என்றவுடன் அவன் நிமிர்ந்து அம்மா வைப் பார்க்க ஆரம்பித்தான்.

'அந்தப் பொண்ணு இங்க காலையில வந்திருந் தாப்பா. நான் வரச்சொல்லி அழைச்சிருந்தேன். வீராசாமி போய் கூட்டிட்டு வந்தாப்பல. அவளுக்கு பிளவுஸ் எல் லாம் வெச்சுக் கொடுத்தேன்.' என்றார் அம்மா.

'அப்படியா? கொஞ்ச நேரம் இருக்கச் சொல்லியிருக் கலாமே...' என்றான் சுபாஷ், அங்கலாய்த்த மனதோடு.

'நீ வேறப்பா. அந்தப் பொண்ணு உன் ஃபோட்டோ வைப் பார்த்துச்சு. இது யாருன்னு கேட்டுச்சு. சொன் னேன். 'அய்யோ, எனக்கு இவரைத் தெரியும்' அப்படின்னு சொல்லிட்டு, அதற்கப்புறம் என்னமோ பரபரன்னு, என்னமோ உன்னைப் பார்க்கறதுக்கே கூச்சப்பட்ட மாதிரி கிளம்பிப் போயிட்டாப்பா' என்றார்.

'ம்...ம்...'

'நல்ல லட்சணம்பா. நல்லா வெடவெடன்னு நிக்கிறா. நீளமான கூந்தலு. புடவையிலதான் வந்திருந்தா. ரொம்பப் பாந்தமா இருந்தா' என்றார் அம்மா.

சுபாஷுக்கு திடீரென்று பொறி தட்டியது. 'நெட் டையா இருந்தாளா?' என்றான்.

'ஆமாம்ப்பா. நெட்டையா இருந்தா. உன்னை விட ஒரு அடி கம்மியா இருப்பான்னு வெச்சிக்கோயேன். நல்ல



களையா இருந்தாப்பா. கொஞ்சம் வசதி குறைவான குடும்பம்.' என்றார் அம்மா.

சுபாஷ் சற்று நேரம் அமைதியானான்.

'ஏன்ப்பா?' என்று கேட்டார்.

'இல்லம்மா. அந்தப் பொண்ணை நான் பாத்திருக் கலாம். நம்ம கம்பெனி புரோக்ராம் எல்லாம் நல்லா கொடுக்கிறாப்பல. ஒரு பாராட்டு பாராட்டியிருக்கலாம்' என்றான் சுபாஷ்.

'இருக்கட்டும் விடு. அடுத்த தெருதானே, பாத் துக்கலாம். எப்ப வேணா கூப்பிட்டுக்கலாம்' என்றார்.

சுபாஷ் புன்னகைத்தான்.

'வேண்டாம்மா. சும்மா வயசுப் பொண்ணுங்களை யெல்லாம் அப்படி அடிக்கடி கூப்பிட வேண்டாம்' என்றான்.

உடனே அம்மாவின் முகத்தில் பெருமை தோன் றியது. 'பரவாயில்லை, தன் மகன்' என்று எண்ணிக் கொண்டு, 'நல்ல குடும்பம்னு சொல்றாங்கப்பா. நல்ல பிள்ளை. பார்ட் டைமா படிக்குதாம். பார்ட் டைமா வேலை செஞ்சுகிட்டே படிக்குதாம். குடும்பத்துக்கு ரொம்ப உதவியா இருக்கிற பொண்ணு, அப்படின்னு சொன்னாங்க' என்றார் அம்மா.

அவன் கவனிக்கிறானா இல்லையா என்று பார்க் காமலேயே அவளுடைய குடும்பத்தைப் பற்றி சற்று நேரம் சொல்லிக் கொண்டிருந்தார் அம்மா.

சுபாஷ் மௌனமாக அதை உள்வாங்கிக் கொண் டிருந்தான். அவன் உள்ளத்தில் ஏதோ சிந்தனை தோன் றியது. 'ஏதோ ஒரு விஷயம் எங்கோ இடிக்கிறதே...' என்று சிந்தனையில் ஆழ்ந்தான்.

## அத்தியாயம் - 4

'இப்ப என்னடி பண்றது?' என்றாள் பொன்மலர்.

'இன்னும் என்னடி பண்றது?' என்றாள் சொர்ண புஷ்பா அலட்சியமாக.

'இல்லடி, நான் அவங்க வீட்டுக்குப் போயிருந் தேன். அவரோட படத்தைப் பார்த்தேன். அப்புறம்தான் எனக்குத் தெரிஞ்சுது, இது அவுங்க வீடு. அதுவும் எங்க ரோட்டுக்குப் பக்கத்துலயே இருக்கு, அப்படின்னு.'

'சரி, அதுக்கு என்ன இப்போ?'

'அய்யோ! நான் அடிச்சு பிடிச்சு ஓடி வந்துட்டேன்டி, என்னைக் கண்டுபிடிச்சிருவாரோ அப்படின்னு.'

சொர்ணபுஷ்பா ஒரு நிமிடம் சிந்தனையில் ஆழ்ந் தாள். பிறகு சொன்னாள். 'சரி, கண்டுபிடிச்சா என்னடி ஆகிடும்? இப்ப நமக்கும் அவங்களுக்கும் என்ன இருக்கு? ஒண்ணும் இல்ல. ஏதோ ஒரு அட்வர்டைஸ் மென்ட் புரோக்ராம் நம்ம இதுல பண்றாரு. அதுக்காக நாம அவருக்குப் பயந்து பயந்து சாகணுமா? என்னமோ அவர் இப்பவே உன்னை என்னமோ லவ் பண்ண வந்த மாதிரியும், நாம அதை டிஃபன்ட் பண்ற மாதிரியும்... கொஞ்சம் ஓவரா இல்லை.' என்றாள் சொர்ணபுஷ்பா.

பொன்மலரும் யோசித்தாள். 'ஆமா, கொஞ்சம் ஓவராத்தான் இருக்கு. ஆனா, நாம ஆரம்பிச்சிட்டோமே... இந்த வேலையை முதல்லயே செய்யாம இருந்திருக் கலாமே...' என்றாள் பொன்மலர்.

இப்போது விழிப்பது சொர்ணபுஷ்பாவின் முறையா யிற்று. 'ஆமா இல்ல. அவ்ளோ பெரிய பிசினஸ்மேன் கிட்ட போயி, இந்த மாதிரி சில்லியா விளையாடி... நாம



இப்ப என்ன பண்றது?' என்று அவளும் சிந்தனையில் ஆழ்ந்தாள்.

ஒரு நிமிடம் கழித்து பிறகு சொன்னாள். 'தப்போ, ரைட்டோ ஆரம்பிச்சாச்சுடி. அதையே மெயின்டெயின் பண்ணிட்டு போறதுதான் நமக்கு நல்லது. வேற வழியில லடி. நாம கண்டினியூ பண்ணித்தான் ஆகணும்' என்றாள் சொர்ணபுஷ்பா.

'ம்ம்ம்... சரி' என்று இருவரும் யோசனையில் ஆழ்ந்தபோதே, அவர்களுக்கு நிகழ்ச்சிக்கான அழைப்பு வந்தது.

'ஏய், உன்னோட புரோக்ராம்டி... ஓடு... ஓடு... லைவ்டி, கொஞ்சம் டச் அப் பண்ணிட்டுப் போ' என்றாள் சொர்ணபுஷ்பா.

பொன்மலர், 'கேட்கதானடி போறாங்க. அதுக்கு எதுக்கு டச் அப் பண்ணிக்கணும்...' என்றாள்.

'இல்லடி, முகம் கொஞ்சம் ஃபிரஷ்ஷா இருந்தாலே நமக்கு பேசறதுக்கு ஒரு சந்தோஷமா இருக்கும். அதுக்கு தான் சொன்னேன்' என்றாள்.

'சரி' என்று சிரித்துவிட்டு நகர்ந்தாள் பொன்மலர்.

பொன்மலர் அந்தப் பக்கம் போனவுடன் சொர்ண புஷ்பா சிந்தனையில் ஆழ்ந்தாள். 'இது ஒன்றுமில்லாமல் போகக்கூடிய விஷயமாகவும் இருக்கலாம். பெரியதாகவும் ஆகலாம். எப்படியோ புரோக்ராம் முடியற வரைக்கும் எதுவும் பிரச்சினை வராம இருக்கணும். ஓ... மேடமை யும் இன்வால்வ் பண்ணியிருக்கோமே...' என்று அந்த நேரத் தில் அவளுக்கு ஒரு நம்பிக்கை உணர்வும் தோன்றியது.

உற்சாகமாகப் பேசிக் கொண்டிருந்த பொன்மலரை, அந்தப் பக்கமாக அமர்ந்து கவனித்துப் பார்த்து புன்ன கைத்துக் கொண்டாள் சொர்ணபுஷ்பா.

அதே நேரம் அலுவலகத்தில் முக்கியமான ஒரு மீட்டிங் இருந்தது. போர்ட் ஆஃப் டைரக்டர்ஸ் நான்கைந்து பேர் அமர்ந்து ஒரு முக்கியமான விஷயத்தை முடித் தார்கள்.

'இல்ல... அந்த யூனிட்டிலிருந்து இப்ப ஸ்பேர் பார்ட்ஸ் நம்மளுக்கு சரியாவர மாட்டேங்குது. எல்லா கம்போனண்ட்ஸூம் டைம்முக்கு வந்தாத்தான் நாம வந்து அதை சரியா பண்ண முடியும்' என்று கருத்து கொடுத் துக் கொண்டிருந்தார் ஒருவர்.

கருத்தூன்றிக் கேட்ட சுபாஷ், அப்பாவைப் பார்த் தான். அப்பா அவனைப் பார்த்தார்.

'சரி, மாத்திக்கலாம். அது ஒண்ணும் பிரச்சினை யில்லை' என்றான் சுபாஷ்.

அப்பா இடையிலே புகுந்து, 'கொஞ்சம் பொறுக்க லாம்ப்பா. கம்பெனி ஆரம்பிச்ச காலத்தில இருந்து இருக் காங்க. திடீர்னு கழட்டி விட்டா நல்லா இருக்காது. கொஞ்சம் பொறுமையா பார்த்து நாம செய்யலாம். வேணும்னா ரெண்டு மூணு தடவை விரட்டிப் பார்க்க லாம். அதிலேயே அவங்க தயாராகிக்குவாங்கன்னு நினைக் கிறேன்' என்றார்.

சுபாஷ் லேசாகப் புன்னகைத்துவிட்டு, 'அப்பா, சென்டி மென்ட் பார்க்கலாம்பா. ஓரளவுக்குப் பார்க்கலாம். ஆனா வியாபாரத்துல எப்ப நம்மளை, நமக்குக் கொடுக்க வேண்டிய முக்கியத்துவத்தை அவங்க கொடுக்கலைன்னு தெரியுதோ, அந்த நிமிஷத்துல நாம ஏதாவது ஏற்பாடு பண்ணிக்கணும்பா.' என்றான்.

அப்பா லேசாக ஒற்றை விரலை நெற்றியிலே நீவிக் கொண்டார். பிறகு சொன்னார். 'கண்டிப்பாக செய்ய வேண் டியதுதான். நீ சொன்னது ரொம்ப கரெக்ட்டு' என்றார்.



'ஆனா லாஸ்ட் சான்ஸ் மாதிரி ஒண்ணு கொடுப்போம்பா' என்று சொன்னார்.

'சரிப்பா. உங்க விருப்பம்' என்றான் சுபாஷ்.

அம்மாவும் போர்ட் ஆஃப் டைரக்டர்ஸ்'ல் ஒருவ ராக அமர்ந்து கொண்டிருந்தார். ஆனால் பெரும்பாலும் அவர் வாயைத் திறக்க மாட்டார். என்ன நடக்கிறது என்று கவனித்துக் கொண்டிருப்பார். இப்போதும் அப்படித் தான் நடந்து கொண்டிருந்தது.

போர்ட் ஆஃப் டைரக்டர்ஸ் மீட்டிங் முடிந்த பின்பு அம்மாவையும், அப்பாவையும் காரில் அனுப்பிவிட்டு, அலுவலகத்திற்கு வந்து அமர்ந்தான் சுபாஷ். ஏனோ அவ னுக்கு நேற்று காலையிலே தவறவிட்ட அந்த சந்திப்பே உள்ளே ஓடிக் கொண்டிருந்தது. 'அந்தப் பெண்ணைப் பார்த்திருக்கலாமோ... ஏன் அவள் இருக்கவில்லை? ஒரு வேளை இந்த மாதிரி பெண்கள் பெரிய பெரிய செல்வந் தர்களுடன் தொடர்பு வைத்துக் கொள்வதை அவ்வளவாக விரும்புவதில்லை போலும்.'

இந்தத் தனியார் எஃப்.எம்.மினுடைய நிர்வாகி அவளுடைய குடும்பத்தைப் பற்றி அவனிடத்திலே சொல்லியிருந்தார். 'சாதாரண குடும்பம். ரொம்ப ஸ்ட்ரிக்ட் டான அப்பா. அதனாலே அந்தப் பெண் யாரையும் சந்திக்க விரும்புவதில்லை. நீங்க என்கிறதாலே வேறு வழியில்லாமல் சந்திக்கிறதுக்கு நான் அனுமதிக்கிறேன் சார். அதுவுமே அவளை கன்வின்ஸ் பண்றது கஷ்டம். ட்ரை பண்றேன்' என்றெல்லாம் சொல்லிவிட்டுத்தான் அவனை சந்திப்பதற்கு ஏற்பாடு செய்திருந்தார்.

'ஆனால், அந்தப் பெண் அன்றைக்கு வந்து நின்ற விதத்தைப் பார்த்தால், ஒண்ணும் ரொம்ப வசதி குறை வானவளாகத் தெரியவில்லை. நன்றாகத்தான் உடுத்தி

யிருந்தாள். நகைகள் கூட நல்ல மதிப்புள்ளவை மாதிரித் தான் தோன்றின. இதெல்லாம் ஒரே ஒரு முறை பார்த்த பார்வையில் கணித்தது. சொல்ல முடியாது. இப்போதெல்லாம்தான் செயற்கை நகைகளே அந்த அளவுக்கு சிறப்பாக இருக்கிறதே செயற்கை எது? இயற்கை எது? என்று கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு நல்ல மாடலில் நகைகள் செய்கிறார்கள். அப்படி ஏதாவது அந்தப் பெண் விலை குறைவாக வாங்கி மாட்டிக் கொண்டிருந்திருக்கலாம். அவளுடைய பர்சனாலிட்டிக்கு அது ஏத்த மாதிரி இருக்கிறது, என்று அவள் எண்ணியிருக்கலாம்' என்று தன்னைத் தானே சமாதானப்படுத்திக் கொண்டிருந்தான்.

அவனுக்கு ஏதோ ஒரு நெருடல் இருந்து கொண்டே இருந்தது. தான் பார்க்க வேண்டும் என்று விரும்பிய பெண்ணுக்கும், தான் சந்திக்கும் பெண்ணுக்கும் ஏதோ ஒரு இடைவெளி இருக்கிற மாதிரி தோன்றியது. சற்று நேரம் பேசிய விதத்திலேயே அவளுடைய ஸ்டைல் ஆஃப் டாக்கிங் என்று சொல்வார்கள் அல்லவா? பேசும் விதம் வித்தியாசமாக இருந்தது.

தான் கேட்ட குரல் இதுதானா? என்று கூட ஒரு நிமிடம் அவனுக்கு சந்தேகம் தோன்றியது. ஆனால் ஒரு நிர்வாகி ஒரு பெண்ணை சந்திக்க அனுப்பியிருக்கிறார் என்றால், இப்படியெல்லாம் நான் சந்தேகப்படுவதற்கு என்ன இருக்கிறது?

ஒரே ஒரு முறை பார்க்கும்போது, என்ன நாம் கணித்து விட முடியும்? என்று எண்ணிக் கொண்டான்.

அப்பா எப்போதோ சொன்னது ஒன்று நினைவுக்கு வந்தது. அந்தக் காலத்தில் நடந்ததாம். வானொலி நிலையம் ஒன்றில் பணியாற்றிக் கொண்டிருந்த ஒருவர், மிக அருமையாகப் பேசுவாராம். கம்பீரமான குரலாக



இருக்குமாம். ஆனால், ஒருமுறை அவரை மேடையிலே பார்த்தபொழுது, அந்தக் குரலுக்கும் அவருக்கும் தொடர்பே இல்லாமல் இருந்ததாம்.

ஏன் இந்த கம்பீரம்... உயரம்... இந்த உயரம்தான் கம்பீரமானது, இதுதான் அழகானது, என்றெல்லாம் யார் அளவுகோல் வைத்தார்கள். மனிதர்களாகப் பார்த்து வைத்துக் கொண்ட அளவு கோல் தானே... இந்த அளவு கோல் மாறுபடலாம் அல்லவா?

அப்படிப் பார்க்கும்போது, அந்தப் பெண் அவளும் ஒரு விதத்தில் அழகாகத்தான் இருந்தாள். ஆனால், 'தான் எதிர்பார்த்த பெண், அவளில்லை போலிருக்கிறதே' என்று எண்ணிக் கொண்டான். சிரிப்பு வந்தது.

'ஒரு குரலைக் கேட்டவுடன், அந்தப் பெண் இப்படித் தான் இருப்பாள் என்று தானாக உருவகப்படுத்திக் கொண்டு, அந்த மாதிரி ஒரு உருவம் தனக்கு வெளியிலே தெரிய வேண்டுமென்று எதிர்பார்த்தால், எந்த வகையில் நியாயம்' என்று எண்ணிக் கொண்டான்.

'இதற்கு எதற்காக இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறோம்? அடுத்த வேலையைப் பார்க்கலாம். இதெல்லாம் வாழ்க்கையில் அவ்வப்போது வந்து போகிற விஷயங்கள்தான்' என்று தன்னை நனவுலகத்திற்கு திரும்பி வந்தான்.

அதே நேரத்தில் ஏதோ ஒரு ஃபோன்கால் வந்தது. 'சார் சென்னையிலிருந்து வந்த கம்பெனியிலே 500 பம்ப் செட் கேட்கிறாங்க. அவங்க சொல்ற டைமுக்குள்ள நாம கொடுக்க முடியுமான்னு தெரியலியே' என்று புரொடக்ஷன் மேனேஜர் சொல்லிக் கொண்டிருந்தார்.

'நீங்க இங்க வாங்க பேசலாம்' என்று இன்டர்காமில் அவரை அழைத்தான்.

அவருடன் பேச ஆரம்பித்த உடனேயே அவனுடைய சிந்தனைகளெல்லாம் மாறி விட்டது. 'எப்படி அந்த ஆர்டரைத் தக்க வைத்துக் கொள்வது? எப்படி அவர் கேட்கிற நேரத்திற்குள்ளாக பொருட்களை அனுப்புவது?' என்பது போன்ற சிந்தனைகளில் மனம் போனவுடனே, மற்ற எல்லாமே பின்தங்கிப் போய்விட்டது.

அன்று மாலை வீட்டுக்கு வந்த பொன்மலர், அம்மாவிடம் கேட்டாள். 'ஏன்மா, நாம இந்த வீட்டில் எத்தனை நாளாக இருக்கிறோம்?' என்று.

'ஏன்டி, அஞ்சு வருஷமா இருக்கிறோம்' என்றார் அம்மா.

'இன்னும் எல்லா வசதியும் இங்கு இருக்காம்மா? பாருங்க. தண்ணி வசதி இல்ல. தொட்டியில இருந்துதான் தண்ணி எடுத்துக்கணும். கூரை கூட பாருங்க சிமெண்ட் சீட்டாத்தான் இருக்கு' என்றாள்.

அம்மா செய்கிற வேலையை விட்டு விட்டு அவளை ஆச்சர்யமாகப் பார்த்தாள். 'ஏண்டி, திடீர்னு இந்த வீட்டு மேல உனக்கு இப்படியொரு கோபம் வந்திருச்சு' என்றாள்.

'இல்லம்மா. வேற ஏதாவது வீடு பார்த்துப் போலாமா? எனக்கு சலிச்சுப் போச்சு' என்றாள்.

அம்மா ஒரு நிமிடம் அதிர்ந்தாற்போல் பார்த்து விட்டு, 'என்னடி பேசற நீ? நீதான்டி சொல்வே, வீடு சிமெண்ட் சீட் கூரை போட்ட வீடா இருந்தாலும் ஏரியா நல்லாருக்கும்மா, டீசன்டா இருக்கு, யாராவது வந்தாக் கூட மதிக்கிற மாதிரி இருக்கு, அப்படின்னு நீதான்டி சொல்வே' என்றாள்.

'ஆமா! சொல்லுவேன்,' என்று சொல்லச் சொல்லவே பொன்மலரின் குரல் இறங்கிவிட்டது. கூடவே இன்னொரு



குரல் தோன்றியது, 'இது என்ன பைத்தியக்காரத்தனம்! அடுத்த தெருவிலே, பம்ப் செட் கம்பெனி ஓனர் இருக்கிறார் என்பதற்காக, நாம் இந்த ஏரியாவை விட்டு விட்டு ஓட வேண்டுமா? இது நன்றாக இருக்கிறதே...' என்று எண்ணிக் கொண்டாள்.

'என்னடி ஆச்சு உனக்கு? திடீர்னு இப்படியெல்லாம் சொல்லிக்கிட்டு இருக்கிறே...' என்றார் அம்மா.

'இல்லம்மா. இதே வாடகையில வேற எங்காவது வீடு கிடைச்சா...' என்று இழுத்தாள்.

'ஹேய், இந்த ஹவுஸ் ஓனர் மாதிரி நமக்குக் கிடைப்பாங்களாடி. இப்ப இந்த மாதிரி வீடு பார்க்கணும்னா, குறைஞ்சது நாற்பதாயிரமாவது அட்வான்ஸ் கொடுக்கணும். நம்ம ஹவுஸ் ஓனரா இருக்கக் கொண்டு, அப்ப கொடுத்த பத்தாயிரம் அட்வான்ஸையே அப்படியே வெச்சிக்கிட்டு நம்மள தொல்லை பண்ணாம இருக்கிறாங்க. ஏதோ நல்ல குடும்பமா இருக்கீங்க. நீங்களும் நிம்மதியா இருங்க. நாங்களும் நிம்மதியா இருக்கோம். காசைப் பார்த்தோம்னா நிம்மதி இருக்காது, அப்படின்னு அவங்களே சொல்றாங்க. நம்மளும் நிம்மதியா இருக்கோம். அடுத்த மாசம் வேணா, சின்டெக்ஸ் டேங்க் வெச்சுத் தர்றோம்னு சொல்லியிருக்காங்கடி. உள்ள வேண்ணா ரெண்டு பைப் மட்டும் அளவா போட்டுத் தர்றேன், கிச்சன்ல ஒண்ணு, பாத்ரூம்ல ஒண்ணு, நீங்க பார்த்து புழங்கிக்கன்னு எல்லாம் சொல்லியிருக்காங்கடி. ஒரு நாள் நான் குடம் தூக்கிக்கிட்டு வர்றதைப் பார்த்துட்டு சொன்னாங்க கஷ்டப்படாதீங்கம்மா, அடுத்த மாசம் சின்டெக்ஸ் வாங்கி வெச்சுத்தர்றேன்னு. இதுக்கு மேல வசதியெல்லாம் நாம எதிர்பார்க்க முடியாதுடி. நாம கொடுக்கிற ரெண்டாயிரம் ரூபா வாடகைக்கு, ஒத்த ரூம்

கிடைக்கும். நெருக்கடியான ஏரியாவுக்குத்தான் போக ஊறும். நீங்க வயசுப் புள்ளைங்க ரெண்டு பேரு இங்க நிம்மதியாப் போறீங்க, வர்றீங்க. இறங்கினவுடனே பஸ் ஸ்டாப். பக்கத்திலேயே கடைங்க. இதுக்கு மேலே எங்கடி வசதி கிடைக்கும். பேசாம வாயை மூடிக்கிட்டு இரு' என்றார் அம்மா.

பொன்மலர் சுத்தமாக வீழ்ந்து போனாள். 'சரிம்மா' என்றாள் பலமிழந்த, சுரத்திழந்த குரலில்.

'என்னடி ஆச்சு உனக்கு?' என்றார் அம்மா மறுபடியும்.

'இல்லம்மா, சும்மாதான். ஏதாவது ஆர்.சி. வீடு, அட்லீஸ்ட் ஓட்டு வீடாவது பார்த்துட்டு போலாமே அப்படின்னு நினைச்சேன்' என்றாள்.

'ஒரு ஆறு மாசம் பொறுத்துக்குங்க. நான் உங்களுக்கு ஆர்.சி. போட்டுத் தர்றேன். ஒரு ஐநூறு ரூபா நீங்க எச்சா கொடுத்தா போதும்னு சொல்லியிருக்காங்கடி வீட்டுக்காரம்மா' என்றார் அம்மா மறுபடியும்.

பொன்மலர் மிகவும் நம்பிக்கையாக வைத்த வாதத்திற்கும் பதில் கிடைத்தாகிவிட்டது.

முன்னால் இருந்த பங்களாவிலே ஒரு வயதான தம்பதியர் மட்டும் தான் இருந்தார்கள். அவர்களுடைய குழந்தைகள் இரண்டு பேரும் வெளிநாட்டில் இருந்தார்கள். பொன்மலரின் குடும்பம் இருப்பது அவர்களுக்கு ஆதரவாக இருந்தது. மூன்று பேரும் பெண் குழந்தைகளாக இருந்தாலும், அப்பா, அம்மா, அவர்களுமாக வீட்டை, சுற்றுப்புறத்தை சுத்தமாக வைத்துக் கொள்வார்கள். செடி, கொடிகளைப் பார்த்துக் கொள்வார்கள். அவர்களுக்கு இடையிலே தேவையென்றால் இந்தப் பிள்ளைகளில் மூன்று பேரில் யாராவது ஒருவர் போய்



உதவி செய்துவிட்டு வருவார்கள். வந்து போகிற வேலைக்காரர்கள்தான் இருந்தார்கள் என்பதால், பெரும்பாலான நேரம் தங்கைகள் இரண்டு பேரும் அந்த வீட்டிலேயே தான் கிடப்பார்கள். படிப்பார்கள். அவர்களுக்கும் இந்த மாதிரி இளம் பிள்ளைகள் இரண்டு பேர் நடமாடிக் கொண்டிருந்தது நன்றாக இருந்தது. இதையெல்லாம் உத்தேசித்துத்தான் கார் டிரைவரைக் கூட வந்து போகிற மாதிரி வைத்துக் கொண்டார்கள். இந்த ஒரு குடும்பம் நம்மோடு இருக்கட்டுமென்று இவர்கள் இருத்திக் கொண்டிருக்கிறார்கள். இதெல்லாம் பொன்மலருக்கும் தெரியும்.

இப்போது அவளுக்குப் புதிதாக ஒரு பயம் ஏற்பட்டிருந்தது. சுபாஷ் சந்திரபோஸ் அடுத்த தெருவிலேதான் இருக்கிறான் என்றவுடனேயே, எங்கேயாவது கண்ணில் பட்டுவிடுவோமோ? எதிர்பாராமல் சந்திக்க நேரிடுமோ? என்ற பயம் அவளுக்கு ஏற்பட்டிருந்தது. அந்த பயத்தால் தான் இப்படியெல்லாம் சொல்லிக் கொண்டிருந்தாள்.

'உளறாம இருடி. ஒரு சைடு ரூம், ஒரு கிச்சன், ஒரு நடு ரூம்... வெறும் ரெண்டாயிரம் ரூபா வாடகைக்கு எங்கேடி கிடைக்கும்? அதுவும் எல்லா வசதிகளோடும் தனியா ஒரு பாத்ரூம், டாய்லெட் வசதியோட, கிடைச்சதை வெச்சிகிட்டு திருப்திப்படணும் பொன்மலர்' என்றார் அம்மா.

'சரிம்மா, சரிம்மா. நான் சும்மா சொன்னேன்' என்று அம்மாவைத் தேற்றினாள்.

'சரி. நான் ஏதாவது உனக்கு ஹெல்ப் பண்ணு வேணாம். நீ மூட் அவுட் ஆயிட்ட. நான் சும்மாதான்மா கேட்டேன். நீ சீரியஸா எடுத்துக்காதம்மா' என்று அவள் அம்மாவைத் தேற்றுவதற்கு சற்று நேரம் ஆகிவிட்டது.

'நடக்கவே நடக்காது என்றிருக்கிற ஒரு விஷயத்

திற்காக நான் ஏன் பயப்பட வேண்டும்? வரும்போது பார்த்துக் கொள்ளலாம்' என்று எண்ணிக் கொண்டாள் பொன்மலர்.

'ஏன் அந்த நிகழ்வு நிகழாமலே கூட இருக்கலாமல்லவா?' என்று அவள் தன்னைத் தானே தேற்றிக் கொண்டிருந்தாள். ஆனால் அப்போது அவளுக்குத் தெரியவில்லை. அவள் எதிர்பாராத நிகழ்வுகளெல்லாம் இனிமேல் அவளுடைய வாழ்க்கையிலே நடக்கப் போகிறது என்று.

## அத்தியாயம் - 5

'ஹாய் ஸ்மிதா! கிளம்பிட்டிருக்கேன்பா. வந்துருவேன் ஹால்ஃப் ஏன் அவர்ல,' என்று சொல்லிக் கொண்டிருந்தார் காமினி. சொர்ணாவின் அம்மா.

சொர்ணா அப்போதுதான் டைனிங் டேபிளுக்கு வந்து அமர்ந்தாள். 'ராமண்ணா, என்ன ரெடியா இருக்கு?' என்று சமையல்காரருக்குக் குரல் கொடுத்தாள்.

'வர்றேன் பாப்பா. ஆம்லெட் போட்டுருக்கேன், அப்புறம் வேற என்ன வேணும்?' என்று அங்கிருந்து குரல் கொடுத்தார் ராமண்ணா.

'ஏதாவது டிஃபன் வெச்சிருப்பீங்கல்ல. கொண்டு வாங்க' என்று திரும்பும் குரல் கொடுத்துக் கொண்டே திரும்பினாள்.

செல்ஃபோனில் அம்மா காமினி சுவாரஸ்யமாகப் பேசிக்கொண்டிருந்தாள். 'ஆமாப்பா, நேத்து பார்த்தீங்களா? அந்த மீட்டிங்ல, அந்த ஸ்ருதிம்மா இல்ல, என்னென்ன பேசுனாங்கன்னு பார்த்தீங்களா? நிச்சயமா அவங்களை லீட் பண்ண விடவே கூடாது. வி வில் டு சம்திங் அபவுட் இட். அதுக்காகத்தான் நான் இப்ப கிளம்பிக்கிட்டு இருக்கிறேன். நான் வந்துருவேன் ஹால்ஃப் ஏன் அவர்ல, ஐ வில் பி தேர் இன் ஹாஃப் ஏன் அவர். நாம இன்னிக்கு உட்கார்ந்து சாலிட்டா ஏதாவது பிளான் பண்றோம். இந்த எலெக்ஷன்ல அவங்களை விடவே கூடாது. எய்தர் யூ ஆர் மைசெல்ஃப். புரியுதா?' என்று சொல்லிக் கொண்டிருந்தாள் காமினி.

சொர்ணா சுவாரஸ்யமும் எரிச்சலுமாக பார்த்துக் கொண்டிருந்தாள். அப்படியே அவள் கண்கள் அம்மா என்ன செய்து கொண்டிருக்கிறாள் என்று பார்த்தது. காதில் செல்ஃபோனை இடுக்கிக் கொண்டு, பிரெட்டுத் துண்டுகளை எடுத்து அதில் ஜாம் தடவி அதை ஒரு தட்டில் வைத்தார். கார்ன்ஃப்ளேக்ஸ் கலந்து அதை ஒரு கப்பில் வைத்துக் கொண்டார்.

'அண்ணா ராமண்ணா, ஆம்லேட் கொண்டு வாங்க' என்று இடையிலே ஒரு குரல் கொடுத்தார். ராமண்ணா பதறி அடித்துக் கொண்டு ஆம்லெட்டைக் கொண்டு வந்து வைத்தார். இதையெல்லாம் சாப்பிட்டு முடிக்கிற அந்த காலகட்டம் முழுவதும் அந்தப் பக்கம் ஸ்ருதியோ இன்னும் யாரோ தெரியவில்லை, அவர்களிடம் பேசிச் சலித்துவிட்டார்.

சொர்ணாவுக்குச் சிரிப்பாக வந்தது. கோபமாகவும் வந்தது. வேறொன்றுமிருக்காது, ஏதாவது ஒரு லேடீஸ் கிளப் மாதிரியான அமைப்பில் யார் தலைவராக இருப்பது, செக்ரட்டரியாக இருப்பது என்பதற்கான போட்டிகள் நடந்து கொண்டிருப்பது என்பது புரிந்தது. தீவிரமான திட்டமிடல்கள், அம்மாவின் வாயிலிருந்து வெளிவந்து கொண்டிருந்தன.

உணவு இரண்டாம் பட்சமாக இருந்தது. பேசி முடித்து

வைத்துவிட்டு திரும்பினார். மகளைப் பார்த்தார் காமினி. 'என்னடி ஒன்னும் சாப்பிடலியா?' என்று கேட்டார்.

'ராமண்ணா கொண்டு வருவாரு. சாப்பிடறேன்' என்றாள்.

அதற்குள்ளாக ராமண்ணா ஒரு தட்டில் சூடான பொங்கலும், அதற்கேற்ப தக்காளிச் சட்டினியும், இன்னொரு தட்டிலே வடையும் கொண்டு வந்து வைத்தார்.

'ஹாய், வடை, பொங்கல், குட் குட்' என்றாள் சொர்ணா.

அவளை ஏதோ நாட்டுப்புறத்தைப் பார்க்கிறது போல் பார்த்துவிட்டு, 'ஏண்டி, இந்த இட்லி, வடை, பொங்கல்லாம் விடவே மாட்டியா நீ?' என்று கேட்டார் காமினி.

'நான் தமிழ்நாட்டுக்காரி. நான் அப்படித்தான் சாப்பிடுவேன். நீ இண்டர்நேஷனல் ஃபிகர். நீ இப்படித்தான் சாப்பிடுவ' என்றாள் சொர்ணா.

'இந்த ரேடியோவுல வாயடிக்கறதெல்லாம் எங்கிட்ட வெச்சுக்காதடி' என்று மூக்குடைத்தாள் காமினி.

'எதைத்தான் உங்கிட்ட வெச்சுக்க முடியுது' என்று சொர்ணா முணுமுணுத்துக் கொண்டாள்.

'என்னடி முணுமுணுப்பு?'

'இல்ல. இன்னிக்கு என்ன ப்ரோக்ராம்னு கேட்டேன்' என்றாள் சொர்ணா.

'இன்னிக்கு முக்கியமான வேலையிருக்குடி. அந்த லேடீஸ் கிளப் இல்ல. அங்க ஒரு முக்கியமான வேலை இருக்கு' என்று தன் பக்கத்து விவரங்களை படபடப்பாக காமினி சொல்ல, சொர்ணா கேட்டுக் கொண்டாள்.

ஏதோ அம்மா சின்னப் பெண்ணைப் போல படபடக்க, இவள்தான் அம்மாவைப் போல அமர்ந்து கொண்டு கேட்டுக் கொண்டாள்.



'அந்தப் பதவில என்ன இருக்குன்னுமா இப்படி போட்டி போட்டுக்கறீங்க?' என்று கேட்டாள்.

'போடி உனக்கென்னடி தெரியும். ரொம்ப இன்ஃப்ளுயன்ஷியல் போஸ்ட் தெரியுமா? நிறைய ஃபாரின் டெலிகேட்ஸ் வருவாங்க. கான்ஃபரன்ஸஸ் இருக்கும். ஃபாரின், ரின் போய்ட்டு வரலாம். உனக்கென்னடி அதைப் பத்தி தெரியும்?' என்றாள் காமினி.

'ஆமா. அப்பா காசைக் கரைச்சிருவே' என்றாள் சொர்ணா.

'பின்ன எதுக்கு உங்க அப்பா சம்பாதிக்கிறாரு? ஏன் நான் கொண்டு வந்ததும் இருக்குல்ல' என்றாள் காமினி.

'எங்களுக்கும் கொஞ்சம் மிச்சம் வைம்மா' என்று கேலி செய்தாள் சொர்ணா.

'அதெல்லாம் இருக்கும், இருக்கும். உனக்கெல்லாம் இல்லாம எங்க போகுது? ஆனா நாங்க செலவு பண்ண மிச்சம்தான் உனக்கு' எனவும், சொர்ணா கோபமாக முறைத்தாள்.

'தேவையில்ல. எதுவுமே எனக்கு வேணாம். ஐ கேன் மேனேஜ் மைசெல்ஃப்'

'ஓஹோ... கோபமா? அதுதான் இந்த பித்த ஆர்.ஜே. வேலைக்குப் போயிட்டிருக்க. ஏண்டி, உன் ஸ்டேட்டஸ் என்ன? ஃபேமிலி பேக்ரவுண்ட் என்ன? ஆர்.ஜே.வா போயிட்டிருக்க...' என்று ஆரம்பித்தாள்.

'அம்மா, ப்ளீஸ், ஆரம்பிக்காதே. நீயென்ன நினைச்சுக்கிட்டு இருக்கறே? டி.வி.யில பாரு. எல்லா பெரிய பேக்ரவுண்ட் இருக்கறவங்கதான் வி.ஜே.வா வந்து பண்ணிக்கிட்டு இருக்காங்க. எனக்கு இது பிடிக்குது. நான் பண்றேன். டோண்ட் டிஸ்டர்ப் மி. ஓ.கே.? நான் நீங்க பண்றது ஏதாவதை க்ரிட்டிசைஸ் பண்றேனா?' என்று படபடவென்று பொரித்தாள்.

'இருடி. உங்கிட்ட வாயைக் கொடுத்தா எனக்கு வேலை ஆகாது' என்று அவசரமாகச் சாப்பிட்டு அவசரமாக எழுந்தாள் காமினி.

'ஆமாமா. உலக மகா முக்கியமான வேலை' என்று திரும்பிப் பார்க்கவும் அண்ணன் கிஷோர் இறங்கி வந்து எதிரிலே அமர்ந்தான்.

'பார். இது வேற வந்திருச்சு' என்று வாய்க்குள் முணுமுணுத்துக் கொண்டாள் சொர்ணா.

'என்னடி அங்க முணுமுணுப்பு?' என்றான் கிஷோர்.

'உன்னை யாரு சொன்னா? பாரு அம்மா அவசரம், அவசரமா சாப்பிட்டுக்கிட்டு இருக்காங்க. ஒழுங்கா சாப்பிடலாம்ல. அதைத்தான் சொன்னேன்' என்று அப்படியே திருப்பிப் போட்டாள் சொர்ணா.

'தேங்க்ஸ் ஃபார் கன்சர்னம்மா. ஆனா, இதுதான்டி உடம்புக்கு நல்லது, நீ சாப்பிடறதை விட' என்று சொல்லிக் கொண்டே காமினி அவசரமாக, 'ஓ.கே. பாய், ஸீ.யூ. ஸீ.யூ. இன் த ஈவ்னிங்' என்று கையை ஆட்டிவிட்டு, தோள் பையை எடுத்து மாட்டிக் கொண்டு வேகவேகமாகப் போவதை சொர்ணா வெறுமையாகப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அம்மா போவதையும், தங்கை உட்கார்ந்து கொண்டிருப்பதையும் பார்த்தவுடன் கிஷோருக்கே ஒரு மாதிரி ஆகிவிட்டது. தங்கையின் அருகில் வந்து உட்கார்ந்தான். 'என்டி, மூட் அவுட்டா?' என்று கேட்டான்.

'இங்கே எப்போ மூட் இன்? எப்பவுமே இப்படித்தான்' என்றாள் சொர்ணா.

'அவங்க அப்படித்தான்டி. ஷி இஸ் அ பிஸி வுமன். ஆக்டிவ் லேடி. ஸிம்பிளா அவங்களால எல்லாம் இருக்க முடியாது. யு ஷுட் அண்டர்ஸ்டாண்ட் தட்' என்றான் கிஷோர்.

உடனே சொர்ணா திரும்பி அண்ணனைப் பார்த்தாள். 'எப்ப இருந்து அண்ணா? நீ சின்னக் குழந்தையா இருந்தப்ப இருந்து... நான் சின்னக் குழந்தையா இருந்தப்ப இருந்து... ஆயாதானே நம்மளை வளர்த்தாங்க. இவங்க எப்ப ஓய்வாங்க?' என்று கேட்டாள்.

'வேணாம்டி. அவங்கள்லாம் ஓய்ஞ்சாங்கன்னா மெண்டல் ஆயிருவாங்க. லெட் ஹெர் பி ஹேப்பி' என்றான்.

'ஓ.கே. லெட் ஹெர் பி. ஆனா நமக்கும் கொஞ்ச நேரம் கொடுக்கலாம்லே என்றாள்.

கிஷோர் திரும்பி அவளைப் பார்த்தான். 'அய்யய்யோ. நீ எப்ப இருந்து இப்படியெல்லாம் சென்டிமென்ட் ஆனே? இந்த ஃபேமிலிக்கு இந்த சென்டிமென்ட் எல்லாம் ஒத்து வராதும்மா...' என்று கிண்டல் செய்தான்.

'இது வேணும்னா உண்மை' என்று முணுமுணுத்தாள் சொர்ணா.

'சரி, இப்ப உனக்கு என்ன வேணும்? ஷாப்பிங் போகணுமா? நான் வேண்ணா பணம் தர்றேன். ஷாப்பிங் போய்ட்டு வா' என்றான் கிஷோர்.

'பாத்தியா, பாத்தியா. இதேதான், இதேதான். திரும்ப திரும்பப் பேசறது இது எனக்குப் பிடிக்கவே மாட்டேங்குது' என்றாள் சொர்ணா.

'எது உனக்குப் பிடிக்க மாட்டேங்குது?'

'பார். நீ கூட ஓ.கே. ஒரு டூ அவர்ஸ் நான் வேண்ணா உங்கூட வர்றேன் அப்படின்னு சொல்லலாம்ல. பணம் வேணா தர்றேன்கற. பணம் எவ்வளவோ இருக்கு. அம்மா

தர்றாங்க. அப்பா தர்றாரு. நீ தர்ற. இன்னும் பாட்டி, தாத்தா வேற கொடுக்கிறாங்க. இந்த பணத்தையெல்லாம் வெச்சுக்கிட்டு நான் என்ன பண்றது? பூஜையா பண்றது. ஐ வோண்ட் கேர் மேன். சம்பாடி மஸ்ட் டேக் கேர் ஆஃப் மி. ஏன் உங்களுக்கு அது புரிய மாட்டேங்குது?' என்றாள் சொர்ணா.

கிஷோர் ஒரு நிமிடம் அவளை அமைதியாகப் பார்த்தான். 'டூ லேட் அம்மணி. இதெல்லாம் நீ ஒரு ஏழெட்டு வயசுல சொல்லியிருந்தா, எல்லோரும் உட்கார்ந்து கேட்பாங்க. அப்பா நாளைக்கு லண்டன் போறார் தெரியுமா? அம்மா அடுத்த மாசம் அவங்க லேடீஸ் கிளப்ல டூர் போறாங்க. ஷி இஸ் கோயிங் டு கோ அவே ஃபார் டூ மன்த்ஸ். தெரியுமா?' என்றான். 'இந்த ஸ்டேஜ்ல நீ கேர் கேட்கற' என்றான்.

அவனுக்கும், அவள் கேட்பதிலுள்ள நியாயம் புரிந்தது. அமைதியாக அவள் அருகில் வந்தான். 'ஓ.கே. சரி. நான் வேண்ணா ஒரு டீலுக்கு வர்றேன். உனக்கெப்பப்போ கேர் வேணும்னு சொல்லு, அப்ப வேண்ணா ஐ வில் கம் அலாங் வித் யு.ஓ.கே.' என்றான்.

கொஞ்சம் அவள் சமாதானமானாள். 'பரவாயில்லை. நீயாவது கொஞ்சம் கேர் கொடுக்கிறியே. ஆனா உனக்கும் கல்யாணமானா நீயும் மாறிடுவே' என்றாள்.

'கல்யாணம்தானே அது கிடக்குது இன்னும் டு, த்ரீ இயர்ஸ். அதுக்கப்புறம் பார்த்துக்கலாம். இப்போ உனக்கு என்ன வேணும் சொல்லு' என்று கேட்டான் ஆதரவுடன்.

'சரி, நீயாவது எனக்கு டைம் கொடு. ஜஸ்ட் ஸ்பெண்ட் டு அவர்ஸ், ஆர் த் ரீ அவர்ஸ் வித் மி.'

'ஓ.கே. மா. டூ ஹவர்ஸ் முடியல. ஒன் அவர். ஓ.கே. வி வில் டூ ஒன் திங்' என்றான் அவளை உற்சாகப்படுத்துவது போல.



'என்ன சொல்லு? நீ சொல்லு. அப்புறம் அது எனக்குப் பிடிக்குதான்னு பார்க்கறேன்' என்றாள் சொர்ணா மறுபடியும் முறைப்பாக.

அவன் குழந்தைக்குச் சொல்வது போல சொன்னான். 'ஓ.கே. இந்த பார்ட்டி, மீட்டிங்ஸ் எல்லாம் இருக்குல்ல. நம்ம கம்பெனி சார்பா போறோம்ல. நான் தானே தனியா போறேன். நீயும் வந்திரு. ரெண்டு பேருமா போவோம். அங்க கூட உனக்கு ஃப்ரண்ட்ஸ் கிடைப்பாங்க' என்றான்.

'ம்... மறுபடியும் வெளியேதானா? நீ மட்டுமா எங்கூட எங்கேயும் வர மாட்டியா?' என்றாள்.

'ஓ.கே. வேண்ணா வீக்லி ஒன்ஸ் ஆர் ட்வைஸ்...'

'ஓ! வீக்லி ஒன்ஸ் ஆர் ட்வைஸ்...' என்று அழகு காட்டினாள் சொர்ணா.

'ஏய், ப்ளீஸ் அன்டர்ஸ்டேன்ட். அப்பா பெரிய பொறுப்பை எந்தலையில சுமத்தியிருக்கார். இருக்கற கம்பெனி பத்தாதுன்னு இன்னும் ரெண்டை ஆரம்பிச்சு அதை வேற எந்தலையில கட்டியிருக்காரு. அதை டெவலப் பண்ணு. இதை நீ டெவலப் பண்றத பொறுத்துத்தான் நீ எதிர்காலத்துல எப்படி இருப்பேன்னு தெரியம்னு சேல்ஞ்ச் பண்றாரு. வாட் ஆம் ஐ டு டூ?' என்றான்.

அவள் அவனைப் பாவமாகப் பார்த்தாள். 'ஆ, அடுத்த மெஷின் தயார் பண்றாங்களா? இதையெல்லாம் ஓட்டறதுக்கு...' என்றாள்.

'இதுதாம்மா நம்ம ஃபேமிலி. இதை நீ புரிஞ்சிட்டு, இந்த லைஃபுக்கு நீ ஃபிட் ஆகத்தான் வேணும். யு அண்டர்ஸ்டேண்ட்?' என்றான் மறுபடியும் கிஷோர்.

சொர்ணா ஒரு பெருமூச்சு விட்டாள். பிறகு சொன்னாள். 'எனக்குத் தெரியும். அதனால்தான் எவ்வளவு

நாளைக்குத் தப்பிக்க முடியுமோ அவ்வளவு நாளைக்குத் தப்பிச்சு பார்க்கிறேன். அண்ணா... ப்ளீஸ் நான் ஒன்னு சொல்லட்டா. அட்லீஸ்ட் பிஸினெஸ்மேனா இல்லாத ஃபேமிலியா பாருங்களேன் எனக்குப் பார்க்கும்போது...' என்றாள்.

'ஓ! அப்போ ப்ரொபோசல் பார்த்துரலாமா?' என்று ஆர்வமானான் கிஷோர்.

'வேண்டாம், வேண்டாம். நான் வாய் விட்டுட்டேன்.' என்றவள், 'இப்ப இல்ல, நான் சொல்லும் போது பார்க்கலாம். ஓ.கே.வா?' என்றாள்.

'ஓ.கே. ஓ.கே. அது டிசைடெட். சரி, வீக்லி ஒன்ஸ் ஆர் ட்வைஸ் நான் உன் கூட டூ ஹவர்ஸ் வர்றேன். தென் யு டூ ஒன்திங் இந்த வாரம், மே பி இந்த வாரம் சாட்டர்டே'ன்னு நினைக்கிறேன், ஒரு பார்ட்டி இருக்கு. என் கூட வர்றியா? நிறைய பிஸினெஸ் பீப்பிள் வர்றாங்க. உன்னோட ஏஜ் குருப் கூட வருவாங்க. நீ அவங்க கூட பழகிக்கலாம். மெதுமெதுவா இந்த ஃபேமிலி ஃலைபுக்கு ஏத்த மூடுக்கு நீ மாறிக்கலாம். மாறித்தான் ஆகணும்டா கண்ணா' என்று அவனும் வந்து சாப்பிட அமர்ந்தான்.

'உனக்கென்ன இட்லி, தோசையா?' என்று கேட்டாள் அவள்.

'இல்ல, எனக்கிந்த பொங்கலே போதும். ஃபார் அ சேஞ்ச் இன்னிக்கு வேணா பொங்கல் சாப்பிடலாம்' என்று அவன் பொங்கலை எடுத்து சாப்பிட ஆரம்பித்தான்.

ராமண்ணா ஆசையோடு வந்து பரிமாறிக் கொண்டிருந்தார். குழந்தைகள் இருவரும் பேசிக் கொண்டிருந்ததையெல்லாம் அவரும் கேட்டுக் கொண்டிருந்தார், ஆனால் தலையிடாமல்.

அவரால் முடிந்ததெல்லாம், தாயிடமிருந்து கிடைக்காத அந்த அன்பையும் தந்தையிடமிருந்து கிடைக்காத



அன்பையும் இந்த குழந்தைக்குப் பரிமாறுவதாக நினைத்துக் கொண்டு, எப்போதும் அன்பாக அவளை நடத்துவார்.

'என்னம்மா இவ்வளவு குறைவா சாப்பிடறே? நல்லா வயிறார சாப்பிடு. நிதானமா சாப்பிடு. ஒன்னும் அவசரம் இல்லையில்ல' என்றார் அவர்.

சொர்ணா புரிந்து கொண்டாற் போல, அவரைப் பார்த்து புன்னகைத்தாள். கிஷோரும் அவரைப் பார்த்து புன்னகைத்தான். ரெண்டு பேரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

பிறகு, 'ராமண்ணா, இந்த தீபாவளிக்கு ஏதோ பணம் கேட்டீங்கள்ல நீங்க?' என்றான் கிஷோர்.

'இல்லைப்பா. நான் அம்மாகிட்டயே கேட்டுட்டேன். அம்மா தனித்தனியா வாங்கினா கோவிச்சுக்கு வாங்களோ என்னமோ? அதனால அம்மாகிட்டயே கேட்டிருக்கேன்' என்றான்.

'கொடுக்கறேன்னு சொல்லிட்டாங்களா?' என்று கேட்டான் கிஷோர்.

'இல்லியேப்பா. இன்னும் சொல்லலை. கொடுப்பாங்கன்னு நினைக்கிறேன்' என்றார்.

'ஓ.கே. நான் உங்களுக்கு நாளைக்கோ, நாளன்னைக்கோ தர்றேன். தந்துட்டு நானே அம்மாகிட்ட சொல்லிக்கிறேன். நீங்க ஒன்னும் வொர்ரி பண்ணிக்க வேணாம். ஓ.கே.வா? அம்மா பிஸில மறந்துருவாங்க. லாஸ்ட் மினிட் போய்க் கேட்டீங்கன்னா, டென்ஷன் ஆவாங்க' என்றான்.

ராமண்ணாவின் முகம் மலர்ந்தது.

'அப்புறம் உங்க பொண்ணுக்கு மாப்பிள்ளை பார்க்க ஆரம்பிச்சிட்டீங்களா?' என்றான் கிஷோர்.

'இப்பத்தான் பார்த்துக்கிட்டிருக்கேன்' என்றார்.

'கவலையே படாதீங்க. எவ்வளவு சவரன் கேட்பாங்க மாப்பிள்ளைங்க உங்க இதுல.'

'என்னப்பா பத்து பவுன், பதினைஞ்சு பவுன் கேட்கிறாங்க. நான் அப்படி, இப்படி ஒரு எழட்டு பவுன் தேத்தி வெச்சருக்கேன்' என்றார்.

'பதினைஞ்சு பவுன் வரைக்கும் பேசுங்க. நான் ஹெல்ப் பண்றேன். ஆனா மேரேஜ் ஸிம்பிளா பண்ணிக்கணும். ஓ.கே.வா?' என்றான்.

'சரிங்க தம்பி, சரிங்க தம்பி' என்று உற்சாகமானார் ராமண்ணா.

அவர் உள்ளேயிருந்து வடை எடுத்துக் கொண்டு வரப் போனார். 'சாம்பார்ல ஊற வெச்சிருக்கேன்பா. சாம்பார் வடை இருக்கு. தயிர் வடை பண்ணி வெச்சிருக்கேன். எது வேணும் கேளு' என்று உற்சாகமாக உள்ளே போனார்.

'என்னண்ணா லஞ்சமா?' என்று கேட்டாள் சொர்ணா.

'ஆமா. எனது அன்புத் தங்கைக்கு எங்கேயும் கிடைக்காத அன்பைக் கொடுக்கிறாரே. உன்னை நல்லா பார்த்துக்கிறாரே. அதுக்காகவாவது அவருக்கு நாம செய்யணும் இல்ல' என்றான்.

அவள் சிரித்தாள். 'அதானே பார்த்தேன். பிஸினெஸ் மேன் வேலையைக் காண்பிச்சிட்டியே. எதையாவது கொடுத்து, எதையாவது வாங்கறது. அன்பை அப்படி எல்லாம் வாங்க முடியாதுண்ணா' என்றாள்.

அவனும் புன்னகைத்தான். 'அது தெரியும் சொர்ணா. அவர் எவ்ளோ நாளா இங்க வேலை செய்யறார். அவருக்கு இருக்கற ஒரே கவலை பொண்ணுக்கு கல்யாணம்



பண்ணி வைக்கிறது. அதுக்கு நாம உதவி செய்வோமே' என்றான்.

'இப்ப பவுன் விக்கிற விலை தெரியுமா?' என்று கேட்டாள் அவள்.

'இங்க பாரு. ஒவ்வொரு ஃபங்ஷனுக்கும், ஒவ்வொரு பர்த்டேக்கும் அந்த தாத்தா, இந்த தாத்தான்னு எல்லாம் கொடுத்தது எல்லாம் நிறைய எங்கிட்டதானே இருக்கு. அதுல இருந்து ஒரு அஞ்சாறை கொடுத்தா பாவம் அவர் ரொம்ப சந்தோஷமாயிடுவாரு. ஒரு லைஃப் செட்டில் ஆகும். அதுவும் பார்க்கணும் இல்ல' என்றான் கிஷோர்.

சொர்ணா கண்களைப் படபடப்பாக அடித்துக் கொண்டு, அவனையே ஆச்சர்யமாக பார்ப்பது போல நடித்தாள்.

'என்...ன? என்ன...?' என்றான் கிஷோர்.

'இல்லை. நீயெப்படி இந்த வீட்டுல தப்பிப் பொறந்தே' என்றாள்.

'நீ பொறந்த மாதிரித்தான்' என்று அவன் சிரித்து விட்டு எழுந்தான்.

'இங்க பாரு. அப்பாவும், அம்மாவும் பிஸியா இருக்கலாம். ஆனா இதயம் இல்லாதவங்க இல்ல. அவங்க ரெண்டு பேருக்கும் நம்ம மேல பிரியம் இருக்கு. ஆனா அவங்களுக்கு அதை எப்படிக் காட்டறதுன்னு தெரியலை' என்றான்.

'பரவாயில்ல. உனக்காவது காட்டத் தெரிஞ்சிருக்கே' என்று அவள் சிரித்தாள்.

'ஆனா, நீ எதிர்பார்க்கிற அளவுக்கு இல்லியே? ஓ.கே. இப்போதைக்கு வீக்லி ஒன்ஸ். ஓ.கே.வா? ஸாட்டர்டே அந்த பார்ட்டிக்கு போறோம் தானே. ரெடியா இரு..

ம்... நியூ டிரெஸ் ஏதாவது நாளைக்குப் போய் வாங்குவோமா உனக்கு?' என்று கேட்டான்.

'வேண்டாம்னா. நிறைய இருக்கு' என்றாள் அவள் சலிப்பாக.

'ஓ.கே. இருக்கறதுல பெஸ்ட்டா ஏதாவது போட்டுக்கிட்டு வருவியாம். பை..' என்று அவன் கிளம்பிப் போவதை அன்புடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

வரப்போகிற அந்த சனிக்கிழமை பார்ட்டி அவளுக்கு ஒரு பெரிய இடியை வைத்துக் கொண்டு காத்திருக்கிறது என்பது அப்போது அவளுக்குத் தெரியவில்லை.

## அத்தியாயம் - 6

உள்ளம் கொள்ளை போயிற்று. பார்க்க பார்க்க தெவிட்டாமல் இனித்தது அந்தக் காட்சி.

மேலைச் சிதம்பரம் என்று அழைக்கப்படும் பேரூர்க் கோவிலில் கனக சபை மண்டலத்தில் நின்று கொண்டிருந்தான் சுபாஷ். இரு பக்கமும் வரிசையாக இருந்த தூண்களில் செதுக்கப்பட்டிருந்த சிற்பங்கள் எப்போதுமே அவன் மனத்தை கொள்ளை கொண்டன. ஒவ்வொரு சிற்பமாக நின்று சற்று நேரமாவது பார்ப்பான்.

அவன் அம்மா கூட சொல்லுவார். 'உன்னோடு வந்தா நகரவே மாட்டேப்பா நீ' என்று.

அப்போது அவன் சொல்லுவான், 'அம்மா ஒரு கோவிலுக்கு வந்தால் சும்மா கொஞ்ச நேரம் நின்னுட்டு போகக் கூடாது. ஒரு பக்கம் உட்கார்ந்து தியானம் மாதிரி பண்ணனும். ஏன் தெரியுமா? இந்த கோவில்ல அவ்வளவு சக்தி இருக்கு. எங்கெங்கே சக்தி இருக்கோ அங்கெல்லாம்தான் கோயில்கள் பண்ணியிருக்காங்க. பூஜைகள்,



புனஸ்காரங்கள், மந்திரங்கள்னு சொல்லிச் சொல்லி எனர்ஜி ஏத்தி வெச்சிருப்பாங்க. நாம கொஞ்ச நேரம் உட்கார்ந்து அந்த எனர்ஜிய வாங்கிட்டு போகணும்மா' என்று சொல்லுவான்.

அம்மா கண்கொட்டாமல் ஆச்சரியமாகப் பார்ப்பாள்.

'என்னம்மா பார்க்கறே? ஜீன்ஸ், டீசர்ட்டுமா வந்துட்டு ஒரு பையன் இதெல்லாம் சொல்லிட்டு இருக்கானேன்னு பார்க்கறியா? நாங்க இப்ப இளைய தலைமுறைகள்லாம் நிறைய விஷயங்கள் தெரிஞ்சிருக்கோம்மா. உங்களை மாதிரி வயசான காலத்தில்தான் ஆன்மீகம்னு இல்லை. இப்பல்லாம் இப்பவே எங்களுக்கு ஓரளவுக்கு ஆன்மீகம் தெரியும். தெரியுமா?' என்று பெருமையடித்துக் கொள்ளுவான்.

'டம்பாச்சாரி' என்று அம்மா சிரிப்பாள். 'உன் பிள்ளையாச்சே' என்று பதில் கொடுத்து விட்டு அடுத்த வேலையைப் பார்ப்பான்.

சிற்பங்கள் ஒவ்வொன்றும் அவ்வளவு அழகாக இருந்தன. அந்த யானைத் தோல் போர்த்துக் கொண்டு, நடராஜர் நர்த்தனமிடுகிற அந்தக் காட்சி அவ்வளவு அழகு. யானைத் தோல் என்றால் அப்படியே தத்ரூபமாக இருக்கிறது. எப்படி இப்படி செதுக்கியிருப்பார்கள் என்று எண்ணி வியந்து கொண்டான்.

பிச்சுவாடனமூர்த்தி, பிச்சையெடுத்துக் கொண்டு போகிறாற்போல் ஒரு காட்சி. ஊர்த்துவக்காளி என்று அங்கு ஒவ்வொரு சிலையும் அவ்வளவு அழகாக இருந்தன. கழுத்தில் தொங்குகிற மணிமாலை ஏதோ அசைந்து ஒரு நிமிடம் முன்னாலே வந்து விட்டு போகிறாற் போல தோற்றம் கொடுத்தது, ஒவ்வொரு மணியும் அவ்வளவு அழகாக இருக்கும். புருவங்கள் செதுக்கப்பட்டிருக்கிற

விதமும், அவ்வளவு ஏன்? நகைகளும் அவ்வளவு அழகாக அமைந்திருப்பதைப் பார்த்து அவன் ரசித்துக் கொண்டான்.

கைவிரல்களின் வடிவங்கள், நகங்களுக்கும், கைவிரல் களுக்கும் உள்ள வித்தியாசத்தைக் கூட தொட்டு உணர முடியும். நமது தோலுக்கும் நகத்துக்கும் உள்ள அதே வித்தியாசம் இந்த சிலையிலும் இருக்கும் என்று அவ னுடைய அப்பா அடிக்கடி சொல்லிக் கேட்டிருக்கிறான்.

நிறைய பேர் வந்து அப்படி தடவித் தடவிப் பார்ப் பதினாலேயே, இப்போது அதற்கெல்லாம் கூண்டு மாதிரி போட்டு விட்டார்கள். இருந்தாலும் சுற்றுமுற்றும் பார்த்து விட்டு, சிறுவனைப் போல, விரலை நுழைத்து அந்த சிற்பங்களைத் தொட்டுப் பார்க்கிற துறுதுறுப்பு அவனுக்கு இப்போதும் இருந்தது. கஷ்டப்பட்டு கட்டுப்படுத்திக் கொண்டான்.

ஒவ்வொரு சிலைக்கு முன்னாலும் குறைந்தது பத்து, பதினைந்து நிமிடங்களாவது நிற்பான் என்பதால், அம்மா ஒரு பக்கம் போய் அமர்ந்து கொண்டு விட்டார்.

சுற்றி வந்து விட்டார்கள். அதே கனகசபை மண்ட பத்தை விட்டு வெளியே வந்தவுடன், இறங்கும் படிகளில் இரண்டு புறமும் இரண்டு யானை சிலைகள் இருக்கும். அந்த யானை சிலையின் மேலே வீரன் அமர்ந்திருப் பான். அவன் குத்துகிற கத்தி அந்த யாளியினுடைய வயிற் றில் வெளியே வருவதை உணர முடியும். அப்படியெல் லாம் யோசித்து செய்திருக்கிறார்கள் என்று சிலாகித்துக் கொண்டே வெளியே வந்தான்.

வழக்கமாக எல்லோரும் கோவிலுக்கு வந்தால், சுற்றுப்புறம் சுற்றிவிட்டு வந்து கடைசியாக இந்த கனக சபை மண்டபத்துக்குள் நுழைவார்கள். ஆனால் சுபாஷ் வந்தால் முதலில் இந்த மண்டபத்தில் வந்து, சற்று நேரம்



இந்த சிலைகளையெல்லாம் ரசித்த பின்புதான் உள்ளே செல்லுவான்.

இப்போது அம்மாவின் பொறுமை எல்லை மீறிப் போகிறது என்பது தெரிந்தவுடனேயே, நல்ல பிள்ளை யாக, 'சரிம்மா, வாம்மா போலாம்' என்று அழைத்துக் கொண்டு போனான்.

அவர்கள் வெளிப் பிரகாரத்தைச் சுற்றிக் கொண்டு வந்து, உள்ளேயிருக்கிற பட்டீஸ்வரப் பெருமானை தரிசித்துப் போனார்கள். பச்சை நாயகி அம்மனை தரி சிக்கப் போனார்கள். அவர்கள் போன இடமெல்லாம் அங்கே அவர்களுக்கு சிறப்பான தரிசனம். இவனை எல்லோருக்கும் தெரியும் என்பதால் சிறப்பாக உள்ளே அழைத்துக் கொண்டு போய் தரிசனம் செய்வார்கள்.

அவன் ஞாபகமாக தன்னுடைய உதவியாளரை வைத்து டிக்கெட்டுகளை வாங்கி விடுவான். 'ஓசி தரி சனம்' எப்போதும் அவனுக்குப் பிடிக்காது. ஆனால் தட்டிலே நன்றாக காசு போடுவான். அம்மனையும் தரி சித்து விட்டு வந்தார்கள். மறுபடியும் கனகசபைக்குள்ளே நுழைந்து நடராஜரையும், அம்மனையும் தரிசித்துவிட்டு அப்படியே வந்து மறுபடியும் சிலைகளுக்கு பக்கத்திலே நிற்க ஆரம்பித்தவுடனே அம்மா சொன்னார், 'இன்னும் எவ்வளவு நேரம்பா ஆகும்?' என்று.

'அம்மா ஜஸ்ட் ஒரு பிஃப்டீன் மினிட்ஸ்மா. ஒரு தடவை பார்த்துட்டு வந்திர்றேன். நீ அது வரைக்கும் கொஞ்சம் நிமிர்த்திப் பார்த்தீன்னா, இந்த மேல் விட்டத் துல பார்த்தீன்னா, நிறைய திருவிளையாடல் படங்களெல் லாம் வரைஞ்சிருக்காங்க. ஓவியங்கள். வேடிக்கை பார்த் துட்டு இருப்பியாம்' என்று அம்மாவுக்குச் சின்னப் பிள்ளைக்குச் சொல்வது போல் சொல்லிவிட்டு, மறுபடியும்

போய் சிலைகளுக்கு முன்னே நின்று கொண்டே மெதுவாக அப்படி திரும்பிப் பார்த்தான்.

எதிர்பாராத அந்தக் காட்சி நிகழ்ந்து கொண்டிருந்தது.

ஒரு இளம் பெண் வந்தாள். அந்த இளம்பெண்ணை அவன் இதுவரைக்கும் பார்த்ததில்லை. ஆனால் அந்த இளம்பெண்ணைப் பார்த்ததுமே அம்மா கையசைத்து அழைப்பது தெரிந்தது.

மிகவும் எளிமையான ஒரு சுடிதாரிலிருந்தாள். ஆனால், லட்சணமாக இருந்தாள். அம்மா கையசைத்து அழைக்கவும் அவள் அம்மாவை நோக்கிப் போனாள். அம்மா எழுந்து ஏதோ பேசினார்.

பேசிவிட்டு திரும்பி இவனைப் பார்த்தார். எழுந்து அப்படியே இருவருமாக அவன் அருகாமை நோக்கி வருவது தெரிந்தது.

ஆனால், அந்தப் பெண், இவனை நோக்கி வரும் பொழுது சற்று மிரள மிரள விழித்தாற்போல இருந்தது. தன்னைத் தானே குனிந்து பார்த்துக் கொண்டான். என்னைக் கண்டால் பயப்படும்படியாக என்ன இருக்கிறது என்று மெல்ல சிரித்துக் கொண்டான்.

சிலைகளையெல்லாம் ரசித்து அந்த மனப்பான்மையில் இருந்ததால் இப்போது ஏனோ அவனுக்குள்ளேயே தன்னைத்தானே பரிகசித்துக் கொள்ளுகிற எண்ணம் தோன்றியது. சிரித்துக் கொண்டான். அந்தப் பெண் அவன் இருக்கும் இடம் நோக்கி வருகிறவரை, ஒரு நாலடி வருகிற வரை வந்துவிட்டு, 'சரிம்மா, நான் கிளம்பறேன், நான் கிளம்பறேன். நான் உள்ளே போய்க் கும்பிட்டு விட்டு வர்றேன்' என்று கிளம்புவது தெரிந்தது.

அம்மா எப்போதும் வெளியே, கோவிலுக்குக் கிளம்பினால் மட்டும் சமையற்காரரையும் அழைத்துக்



கொள்வாள். ஏனென்றால் வீராசாமிக்கு கோவிலுக்கு வருவதென்றால் மிகவும் பிடிக்கும். 'துணைக்கு ஆளும் ஆயிற்று' என்று அவரை அழைத்துக் கொள்ளுவாள்.

அவருக்கும் இவர்களோடு கோவிலுக்கு கிளம்புவதென்றால் மிகவும் பிரியம். ஏனென்றால் ஸ்பெஷலான தரிசனம் கிடைக்கும். நல்ல பிரசாதம் கிடைக்கும். நான்கு பெரியவர்களைப் பார்க்கலாம் என்ற எண்ணத்தோடு அவரும் இவர்களோடு வருவது வழக்கம்.

அம்மா அந்த வீராசாமியிடத்தில் பேசிக்கொண்டு வருவது அவனுடைய காதுகளிலே விழுந்தது.

'ஏன் வீராசாமி, இந்தப் பொண்ணுதானே? பேர் என்ன சொன்னே? அன்னிக்கு ஏதோ கேட்டேனே... மறந்துட்டேனே...' என்று அம்மா சொல்லிக் கொண்டு வருவது தெரிந்தது.

வீராசாமி வந்து அப்பொழுது சுபாஷிடம் சொன்னார், 'தம்பி! இப்பப் போகுதே, இந்தப் பொண்ணுதான் அந்தப் பொண்ணு' என்று.

'எந்தப் பொண்ணு?' என்று கேட்டான் சுபாஷ்.

'இல்லீங்க தம்பி. அன்னிக்கு நான் சொன்னேனே, நம்ம ஏரியாவுல அந்த... அந்த... ஒரு இது... டாய்லெட்டுல போயி... நின்னுட்டு, நடுவுல கதவுல ஒரு பாம்பு மாட்டிக்கிட்டு ஒருத்தர் கஷ்டப்பட்டாரு. இந்தப் பொண்ணுதான் புத்திசாலித்தனமா அந்த வீட்டுக்காரவுங்கள் கூப்பிட்டு சத்தம் என்னமோ வேற மாதிரிக் கேட்குது போய்ப் பாருங்கன்னு சொல்லிச்சுன்னு சொன்னேனுல்ல' என்றார்.

'ஓஹோ... அந்தப் பொண்ணா!' என்றான் அவன்.

அப்படியானால் தன்னை அவளுக்குத் தெரிந்திருக்க வேண்டுமே... ஏன் தன்னைக் கண்டவுடன் விலகிப்

போகிற மாதிரி, ஏதோ பேயைக் கண்டவள் மாதிரி ஓடுகிறாள் என்று எண்ணிக் கொண்டான்.

'அது சரி. அந்தப் பொண்ணு ஏம்மா என்னைப் பார்த்தவுடனேயே ஓடுது?' என்று கேட்டான் அம்மா விடம்.

'தெரியலியேப்பா. உங்கிட்ட பேசறதுக்குக் கூச்சப் படுது போல இருக்கு. அன்னிக்கும் அப்படித்தான் வீட்டுக்கு வந்தவுடனேயே, உன் ஃபோட்டோ பார்த்துட்டு உடனே 'கிளம்பறேன்'னு கிளம்பிட்டா. இன்னிக்கும் உன்னைப் பார்த்தவுடனே கிளம்பிட்டா' என்றார்.

திரும்பிப் பார்த்தார்கள். அந்த சுற்றுப் பிரகாரத்தினுடைய முனையிலே அவளும் அவளோடு இரண்டு பெண்களுமாக இன்னும் இரண்டு பேருமாகப் போய்க் கொண்டு இருந்தார்கள்.

'அவங்க குடும்பம்பா. அந்தப் பொண்ணுக்கு ரெண்டு பேரு ஸிஸ்டர்ஸ் இருக்காங்க' என்றார் அம்மா.

'அதான் அவங்க அம்மா, அப்பா. அப்பா மட்டும் தான் சம்பாதிக்கிறார் போல இருக்கு. கொஞ்ம் கஷ்டம் இருக்கும்போல இருக்கு. பணக்கஷ்டம்' என்றார் அம்மா.

'அப்படியா? பரவாயில்லையே. இந்த... இந்த மாதிரி சூழ்நிலையில் அந்தப் பொண்ணு ஆர்.ஜே. வேலை பார்த்து சம்பாதிக்குதோ...?' என்று கேட்டான்.

'ஆமாப்பா. இவளும் கொஞ்சம் சப்போர்ட் கொடுக்கிறா. இவ படிப்புக்கு நல்லா அவளே சம்பாதிச்சுக்கிறா போல இருக்கு' என்றார் அம்மா பாராட்டும் விதமாக.

'ரொம்ப நல்ல பொண்ணா தெரியுறா' என மறுபடியும் பாராட்டினார்.

அப்போதுதான் சுபாஷுக்கு அந்த எண்ணம் தோன்றியது. 'ஏம்மா ரொம்ப கஷ்டப்படறாங்கன்னா அந்தப் பொண்ணுக நல்லாப் படிக்குதான்னு விசாரிங்க. சின்னப் பொண்ணுங்க ரெண்டு பேரும் நல்லாப் படிக்கிறதா இருந்தா, நம்ம டிரஸ்ட்டுக்கு அப்ளை பண்ணச் சொல்லுங்க. எஜூகேஷனுக்கு வேண்ணா ஹெல்ப் பண்ணலாம்' என்றான் சுபாஷ்.



அம்மா கண்களை விரித்தார். 'இதப் பார்த்தியா? எனக்கு இந்த எண்ணம் தோணவே இல்லை பாரு. சும்மா அந்தப் பொண்ணு நல்ல பொண்ணு, நல்ல பொண்ணு. அப்படி செஞ்சா, இப்படி செஞ்சா'ன்னு சொல்லிட்டிருக்கேனே ஒழிய, இப்படி உதவி செய்யலாம்னு எனக்கு தோணலியே...' என்றவர் தானே விளக்கம் சொல்வது போல, 'இல்லப்பா. ஆனா, அவங்க குடும்பம் ரோசக்கார குடும்பம். 'சட்'டுன்னு யாருகிட்டயும் ஹெல்ப் வாங்க மாட்டாங்களாம். என்ன இருக்கோ அதை சாப்பிட்டுட்டு அமைதியா இருப்பாங்களாம். குடும்பக் கஷ்டமே வெளியே தெரியாம போய்க்குங்களாம் அந்தப் பொண்ணுங்க' என்றார்.

'இவ்ளோ தூரம் தெரிஞ்சு வெச்சருக்கீங்க' என்று சிரித்தான் சுபாஷ்.

'எல்லாம் வீராசாமி புண்ணியம்தான். வீராசாமிதான் ஏரியா விஷயமே எனக்கு சொல்லுவாப்ல' என்றார்.

வீராசாமியின் முகத்தில் வெட்கம் படிந்தது. 'அம்மா, சும்மா சொல்றாங்க தம்பி' என்றார் வெட்கத்துடன்.

'பரவால்ல, பரவால்ல. எங்களுக்கு சமையல் செஞ்சுட்டு மத்த நேரம் நீங்க ஏதோ பண்ணலாம். தப்பில்ல. உங்களுக்கும் பொழுது போகணும் இல்ல' என்று அவன் கிண்டல் செய்ய,

'போங்க தம்பி, நீங்களும் கிண்டல் செய்யறீங்களா?' என்றார்.

'இல்ல வீராசாமிண்ணா. என்னதான் ரேடியோ இருந்தாலும், என்னதான் டி.வி. இருந்தாலும் ஏரியா நியூஸ் கேட்டுக்கிறதுக்கு ஒரு ஆள் இருக்கணும்னே. ஃபீல்டு நியூஸ் தெரிஞ்சுக்கணும்ல' என்றான்.

'போங்க தம்பி நீங்க' என்று அவர் மறுபடியும் சிரித்தார்.

அவன் பேச்சோடு பேச்சாக கேட்பது போல, 'சரி... சரி... அந்தப் பொண்ணு ரேடியோ ஸ்டேஷன்லதானே வேலை செய்யுதுன்னு சொன்னீங்க' என்றான்.

'ஆமா' என்றார் அவர் உற்சாகமாக.

'பொண்ணு பேரென்ன?' என்று கேட்டான்.

'பொண்ணு... பேரு...' என்று அவர் இழுக்கும் போதே, அவர்கள் திரும்ப சுற்றிவிட்டு கனகசபைக்குள்ளே நுழைந்தார்கள்.

நுழைந்தவர்கள் 'டக்'கென்று இவர்களை நோக்கி வந்தார்கள். ஆனால் அந்தப் பெண்ணுக்கு மட்டும் ஏதோ காலுக்கு அடியில் நெருப்புப் படலம் இருப்பது போல, ஒரு பரிதவிப்பு தெரிந்தது.

சுபாஷ் நிற்கிற இடம் வராமல், சற்று தள்ளியே நின்றார்கள். அம்மா கமலா அவர்களை நோக்கிச் சென்றார். 'என்ன கோயிலுக்கு வந்தீங்களா? சந்தோஷம் பார்த்ததுல. டைம் இருந்தா வீட்டுக்கு வாங்க.'

'வர்றோம்மா' என்றார்கள்.

பொன்மலரின் தாய் அவரிடத்திலே, 'அம்மா, ரொம்ப நன்றிங்கம்மா. நீங்க அன்னிக்கு எங்க பாப்பாவை வீட்டுக்குக் கூப்பிட்டு பாராட்டினீங்களாமா?! ரொம்ப சந்தோஷம்' என்றார்.

ஏனோ அந்தப் பெண்ணின் பெயரென்ன என்று தெரிந்து கொள்வதிலே சுபாஷுக்கு ஒரு ஆர்வமிருந்தது.



ஏதோ கவனிக்காதவன் போல் நின்று கொண்டிருந்தாலும் காதைத் தீட்டிக் கொண்டு, அவள் பெயரைச் சொல்லப் போகிறார்களா என்று கவனித்துக் கொண்டிருந்தான்.

'இந்த வீராசாமி அண்ணனாவது பெயரைச் சொல்லியிருக்கக் கூடாதா?' என்று தோன்றியது.

உடனே தன்னைக் குறித்து ஒரு சிரிப்பு வந்தது. இவ்வளவு பெரிய நிறுவனத்தை நடத்துகிறோம், அங்கே நூற்றுக்கணக்கான பெண்கள் வேலை செய்கிறார்கள். அந்தப் பெண்களுடைய பெயர்களையெல்லாம் தெரிந்து கொள்வதில் இல்லாத ஆர்வம், இந்தப் பெண்ணுடைய பெயரை தெரிந்து கொள்வதில் மட்டும் தனக்கு ஏன் தோன்றுகிறது?' என்று தன்னைத் தானே குறித்து சிரித்துக் கொண்டான்.

ஆனாலும் காதைத் தீட்டிக் கொண்டு கவனமாகக் கேட்டுக் கொண்டான். அப்போது அவர்கள், 'சரிங்கம்மா' என்று சொல்லிக் கொண்டு கிளம்பினார்கள்.

அவர்கள் நாலு எட்டு போயிருப்பார்கள். அதற்குள்ளா அம்மா அந்தப் பெண்ணை மறுபடியும் நிறுத்தி வைத்து ஏதோ சன்னமாக சொல்லிக் கொண்டிருந்தார். ஒருவேளை இந்தக் கல்வி உதவித் தொகை பற்றி சொல்வாராக்கும் என்று எண்ணிக் கொண்டான் சுபாஷ்.

அதற்குள்ளாக அந்தப் பெண்ணினுடைய சகோதரிகள் இருவரும், 'ஏய் பாப்பி, சீக்கிரம் வா. சீக்கிரம் வா பாப்பி. எவ்வளவு நேரம் நிற்கிறது?' என்று குரல் கொடுத்தார்கள்.

'சரிங்கம்மா. அவங்களுக்கு நாளைக்கு எக்ஸாம் இருக்கு. போய்ப் படிக்கணும். அதுக்காகதான் இன்னிக்கு கோவிலுக்கு வந்துட்டு போயிரலாம் அப்படின்னு வந்தோம்' என்று சொல்லிவிட்டு அவள் வேகவேகமாக

நகர்ந்தாள். அதற்குள்ளாக வீராசாமியும், கமலாம்மாவும் திரும்பி வந்தார்கள்.

'என்ன வீராசாமி அண்ணே? பேர் கேட்டதும் நீங்க சொல்லவே இல்ல' என்று கேட்டான்.

'பாப்பின்னுதான் கூப்பிடறாங்க தம்பி. பாப்பின்னு தான் நாங்க எல்லோரும் கூப்பிடறோம்' என்றார்.

'பாப்பியா..? அப்படி ஒரு பேரு இருக்காதே..?' என்றான்.

'இல்ல தம்பி. அப்படித்தான் கூப்பிடறாங்க. நான் வேண்ணா கேட்டு சொல்லட்டுமா?' என்று கேட்டார்.

'அய்யய்யோ. வேண்டாம். அந்தப் பொண்ணு பேரைத் தெரிஞ்சு நான் என்ன பண்றேன்' என்று ஆர்வமில்லாதவன் போல சொல்லி சிரித்துக் கொண்டான். ஆனால்... பாப்பி...' என்று மனதுக்குள்ளே சொல்லிக் கொண்டான்.

போய்க் காரை எடுத்தான். காரை எடுக்கும்பொழுது வீராசாமி கூடுதலாக ஒரு தகவல் கொடுத்தார், 'இந்தப் பொண்ணை 'பெரிய பாப்பி'ன்னு சொல்றாங்க தம்பி. அந்த சின்ன கடைசிப் பொண்ணை 'சின்ன பாப்பி'ன்னு சொல்றாங்க. நடுப்பொண்ணை 'பாப்பி'ன்னு சொல்றாங்க' என்றார்.

'ரொம்ப முக்கியம். பெரிய தகவல் கொடுத்திடீங்க' என்று அவன் கடுப்பாகிக் கொண்டான். இந்த மாதிரி கோவிலுக்கு எல்லாம் வரும்போது அம்மாவைக் காரில் அழைத்து வருவதிலே அவனுக்கு மிகுந்த ஆர்வமுண்டு.

காரை எடுக்கும்போதே மெல்ல விசிலடித்தான். விசிலடித்துக் கொண்டே மனதுக்குள்ளே, 'பாப்பி... நல்லாருக்கே. பாப்பி' என்று நினைத்துக் கொண்டே எடுத்தான். கார் வேகமெடுத்தது.



## அத்தியாயம் - 7

அவசர அவசரமாக உள்ளே நுழைந்தான் சுபாஷ். இடது கையைத் திருப்பி வாட்ச்சைப் பார்த்துக் கொண்டிருந்தான். வழக்கத்தை விட அரை மணி நேரம் தாமதமாகிவிட்டது. இதை அவன் எதிர்பார்க்கவில்லை.

எப்போதுமே அவன் இது போன்ற மீட்டிங்குகளுக்கு நேரத்திற்கு வந்து விடுவான். 'சுபாஷ் இஸ் நோன் ஃபார் பங்சுவாலிட்டி' என்று சொல்லுவார்கள்.

லயன்ஸ் கிளப் போன்ற அமைப்பினுடைய கூட்டம் அது. நகரத்தின் மிகப் பெரிய புள்ளிகளெல்லாம் அந்த அமைப்பில் இருந்தார்கள். அது ஒரு பொதுச்சேவை அமைப்பு. அதில் உண்மையிலேயே சேவைத் திட்டங்கள் இருக்கிறாற்போல் அவனுக்குத் தோன்றியதால், அதில் அவனும் பங்கேற்றுக் கொண்டிருந்தான்.

வெறும் உறுப்பினராக மட்டும்தான் இருந்தான். அதிலே அந்த சங்கத்தினருக்குக் கொஞ்சம் வருத்தமும் உண்டு. ஏதாவது ஒரு பெரிய பொறுப்பைத் தலையிலே கட்டிவிடலாமென்று அவர்களும் பகிரதப் பிரயத்தனம் செய்தார்கள். ஆனால் சுபாஷ் அப்படியெல்லாம் சிக்கிக் கொள்கிறவனாக இல்லை.

'பொறுப்பிலிருந்து சேவை செய்தால்தானா? எனக்கு எப்போ நேரம் கிடைக்கிறதோ, அப்ப கண்டிப்பா வந்து எவ்வளவு முடியுமோ அவ்வளவு செய்யறேன்' என்று சொல்லிவிட்டான். ஆனால் உண்மையில் பொறுப்பில் இருக்கிறவர்களைக் காட்டிலும் அவன் இன்னும் அதிகமாக வேலை செய்தான் என்றுதான் சொல்ல வேண்டும்.

சுபாஷ் போன்றவர்களெல்லாம் இந்த அமைப்பில் இருப்பதே மிகப் பெரிய விசேஷம் என்று அந்த அமைப்

பினர் கருதியதால் அவர்கள் அவனைப் பெரிதும் வற்புறுத்தவில்லை. சுபாஷ் இது போன்ற கூட்டங்களுக்கு மட்டும் பட்டும் படாமல் வந்து விட்டுப் போவான்.

அவர்கள் உண்மையாகவே எடுத்துச் செய்கிற சமூக சேவைத் திட்டங்களிலெல்லாம் முழுமையாக பங்கெடுத்துக் கொள்வான். இரத்ததான முகாம்களுக்காக மாணவர்களைத் திரட்டிக் கொடுப்பது ஆகட்டும், எதிர்பாராத துன்பங்கள் ஏற்படுகின்ற காலங்களில் வெளியூர்களுக்குக் கூட அவர்கள் ஆட்களை அழைத்துப் போய் உதவி செய்வது உண்டு.

சென்னையிலே சுனாமி ஏற்பட்டபொழுது, இங்கு இருந்து ஒரு குழுவை அழைத்துப் போவதற்கு அவனால் முடியவில்லை என்றாலும் கூட, அந்தக் குழுவிற்கான செலவில் ஒரு பெரும்பங்கை அவன் எடுத்துக் கொண்டிருந்தான்.

இதுபோன்று அவன் சேவைகள் செய்வதனால் அந்த அமைப்பினர் அவனைக் கொண்டாடிக் கொண்டார்கள், முக்கியத்துவம் கொடுத்து வைத்துக் கொண்டார்கள்.

ஆறு மணிக்கு அவன் அந்தக் கூட்டத்துக்குப் போய் இருக்க வேண்டும். இப்போது மணி ஆறரை ஆகிவிட்டது. 'ஆனாலும் என்ன அட்டெண்ட் பண்ணிவிடலாம். குறைந்த பட்சம் தலையைக் காட்டிவிட்டாவது வந்து விடலாம்' என்ற எண்ணத்துடன் அவன் வந்திருந்தான்.

நல்லவேளையாக யாரோ வரவேற்புரை கொடுத்துக் கொண்டிருந்தார்கள். மெயின் ஸ்பீக்கர் இன்றைக்கு இன்னும் பேச ஆரம்பிக்கவில்லை. 'நல்லதாகப் போயிற்று' என்று அவன் அந்த ஹாலினுடைய கடைசி வரிசையிலிருந்த ஒரு இருக்கையிலே அமர்ந்து கொண்டான்.

அவனைப் பார்த்ததுமே ஒரு பொறுப்பாளர் ஒடி வந்து, 'முன்னே போ, முன்னே போ' என்று சைகை



செய்தார். அவன். 'வேண்டாம், அனாவசியமாக டிஸ்டர்ப் ஆகிவிடும்' என்று சைகை செய்து விட்டு அங்கேயே அமர்ந்து கொண்டான்.

அன்றைக்குப் பேசியவர் மிக முக்கியமாக ஒரு பிரச்சினையை எடுத்துக் கொண்டு பேசிக் கொண்டிருந்தார். 'இளைஞர்களிடத்திலே பெருகி வரும் மதுப்பழக்கம், அதன் அடிப்படையில் தொடர்ந்து வரும் போதைப் பழக்கம், அதன் அடிப்படையில் தொடரும் எய்ட்ஸ் போன்ற நோய்கள்' இவைகளுடைய பயங்கரங்களை எல்லாம் அவர் விவரித்துக் கொண்டிருந்தார்.

'இதற்கெல்லாம் கண்டிப்பாக சமுதாயத்தினுடைய மேல்மட்டத்திலிருப்பவர்கள் ஏதாவது ஒரு வகையில் உதவி செய்ய வேண்டும்' என்று அவர்களிடத்திலே அவர் வேண்டுகோள் வைத்துக் கொண்டிருந்தார்.

தன்னுடைய பாக்கெட்டிலே ஒரு சின்ன நோட்டை வைத்திருப்பான் சுபாஷ். அதைப் போல இன்றைக்கும் வைத்திருந்தான். அந்த நோட்டை எடுத்து அவர் சொல்லுகின்ற முக்கியமான விஷயங்களையெல்லாம் குறித்துக் கொண்டிருந்தான்.

மேலும் முக்கிய பேச்சாளர் பேசி முடித்தவுடனேயே கோவையிலுருக்கக் கூடிய ஒரு குழுவிற்கு அவர்கள் அன்றைக்கு மரியாதை செய்தார்கள். மாணவர்களாகச் சேர்ந்து நடத்திக் கொண்டிருக்கிற அந்தக் குழுவில், மிக முக்கியமான ஒரு காரியத்தைச் செய்து கொண்டிருந்தார்கள்.

அரசாங்க ஆஸ்பத்திரியில் இருக்கும் அனாதைப் பிணங்களை அவர்கள் பொறுப்பில் வாங்கி முறையாக அடக்கம் செய்யும் சடங்கை அவர்கள் செய்து கொண்டிருந்தார்கள். அதற்கு பல பெரிய மனிதர்கள் உதவி செய்து கொண்டிருந்தார்கள். அதிலே சுபாஷும் ஒருவன்.

அந்த அமைப்பினருக்குப் பாராட்டு என்பதால்தான் முக்கியமாக அவன் அன்றைக்கு வந்திருந்தான். சொல்லப் போனால் அன்றைக்கு வர முடியாத அளவுக்கு அவனுக்கு வேறு ஒரு வேலை இருந்தது. இருந்தாலும் அதை ஒதுக்கி வைத்துவிட்டு, அந்தக் குழுவைப் பாராட்டும் பொழுது கண்டிப்பாக தான் அங்கே இருக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு வந்திருந்தான்.

அந்தக் குழுவிற்கு இன்றைக்கு ஒரு கேடயமும், பரிசுத்தொகையும் வழங்கினார்கள். அதை சுபாஷுனுடைய பம்ப் செட் நிறுவனம்தான் வழங்கியிருந்தது. அதை மேடையிலே அறிவித்தவர்கள் சுபாஷைத் தேடினார்கள். சுபாஷ் இங்கிருந்தே கையைக் காட்டிவிட்டு சேர்மனைக் கொடுக்கச் சொல்லிவிட்டான். சேர்மன் கொடுத்தார்.

இந்த நிகழ்வுகளெல்லாம் நடந்து கொண்டிருக்கும் பொழுது, மேலே மேடையிருக்க, மேடையின் வலது புறமாக ஒரு டேபிள் போடப்பட்டு, அங்கே இரண்டு இளம்பெண்கள், இந்த நிகழ்ச்சியினுடைய தொகுப்பைக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அதிலே ஒரு பெண் நன்றாகவே செய்து கொண்டிருந்தாள். அதை கவனித்துப் பார்த்துக் கொண்டிருந்தான் சுபாஷ்.

அந்தப் பெண்ணின் குரலை எங்கேயோ கேட்ட மாதிரி இருந்தது. ஆனால் அவனுக்கு மிகவும் விருப்பமான அந்தக் குரலைப் போலவே அது இருந்தாலும், ஏதோ விதத்தில், மிகக் குறைந்த சதவீத அளவில்தான் என்றாலும் கூட ஒரு வேறுபாடு இருந்தது. தன் மனதுக்கினிய அந்தக் குரலுக்குக் கிட்டத்தட்ட ஒத்த குரலாக அது இருக்கிறது என்று தோன்றியது.

அழகாகவும், வேடிக்கையாகவும் அந்தப் பெண்



ஆங்கிலத்திலும், தமிழிலும் தன்னுடைய கமெண்டுகளைக் கொடுத்துக் கொண்டிருந்தாள். ரசிக்கும்படியாக இருந்தது அது.

கூட்டம் முடிவதற்கே எட்டு மணி ஆகிவிட்டது. அதற்குப் பின்பு சிற்றுண்டி என்றார்கள். கூட்டத்திலிருந்து குழு, குழுவாகப் பிரியும்பொழுது அந்தச் சேர்மன், மற்றும் அந்த அமைப்பினுடைய செக்ரட்டரி இரண்டு பேரும் சுபாஷை நோக்கி ஓடி வந்தார்கள்.

'என்னப்பா, இப்படி செஞ்சுட்டீங்க. நீங்க முதல்லேயே வந்திருந்தா உங்களை மேடையிலே உட்கார வெச்சிருப்பேனே...' என்று பரிதவித்துச் சொல்லிக்கொண்டார்கள். சுபாஷ் குறும்பாகப் புன்னகைத்தான். 'அந்தத் தொல்லை வேண்டாம்னுதானே நான் லேட்டா வந்தேன்' என்றான்.

'என்னப்பா நீ? அவனவன் மேடை கிடைக்கல அப்படின்னு சங்கடப்பட்டுக்கிறாங்க. போன மீட்டிங்ல அந்த பட்டேலுக்கு டேபிள் கொடுக்கல அப்படின்னு என்ன சண்டை போட்டார் தெரியுமா?' என்று கேட்டார் சேர்மன்.

அவன் சுற்றுமுற்றும் அந்த பட்டேல் தெரிகிறாரா என்று பார்த்துவிட்டு, 'ஒண்ணு பண்ணுங்க. அடுத்த மீட்டிங்ல பசை போட்டு உட்கார வெச்சிருங்க' என்றான்.

அவர்கள் சிரித்தார்கள். மனிதர்கள் அப்படியும் இருக்கத்தானே செய்கிறார்கள். நாற்காலிகள் கிடைக்காதா என்று ஆர்வத்துடன் இருக்கத்தானே செய்கிறார்கள், என்று எண்ணிக் கொண்டான்.

'ஏம்ப்பா, நீ இப்படி வித்தியாசமா இருக்கறே? செய்யறதெல்லாம் செய்யறே. புகழ் மட்டும் வேண்டாங்கறே. ஏன் அப்படி?' என்றார் செக்ரட்டரி.

'சார், அதுதான் தொழில் துறையில இருக்கே சார். அதுல இன்னொரு பிரச்சினையும் இருக்கு. இதுல நான் ஒப்பனா எல்லா இடத்துலேயும் உட்கார்ந்தேன்னா நிறைய தொல்லை வந்துரும் சார். ஜெனியூனா இருக்கக் கூடிய நிறுவனங்களுக்கு, தேவையுள்ளவங்களுக்கு கொடுக்கிறது ஒருவிதம். இப்படி செய்யறோம்னு தெரிஞ்சா சும்மா ஜஸ்ட் லைக் தட் யார் வேண்ணா வந்து உதவி கேட்டுட்டிருப்பாங்க. இதுல என் ஆஃபிஸ் ஒர்க் எல்லாம் பாதிச்சிரும்' என்றான் சுபாஷ்.

'அது என்னமோ உண்மைதாம்ப்பா. கொடுக்கிறதுக்கு ஆளு இருந்தா, பிடுங்கி எடுக்கிறதுக்கும் மனிதர்கள் இருக்கறாங்க. அவங்க உண்மையில கொடுக்கிறதுக்குத் தகுதியானவங்களான்னு பார்த்துட்டுத்தான் கொடுக்கணும். யூ ஆர் ரைட்' என்றார் சேர்மன்.

'அது சரி. இன்னிக்கு கமெண்ட்ரி கொடுத்தது யாரு. மாஸ்டர் ஆஃப் செரிமனி நல்லா இருந்ததே' என்றான் சுபாஷ்.

'ஆமா, நம்ம கிஷோரோட சிஸ்டர்' என்றார் செக்ரட்டரி.

'அப்படியா? கிஷோர் வந்திருக்காப்லயா?' என்று அவன் திரும்பினான்.

'கிஷோர் வந்திருக்காப்ல. அங்கே அரேஞ்மெண்ட்ஸ் பார்த்துக்கிட்டிருக்காரு. வரச் சொல்றேன்' என்றார்.

'இல்ல, இல்ல. பரவாயில்ல. ஒண்ணும் அவசியம் இல்ல' என்று சொல்லி விட்டான் சுபாஷ்.

'கிஷோருடைய சிஸ்டரா?' என்று திரும்பவும் அவன் சொல்லுவதைக் கேட்டவுடனே சேர்மன் சொன்னார், ஆமா. 'ஸ்வர்ணா'ன்னு அந்தப் பொண்ணு ரொம்ப நல்லா பண்ணுச்சு. உங்களுக்குத் தெரியுமா ரேடியோவுல வொர்க் பண்ணிக்கிட்டு இருக்கிறா?' என்றார்.



அந்த குறிப்பிட்ட தனியார் ரேடியோவைப் பற்றி அவர் சொன்னவுடனேயே சுபாஷுக்குக் கொஞ்சம் ஆர்வமானது.

'அப்படியா?'

'ஆமாம்பா. உங்க ப்ரொக்ராம்லாம் நிறைய வந்துகிட்டிருக்கே' என்றார் சேர்மன்.

'ஆமாமா. அதை அட்வர்டைஸ்மெண்ட் டிபார்ட்மெண்ட் இருக்காங்கள்ல. அவங்க பார்த்துக்கிறாங்க. ஸ்ட்ரெய்ட்டாவே நான் போகறதில்ல' என்றான்.

'நிறைய ப்ரொக்ராம்ஸ் கொடுத்திட்டிருக்கீங்க. எப்பப் பாரு உங்களோட பம்ப் செட் கம்பெனி அடிபட்டுட்டே இருக்கு' என்றார் சேர்மன். 'லோக்கல் டி.வி.ல வருது. ஸ்டேட் வைடா கூட பெரிய, பெரிய சேனல்ல கூட வருதே' என்றார்.

'ஆமா. அதுக்குன்னு ஒரு மேனேஜர் போட்டிருக்கேன். அவர் பார்த்துக்கிறார் எல்லாவற்றையும்' என்றான் சுபாஷ்.

'ஏம்பா, நீ இந்த சொர்ணாவை சந்திக்கணுமா?' என்று கேட்டார் செக்ரட்டரி.

'இல்லையில்ல. நல்லா பண்ணுச்சு. ஜஸ்ட் பாஸ் ஆன் மை அப்ரிசியேஷன். அது போதும்' என்று சொன்ன சுபாஷ்,' அப்புறம்... என்று ஆரம்பித்தான்.

'அப்புறம் பிசினஸ் எல்லாம் எப்படி போயிட்டிருக்கு?' என்றார் செக்ரட்டரி.

'நல்லா போயிட்டிருக்கு. ஒண்ணும் பிரச்சினையில்லை. இன்னும் காஸ்ட் வைஸா கம்மி பண்ண முடியுமான்னு பார்க்கறேன்' என்றான் சுபாஷ்.

'ஆமாப்பா. உன் புராடக்ட்ஸுக்கு நல்ல டிமாண்ட்

இருக்கு. காஸ்ட் வைஸா கம்மி பண்ணா இன்னும் கூட நல்லாப் போகும்' என்றார் சேர்மன்.

'ஏன் அப்படியே சாப்பிடலாமே... பேசிக்கிட்டே...' என்று சுபாஷ் போய் வரிசையில் நின்று ஒரு தட்டில் தனக்குத் தேவையானவற்றை வாங்கிக் கொண்டான். இரவு நேரம் என்பதால் ஸ்பைஸி ஐடம்ஸ் வேண்டாம் என்பான். அளவாக எடுத்துக் கொள்ளுவான். எப்படியிருந்தாலும் வீட்டில் போய்க் கொஞ்சமாவது சாப்பிட வேண்டும், அம்மா காத்துக் கொண்டிருப்பார் என்பதால் அளவாக எடுத்துக் கொண்டான்.

சேர்மனும், செக்ரட்டரியும் ஒருவரைப் பார்த்து ஒருவர் புன்னகைத்துக் கொண்டார்கள்.

'என்னப்பா, இதுக்கப்புறம் பார் உண்டா?' என்று கேட்டார்.

சுபாஷ் நகைச்சுவையாக சொல்லுவதுபோல லேசாக தலையிலே அடித்துக் கொண்டான். 'விடிய விடிய ராமாயணம் கேட்டு...' என்று இழுத்தான். செக்ரட்டரியும், சேர்மனும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

'அது மொடாக்குடியன்களுக்குப்பா, நாங்கள்லாம் சும்மா டச் அண்ட் கோ தான்' என்றார்.

'இந்த மாதிரி விஷயங்கள்ல உள்ள நுழைஞ்சா வெளிய வர முடியாது சார்' என்று சிரித்தான் சுபாஷ்.

'அதனாலதான் நீ ரொம்ப எச்சரிக்கையா இருக்கியோ...' என்றார்.

'ஒன்னு சொல்லட்டுமா? போதையில நிறைய போதை இருக்கு. ஒன்னு புகழ் போதை, இன்னொண்ணு வெற்றி. தொழில்ல வெற்றிங்கற போதை. பணஞ் சேக்கற போதை. சாதனை போதை. இப்படியெல்லாம் நிறைய இருக்கு. நான் இதுல ரெண்டு மூணை செலெக்ட்



பண்ணிட்டேன்னு வெச்சிக்குங்களேன். அதனால எனக்கு இந்த போதை எல்லாம் தேவையே இல்ல. சாதனை போதை, வெற்றி போதை, தொழிலை மேம்படுத்தறது... நிறைய இருக்கு. அதுவே போதும்' என்றான்.

'ஐயய்யய்ய... உங்கிட்ட பேசி ஜெயிக்க முடியாதுப்பா' என்று சிரித்தார் சேர்மன்.

'ஓ.கே. அங்க பாருங்க. கிருஷ்ணன் சார் வந்திருக்காரு. அவர்கிட்ட பேசணும்' என்று நகர்ந்தான் சுபாஷ். அவரிடத்திலே போய் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தான். முக்கியஸ்தர்கள் அவனை நோக்கி வருவதும், சில பேரிடம் போய் அவன் பேசுவதுமாக அந்த அரை மணி நேரமும் கழிந்து கொண்டிருந்தது. அப்போதுதான் திரும்பி அந்தப் பெண்ணைப் பார்த்தான்.

'அடடே... பொன்மலர்' என்று நினைத்துக் கொண்டான். அதற்குள் அந்தப் பெண்ணும் இவனைப் பார்த்து விட்டாள்.

இந்த மாதிரி கூட்டத்தில் 'ஹேய் என்று கையை அசைத்து அழைத்தால் அது நன்றாக இருக்காதே என்று எண்ணிக் கொண்டு தலையை அசைக்கலாமா... பக்கத்திலே அழைத்துப் பேசலாமா... என்று அவன் யோசித்துக் கொண்டிருக்கும் போதே அந்தப் பெண் 'சட்'டென்று மறைந்து, மறைந்து போவதைப் போலத் தோன்றியது. ஏனோ தன்னை சந்திப்பதை அவள் தவிர்க்கிறாள் என்று தோன்றியது. அப்போதுதான் அவனுக்கு இன்னொரு சந்தேகம் கூடத் தோன்றியது, 'இன்றைக்கு ஏன் அவளது குரல் வேறு மாதிரியாக இருந்தது... வழக்கம் போல் இல்லையே...' என்று யோசித்துக் கொண்டே திரும்பிய பொழுது, சேர்மன் கைப்பிடியாக அந்தப் பெண்ணை அழைத்துக் கொண்டு வந்தார்.

'சுபாஷ், நீங்க சொல்லிக்கிட்டிருந்திங்கள்ல, நல்லா பண்ணினாங்கன்னு. இவங்கதான். கிஷோரோட சிஸ்டர், சொர்ணா. சொர்ணாபுஷ்பா' என்றார்.

'ஐ ஸீ... ஹலோ' என்றான் சுபாஷ்.

அவன் முகம் மாறியது. 'இவள் சொர்ணபுஷ்பா என்றால், ஏன் தன்னிடம் பொன்மலர் என்று அறிமுகப் படுத்திக் கொண்டாள்?' என்ற எண்ணம் தோன்றியது.

'பேசிட்டிருங்க' என்று சேர்மன் அந்தப் பக்கம் போனதும், அவள் 'சட்' டென்று ஒரு விளக்கம் சொன்னாள். 'சார் தப்பா நினைச்சுக்காதிங்க. அது...' என்று அவள் ஒரு விளக்கம் சொன்னாள். அந்த நேரத்திற்கு அந்த விளக்கம் ஏற்புடையதாகத்தான் இருந்தது.

அதற்குள்ளாக திரும்பிப் பார்த்துவிட்டு, 'சார், ஃபிரண்ட்ஸ் கூப்பிடறாங்க. சாரி... அப்புறமா பேசலாம்' என்ற நகர்ந்து விட்டாள்.

அவள் சொன்ன விளக்கம் சரியாக இருந்தாலும் எங்கேயோ, ஏதோ இடிக்கிறது என்ற உணர்வு மட்டும் அவனுக்கு மாறவேயில்லை.

## அத்தியாயம் - 8

**அ**ன்றைக்கு விடுமுறை நாள். ஞாயிற்றுக்கிழமை.

அம்மாவும், அப்பாவும் ஏதோ உறவினர்கள் வீட்டு விசேஷத்திற்கு போக வேண்டும் என்று கிளம்பிப் போய் இருந்தார்கள். ஏதோ ஒரு முக்கியமான திருமணப் பேச்சு வார்த்தையாம். அதற்கு அவர்கள்தான் முன்னாலே போய் நின்று பேச வேண்டுமாம். அதற்காக போயிருந்தார்கள்.

சுபாஷ் சற்று சோம்பேறித்தனமாகவே புரண்டு கொண்டிருந்தான். அம்மா இருந்தால் இதற்குள்ளாக



நான்கைந்து முறை அழைத்திருப்பார்கள். பெற்ற வயிறல்லவா? 'வந்து சாப்பிட்டுட்டு போய்த் தூங்கு சுபாஷு' என்று சொல்லிக் கொண்டிருப்பார்கள்.

எட்டரை மணி, ஒன்பது மணி வரைக்கும் பொறுத்திருப்பார்கள். அதற்குப் பிறகு இந்தப் பாட்டு ஆரம்பித்து விடும். இன்றைக்கு அது இல்லாமல் ஒரு பக்கம் கஷ்டமாக இருந்தது. இன்னொரு பக்கம் 'தூங்கலாமே...' என்று ஆசையாக இருந்தது.

புரண்டு புரண்டு படுத்துப் பார்த்தான். அம்மாவின் அழைப்பு இல்லாவிட்டாலும் கூட ஏனோ அவனால் எட்டரை மணிக்கு மேல் தூங்க முடியவில்லை. எழுந்து குளித்துவிட்டு கீழே வந்தான்.

வீராசாமி எப்படியும் டிஃபன் செய்து தயாராகக் காத்திருப்பார் என்று தெரியும். இறங்கி வந்தான்.

'தம்பி, வந்துட்டீங்களா?' என்று பரபரப்பானார் வீராசாமி.

'ஏன் வீராசாமியண்ணே? நான் லேட்டா வருவேன்னு நினைச்சீங்களோ...' என்று புன்னகைத்தான்.

'ஆமா. அம்மா இருந்தா ஒரு அஞ்சாறு தடவை கூப்பிட்டுருவாங்க. கோவிச்சுக்கிட்டுத்தான் இறங்கி வருவீங்க' என்று அவரும் புன்னகைத்தார்.

'அதான் பாருங்களேன். இன்னைக்கு எழுப்பறதுக்கு அம்மா இல்லை. ஆனா நான் கரெக்ட் டைமுக்கு முழிச்சிட்டேன் பாருங்க. எட்டரை மணிக்கு மேல தூக்கம் வரலைண்ணே...' என்று சிரித்தான். 'சரி. குளிச்சிட்டு வந்தாச்சு. என்ன டிஃபன் வெச்சிருக்கீங்க' என்று கேட்டான்.

'அதில்ல தம்பி. டிஃபன்ல சின்ன பிரச்சினை. இட்லி வார்த்து வெச்சிருக்கேன். தோசை மாவு ரெடியா இருக்கு.

சட்னி, சாம்பார் பண்ணி, குருமா பண்ணி வெச்சிருக்கேன். உடனடியா பரிமார்றேன். சூடா தோசை வார்த்து... இந்த முதல் தோசை வர்ற வரைக்கும் ஒரு இட்லி மட்டும் சாப்பிடுவீங்களாம்' என்றார் குழந்தைக்குச் சொல்வது போல.

அவர் அவனை வாஞ்சையாகப் பார்த்தான். வீராசாமி ஏனோ மறு திருமணம் செய்து கொள்வில்லை. இந்த வீட்டோடேயே தங்கிவிட்டார். அவனைச் சிறு வயதிலிருந்தே பார்த்து வளர்த்துக் கொண்டிருந்தவர் என்பதால் எப்போதுமே அவன் மேல் அவருக்குப் பாசம் உண்டு. உரிமையும் எடுத்துக் கொள்ளுவார். நன்றாக கவனிக்கவும் செய்வார். கல்யாணம் ஆகியிருந்ததாம். ஆனால், திருமணம் முடிந்து இரண்டு, மூன்று வருடங்களுக்குள்ளாகவே மனைவியைப் பறிகொடுத்துவிட்டார். அதற்குப் பிறகு ஏனோ அவர் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று நினைக்கவேயில்லை.

தாய் இருக்கும் வரைக்கும் அவரை அழைத்துக் கொண்டு வந்து பின்னாலே குவார்ட்டர்ஸிலே இருந்தார். இப்போதும் குவார்ட்டர்ஸிலே அவருக்கென்று ஒரு அறை இருக்கிறது. ஆனால் எப்போதாவது அந்த அறைக்குப் போவார். பெரும்பாலும் வீட்டிலேதான் இருப்பார்.

சுபாஷின் தந்தை கங்காதரனின் கொள்கை என்னவென்றால், வீட்டிற்குள்ளே அதிகமாக வேலை ஆட்களை வைத்துக் கொள்ளக் கூடாது. நம்பிக்கையானவர்கள் ஒன்றிரண்டு பேர் இருந்தால் போதும். ஏனென்றால் வீட்டு வேலை ஆட்கள்தான் வீட்டுச் செய்தியை வெளியிலே பரப்புபவர்கள் என்று அவருக்கு எண்ணம்.

அதற்கேற்றபடி பெரும்பாலானவர்கள் வந்து வேலை செய்துவிட்டுப் போகிறவர்களாகத்தான் இருந்தனர்.



வீராசாமி மட்டும்தான் அங்கேயே தங்கி இருப்பார். அவரும் கூட சுபாஷின் தந்தை ஹாலில் இருக்கிறார் என்றால், ஒரு பக்கம் ஒதுங்கித்தான் இருப்பார். இத்தனைக்கும் சுபாஷின் தந்தை கண்டிப்பை நேரடியாகக் காட்டியதில்லை. ஏனோ அவர் கண்பார்வை, தலையசைப்பு இவையே சுற்று வட்டாரத்தை ஒரு கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருகிற மாதிரி இருக்கும். சுபாஷுக்குக் கூட அந்த மாதிரியான ஒரு வசீகரிக்கும் தன்மையும், கட்டுப்படுத்தும் தன்மையும் இருந்தன.

இனிமையாகப் புன்னகைத்துக் கொண்டு அவன் சாப்பிட அமர்ந்ததைப் பார்த்தவுடனே, வீராசாமிக்கு உள்ளே பாசம் பொங்கிக் கொண்டு கிளம்பியது. 'தம்பி நெய் வார்த்துத் தரட்டுமா தோசை? சின்ன வயசுல உங்களுக்கு நெய் போட்டு தோசை ஊத்திக் கொடுத்தா அப்படி சாப்பிடுவீங்க' என்று சின்ன வயதுக் கதைகளை எல்லாம் பேசிக் கொண்டே தோசை வார்த்துக் கொடுத்தார்.

இந்த மாதிரி சமயங்களில் வீராசாமி ஏதாவது ஒரு கோரிக்கை வைப்பதும் உண்டு. பெரும்பாலும் அது தனக்கென்று செய்கிற கோரிக்கையாக இருக்காது. யாராவது ஏழை, பாழைகளுக்கு உதவி செய்வதாக இருக்கும், தெரிந்தவர்களுக்கு ஏதோ வேலை வாங்கிக் கொடுப்பதாக இருக்கும். வாய்ப்பு இருக்குமென்றால் சுபாஷும் அதைச் செய்து கொடுப்பான்.

இன்றைக்கும் வீராசாமி ஏனோ அவனது முகத்தை முகத்தை பார்க்கிற மாதிரி தோன்றியது. தோசையை விண்டு வாயிலே போட்டான். தேங்காய்ச் சட்டினிக்கும், குருமாவுக்கும் அவ்வளவு அருமையாக இருந்தது.

'ஏன் வீராசாமி அண்ணே, இந்த குருமாவுக்குச் சப்பாத்தி இருந்தா நல்லா இருக்காது?' என்றான்.

'அதுக்கென்ன தம்பி? மாவு ரெடியா இருக்கு. ரெண்டே நிமிஷத்தில...' என்று பரபரவென்று போனார். ஒரு இட்லியும், ஒரு தோசையும் தின்று முடிப்பதற்குள்ளாக இரண்டு, மூன்று சப்பாத்திகளைக் கொண்டு வந்தார் சூடாக.

'எப்படிண்ணே, இப்படி பரபரவென்று வேலை செய்யறீங்க?' என்று சிரித்தான்.

'இது ஒண்ணுதானே தம்பி பழகியிருக்கேன். இதைக் கூட ஒழுங்கா செய்யலேன்னா எப்படி?' என்றார் அவர்.

அவரை ஆழ்ந்து பார்த்துக் கொண்டே கேட்டான். 'ஏண்ணே நீங்க ஏன் இரண்டாங் கல்யாணம் பண்ணிக்கல?' என்று.

வீராசாமி இப்படியொரு கேள்வியை எதிர்பார்க்கவில்லை. திகைத்துப் போய் நின்றார். 'என்ன தம்பி இப்படிக் கேட்கறீங்க?' என்றார்.

'இல்ல சும்மாதான். ஒரு க்யூரியாசிட்டி. உங்க வைஃப் போனப்ப உங்களுக்கு ரொம்ப சின்ன வயசுதானே... அப்புறம் ஏன், இன்னொண்ணு பண்ணியிருக்கலாமே,' என்றான்.

வீராசாமி அவனை ஆழமாகப் பார்த்தார். 'உனக்கு சொன்னால் புரியுமா?' என்பது போலிருந்தது அந்தப் பார்வை.

'என்னண்ணே எக்குத்தப்பா ஏதாவது கேட்டுட்டேனா?' என்றான் சுபாஷ்.

'இல்லைங்க தம்பி. அது என்னவோ தெரியலீங்க தம்பி. மூணு வருஷந்தான் அவ உசிரோட இருந்தா(ள்). ஆனா அதுக்கப்புறம் அந்த இடத்துல வேற ஒருத்தரை வெச்சுப் பாக்கறதுக்கே எனக்கு மனசு தோணலே. போதும்னு ஆயிடுச்சு. அவ்வளவு பிரியமா இருந்தாப்பா' என்றார்.



சுபாஷ் கொஞ்சம் நெகிழ்ந்தாற் போல பார்த்துக் கொண்டிருந்தான். 'ஏன் வீராசாமி அண்ணே, அவ்வளவு டீப் லவ்வா?' என்றான் புன்னகையோடு.

'அதெல்லாம் எனக்குத் தெரியாது தம்பி. ஆனா எனக்கு லேசா தலைவின்னா கூட துடிப்பா. அவளுக்குச் சின்னதா காய்ச்சல்னா, நானும் துடிச்சுப் போயிருவேன். பரஸ்பரம் அன்பு இருக்கணும் தம்பி. ஒருத்தர் மட்டும் கடமையைச் செஞ்சுக்கிட்டே இருக்கணும். இன்னொருத்தர் வாங்கிக்கிட்டே இருக்கணும்னா அங்க அன்பு கொஞ்சம் குறைஞ்சு போயிரும்' என்றார் வீராசாமி.

'பாயிண்ட் நோட்டெட்' என்று சிரித்தான் சுபாஷ்.

'புரியலீங்க தம்பி' என்றார்.

'இல்லல்ல... நோட்ஸ் எடுத்துக்கிட்டேன். எதிர்காலத்துல யூஸ் பண்ணிக்கறேன்,' என்று சிரித்தான்.

'எதிர்காலமா? இப்ப சரின்னு சொல்லுங்க தம்பி. அம்மா ஆசை ஆசையா காத்துக்கிட்டிருக்காங்க' என்றார் வீராசாமி.

'ஒண்ணும் அகப்பட மாட்டேங்குதே... என்ன பண்றது?' என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே அவனுக்கு அந்தக் கோவிலில் பார்த்த பெண்ணை நினைவுக்கு வந்தது.

அதே போல ஏதோ பரிமாற்றம் நிகழ்ந்தாற்போல 'சட்'டென்று வீராசாமியும், 'தம்பி, நான் ஒரு விஷயம் கேட்கணும்னு நினைச்சுக்கிட்டிருந்தேன்' என்றான்.

வீராசாமி அசடு வழியப் புன்னகைத்துக் கொண்டு, 'எனக்கென்ன தம்பி வேணும். எனக்கொண்ணும் பெரிசா வேண்டாம். நான் அன்னிக்கு சொன்னேனே அந்த பாப்பி பொண்ணு... அந்தப் பொண்ணோட ஸிஸ்டர்க்கு ரெண்டு பேருக்கும் படிப்புக்கு செலவுக்குக் கொடுக்கலாம்

அப்படின்னு நீங்க சொல்லிக்கிட்டிருந்தீங்களே... வரச் சொல்லட்டுமா? வந்து பார்க்கச் சொல்லட்டுமா?' என்றார்

'இப்போ, இந்த வீக் எல்லாம் நான் ரொம்ப பிஸியா இருக்கேனே. இன்னிக்குதான் ரெஸ்ட்ல இருக்கேன்' என்றான் சுபாஷ் யோசனையில் ஆழ்ந்தபடி.

'ஏன் தம்பி, இன்னைக்கே வரச் சொல்லட்டுமா?' என்றார் ஆர்வமாக.

'அம்மா, அப்பா இல்லையே...' என்று அவன் இழுத்தான்.

'அதனாலென்ன தம்பி. நான் இருக்கேன். நான் கூடவே இருக்கேன். நீங்க ஆஃபீஸ் ரூம்ல இருங்க. ஒரு பதினோரு மணிக்கு வரச் சொல்லட்டுமா?' என்று ஆர்வ மாகக் கேட்டார்.

'சரி வரச் சொல்லுங்க. நான் கூட ஆஃடர்நூன் எங்காவது திடீர்னு வெளியே போனாலும் போவேன். லெவென் ஓ கிளாக், தட் வில் பி ஓ.கே.' சொல்லிவிட்டு, அவன் மறந்துவிட்டு போனாற்போல, அறைக்குப் போய் சற்று நேரம் ஓய்வெடுத்து விட்டு, எப்போதுமே இந்த மாதிரி எழுந்திருக்க வேண்டுமென்றால் அதற்காக ஒரு அலாரம் வைத்துக் கொள்ளுவான். அது போல தன்னுடைய செல்ஃபோனில் 10:45 என்று அலாரம் வைத்து, எழுந்து, தன்னைப் புதுப்பித்துக் கொண்டு கீழே இறங்கி வந்தான்.

சரியாக பதினோரு மணிக்கு அந்த இரண்டு பெண் களும் உள்ளே நுழைந்தார்கள். தயங்கித் தயங்கி நின்றார் கள். தங்களுடைய சகோதரியின் சாயல் அவர்களிடத் திலே இருந்தது. அவன் அலுவலகத்தில் அமர்ந்து கொண்டு போர்ட்டிகோ அருகில் அவர்கள் நுழைவதைப் பார்த்தும் பார்க்காதவன் போல் அமர்ந்து கொண்டிருந்தான்.



வீராசாமி ஓடிப்போய், 'வாங்க, வாங்க. நல்ல வேளை. தம்பி உங்களுக்காக காத்துக்கிட்டிருக்கிறார். சரின்னு டைம் கொடுத்ததே பெருசு' என்று ஏகமாக பில்ட் அப் செய்து கொண்டிருந்தார்.

சுபாஷுக்கு லேசாக புன்னகை மலர்ந்தது. அவர்கள் வந்து தயங்கித் தயங்கி நின்றபடி, 'உள்ளே வரலாமா?' என்று கேட்டார்கள்.

அவன் திரும்பிப் பார்த்து விட்டு, 'வாங்க, வரலாம்' என்றான். இரண்டு பேரும் உள்ளே நுழைந்தார்கள்.

'என்ன விஷயம்?' என்றான்.

'இல்லை. நீங்க ஏதோ டிரஸ்ட் நடத்தறதாவும், அதுல எஜுகேஷனுக்கு ஹெல்ப் பண்றதாகவும் கேள்விப் பட்டோம், வீராசாமி மாமா சொன்னாங்க. அதான்...' என்று இழுத்தாள் ஒருத்தி.

'அப்படியா, உங்க பேரென்ன?' என்று கேட்டான்.

'எம்பேர் கிருத்திகா' என்றாள் அவள்.

'ஆஹ். உங்க பேரு?' என்றான்.

அவள் 'சந்திரிகா' என்றாள்.

'ஓ, ரைமிங்கா வெச்சுட்டாங்களா...' என்று சிரித் தான், 'வாங்க. வந்து இப்படி எதிர்ல உட்காருங்க' என்றான். மிகவும் தயங்கினார்கள்.

'பரவாயில்லம்மா. வாங்க, வந்து உட்காருங்க' என்றான்.

'டிரெஸ்ட்டுக்கு ஒரு அப்ளிகேஷன் கொடுங்க. நீங்க என்ன படிக்கிறீங்க? நீங்க என்ன படிக்கிறீங்க?' என்றான்.

'நான் இப்போ ப்ளஸ் டூ முடிச்சிருக்கேன். ஃபர்ஸ்ட் இயர்ல இருக்கேன். அவள் செகண்ட் இயர்ல இருக்கா' என்றாள்.

'அப்படியா? டென்த்ல என்ன மார்க்? ப்ளஸ் டூல என்ன மார்க்?' என்றெல்லாம் விசாரித்துக் கொண்டான்.

நன்றாகவே மதிப்பெண்கள் வாங்கியிருந்தார்கள். அவன் மனதுக்குத் திருப்தியாகத்தான் இருந்தது. செய்கிற உதவி தகுதியானவர்களுக்குப் போய்ச் சேர வேண்டுமென்பதிலே அவன் குறியாக இருப்பான்.

இவர்களுக்கு உதவி செய்தால் அதைப் பயன்படுத்திக் கொள்வார்கள் என்று தோன்றியது.

கிருத்திகா, சந்திரிகாவைக் காட்டி, 'இவள் ஸ்கூல் ஃபர்ஸ்ட் வந்தாள்' என்றாள். 'அப்படியா? வெரி குட்' என்று பாராட்டினான்.

உடனே சந்திரிகா, கிருத்திகாவைக் காட்டி, 'இவகூட காலேஜ்ல ஃப்ர்ஸ்ட் இயர், செகண்ட் இயர்ல எல்லாம் ஃபர்ஸ்ட்டா வந்திருக்கா' என்றாள்.

'நீங்க ஏதாவது அப்ளிகேஷன் கொண்டு வந்திருக்கிங்களா?' என்று கேட்டான்.

பெண்களில் ஒருத்தி தோல்பை மாட்டிக் கொண்டு வந்திருந்தாள். பரபரவென்று எடுத்து இரண்டு அப்ளிகேசன்களைக் கொடுத்தாள்.

'இல்ல. ஃப்ரம் அட்ரஸ் போட்டுட்டோம். டூ அட்ரஸ் என்ன எழுதறதுன்னு தெரியல' என்று கேட்டாள்.

அவன் தங்கள் டிரஸ்ட்டினுடைய பெயரைச் சொன்னான். விலாசத்தையும் மளமளவென்று எழுதிக் கொண்டு ஒரு கவரிலே போட்டு பவ்யமாக நீட்டினார்கள். தகுந்த முன்னேற்பாட்டோடுதான் அவர்கள் வந்திருக்கிறார்கள் என்பதைப் பார்த்தவன், அவர்களின் இரண்டு விண்ணப்பப் படிவங்களையும் வாங்கிப் பார்த்தான். தெளிவாக இருந்தது.



அப்போதுதான் அந்த யோசனை தோன்றியது. 'ஃபேமிலி டீடெய்ல்ஸ் கொடுக்கலியே. இதுல பின்னாடியே ஃபேமிலி மெம்பர்ஸ் யார் யாரு, பேரென்ன, ஏஜ் என்ன, இன்கம் என்ன'ன்னு எழுதுங்க' என்றான்.

அவர்கள் மளமளவென்று எழுதிக் கொடுத்தார்கள்.

'ரெண்டு பேரும் தனித்தனியா கொடுங்கம்மா' என்றான். அதே மாதிரி கொடுத்தார்கள்.

இவன் விண்ணப்பங்களை வாங்கித் திருப்பிப் பார்த்தான். அவன் நெற்றிப் பொட்டில் மடிப்புக்கள் விழுந்தன.

மீண்டும் திருப்பி அந்தப் பேரைப் பார்த்தான். 'இதான் உங்க சிஸ்டர் பேரா?' என்று கேட்டான்.

'ஆமாங்க சார்.'

'இல்ல வேற ஏதோ பாப்பின்னு அன்னிக்கு காதுல விழுந்ததே...' என்று இழுத்தான்.

'அது வீட்ல கூப்பிடறது சார்' என்றார்கள் அவர்கள் வெட்கத்துடன்.

'ஓஹோ...' என்று அவன் அந்த விண்ணப்பப் படிவங்களை வாங்கிக் கொண்டு, 'சரிங்கம்மா. நீங்க கிளம்புங்க. நான் ஒரு தடவை பார்த்துட்டு திரும்ப தேவை இருந்தா வீராசாமி அண்ணன்கிட்ட சொல்லி அனுப்பறேன். நீங்க வாங்க' என்று சொன்னான்.

அவர்கள் 'தேங்க் யூ, தேங்க் யூ' என்று சொல்லிவிட்டு கிளம்பிப் போனார்கள்.

தன் கையிலே அந்த விண்ணப்பப் படிவங்களை வைத்துக் கொண்டு அவன் ஆழ்ந்த யோசனையில் இருக்கும் அதே நேரத்தில், அங்கு பொன்மலர் தன் தாய், தந்தையிடம் வெடித்துக் கொண்டிருந்தாள்.

'உங்களை யாரு அவங்க டிரஸ்ட்டுக்கு அப்ளிகேஷன் போடச் சொன்னாங்க. என்னைக் கேட்டிருக்கலாம்ல'

என்று அவள் பட்டாசாகப் பொரியவே, புரியாமல் பார்த்துக் கொண்டு நின்றார்கள் பொன்மலரின் தாயும், தந்தையும்.

அப்பா மெதுவாக, 'இதுல என்னம்மா இருக்கு?' என்று ஆரம்பிக்க,

'அதுல எத்தனையோ இருக்கு. உங்களை யாரு அப்ளை பண்ணச் சொன்னாங்க' என்று கோபித்துக் கொண்டு, அவள் பெண்களுக்கென்று இருந்த தங்களுடைய அறையிலே போய் தன்னுடைய படுக்கையிலே 'பொத்'தென்று விழுந்தாள் பொன்மலர்.

கோபிப்பது அவள் வழக்கமில்லை என்பதால் அவள் அப்படி கோபித்ததை ஆச்சர்யமாகவும், அதிர்ச்சியோடும் பார்த்தபடி பெற்றோர்கள் இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

## அத்தியாயம் - 9

ஆழ்ந்த சிந்தனையுடன் ஹால் ஸோபாவில் அமர்ந்திருந்தாள் சொர்ணா. சுத்தமாக இதை எதிர்க்கவில்லை. ஏதோ விளையாட்டுப் போல் ஆரம்பித்து இந்த விஷயம் பெரிதாகிவிடுமோ என்ற பயம் அவளுக்கு இரண்டு நாட்களாக ஓடிக் கொண்டிருந்தது.

'யாருக்குத் தெரியும்? இந்த சுபாஷ், கிஷோருக்கு ஃப்ரெண்டாக இருப்பார் அப்படின்னு' என்று எண்ணிக் கொண்டாள் இப்பொழுது,

சுபாஷ் இதை எப்படி வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம். 'ஏதோ சின்னப் பிள்ளைகள் மாதிரி விளையாடிட்டாங்க' என்று சாதாரணமாகவும் எடுத்துக் கொள்ளலாம். 'ப்ராக்டிகல் ஜோக் பண்ணிட்டாங்க' என்று சிரித்துக் கொள்ளவும் செய்யலாம்.

இதற்கு நேர் மாறாக, 'இவ்வளவு பெரிய தொழிலதிபராக இருக்கும் தன்னிடம் இப்படியெல்லாம் விளையாடுவார்களா?' என்று கோபித்துக் கொள்ளவும் செய்யலாம்.

முதலிரண்டு அனுமானங்கள்படி நடந்துவிட்டால் யாருக்கும் பிரச்சினையில்லை. ஆனால் மூன்றாவதாக இருக்கின்ற அனுமானத்தின்படி நடந்துவிட்டால், சுபாஷினுடைய ஈகோ காயப்பட்டுவிட்டது என்று பொருள். அப்போது அவருடைய ரியாக்ஷன் எப்படியிருக்கும் என்று தெரியவில்லையே, என்று இப்பொழுது சொர்ணாவுக்கு கவலையாகிப் போனது.

ஆரம்பத்தில் சொர்ணா நினைத்ததெல்லாம், இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு சுபாஷிடம் பழகலாம் என்பதுதான். ஆனால் பொன்மலர் வீட்டிற்கு அடுத்த தெருவிலேதான் சுபாஷ் குடியிருப்பார் என்பதோ, அவர்கள் வீட்டு சமையல்காரருக்கு பொன்மலரைத் தெரியும் என்பதோ அவர்கள் எதிர்பாராதது.

இன்னொரு பக்கத்தில் இந்த கிளப் மீட்டிங்கிற்கு சுபாஷ் வருவார் என்பது அவள் எதிர்பாராதது. ஆனால் கொஞ்சம் லாஜிக்கோடு யோசித்திருந்தால் இப்படியான வாய்ப்புக்கள் இருக்கிறது என்பதை அவள் புரிந்து கொண்டிருக்க முடியும். இதுவரை ஏனோ அவள் அந்த விதத்தில் யோசிக்கவில்லை. சுபாஷ் இருந்திருந்தது அந்த மீட்டிங்கிற்கு வர வேண்டுமா? அந்த மீட்டிங்கில் தான் போய் மாஸ்டர் ஆஃப் செரிமனி செய்ய வேண்டுமா? அந்த சேர்பெர்ஸன் தன்னைப் போய் அப்படி புகழ்ந்திருக்க வேண்டுமா? நேரடியாக அறிமுகப்படுத்தியிருக்க வேண்டுமா? இப்படி எத்தனையோ வேண்டுமா?க்கள் அவள் மனதிலே ஓடியது.

வேண்டுமோ? வேண்டாமோ? எல்லாம் நடந்து

முடிந்து விட்டது. ரொம்பவும் விவரமாக ஒரு பதில் சொல்வதாக நினைத்துக் கொண்டு, அவள் அந்த விளக்கம் வேறு சொல்லியிருந்தாள். இப்போது நினைத்தால் தனக்குத் தானே பாராட்டிக் கொள்ள வேண்டும் என்று தோன்றியது.

'பரவாயில்லடி சொர்ணா 'டக்'குன்னு ஒரு விளக்கம் சொல்லிட்டியே...' என்று பாராட்டிக் கொள்ள வேண்டும் என்று தோன்றியது. இது கண்டிப்பாக சக்சஸ் ஃபுல்லாக இருந்திருக்கும், பொன்மலர் சுபாஷ் வீட்டிற்கு அடுத்த தெருவில் இல்லாமல் இருந்திருந்தால், இப்போது எதற்கடா தலையைக் கொடுத்தோம் என்று அவளுக்கு கவலையாகப் போய்விட்டது.

அவள் உட்கார்ந்திருந்த விதத்தைப் பார்த்துக் கொண்டே கிஷோர் படிகளில் இறங்கி வந்து கொண்டிருந்தான்.

சாதாரணமாக அவன் மாடியில் இறங்கி வரும் போதே இங்கிருந்து 'ஹாய்' கிளம்பும் சகோதரியிடத்திலிருந்து, இன்றைக்கு ஏனோ சகோதரி ஆழ்ந்த சிந்தனையில் அமர்ந்திருந்தாள். அந்த மாதிரி ஒரு ஆழ்ந்த சிந்தனா பாவம் அவளுக்குப் பொருந்தவேயில்லை.

எப்போதுமே துறுதுறுவென்று கண்கள் அலை பாய்ந்து கொண்டிருக்கும். அவளுடைய துறுதுறுப்பு அவனுக்குப் பிடித்த விஷயம். அம்மா, அப்பாவின் கவனிப்பு இல்லாததினாலோ என்னவோ 'அட்டென்ஷன் சீக்கிங்' என்பார்களே, அது மாதிரி பள்ளிக் காலத்திலேயே ஏதாவது குறும்பு செய்து கொண்டிருப்பாள்.

அம்மா, அப்பாவுக்கு நேரமிருக்காது. பள்ளியிலிருந்து அழைப்பு வரும். இவன்தான் பெரிய மனிதனாகப் போவான். ஏதாவது ஒரு சமாதானம் சொல்லிவிட்டு வருவான்.



உண்மையில் தங்கையினுடைய குறும்புகள் அவனுக்குப் பிடிக்கும். துறுதுறுப்பும் பிடிக்கும். அன்பிற்கான அவளது ஏக்கம் அவனுக்கும் புரிந்திருந்தது. ஏனென்றால் அவனும் அதைக் கடந்து வந்திருந்தான்.

பணம், கார் வசதிகள் இருக்கிற குடும்பங்களைப் பார்க்கும்பொழுது, நடுத்தட்டு மக்களும், கீழ்நடுத்தர குடும்பங்களும் அவர்கள் எல்லாவற்றையும் அடைந்து விட்டதாக எண்ணிக் கொள்கிறார்கள். ஆனால் இன்னொரு புறத்தில் பார்த்தால், அவர்களுக்கான ஏக்கங்களும் இருக்குமென்பது சொன்னால் கூட யாரும் நம்ப மாட்டார்கள். சிந்தனையோடு தங்கையைப் பார்த்துக்கொண்டே இறங்கி வந்தான் கிஷோர்.

பக்கத்தில் அவன் வந்தபிறகும் கூட அவள் திரும்பிப் பார்க்கவில்லை. இறங்கி வந்தவன், அவள் அருகிலே அமர்ந்து கைகளால் சொடக்குப் போட்டான். திடுக்கிட்டுப் போய் திரும்பிப் பார்த்தாள் சொர்ணா.

'ஹலோ எந்தக் கோட்டையை பிடிக்கிறதுக்கும்மா இப்படி யோசனை?' என்று கேட்டான் கிஷோர்.

'இருக்கிற கோட்டையே பிராப்ளமா இருக்கு. இனி புதுசா போயி எந்தக் கோட்டையைப் பிடிக்க?' என்றாள் அவள், சற்றே எரிச்சலான குரலில்.

'என்னாச்சு, இன்னிக்கும் அம்மா பேசலியா? அவசரமா ஃபோன் பேசிட்டு ஓடிட்டாங்களா? ஏதாவது என்கேஜ்மெண்ட்டா?' என்றான் அவன் படபடவென்று.

அவள் உச்சுக் கொட்டினாள். 'என்ன ஆச்சு என் செல்லத்துக்கு?' என்று அவன், அவள் தலையைத் தடவிக் கொடுத்தான்.

'கையை எடுறா' என்று தட்டிவிட்டாள் அவள்.

'ரொம்ப கோவமா இருக்கியோ?' என்றான் கிஷோர் புன்னகையுடன்.

'ம்..ம்.. கொஞ்சம் கோபம்தான்' என்றாள்.

'எவ்வளவு? ஒரு லிட்டர் இருக்குமா? ஒரு கிலோ இருக்குமா?' என்றான் அவன் புன்னகையுடன்.

'இருக்கும்டா இருக்கும். என்னோட கோபத்தையெல்லாம் பார்த்தா உங்களுக்கு அப்படித்தான் எளக்காரமா இருக்கும்' என்று மறுபடியும் கடித்தாள் தங்கை.

நிஜமாகவே கோபத்திலிருக்கிறாள் என்று தோன்றியது. 'ஓ.கே. ஓ.கே. என்ன விஷயம்? சொல்லு' என்றான் கிஷோர். அவள் அவனை ஒரு நிமிடம் சிந்தனையுடன் பார்த்தாள்.

'சொல்லலாமா? வேண்டாமா?' என்று யோசனை தோன்றியது.

'யாரிடமாவது சொல்லலாம் என்றால் இவனிடம்தான் சொல்லலாம். சொல்லி ஆலோசனை கேட்போமா?' என்று எண்ணினாள்.

'என்ன விஷயம்? சொல்லு. எனக்கு டைம் ஆகுது' என்றான் அவன்.

'ஆரம்பிச்சிட்டியா? நீயும் அம்மா, அப்பா மாதிரி வாட்சைப் பார்த்துட்டே நின்னு பேச ஆரம்பிச்சிட்டியா? உங்களுக்கெல்லாம் டைம் ரொம்பப் ரெஷியஸ். எங்ககிட்ட பேசறதுக்கே நேரமில்லைன்னா எதுக்கு வந்து உட்கார்ந்தே. போ எழுந்திருச்சு' என்று அவனைத் தள்ளி விட்டாள் கோபத்துடன்.

அவள் கோபம் அவனுக்குப் புரிந்தது. இது தன் மேலான கோபம் என்பதைவிட தங்கள் பெற்றோர்களின் மீதான கோபம் என்பது புரிய, 'ஓ.கே., ஓ.கே. எவ்வளவு ப்ரிசியஸ் டைமா இருந்தாலும் உனக்குன்னா ரிலாக்சேஸன் உண்டு' என்றான் அவன்.



'ஆமா. பெரிய இவன். இவன் ரிலாக்சேஸன் கொடுத்துட்டான்' என்றாள் அவள்.

அவன் அதைக் கண்டு கொள்ளாதவன் போல தொடர்ந்து, 'பிரச்சினையைச் சொல்லும்மா..' என்றான்.

அவள் அதற்குப் பதில் சொல்வதை விட்டு விட்டு, 'ஏன் கிஷோர், இந்த சுபாஷ் எப்படி?' என்று கேட்டாள்.

அவன் சுத்தமாக இதை எதிர்பார்க்கவில்லை. திடீரென்று சுபாஷைப் பற்றி கேட்கிறாள் என்றவுடன், சுபாஷை மனதிற்குள் கொண்டு வருவதற்கே கொஞ்சம் நேரமாகியது. 'எந்த சுபாஷ்?' என்று கேட்டான்.

'அதாண்ணா, பம்பு செட் கம்பெனி சுபாஷ்' என்றாள் அவள்.

அவன் ஆச்சரியமாக அவளைப் பார்த்தான். 'அந்த சுபாஷைப் பத்தி எதுக்குக் கேட்கறே?' என்றான்.

'இதாண்டா உங்கிட்ட புடிக்கிறதே இல்லை, அண்ணா டேய்...' என்றாள் அவள்.

'இதப் பாரு. ஒண்ணு அண்ணான்னு கூப்பிடு. இல்லைன்னா டேய்னு சொல்லு. ரெண்டையுங் கலந்து என் மரியாதையைக் கெடுக்காதே' என்றான் அவன்.

'ஆமா இவனுக்குப் பெரிய மரியாதை வேற' என்றவள், 'அந்த பம்பு செட் கம்பெனி சுபாஷ்ண்ணா...' என்றாள்.

'எதுக்கு?' என்று அவன் மறுபடியும் கேட்க,

'இல்லை நீ சொல்லு. அப்புறம் நான் சொல்றேன்' என்றாள்.

'நல்ல டைப்தான். எல்லோரும் ஒரு மாதிரி நல்லாதான் சொல்றாங்க. பிஸினஸ் விஷயங்கள்ல கறாரா

இருப்பாப்ல அப்படின்னாங்க. மத்தபடி 'வெரி ஈவில் டு கெட் அலாங்'கற மாதிரிதானே சொன்னாங்க' என்றான்.

'இல்ல. நீங்க இந்த பிஸினஸ் பீப்பிள் எல்லாம் ரெண்டு முகம் வெச்சிருப்பீங்களே. அந்த மாதிரியா?' என்று கேட்டாள்.

அவன் 'கடக்'கென்று சிரித்துவிட்டான். 'உன்னோட ஆர்.ஜே. வேலையை காட்டறே பார்த்தியா? ரெண்டு முகமா?' என்றான்.

'ஆமா. வெளியில எல்லாம் ரொம்ப பிளசண்டா இருப்பீங்க. உள்ளுக்குள்ளே இருந்துட்டே வேட்டு வைக்க மாட்டீங்களா? எங்களுக்குத் தெரியாதா?' என்றாள் அவள்.

'நீ இந்த குடும்பத்திலேயே பிறந்திருக்க வேண்டியவளே இல்லடி' என்றான் அவன்.

'ஹே... டோண்ட் டைவர்ட் மேன். கேட்டதுக்குப் பதில் சொல்லு' என்றாள்.

'நாந்தான் சொல்லிட்டேனே. அவன் நல்ல ஆள் தான். நல்ல டைப்புன்னுதான் எல்லோரும் சொல்றாங்க' என்றான்.

'இல்ல...' என்று இழுத்தாள்.

'ஹே. என்ன... என்ன விஷயம் சொல்லு' என்றான் அவன்.

அவள் மிடறு விழுங்கிக் கொண்டு மெதுவாகச் சொன்னாள். 'இல்ல. இந்த மாதிரி...' என்று பொன்மலர் விஷயத்தை ஆரம்பித்து சொல்லி முடித்தாள். அவன் சுவாரஸ்யமாகக் கேட்டுக் கொண்டான்.

'நல்லா இருக்கே கதை' என்றான்.

அவள் விளையாட்டாக அவன் முதுகிலே ஓங்கி ரெண்டு குத்து குத்தினாள். அவனும் அதை சுகமாக



வாங்கிக் கொண்டான். 'இல்லடி.. நிஜமாகவே நல்லா இருக்கு' என்றான்.

'சும்மா இருடா நீ. பாவம், அந்தப் பொன்மலரை வேற சிக்க வைச்சுட்டேன். எப்படி நீங்க இப்படி மாத்தி எங்கிட்ட சொல்லப் போச்சு, அப்படின்னு சுபாஷ் குதிச்சா நாங்க என்னடா பண்றது?' என்றாள் கவலையுடன்.

கிஷோர் ஒரு நிமிடம் சிந்தித்தான். 'அந்தப் பிரச்சினை வரும்போது பார்க்கலாம். ஆக்சுவலா அவன் அதை சீரியஸா எடுக்கப் போறானான்னு தெரியல. அவனுக்கு எக்கச்சக்க வேலைங்க இருக்கு. பிஸினஸ் பிராப்ளம்ஸ் இருக்கு. ஏதோ ரெண்டு பொண்ணுங்க சேர்ந்து பேரை மாத்தி சொல்லிட்டீங்கங்கறதுதான் பெரிய விஷயமா இருக்குமாக்கும் அவனுக்கு' என்றான்.

'சட்'டென்று சொர்ணாவின் மனது இலகுவானது. 'ஆமா இல்ல. அவர் எத்தனை பெரிய பிஸினஸ்மேன். அவருக்கு எவ்வளவு விஷயங்கள் இருக்கும். இது ஒரு பெரிய விஷயமா இருக்குமா?' என்றவுடனே அவளுக்கு மனதுக்குள் இருந்த பாரமெல்லாம் இறங்கியது. முக மலர்ந்து சிரித்தாள் கிஷோரிடம்.

கிஷோருக்கு அந்த சிரிப்பைப் பார்க்க மகிழ்ச்சியாக இருந்தது. அவன், அவள் காதைப் பிடிச்சுச் செல்லமாக ஆட்டினான். 'ஏதோ ஆர்.ஜே. வேலைக்குப் போனோமா, வந்தோமான்னு இல்லாம... இந்த மாதிரி வேலை எல்லாம் பண்றியா நீ?' என்றான்.

'இல்லடா. அந்தப் பொன்மலர்கிட்ட சுபாஷ் வந்து கால் பண்ணி பேசுனவுடனே எங்களுக்கே ஆச்சர்யமா போச்சுடா. ஆனா எனக்குத் தோணுச்சு. அவர் வந்து உடனே இவளைப் பார்ப்பாருன்னு. சொன்ன மாதிரியே வந்தாருடா. அதனாலதான் நாங்க மாத்திக்கிட்டோம் பேரை' என்றாள்.

'அடப் பொண்ணே... இது மட்டும் அவனுக்குத் தெரிஞ்சதுன்னு வெச்சுக்குவேன்... இப்பதான் க்யூரியாசிடி அதிகமாகும். நீங்க தேவையில்லாம இதை வளர்த்து விட்டுட்டீங்க' என்றான்.

'எதை?' என்றாள் அவள் கவலையுடன்.

'ஒருவேளை சுபாஷுக்கு க்யூரியாசிட்டி இருந்த துன்னா நீங்க இப்ப அதை விசிறி விட்டுட்டீங்க. தெரி யுமா?' என்றான்.

அவள் முகத்தில் கவலை ஏற்பட்டது. 'அப்படியும் இருக்குமோ? ஏன் சுபாஷ் கோவிச்சுக்குவாரோ? எங்க ளுக்கு கொடுக்கிற புரோகிராம்ஸ் கட் பண்ணிருவாரோ? மேடம் ரொம்ப கவலைப்படுவாங்க' என்றாள்.

'பரவாயில்ல. நீ தொடர்ந்து நல்லா கற்பனை பண்றடி. பேசாம கதை எழுதலாம்' என்றான் அவன்.

'இல்லடா. என்னைப் பத்தி எனக்குப் பிரச்சினை இல்லடா. பொன்மலரை நினைச்சாத்தான் பயமா இருக்கு' என்றாள் அவள்.

'சரி அப்படி பிரச்சினை வரும்போது பார்த்துக்க லாம்டா. நீ ஏன்டா கவலைப்படறே. அப்படிப் பிரச்சினை வரும்போது நான் சொல்றேன், 'இது பிராக்டிகல் ஜோக், இந்தப் பொண்ணுக ஏதோ விளையாட்டாப் பண்ணி டுச்சு.' அப்படின்னு சொன்னா ஹி வில் அண்டர்ஸ் டேண்ட். அப்படி எல்லாம் ஒண்ணும் சீரியஸா எடுத்துக்க மாட்டான்' என்றான்.

'அப்பாடா...' என்று அவள் குளிர்ச்சியானாள். உடனே தங்கள் வீட்டு விஷயத்திற்கு தாவினாள். 'ஏன்டா கிஷோர் இந்த சண்டேயாவது அப்பா, அம்மா இங்கே இருப்பாங்களா...? புரோக்ராம் கேட்டுச் சொல்லு' என் றாள். அப்படி கேட்கும்போதே அவள் மனதில் வேதனை



ஏற்பட்டது. தங்கள் பெற்றோர்கள் தங்களுக்காக நேரம் ஒதுக்குவார்களா? என்று கேள்விகள் கேட்கிற மாதிரி ஒரு சூழ்நிலை இருக்கிறதே... என்று அண்ணனை வேதனையுடன் பார்த்தாள்.

'ஒண்ணு செய்' என்றான் அவன்.

'என்ன?' என்றாள் அவள்.

'உனக்குக் கார் வாங்கணும்னு சொல்லிக்கிட்டிருந்த இல்ல' என்று சொன்னான் அவன்.

'ஆமா. எனக்குன்னு தனியா ஒரு மாருதி கார் வேணும்னு கேட்டுக்கிட்டிருந்தேன் அம்மாகிட்ட.'

'அது வேணும்னா நான் ஒரு ஐடியா கொடுக் கிறேன்' என்றான் அவன்.

'சொல்லு?' என்றாள் அவள் பெரிய ஆர்வமில் லாமல்.

'இந்த சாட்டர்டே, சண்டே அம்மாவும், அப்பாவும் எங்கேயும் போகக்கூடாது அப்படின்னு அடம் பிடி.'

'அடம் பிடிச்சா...'

'அடம் பிடிச்சா... உன்னை சாட்டிஸ்ஃபை பண்ற துக்காக ஏதாவது ஆஃபர் பண்ணுவாங்க. அப்ப எனக்கு கார் வேணும்னு வாங்கிக்க' என்றான் அவன்.

அவள் வருத்தத்துடன் அவனைப் பார்த்தாள். கார் வேணும்னா ஈஸியா வாங்கித் தந்தருவாங்க. ஒரு சாட் டர்டே, சண்டே பொண்ணோட உட்கார மாட்டாங்க ளாமா' என்றாள் வேதனையான குரலில். கிஷோருக்கும் அவள் வேதனை புரிந்தது.

ஒரு நிமிடம் கனத்த அமைதி நிலவியது. அவன் நீண்ட பெருமூச்சு விட்டு விட்டுச் சொன்னான்: 'சொர்ணா,

அந்தப் பொன்மலர்ங்கற பொண்ணு காலேஜ் ஃபீஸ் கட்ட ணுங்கறதுக்காக வேலைக்கு வருது இல்ல' என்றான்.

'பேச்சை மாத்தாதே...' என்றாள் அவள் கோபத்தில்.

'இல்ல, இல்ல. நான் சொல்ல வர்றதைக் கேளு. அடுத்த வருஷம் படிக்கிறதுக்கு செலவுக்குப் பணம் கிடைக்குமான்னுகூட அந்தப் பொண்ணுக்குத் தெரியாது. அப்படியான பொண்ணுகளுக்கு நடுவுல ஒரு சாட்டர்டே, சண்டேல உனக்கு கார் கிடைக்கும்கறது எவ்வளவு பெட்டர்' என்றான் சகோதரன்.

அவளும் நீண்ட பெருமூச்சு விட்டாள். 'எல்லாத் துக்கும் ஒரு விலை கொடுக்க வேண்டியிருக்கு. இல் லடா?' என்றாள்.

'வேண்டாம்டி. நல்லா இல்லை' என்றான் அவன்.

'என்ன நல்லா இல்லை' என்று அவள் கேட்க.

'நீ இப்படியெல்லாம் தத்துவமெல்லாம் பேசாதே. கேட்கறதுக்கே நல்லா இல்லை' என்று அவன் விளை யாட்டுப் போல் சிரித்துக் கொண்டு, லேசாக அவள் தலையில் ஒரு கொட்டு கொட்டிவிட்டு எழுந்து போய் விட்டான்.

வேதனையான அந்தத் தருணத்தைக் கடப்பதற் காகவே அவன் எழுந்து போகிறான் என்பது அவளுக்குப் புரிந்தது.

சற்று நேரம் சுபாஷின் பிரச்சினையை மறந்து அமர்ந்து கொண்டிருந்தாள். எவ்வளவுக்கெவ்வளவு அந்தப் பிரச்சினையை உள்ளே அமுக்குகிறாளோ அந்த அளவிற்கு அது வீறு கொண்டு எழுந்து, கடலலை போல் பொங்கி எழப் போகிறது என்பது அப்போது அவளுக்குப் புரியவில்லை.



## அத்தியாயம் - 10

குலுங்கி குலுங்கி அழுதுகொண்டிருக்கிற சொர்ணா வைப் பார்த்துக் கொண்டு அமர்ந்து கொண்டிருந்தாள் பொன்மலர். என்ன பேசுவதென்றே அவளுக்குத் தெரிய வில்லை.

அழுகையின் பின்னாலிருந்த வலி அவளுக்குப் புரிந்தது. இந்த நேரத்தில் எது சொன்னாலும் ஒன்று அவ ளுடைய காயப்பட்ட உணர்வை அது அதிகப்படுத்துகிற மாதிரியாக இருக்கலாம். அல்லது தான் அனுதாபப்படுகிற மாதிரி தோன்றி விடலாம். இந்த இரண்டுமே சொர்ணா வுக்குப் பிடிக்காது என்பது பொன்மலருக்குத் தெரியும்.

அதனால் சற்று நேரம் அவளை அழவிட்டாள். எதிரிலே அமைதியாக அமர்ந்திருந்தாள். கொட்டித் தீர்த்து விடட்டும் என்று காத்துக் கொண்டிருந்தாள். கிட்டத்தட்ட பதினைந்து நிமிடங்களுக்கும் மேலாக அழுத சொர்ணா மெதுவாகத் தேறினாள்.

'நான் இங்கே இருக்கேன். ஐ'ம் தேர் ஃபார் யூ' என்பது போல தன் மௌனத்தால் மட்டுமே தனக்கு ஆறுதல் சொல்லிக் கொண்டிருக்கிற தோழியை அன்புடன் பார்த்தாள். 'உண்மையாகவே உன்னுடைய உணர்வுகளை நான் புரிந்து கொள்ளுகிறேன், மதிக்கிறேன்,' என்கிற பாவத் தோடு தீவிரமான முக பாவத்தோடு அமர்ந்து கொண்டிருந் தாள் பொன்மலர்.

சொர்ணா மெதுவாக தன்னுடைய கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். சுற்றுமுற்றும் பார்த்தாள். நல்ல வேளையாக அக்கம்பக்கத்தில் யாரும் இல்லை.

தோழிகள் இரண்டு பேரும் ஒரு பூங்காவில் அமர்ந்து கொண்டிருந்தார்கள். சுற்றிலும் செடிகளால் மறைந்துள்ள

இடமாக தேர்ந்தெடுத்து ஒரு சிமெண்ட் பெஞ்சில் அமர்ந்து கொண்டிருந்தார்கள்.

காலையிலிருந்தே சொர்ணா ஒரு கவலையான முக பாவத்துடன் இருப்பதை கவனித்துக் கொண்டிருந்தாள் பொன்மலர். இரண்டு பேருடைய நிகழ்ச்சியும் தொடர்ந்து ஒரு மணி நேரம், ஒரு மணி நேரம் என்றிருந்ததால் முடித்து விட்டு இரண்டு பேரும் தேநீர் அருந்துவதற்காக அமர்ந்த போது கேட்டாள், 'சொர்ணா என்ன ஆச்சு? ஏன் என்னமோ மாதிரி இருக்கே?' என்று கேட்டாள். சொர்ணா உதட்டைப் பிதுக்கினாள்.

'அதைவிடு பொன்மலர்' என்றாள்.

'இல்ல சொர்ணா. நான் உன்னை இப்படிப் பார்த்ததே இல்லை. இன்னைக்கு நீ ரொம்ப டீப்பா டிப்ரஸ் ஆகியிருக்கிற மாதிரி எனக்குத் தோணுது. வாட் ஈஸ் யுவர் பிராப்ளம். நான் உன் ஃபிரண்டுன்னு நினைச்சேன்னா சொல்லு' என்றாள்.

'நீ என் ஃபிரண்டுதான். அதுல ஒண்ணும் சந்தேகம் இல்லை' என்றாள் சொர்ணா.

'அப்புறம் என்ன? சொல்லு' என்றவள் நாக்கைக் கடித்துக் கொண்டு, 'ஓ.கே. ஓ.கே. ஏதாவது கான்ஃபிடன்ஷியல், எங்கிட்ட சொல்ல முடியாத பிரச்சினைன்னா விட்டுருப்பா. ஆனா நான் எந்த விதத்துல உனக்கு ஹெல்ப் பண்ணனும்னு சொல்லு' என்றாள்.

தோழியை வாஞ்சையாகப் பார்த்தாள் சொர்ணா. 'சொல்லணும்தான். எனக்கும் யார்கிட்டயாவது சொல்லலைன்னா தலையே வெடிச்சுப் போயிரும் போலதான் இருக்கு. பேசாம நாம வேற எங்கேயாவது போயிரலாம்' என்று அவள் தான் கொண்டு வந்திருந்த காரை எடுத்துக் கொண்டு, 'வா மலர். அந்தப் பார்க்குக்குப் போயிரலாம்.



இப்ப த்ரீ ஓ கிளாக் டைம். யாரும் இருக்க மாட்டாங்க வா' என்று அழைத்துக் கொண்டு போனாள்.

அவர்களுடைய அலுவலகம் இருந்த இடத்திலிருந்து கிட்டத்தட்ட ஒரு ஃபர்லாங் தூரத்தில் ஒரு அழகிய பார்க் இருந்தது. குழந்தைகளுக்கான பார்க். அதிலே சுற்றிலுமாக செடிகளின் மறைவில் இருக்கக் கூடிய ஒரு சிமெண்ட் பெஞ்ச்சில் வந்து அமர்ந்தார்கள்.

'என்னம்மா, என்ன விஷயம்? வொய் ஆர் யூ ஸோ அப்ஸெட்?' என்று மலர் கேட்டவுடனேயே அதுவரையிலும் அடக்கி வைத்துக் கொண்டிருந்த உணர்வுகளெல்லாம் பொங்கி எழுந்தாற்போல சொர்ணா தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தாள். அப்போதுதான் பொன்மலர் என்ன செய்வது என்று தெரியாமல் மௌனம் காத்து அமர்ந்திருந்தது.

சில நேரங்களில் சில பேருக்குப் பிரச்சினைகள் இருக்கும்போது, அவர்கள் அதைப் பற்றி பேசுவதற்கு வருவதுண்டு. எதிராளியைப் பேச விட்டுவிட்டாலே அவர்களுடைய உணர்வுகள் வெளிப்பட்டு விடும். அதற்குப் பிறகு அவர்கள் சமாதானமாகி விடுவார்கள்.

பெரும்பாலான மனநல மருத்துவர்கள் அதைத்தான் செய்கிறார்கள், என்று அவளுக்குத் தெரியும். அதனால் அவளும் அமைதி காத்து அமர்ந்திருந்தாள்.

சொர்ணா முகத்தை துடைத்துக் கொண்டு நின்று இருந்தாள். நீண்டதொரு பெருமூச்சு விட்டுவிட்டு சொன்னாள், 'எனக்கு எங்க அம்மா, அப்பா கார் வாங்கிக்கிறதுக்கு பணம் கொடுத்திருக்காங்க' என்றாள்.

பொன்மலர் 'குபீரெ'ன்று சிரித்துவிட்டாள். சிரித்ததற்குப் பிறகுதான் சொர்ணா சொன்னா வாக்கியத்திற்குப் பின்னாலே ஏதோ ஒரு கதை இருக்கிறது என்பது புரிந்தது.

இருந்தாலும் புரியாதவள் போல, 'என்னடி இப்படிச் சொல்றே? எங்கேயாவது கார் வாங்கிக் கொடுத்தா கவலைப்படுவாங்களா? இப்படி என்னமோ பூத் பூத்னு அழுகறே...' என்றாள்.

சொர்ணா அவளை ஆழ்ந்த வேதனையுடன் பார்த்தாள். 'கார் வாங்கிக் கொடுத்திருக்காங்க. எதுக்குத் தெரியுமா?' என்றாள்.

'சொல்லு. எதுக்கு? பொண்ணு ஆசையாக் கேட்டிருப்பே. அதுக்காக வாங்கிக் கொடுத்திருப்பாங்க' என்றாள்.

'எதுக்குத் தெரியுமான்னு கேட்கிறதை விட, எதுக்கு பதிலான்னு கேளு' என்றாள் சொர்ணா.

'சரி. எதுக்கு பதிலா?' என்று கேட்டாள்.

அப்பொழுதுதான் சொர்ணா அந்த பதிலைச் சொன்னாள். அந்த பதிலைக் கேட்டவுடன் பொன்மலருக்கே ஒரு மாதிரி ஆகிவிட்டது. எதுக்குத் தெரியுமா? இந்த சனி, ஞாயிறு ரெண்டு பேரும் ரெண்டு நாள் என் கூட இருங்க, அப்படின்னு கேட்டேன். அதுக்கு ஒரு சாய்ஸ் கொடுத்தாங்க. என்னன்னா நாங்க ரெண்டு நாள் உன் கூட இருக்கிறதை விட, நீ விருப்பப்பட்டு கேட்ட காரை வாங்கிக் கொடுத்தர்றோம், அப்படின்னு சொல்லிட்டாங்க' என்றாள்.

பொன்மலர் அமைதியாக உள்வாங்கிக் கொண்டாள்.

'என்கூட ரெண்டு நாள் இருக்கறதுக்கு அவங்களுக்கு டைம் இல்லை. அதுக்கு பதிலா எனக்கு லஞ்சம் கொடுக்கிறாங்க. கார்தானே வாங்கிக்கோ, அப்படின்னு வீசறாங்க' என்றாள். மறுபடியும் அவள் உதடுகள் துடித்தன. மூக்கு நுனி சிவந்தது. பொன்மலருக்கும் அவள் வேதனை புரிந்தது.



'இதைப் பாரு சொர்ணா. வாழ்க்கையில, ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு குறை இருக்கு. உனக்கு இப்ப இந்த மாதிரி ஒரு குறை இருக்கு. நீ அதை ஏத்துக்கத்தான் வேணும்' என்றாள்.

'எப்படிடீ ஏத்துக்கறது? எதுக்காகடி குழந்தைகளைப் பெத்துக்கறது? நீங்க பாட்டுக்கு ஒரு பக்கம் தானா வளர்ந்துக்குங்க. வேலைக்காரி வருவா. சாப்பாடு ஆக்கிப் போடுவா. சாப்பிட்டுக்குங்க. என்ன வேணுமோ வாங்கிக்குங்க. ஆனா நாங்க உங்ககூட உட்கார்ந்து ஒரு அரைமணி நேரம் பேசமாட்டோம், அப்படின்னு சொன்னா எப்படிடீ கேட்கறது? எதுக்குடீ வாழ்க்கை நடத்துறது?' என்றாள்.

பொன்மலருக்கு என்ன செய்வதென்று தோன்றவில்லை. ஒரு நிமிடம் அமைதி காத்தவள் பிறகு சொன்னாள், 'சொர்ணா, ஒருவேளை இப்படி இருக்கும். உங்க அப்பா, அம்மா எல்லாம் ஃபாரின்ல படிச்சவங்க தானே. அங்க ஜெனரலா ஃபாரின்ல எல்லாம் ஒரு ஸ்டேஜுக்கு வந்ததுக்கு அப்புறம் அம்மா, அப்பாவை விட்டு இன்டிப்பென்டன்டா தான் இருப்பாங்களாம். ஒருவேளை நீயும் அந்த மாதிரி இன்டிப்பென்டன்டா இருக்கணும், விட்டுறணும் அப்படின்னு நினைக்கிறாங்களோ என்னமோ? இல்ல இன்டிப்பென்டன்டா இருக்கணும் அப்படின்னு எதிர்பார்க்கிறாங்களோ என்னமோ?' என்றாள்.

இப்போது சொர்ணா 'குபீரெ'ன்று சிரித்தாள். அந்த சிரிப்பு சிரிப்பாக இல்லை. அதில் வேதனை உள்ளடங்கி இருந்ததை பொன்மலர் உணர்ந்தாள். தன்னுடைய சமாதானம் எந்தவிதத்திலும் அவளை ஆறுதல்படுத்தவில்லை என்பதை புரிந்து கொண்டாள்.

'அப்படீங்கறே? எனக்கென்னவோ ஃபாரின்ல எல்லாம் அடலஸண்ட் ஸ்டேஜுக்கு வந்ததுக்கு அப்புறம்

தான் தனியா விடுவாங்க, அப்படின்னு கேள்விப்பட்டிருக் கேன். எங்க வீட்டுல எனக்குத் தெரிஞ்சு, எனக்கு விவரம் தெரிஞ்சாப்ல இருந்துன்னு சொல்றாங்களே, அது மாதிரி எனக்கு விவரம் தெரிஞ்சாப்ல இருந்து எங்க அம்மா, அப்பா என்கூட டைம் கொடுத்த மாதிரி எனக்கு தெரிய லடி' என்றாள்.

பொன்மலர் அமைதியாக அமர்ந்து கொண்டாள்.

'அதனால்தான்டி உங்க வீட்டைப் பார்த்தா எனக்குப் பொறாமையா இருக்கு' என்றாள்.

'ஒண்ணு வேணா செய்யேன். எங்க வீட்ல வந்து ஒன் ஆர் டு டேய்ஸ் தங்கேன்' என்றாள் பொன்மலர்.

'ஆமாடி. வேற வினையே வேணாம். அப்படி ஏதாவது செஞ்சேன்னா மட்டும் அந்த ஸ்டேட்டஸ் பெரிய்ய இது ஆன மாதிரி பண்ணுவாங்க எங்க அம்மா, அப்பா' என்றாள் சொர்ணா வேதனையுடன்.

பொன்மலர் சற்று நேரம் யோசித்தாள். 'ஒண்ணு பண்ணுடி. பேசாம கல்யாணம் பண்ணிக்கோயேன்' என்றாள்.

'இங்க இப்படி இருக்கு. இனி போற இடத்துல எப்படி இருக்குமோ, தெரியல. அங்கயும் கண்டிப்பா எங்க அம்மா, அப்பா ஒரு பிஸியான பிஸினெஸ்மேனைத்தான் பார்த்து கல்யாணம் பண்ணி வெப்பாங்க. அந்த பிஸி னெஸ்மேனுக்கு இதே மாதிரிதான், என்னைவிட பிஸி னெஸ் முக்கியமா இருக்கும். எல்லா இடத்துலேயும் அன்பு கிடைக்குமா, அன்பைத் தா, அன்பைத் தா அப்படின்னு நான் பிச்சை எடுத்துட்டு திரிய வேண்டியதுதான்' என்றாள் சொர்ணா.

'பேசாம பெட் டாக் மாதிரி ஏதாவது வளர்த்தேன்' என்றாள்.



'அது நிறைய இருக்கு. மூணு, நாலு இருக்கு. அதனாலதான் ஏதோ கொஞ்சம் பரவாயில்லாம இருக் கேன். வீட்டுக்குள்ள போனவுடனே ஒண்ணு, ஒண்ணும் மேல வந்து விழும். உண்மையான நிபந்தனையற்ற அன்பு எனக்கு அங்கதான்டி கிடைக்குது' என்றாள்.

'என்னடி இப்படி சொல்றே. கிஷோர் அண்ணா இருக்காரே...' என்றாள் பொன்மலர்.

'ஆமா. கிஷோர் கொஞ்சம் பரவாயில்ல. ஆனா பிரச்சினை என்னென்னா கிஷோருக்குமே டைம் கிடைக்க மாட்டேங்குது. அவனையும் இப்ப இந்த இதுக் குள்ள இழுத்து விட்டுக்கிட்டு இருக்காங்க' என்றாள் சொர்ணா.

'என்னடி பண்றது? பெரிய அளவுல பிஸினெஸ் இருந்தா இப்படித்தான் இருக்கும். நீதான் அட்ஜஸ்ட் பண்ணிக்கிட்டு போகணும்' என்றாள்.

'எப்படிடீ அட்ஜஸ்ட் பண்றது? வீட்டுக்குன்னு போனாலே ஒரே தனிமையா இருக்கு. இப்ப நீ சொல்ற. ரெண்டு மாசத்துக்கு முன்னாடியே எங்க வீட்டுல கல் யாணப் பேச்சை ஆரம்பிச்சுட்டாங்க. ஆனா எனக்கு அது இன்னும் பயமா இருக்கு. இந்த காலத்துல எந்த பிஸினெஸ்மேன்'டி அன்பா இருக்காங்க' என்றாள்.

அவள் அப்படிச் சொல்லும்போதே பொன்மலருக்கு ஞாயிற்றுக்கிழமையானால் அம்மாவுடன் நேரம் செல வழிக்கிற சுபாஷினுடைய நினைவு வந்தது. 'ஏண்டி நான் ஒண்ணு சொல்லட்டுமா?' என்றாள்.

'சொல்லு' என்றாள் சொர்ணா.

'இந்த சுபாஷ் சார் இருக்காருல்ல. அவரைப் பற்றி வீராசாமி அண்ணன் அடிக்கடி சொல்லுவாங்க' என்றாள் பொன்மலர்.

'என்ன சொல்லுவாங்க?' என்றாள் சொர்ணா.

'ரொம்ப அஃபக்ஷனேட்டாம். அவங்க அம்மாவுக் குன்னு ஒரு நாள் ஒதுக்கினார்னா அன்னிக்கு ஃபுல்லா அம்மாவோட இருப்பாராம். மார்னிங்கோ அல்லது நைட்டோ ஏதோ ஒரு நேரம் அம்மாகூட அட் லீஸ்ட் ஒன் ஹவராவது ஸ்பெண்ட் பண்ணுவாராம். எவ்ளோ பெரிய பிஸியான மேன்னு நீயே சொல்லியிருக்கில்ல. அப்படி டைம் கொடுக்கிறவரு வைஃப்புக்கும் நாளைக் குக் கொடுப்பாருல்ல. அந்த மாதிரி ஒரு பிஸினெஸ் மேனா பார்த்திரேன். ஏன் பேசாம கிஷோர்கிட்ட சொல்லி சுபாஷுக்கே பார்க்கலாம்ல' என்றாள் பொன்மலர்.

'ஓங்கி வெச்சுருவேன். இதெல்லாம் போயி நான் சொல்லிட்டிருப்பேனா?' என்றாள்.

'வேணும்னா நான் கிஷோர் அண்ணாகிட்ட சொல் லட்டுமா?' என்றாள் பொன்மலர்.

'வேண்டாம்டி. அதெல்லாம் சரிப்படாது. எங்க ஃபேமிலியைப் பொறுத்த வரைக்கும் ஃபாரின் மாப் பிள்ளை பார்த்துக்கிட்டிருக்காங்க. என்ன பண்ணுவாங் களோ தெரியல. என்னவோ ஆகட்டும். இதுவரைக்கும் கிடைக்காத பிரியம் அங்க மட்டும் என்ன கிடைச்சறப் போகுது?' என்று சலித்துக் கொண்டாள் சொர்ணா.

பொன்மலருக்கு என்ன பேசுவது என்று தெரிய வில்லை. மீண்டும் ஒரு பெருமூச்சு விட்டு விட்டு சொர்ணா சொன்னாள், 'நடக்கறது நடக்கட்டும்டி. ஏதோ ஒரு லெட் அவுட் மாதிரி உங்கிட்ட சொல்றேன். இதே எங்க ஸ்டேட்டஸ்க்கு உள்ள ஃபிரண்ட்ஸ் கிட்ட சொன் னேன்னு வையேன், போய் ஊர் பூரா பரப்பிடுவாங்க. நீயாவது எனக்கு ஒரு உண்மையான ஃபிரண்டு கிடைச் சியே. உங்கூட கொஞ்ச நேரம் இருக்கிறது உண்மையிலே



எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்குடி. ஏன்னா உங்கிட்ட ஹிப்போக்ரஸி இல்ல. யூ ஆர் ஸிம்பிள் அண்ட் கோல்டன் மைண்ட்'ரி உனக்கு. அதனாலதான் உங்கூட பழகறது எனக்கு ரொம்பப் பிரியமா இருக்கு.'

'சரி விடு. ஜஸ்ட் லைக் தட் எங்க வீட்டுக்கு விசிட் பண்ணக் கூடாதா? அதுக்குக் கூடவா அளவ் பண்ண மாட் டாங்க?' என்று கேட்டாள் பொன்மலர்.

'அதெல்லாம் பண்ணலாம். ஹாஃப் ஆன் ஹவர், ஒன் ஹவர் உங்க வீட்டுக்கு வந்துட்டுப் போறதுல எனக் கொண்ணும் கஷ்டம் இல்ல. சரி, இன்னைக்கே போக லாம்' என்றாள்.

'ஓ.கே.டி நான் அம்மாவுக்கு ஃபோன் பண்ணி உனக்கு முறுக்கு சுட்டு... என்ன பிடிக்கும்னு சொல்லு. செஞ்சு வைக்கச் சொல்றேன்' என்றாள்.

'கேசரி பண்ணச் சொல்லு' என்றாள் சொர்ணா.

'கேசரியா? ஐய்ய, ரொம்ப ஸிம்பிள் ஸ்வீட்' என்று சிரித்தாள் பொன்மலர்.

'அதனாலதான் செய்யச் சொல்றேன். வீட்டு கேசரி ருசியா இருக்குமாமே. எங்க வீட்டுல எல்லாம் கேசரி எல்லாம் செய்ய மாட்டாங்க. புவர் மேன் ஊட்டி மாதிரி, புவர் மேன் ஸ்வீட்டுன்னு எங்க அம்மா கிண்டல் பண்ணு வாங்க. எங்க வீட்டுல எல்லாம் பூரா மில்க் ஸ்வீட்டுதான் நிறைஞ்சு கிடக்கும். ஆனா அதை சாப்பிட்டாலே எனக்கு திகட்டும். உங்க வீட்டுல அம்மாவை கேசரி பண்ணச் சொல்லு. வேற என்ன? அடை பண்ணுவாங்களா? அடை?' என்று கேட்டாள்.

'ம்ம்ம்...' என்று யோசித்த பொன்மலர், 'ஆமா நேத்து கூட அடை மாவு ஆட்டி வெச்சிருக்கேன்னு சொன்னாங்க. நோ பிராப்ளம். அடை மாவு, சொல்லிர்றேன்' என்று

செல்ஃபோனை எடுத்து, (வீட்டில் ஒரு செல்ஃபோன் இருந்தது.) வீட்டு செல்ஃபோனுக்கு அடித்து தகவல் கொடுத்தாள்.

'வாங்க, வாங்க' என்று அம்மா தயாரானார்.

அடை தோசையும், கேசரியும் ருசியாக இருக்கு, அம்மாவின் கைப்பக்குவத்தில் அன்பில் குளிர்ந்து போனாள் சொர்ணா, கொஞ்ச நேரம் அங்கே இருந்தது, அவளுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. தன் தாயினிடத்தில் கிடைக்காத அன்பு, பொன்மலரின் தாயினிடத்திலிருந்து அவளுக்கு கிடைத்தாற்போல உணர்ந்தாள். புறப்படும்போது பொன் மலரின் அம்மாவின் கழுத்தை கட்டிக் கொண்டு, 'பச்' சென்று அவர்களது கன்னத்தில் ஒரு முத்தமிட்டாள். அம்மா அதை எதிர்பார்க்கவில்லை. ரொம்பவும் வெட்கப் பட்டார்.

சொர்ணா அதைப் பார்த்து கலகலவென்று சிரித் தாள். 'இனிமே எனக்கு அம்மாகூட இருக்கணும்னு தோன் றப்ப எல்லாம் உங்க வீட்டுக்கு வந்துருவேன்' என்றாள்.

அவரும் அவள் கன்னத்தை வழித்து, 'வாடி தங்கம். நீ எப்ப வேணும்னா வா. உனக்கு என்ன வேணும்னு சொல்லு. நான் செஞ்சு தர்றேன். கடவுள் புண்ணியத்துல அதுக்கு எல்லாம் ஒண்ணும் குறை இல்ல' என்றாள்.

லேசாக சமையல் கட்டை நோட்டமிட்டாள். ஒரு மிக்ஸி இருந்தது. அளவான வசதிகள் இருந்தன. சின்ன தாக ஒரு கிரைண்டர் இருந்தது. உடனே சொர்ணா, 'பரவா யில்லை. நான் வருவதினால் அவர்களுக்கு தொல்லை எதுவும் இருக்காது' என்று முடிவு செய்து கொண்டவள் போல, 'வர்றேம்மா' என்று திரும்பத் திரும்ப நாலு முறை 'அம்மா, அம்மா' என்று சொல்லிவிட்டு காரில் போய் ஏறினாள்.



அவள் காரில் ஏறிப் போகும்போது, கையாட்டி அனுப்பிவிட்டு இந்தப் பக்கம் வந்த பொன்மலரின் மனதில் தன் தோழியின் மேல் ஆழ்ந்த அனுதாபம் தோன் றியது.

அதேநேரத்தில் பொன்மலர் வைத்த பொறி சொர்ணா வின் மனத்திலும் பற்றிக் கொண்டு, ஒளியைக் கிளப் பியது.

## அத்தியாயம் - 11

அப்பா அவசர அவசரமாக கிளம்பிக் கொண்டிருந் தார். சொர்ணா அப்பா விடம் வந்து நின்றாள். டையை சரி செய்து கொண்டே அவர் திரும்பிப்பார்த்தார்.

'என்னம்மா?' என்றார்.

'அப்பா, உங்ககிட்ட பேசணும்' என்றாள்.

'என்னம்மா நீ. நான் அவசரமா கிளம்பிட்டிருக் கேன்மா' என்றார் அவர்.

'நீங்க எப்பதான் அவசரமா கிளம்பல' என்று அவள் முணுமுணுத்தாள்.

சற்றே கோபமாக அவளைப் பார்த்துவிட்டு, 'சின்னப் பிள்ளையாமா நீ? புரிஞ்சுக்க மாட்டியா? எவ்ளோ பெரிய பிஸினெஸ் கோட்டைம்மா நம்மளுது. அதெல்லாம் கவனிச்சுத்தானே ஆகணும். யாருக்காக? எல்லாம் உங்க ளுக்காகதான்' என்று சொல்லிக்கொண்டே நகர்ந்துவிட் டார்.

அவள் கையிலே ஒரு காகிதம் இருந்தது. அதைக் கூட அவர் பார்க்கவில்லை. விறுவிறுவென்று நகர்ந்து செல்கிற தந்தையை, இல்லையில்லை, தந்தையின் முதுகை அவள் சோகமாக பார்த்துக் கொண்டு நின்றாள்.

பத்தே நிமிட இடைவெளியில் பரபரவென்று அம்மா இறங்கி வந்தார்.

'மம்மி, உங்ககிட்ட பேசணும்' என்றாள்.

'ஆரம்பிச்சிட்டியாடி? நைட் பேசலாம்டி' என்றார் அம்மா.

'எங்கெம்மா நைட் பேசறது? நீங்க ஆஃபீஸ் முடிஞ்ச வுடனேயே அப்படியே கிளப்புக்கு போயிர்றீங்க. போயிட்டு டயர்டா வர்றீங்க. ஒன்பது மணிக்கு சாப்பிட்டவுடனேயே ரூமுக்கு போயிர்றீங்க. வந்து பேசணும்னா, 'இப்பதான்டி ஒரு நல்ல புக்கை எடுத்திருக்கேன்' அப்படிங்கறீங்க. காலையில வந்து அவசர அவசரமா எழுந்து...' என்று புலம்பியவள், 'சும்மா புலம்பறதுல என்ன அர்த்தம். உங்களுக்கு டைமில்லன்னு சொல்லுவீங்க. அவ்வளவுதாவே' என்றாள் கோபமாக.

அம்மா சட்டென்று தன்னுடைய பாணியை மாற்றிக் கொண்டாள். அவள் கன்னத்தை ரெண்டு கைகளாலும் மலித்தாள். கொஞ்சுவது போல சொன்னாள். 'சாரிடி செல்லம். உனக்காகதான்டா. எதுக்கு கிளப்புக்கு போறேன்? நாலு பேருகிட்ட பழக்கம் இருந்தாதான் உனக்கு நல்ல மாப்பிள்ளையா பார்க்க முடியும்.'

'ஸ்டாப் இட் மம்மி' என்றாள் சொர்ணா.

'என்ன? உனக்காகதான் அலையறேன்னா என்ன ஸ்டாப் இட் மம்மி?' என்றாள்.

'உங்களுடைய வேலைகளுக்கெல்லாம் எங்களைக் காரணமா சொல்லாதிங்க. உங்க சந்தோஷத்திற்காக பண்றோம்னு சொல்லுங்க' என்றாள்.

'ஓ.கே.டி என் சந்தோஷத்திற்காகத்தான் பண்றேன். இப்ப என்ன?' என்றாள்.

'ஐ வான்ட் டு டாக் டூ யூ' என்றாள் சொர்ணா.



'ஓ.கே. அதான் கார் கேட்டயேடி. வாங்கிக் குடுத்தாச்சேடி' என்றாள்.

'அதை விடக் கேவலம் வேற எதுவும் இல்லை' என்றாள் சொர்ணா.

'என்னடி, அவங்கவங்க சாப்பாட்டுக்கு இல்லாம எத்தனையோ பேர் அலைஞ்சுக்கிட்டு இருக்காங்க. உனக்கு கேட்டவுடனே கார் வாங்கிக் கொடுத்திருக்கிறோம். அதை விட கேவலம் வேற எதுவும் இல்லைன்னு சொல்றே. நீ ரொம்ப பேசறேடி. காலையில என்னை மூட் அவுட் பண்ணாதே. ஐ வில் கம் அண்ட் டாக் டு யூ இன் த நைட்' என்று சொல்லிவிட்டு விறுவிறுவென்று போய்விட்டாள்.

இப்போது அம்மாவின் முதுகைப் பார்த்துக் கொண்டு நின்றாள். சற்று நேரத்தில் கிஷோர் இறங்கி வந்தான்.

'அண்ணா' என்றாள்.

அவன் மற்றவர்களைப் போல படபடப்பாக போவதில்லை. சற்று நின்று 'என்னம்மா?' என்றான்.

'அம்மா, அப்பாகிட்ட பேசணும்' என்றாள் அவள்.

'பேசு'

'அண்ணா, இரிட்டேட் பண்ணாதே. ரெண்டு பேருக்கும் டைம் இல்லையாம். அப்பாவுக்கும் இம்பார்ட்டண்ட் ஒர்க் இருக்காம். அம்மாவுக்கும் இம்பார்ட்டண்ட் ஒர்க் இருக்காம். நைட் பேசலாம்டி, அப்படிங்கறாங்க அம்மா' என்றாள்.

'பேசு' என்றான் மறுபடியும்.

'டேய், இரிட்டேட் பண்ணாதே' என்றாள் அவள் கோபத்துடன்.

'என்னை என்னடா பண்ண சொல்றே. எங்கிட்ட பேசணுமா? சொல்லு. உட்கார்ந்து பேசலாம், நைட். கொஞ்சநேரம் விளையாடலாமா கார்ட்ஸ்?' என்றான்.

அவள் புன்னகைத்தாள். 'ஐ டோண்ட் ஹேவ் எனி கம்ப்ளெய்ண்ட்ஸ் அபவுட் யூ கிஷோர். ரெண்டு பேரும் பேரண்ட்ஸுங்க இப்படி பண்றது எந்தவிதத்துல நியாயம்?' என்றாள். கிட்டத்தட்ட அழுதுவிடுவாள் போல் இருந்தது.

அவன் சட்டென்று சிரித்து விட்டான். 'நீ இந்த மாதிரி குடும்பத்துக்கு லாயக்கில்லாத பொண்ணு' என்றான்.

அவள் விழித்தாள்.

'ஆமா. பின்ன இந்த மாதிரி குடும்பத்துல எல்லாம் பொறந்தா சாரி, கார், ஃபிரண்ட்ஸ்... அப்படித்தான் போயிற ணும். அம்மா, அப்பாகிட்ட எல்லாம் சென்டிமெண்ட்ஸ் எல்லாம் எதிர்பார்க்க முடியாது. யூ ஆர் எ க்ரோன் அப் கேர்ள். அப்படித்தான் சொல்லுவாங்க' என்றான்.

'போடா நீ. அவங்களே தேவலாம்' என்றாள் கடுப் புடன்.

'சரி. வாட் டு யூ வண்ட் அகெய்ன். இன்னிக்கு எங்கா வது வெளியில போகலாமா?' என்றான்.

'போலாம். கண்டிப்பா போகணும். இன்னிக்கு நான் ரொம்ப கோபமா இருக்கேன்' என்றாள்.

'ஓ.கே.' என்றவன் சற்று யோசித்துவிட்டு, தன் னுடைய செயலாளருக்கு ஃபோன் பண்ணிக் கேட்டான். 'இன்னிக்கு எப்படி புரோக்ராம்ஸ் மிஸ்டர் ராம்?' என்றான்.

அந்த மிஸ்டர் ராம் ஒரு பெரிய லிஸ்ட்டே போட்டார் போலிருக்கிறது. 'சரி அப்படின்னா ஒரு ஃபோர் டு சிக்ஸ் ஃப்ரீ பண்ணிக்க முடியுமா நானு?' என்று கேட்டான். என்ன பதில் வந்ததோ தெரியவில்லை. தங்கையைப் பார்த்து சிரித்தான். 'உனக்கு ரேடியோவில் எப்படி புரோக் ராம்?' என்றான்.



அவள் முகத்தை தூக்கி வைத்துக் கொண்டு, 'மூணு மணிக்கு முடிஞ்சுறது' என்றாள்.

'ஓ.கே. நான் வர்றேன். உன்னை பிக் அப் பண்ணிக் கறேன். நாலு மணிக்கு உன்னை கூப்பிட்டுக்கறேன். எங்க போலாம் சொல்லு? எங்கயாவது ஹோட்டல் போய் சாவகாசமா பேசிட்டு வருவோமா?' என்று கேட்டான்.

'சரி' என்றாள். 'ம். ஏதோ பெருசா கேட்டா இத்த னூண்டா கொடுக்கறீங்க. யானைப் பசிக்கு சோளப் பொறி மாதிரி' என்று அவள் முணுமுணுத்தாள்.

'ஹேய், நீ எப்ப இப்படி எல்லாம் பழமொழி பழகுன?' என்று சிரித்தான் அவன்.

'எனக்கும் ஃபிரண்ட்ஸ் இருக்காங்கள்ல' என்றாள்.

அவன் நெற்றியைச் சுருக்கிக் கொண்டு அவளைப் பார்த்தான். 'ஏன் சொர்ணா? நீ ஏதாவது ரொம்ப சென்டி மெண்டல் டைப்பான ஃபிரண்ட்ஸ் கிட்ட பழகுறயோ... கொஞ்ச காலமாகவே இப்படி 'அன்பு, அன்பு'ன்னு அம்மா, அப்பாவைப் போட்டு அரிச்சு எடுத்துக்கிட்டு இருக்கிற' என்றான்.

அவள் அவனைப் பார்த்துவிட்டு ஆழமாகச் சொன் னாள். 'சென்டிமெண்ட்டான ஃபிரண்ட் இல்ல. உண்மை யான ஃபேமிலி ஒண்ணு கூட பழகிட்டு இருக்கறேன் நானு. அங்க பணம் கம்மிதான். காசு கம்மிதான். ஆனா ஒரு குடும்பம்னா என்ன? அதுக்குள்ள எப்படி ஒற்றுமை இருக்கணும்கிறதெல்லாம் அழகா நடத்திட்டிருக்காங்க. அந்த மாதிரி எதிர்பார்ப்பு எனக்கு வரக் கூடாதா?' என்றாள்.

'டேஞ்சரஸ் ஆச்சே. நீ அந்த மாதிரி ஃபிரண்ட்ஷிப் எல்லாம் வெச்சுக்கக் கூடாதே. நீ பேசாம லயன்ஸ் கிளப், ரோட்டரி கிளப் இதிலெல்லாம் இருக்கக்கூடிய யங்

கேர்ள்ஸா பார்த்து வெச்சுக்கோ. நீ ஏதாவது இன்னொரு சின்னதா ஏதாவது நீங்க ஒரு அமைப்பை வெச்சுக்கிட்டு ஷோ காட்டிட்டு இருக்கணும்' என்றான்.

'டேய்... பேசாம போயிடு. கையில கிடைச்சதை எடுத்து அடிச்சுருவேன்' என்றாள் அவள்.

'அய்யோ அம்மா. காலங்காத்தால அடி வாங்கறதுக்கு நமக்கு தெம்பில்லடா சாமி. பை.. பை' என்று அவன் ஓடி விட்டான்.

அவள் முகத்தில் புன்னகை மலர்ந்தது.

என்னதான் தன்னை கேலி செய்தாலும் கிஷோர் தன்னை கொஞ்சம் புரிந்து கொள்கிறான் என்று அவளுக்கு தோன்றியது. ஒருவேளை அவனும் இந்த மாதிரியான சூழ்நிலையைக் கடந்துதான் வந்திருப்பானாய் இருக்கும், என்று சொல்லிக் கொண்டாள்.

உண்மை அதுதான் என்பதை சகோதரன் வெளிப்படுத்துவதில்லை என்றாலும் தன்னால் முடிந்த அளவிற்கு, அவளுக்கு கம்பெனி கொடுப்பதற்காக முயற்சி செய்தான். முயற்சி மட்டுமல்ல, உண்மையிலேயே நான்கு மணிக்கு அலுவலகத்திலிருந்து அவளை அழைத்துக் கொண்டு புறப்பட்டான்.

ஆறு மணி வரைக்கும் அவர்கள் ஒரு ஹோட்டலில் அமர்ந்தபடி, சற்று நேரம் பூங்காவில் நடந்து, உட்கார்ந்து என்று, அலுவலகத்தில் இருக்கக்கூடிய வேடிக்கையான விஷயங்களைப் பற்றிப் பேசி எல்லாம் செய்துவிட்டு அவளை மகிழ்ச்சிப் படுத்திவிட்டான்.

வீட்டில் கொண்டு வந்து விடுகிற நேரத்தில் அவள் கையிலே ஃபைவ் ஸ்டார் சாக்லேட் ஒன்றைத் திணித்து விட்டு, 'பை பாப்பா' என்று கேலி வேறு செய்துவிட்டு கிளம்பினான். அவளுக்கு ஓரளவுக்கு நிறைவாக இருந்தது.



இருந்தாலும் பெற்றோர்கள் மீது கோபம் கோபமாக வந்தது. அதே கோபத்தில் தன்னுடைய அறைக்குள் போய், அறைக் கதவை அறைந்து சாத்திக் கொண்டு உள்ளே இருந்தாள். இதில் சோகம் என்னவென்றால், அப்பாவும் சரி, அம்மாவும் சரி எத்தனை நேரமாக அவள் அறைக்கதவை சாத்திக் கொண்டு உள்ளே இருக்கிறாள் என்று கூட கவனிக்கவில்லை.

'சாப்பிட்டாளா?' என்று கேட்டுவிட்டு, சமையல் காரர் பதில் சொல்லுவதற்கு முன்பாகவே அவரவர் அறைகளுக்கு ஓடிக் கொண்டிருந்தார்கள். இது சொர்ணாவின் மனத்தில் ஒரு பெரிய காயத்தை ஏற்படுத்தியது. யோசித்தாள். யோசித்துக் கொண்டேயிருந்தாள். அந்த வார இறுதியில், பெற்றோர்களுக்காக அவள் ஒரு பெரிய வெடி குண்டை வைத்துக் கொண்டு காத்துக் கொண்டிருந்தாள்.

அம்மா மெதுவாக அறையை விட்டு வெளியே வந்தார். அப்பாவும் கூட சாவகாசமாக ஹாலில் அமர்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருந்தார்.

கிஷோர் ஹாலுக்கு வந்தவன், 'என்ன அதிசயம்? ரெண்டு பேரும் இன்னைக்கு எங்கேயும் போகலியா?' என்று கேட்டான்.

'போகணும். எனக்கொரு லெவன் ஒ க்ளாக் போகணும்' என்றார் அப்பா.

'உனக்கும்மா, மம்மி?' என்றான்.

'எனக்கும் ஒரு ட்வெல்வ் ஒ க்ளாக் போகணும். ஒரு இடத்துல லஞ்ச் இருக்கு' என்றார் அம்மா.

சொர்ணா மெதுவாக இறங்கி வந்தாள். சுற்றுமுற்றும் பார்த்தாள். சமையல்காரர் மட்டும் இருந்தார். அவரை அழைத்து, 'நான் இப்ப அம்மாகிட்ட பேசணும். அப்பாகிட்ட பேசணும். நீங்க கொஞ்ச நேரம் கழிச்சு வாங்க'

என்று அவரை அனுப்பி வைத்துவிட்டு பிறகு சுவரைப் பார்த்துக் கொண்டு கத்தினாள்.

'நான் இந்த வீட்டுல ஒரு மனுஷி இருக்கேன். எனக்கு ரத்தமும், சதையும் இருக்கு. எனக்கும் ஃபீலிங்ஸ் இருக்கு. யாராவது புரிஞ்சுக்கிறீங்களா?' என்று கத்தினாள்.

அம்மாவும், அப்பாவும் திடுக்கிட்டுப்போய் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

'ஏய் சொர்ணா! வாட் நான்சென்ஸ் இஸ் திஸ்?' என்றார் அம்மா.

'நான்சென்ஸ்லாம் ஒண்ணும் இல்லை. சென்ஸ் தான். எதுக்காக என்னைப் பெத்தீங்க. பெத்தீங்கல்ல. என்னோட ஃபீலிங்ஸ் என்னன்னு நினைச்சுப் பார்க்கறீங்களா? கொஞ்ச நாள் எனக்கும் டைம் கொடுக்கணும். நாலு வார்த்தை எங்கிட்ட பேசணும்னு உங்களுக்குத் தோணாதா?' என்று மறுபடியும் படபடவென்று பொரித்தாள்..

அப்பா எழுந்து வந்தார். 'என்னடா உனக்குப் பிரச்சினை?' என்று கேட்டார்.

'இந்த வீட்டுல பொறந்ததுதான் எனக்குப் பிரச்சினை' என்றாள்.

'சொல்லுவடி. சொல்லுவ. உன்னைத் தங்கமா இழைச்சு வெச்சிருக்கோம்ல. நீ நாளைக்குக் கல்யாணம் ஆகிப் போனா கொண்டு போறதுக்குக் காரு, வைரம், சொத்து, வீடு, பங்களா, நிலம் எல்லாம் வாங்கிப் போட்டிருக்கோம்ல. சொல்லுவ' என்றார்.

அவள், 'சொத்து வாங்கிப் போட்டிருக்கீங்க' என்று இரண்டு பேரையும் பார்த்தாள்.

'ஓ.கே. இன்னைக்கு நைட் எட்டு மணிக்கு நீங்க ரெண்டு பேரும் எனக்கு அப்பாயின்மெண்ட் தர்றீங்க. யூ



அண்டர்ஸ்டேண்ட். பதினைஞ்சு நிமிஷம். கண்டிப்பா வேணும். அப்படி நீங்க அப்பாயின்மெண்ட் கொடுக்கல அப்படின்னா, நாளைக்குக் காலையில சொர்ணாவை வீட்டுல பார்க்க மாட்டீங்க. அப்புறம் பெரிய பிஸினெஸ் மேக்னெட்டோட பொண்ணு எங்க போனாள்னே தெரியல அப்படின்னு கிசுகிசு எழுதுவாங்க. பரவாயில்லையா?' என்று கேட்டாள்.

அப்பாவும், அம்மாவும் ஒருவரை ஒருவர் திடுக்கிட்டுப் போய் பார்த்துக் கொண்டார்கள்.

கிஷோர் ஒரு அரைப் புன்னகையுடன் இதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். அம்மா அவனிடம் திரும்பி, 'கிஷோர் என்னடா பண்றா இவ?' என்றார் கோபமாக.

'எனக்குத் தெரியலியேம்மா. அவ என்னமோ பண்றா. நீங்களாச்சு, அவளாச்சு. எனக்கும் என்கேஜ்மெண்ட் இருக்கு. நானும் வெளியே போறேன்' என்று சொல்லிவிட்டு பேட்மிட்டன் பேட்டை கையிலே ஆட்டிக் கொண்டு வெளியே போய்விட்டான்.

அப்பாவும், அம்மாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு எழுந்து அவளருகிலே வந்தார்கள். 'நோ மோர் டாக்கிங். வி வில் மீட் அட் எய்ட் ஒ கிளாக். யூ அண்டர்ஸ்டேண்ட்.' என்று சொல்லிவிட்டு அவள் வேகமாகக் கிளம்பி தன்னுடைய டூ வீலரை எடுத்துக் கொண்டு வெளியே போய்விட்டாள்.

நேராக பொன்மலர் வீட்டுக்குப் போனாள். அங்கே கொஞ்ச நேரம் இருந்துவிட்டு திரும்பி வந்துவிட்டாள். அங்கே போயிருக்கக் கூடாதோ என்று கூட அவளுக்குத் தோன்றிவிட்டது. ஏற்கெனவே இருந்த உணர்வுகளை பொன்மலர் வீட்டுக்குப் போய்விட்டு வந்த வருகை,

அதிகப்படுத்திவிட்டதோ என்று தோன்றியது. பிற்பகல் வந்தாள். வீட்டில் அமைதியாக உணவு உண்டாள். தன்னுடைய அறைக்குப் போனாள். நன்றாக தூங்கி நேரத்தைக் கழித்தாள். ஐந்தரை மணி இருக்கும். எழுந்து வந்தாள். காபி சாப்பிட்டாள். ஸ்னேக்ஸ் இருந்தது சாப்பிட்டாள். திரும்பவும் அறைக்குப் போய்விட்டாள்.

சமையல்காரரும், மற்ற வேலைக்காரர்களும் கூட ஜாடை மாடையாகப் பார்த்துக் கொண்டார்கள். அந்த வீட்டிலே எப்பவும் சொர்ணாதான் அவர்களிடம் கலகலப்பாகப் பேசுவாள். யாரையாவது ஏதாவது கேலி செய்து கொண்டிருப்பாள்.

'என்ன சமையற்காரண்ணா, நீங்க என்ன நேத்து டி.வி. புரோக்ராம் பார்த்துட்டு இன்னிக்கு ப்ரிபரேஷன்னா? நாங்கதான் கிடைச்சோமா?' என்று எல்லோரையும் சீண்டிக் கொண்டிருப்பாள்.

அந்தப் பெண்ணின் மனதில் இருக்கிற வேதனை அவர்களுக்குக் கொஞ்சம் புரிகிற மாதிரி இருந்தது. என்னதான் வெளிப்படையாக இல்லையென்றாலும் அந்த குடும்பத்தின் நிலவரங்களை வேலைக்காரர்கள் அறிந்து கொள்ளத்தானே செய்வார்கள். அப்படி அவர்களும் கொஞ்சம் அறிந்து கொண்டிருந்தார்கள்.

'ஏதோ பிரச்சினை நடக்கிறது. இந்தப் பெண் புரட்சிக் கொடி தூக்கியிருக்கிறது என்பதை அவர்கள் புரிந்து கொண்டார்கள். ஆனாலும் தலையிடுவதற்கு உரிமையில்லையே. அதனால் ஒதுங்கி இருந்தார்கள்.

'இன்றைக்கு மட்டும் எட்டு மணிக்கு வராமல் இருக்கட்டும்' என்று கருவிக் கொண்டேயிருந்தாள்.

ஏழு மணிக்கே இறங்கி வந்து, 'என்ன டிஃபன்?' என்று கேட்டாள் சமையல்காரனிடம்.



சமையற்காரர், 'பூரி பண்ணியிருக்கேன்மா' என்றார்.

'சரி. கொடுங்க.' என்று இரண்டு, மூன்று பூரிகளை சாப்பிட்டுவிட்டு நைட்டுக்கு எடுத்து வைங்க. இன்னைக்கு கண்டிப்பா எனக்கு பசிக்கும்' என்று வேறு சொல்லிவிட்டு தன்னுடைய அறைக்குப் போனாள்.

ஆனால் வரமாட்டார்கள் என்று எதிர்பார்த்ததற்கு நேர்மாறாக அவளுடைய பெற்றோர்கள் இருவரும் ஏழே முக்கால் மணிக்கு டாண் என்று வந்து விட்டார்கள். எத்தனையோ பிஸினெஸ் மீட்டிங்குகளுக்கு போய் பழக்கப்பட்டவர்களல்லவா? அந்த நேரம் தவறாமை என்கிற பழக்கத்தை அவர்கள் பிஸினெஸ் உலகில் கடைப்பிடிக்கத்தான் வேண்டியிருந்தது. அதே பழக்கத்தின்படி வந்துவிட்டார்கள். ஏனோ இரண்டு பேருக்கும் இன்றைக்கு மனதுக்குள் ஒருவித சங்கடம் இருந்தது. மகள் எதையோ சொல்ல வருகிறாள், என்பதைப் புரிந்து கொண்டார்கள். அதனால ஏழே முக்காலுக்கெல்லாம் வந்துவிட்டார்கள்.

'வாங்க, பாத்துக்கலாம்' என்பது போல சொர்ணாவும் தயாராக இருந்தாள். வந்தவுடனே, 'எங்க, எங்க வெச்சுப் பேசலாம்?' என்று கேட்டாள்.

'இரும்மா. ஃப்ரெஷ் பண்ணிட்டு வந்திர்றோம்' என்று போய்விட்டு வந்தார்கள்.

அந்த வீட்டிலே அவர்களுக்காக ஒரு நூலகம் இருந்தது. அங்க வெச்சுப் பேசலாமா? 'அப்பா உங்க ரூம்ல பேசலாம்' என்றாள்.

அங்கே போனார்கள். அறைக்கதவை தாழிட்டுவிட்டு, 'ரெண்டு பேரும் ஒண்ணா உட்காருங்க. ரெண்டு பேரும் ஒண்ணா உட்கார்றதை பார்க்கிறதே எனக்கு ரொம்ப ரேரான விஷயமா இருக்கு' என்றாள்.

ரெண்டு பேரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு அருகிலே அமர்ந்தார்கள். அவள் சட்டென்று தன்னிடத்திலே இருந்த ஒரு ஹேண்ட் பேக்கைத் திறந்து அதற்குள்ளிருந்து காகிதங்களை எடுத்துக் கொடுத்தாள். அவர்கள் வாங்கிக் கொண்டார்கள்.

'பிரிச்சுப் பாருங்க' என்றாள்.

பிரித்துப் பார்த்தார் அப்பா. அதிர்ந்து போனார். ஒரு ஒன்றரை பக்கத்திற்கு அந்தத் தாள்கள் இருந்தன. பரபரவென்று படித்தார். படித்துவிட்டு மனைவியிடம் கொடுத்தார். அவரும் படித்துப் பார்த்தார்.

'படிச்சுட்டீங்கள்ல. முடிவெடுங்க' என்று அறையை விட்டு கிளம்பினாள்.

'ஏய் சொர்ணா. இரு' என்று இருவரும் தடுக்க தடுக்க...

'இனிமேல் முடிவு பண்ணிட்டு எங்கிட்ட சொல்லுங்க. இதுக்கு மேல நான் பேசத் தயாராயில்லை' என்று அறைக்கதவை அறைந்து சாத்திவிட்டு வெளியேறினாள்.

அப்பாவும், அம்மாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு அதிர்ந்து போய் அமர்ந்து கொண்டிருந்தார்கள்.

## அத்தியாயம் - 12

கல்லூரி வளாகமே களை கட்டியிருந்தது.

கல்லூரியில் கலைவிழா. அந்தப் பெண்கள் கல்லூரியிருந்த பெண்கள் எல்லோரும் அன்றைக்கு உற்சாகமாக விழாக் கொண்டாடிக் கொண்டிருந்தார்கள்.

காலையிலிருந்து விழாவின் பல்வேறு பகுதிகளாக நிகழ்வுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. கவியரங்கம், பேச்சு, நடனம் என்றெல்லாம் நடந்து கொண்டிருந்தது.



மாலையில் பரிசளிப்பு விழா இருந்தது. விழா அரங்கமே குறைவான வெளிச்சத்தில் இருக்க, மேடையில் மட்டும் விளக்குகள் நன்றாக ஒளிவிட்டு பிரகாசித்தன.

சுபாஷ் அந்த அரங்கத்தினுடைய பிற்பகுதியில் தன்னுடைய ஒன்றுவிட்ட சகோதரி சாந்தியுடனும், அவளுடைய பெண் குழந்தையுடனும் அமர்ந்து கொண்டிருந்தான். சாந்தி, சுபாஷினுடைய பெரியப்பா மகள். அவனைக் காட்டிலும் பதினைந்து வயது மூத்தவள். சாந்தியின் வீட்டில் சாந்தி ஒரே பெண்தான். அதனால் தம்பி முறையில் இருக்கிற சுபாஷின் மேல் அவளுக்கு கொள்ளைப் பிரியம். சுபாஷுக்கும் சகோதரிகள் இல்லாததினால், அக்காவின் மேல் மிகவும் பிரியம்.

உண்மையில் அந்த பிற்பகல் நன்றாக ஒரு உறக்கம் போட்டுவிட வேண்டும் என்ற திட்டத்திலிருந்தான் சுபாஷ் சந்திர போஸ். இரண்டு மணி இருக்கும். ஃபோன் அடித்தது. எடுத்தான். 'நான்தான் டா சாந்தி பேசறேன்' என்றாள் சாந்தி.

'சொல்லுக்கா' என்றான் உரிமையுடன்.

'என்னத்தைச் சொல்றது போ. உங்க அத்தான் இருக்காறே... அத்தான்' என்று அவள் புலம்ப,

'இருக்காரு. அதுவும் ரொம்ப நாளா உங்கிட்ட ஹஸ்பெண்டா மாட்டிக்கிட்டிருக்காரு. அதுக்கென்ன பண்ணலாம். சொல்லு' என்றான்.

'உனக்கும் நக்கலாடா. உனக்கு அந்த ஆள் கூட சேர்ந்து சேர்ந்து கொஞ்சம் எல்லாம் ஜாஸ்தியா போச்சு' என்றாள் அவள் பொய்க் கோபத்துடன்.

'அந்த ஆளா? எந்த ஆளு?' என்று இவன் கேட்க,

'எல்லாம் உங்க அத்தான்தான்' என்றாள் கடுகாக.

அக்கா உண்மையிலேயே கோபத்திலிருக்கிறாள் என்பது புரிந்தது. 'என்னக்கா விஷயம்? அதைச் சொல்லாம கோவிச்சுக்கிறியே...' என்று கேட்டான்.

'இல்லடா. நான் படிச்சு படிச்சு சொல்லியிருக்கேன். இன்னிக்கு நம்ம நந்தினி பொண்ணுக்கு பரிசு கொடுக்கிறாங்க காலேஜ்ல. கலை விழா நடந்திட்டிருக்கு. அவள் ரெண்டு, மூணு தடவை ஃபர்ஸ்ட்ல வந்திருக்காளாம். ப்ரைஸ் கொடுக்கிறாங்க. நீங்க வரணும்னு சொல்லியிருக்கேன். இந்த மனுஷனைப் பார்த்தியா? இன்னைக்குதான் ஏதோ முக்கியமான மீட்டிங்காம். ஆஃப்டர் நூன் ஃபோன் பண்ணிட்டு ஃபிளைட்ல கிளம்பியாச்சு' என்றாள் சாந்தி.

சுபாஷ் புன்னகைத்துக் கொண்டான். 'திடீர்னா போனாரு?' என்று கேட்டான்.

'அதெல்லாம் நாடகம். பயங்கரமான ஆளு. முதல்லயே சொன்னா நான் விட மாட்டேன்னுட்டு... காலையில ப்ரீஃப்கேஸ் எடுத்துட்டு போனாரு. அப்பவே நான் நினைச்சேன். நாளைக்குத்தான் வருவாராம்' என்றாள்.

'சரி. இப்ப என்ன? வேற ஆல்டர்னேட் அரேஞ்ச்மெண்ட் பண்ணிற வேண்டியதுதான்' என்றான் சுபாஷ் குறும்பாக.

'போடு நாலு. எடுத்துட்டு வர்றேன் இரு, கையில கிடைக்கறதை' என்றாள் அவள் கோபத்துடன்.

'இப்பதான் அந்த ஆளு, புடிக்கலன்னு எல்லாம் சொல்லிக்கிட்டிருந்தே' என்று இவன் கிண்டல் செய்ய,

'டேய், நிஜமாத்தான்டா ஆல்டர்னேட் அரேஞ்ச்மெண்டுக்குத்தான் இப்ப நான் உன்னைக் கூப்பிட்டேன்' என்றாள். 'நீயாவது வாடா. நந்தினி ஒரே அழுகை. பாரு. தேம்பித் தேம்பி அழுதுகிட்டிருக்கிறா. எல்லோரும்



பேரண்ட்ஸோட வருவாங்க. இல்லைன்னா அட்லீஸ்ட் பிரதர், மாமான்னு யாரையாவது கூட்டிட்டு வருவாங்க. அப்பா எப்பப் பாரு எனக்கு முக்கியமான ஃபங்ஷன் இருக்கும்போது போயிடறாரு. பெரிய பிஸினெஸூ. பொண்ணை விட பிஸினெஸ் பெருசா? அப்படி இப்படின்னு அழறா. என்ன பண்றது?' என்றாள்.

'ஓ.கே. ஓ.கே. நோ பிராப்ளம். நந்தினிகிட்ட கொடுங்க' என்றான்.

நந்தினி ஃபோனை வாங்கினாள். கல்லூரியில் முதலாம் ஆண்டில் இருந்தாள். பட்டப்படிப்பு.

'என்னடா நந்தினி? நீ காலேஜ் ஸ்டுடண்ட். நீ இப்படி எல்லாம் அழலாமா?'

'போங்க மாமா. நீ பேசாதே. நீயும் அப்பா மாதிரி தானே இருப்பே. பெரிய பிஸினெஸ் மேக்னெட்ஸ்ங்க. எனக்கு ப்ரைஸ் வாங்கணும்னா வந்து பார்க்கணுமா இல்லையா பேரண்ட்ஸ்? அதுக்குக் கூட இன்ட்ரெஸ்ட் இல்லைன்னா, அப்படி என்ன பேரண்ட்ஸ்?' என்றாள்.

'இல்லடா. அப்படியெல்லாம் இருக்காது. ரொம்ப முக்கியமான தவிர்க்க முடியாத மீட்டிங்கா இருந்தாத் தான் அத்தான் போயிருப்பாங்க. நீ ஒண்ணும் கவலைப் படாதே. நான் வர்றேன்' என்றான்.

'நீயா? உன்னைக் கூட்டிட்டு போனா வம்பாச்சே...' என்றாள் அவள்.

'ஏன்? என்ன வம்பு?' என்று அவன் கேட்க,

'வேண்டாம். வேண்டாம். அதெல்லாம் பேசப்படாது மாமாகிட்ட' என்று சொல்லிக் கொண்டவள், சரி 'நீயாவது வர்றியே. பரவாயில்லை. நான் கிளம்பிக்கறேன்' என்றாள் உற்சாகமாக.

'அம்மாகிட்ட கொடுக்கறேன். நான் போயி ரெடியாகிறேன். ஃபோர் ஓ கிளாக் ரெடியா இரு மாமா' என்றாள்.

'சரிடா. சரி' என்றான் அவன்.

அவள் உற்சாகமாக அங்கே ஓடப் புறப்பட்டவள், கையிலிருந்த செல்ஃபோனை அம்மாவிடம் கொடுத்து விட்டு ஓடினாள்.

'என்னடா மந்திரம் போட்ட. ஒரே நிமிஷத்துல மாறிட்டா' என்றார்.

'ஒண்ணும் இல்லை. நான் வர்றேன். அப்பா இல்லைன்னா என்ன? மாமா வர்றேன்னு சொன்னேன். அவ்வளவுதான்' என்றான்.

'ஓ! ரொம்பப் பெருமையா இருக்கும். சும்மாவா அவ ஃபிரண்ட்ஸ்கிட்ட எல்லாம் எங்க மாமா பாத்திருக்கீங்களா? ஹீரோ மாதிரி இருப்பாரு, அப்படின்னு பீத்திக்கிட்டிருப்பா. இப்ப நீயே வர்றேன்னு சொல்லிட்ட. இனி உன்னைப் போயி காட்சி பொம்மையாட்டம் காட்டிக்கிட்டிருப்பா பாரு' என்று சிரித்தாள் சாந்தி.

'அய்யய்யோ! இப்படி வேற ஒரு தொல்லை இருக்கா?' என்றான் அவன். அக்கா! அப்படீன்னா நீங்க முன்னாடி போங்க. நான் ஆறு மணிக்கு வந்து ஜாயின் பண்ணிக்கிறேன்' என்றான்.

'இல்லடா. நான் தமாஷுக்கு சொன்னேன்' என்று மெதுவாக அவனை வற்புறுத்தி அழைத்து வந்தாள் சாந்தி.

விழா துவங்குவதற்கு முன்பாக கொஞ்ச நேரம் அங்கே, இங்கே என இருந்துவிட்டு, விழா துவங்கும் நேரம் சரியாக உள்ளே நுழைந்து அமர்ந்து கொண்டார்கள். நந்தினி தோழிகளிடம் சொல்லி அவர்களுக்காக இருக்கைகள் பிடித்து வைத்திருந்தாள்.



சுபாஷ் சந்திர போஸுக்கு தொழிலதிபராக இருந்ததில் சில சிரமங்களும் இருந்தன. தனக்கேற்ற தனிமை கிடைப்பதில்லை என்பதும், ப்ரைவஸி கிடைப்பதில்லை என்பதும் அவனுடைய கருத்தாக இருந்தது. பெரும்பாலும் விழாக்களில் கடைசி வரிசையில் அமர்ந்து கொள்ளுவதை மிகவும் விரும்புவான். ஆனால் அவன் எந்த விழாவுக்குப் போனாலும் கோயம்புத்தூரைப் பொறுத்தவரைக்கும் அவனைப் பார்த்தாலே அழைத்துக் கொண்டு போய் மேடையில் அமர்த்தி விடுவார்கள்.

இங்கேயும் இந்தக் கல்லூரி முக்கியஸ்தர்களை எல்லாம் அவனுக்குத் தெரியும். இவனைப் பார்த்தாலே புளகாங்கிதமடைந்து, அழைத்துக் கொண்டு போய் முன் வரிசையில் அமர்த்திவிடுவார்கள். அல்லது மேடையில் ஏற்றிவிடுவார்கள் என்பதால், சத்தமில்லாமல் பின்வரிசையில் அமர்ந்து கொள்ளுவதை அவன் விரும்பினான்.

விழா ஆரம்பித்தது. விழா மேடையில் அந்தக் குரல் ஒலித்தது. அவன் மனத்துக்கு இனிய அந்தக் குரல், 'அடடே, பொன்மலர்!' என்று எண்ணிக் கொண்டான்.

முன்பொரு முறை அந்த கிளப் மீட்டிங்கில் ஒலித்த குரலுக்கும், இந்த குரலுக்கும் உள்ள வித்தியாசம் இப்போது தெள்ளத் தெளிவாக புரிந்தது. இந்தக் குரலுக்கு உரியவள்தான் பொன்மலர் என்றால், அந்தக் குரலுக்கு உரியவள் நிச்சயமாக பொன்மலர் இல்லை என்று பொறி தட்டியது.

ஆனால், இதில் என்ன விளையாட்டு இந்த பெண்களுக்கு? எங்கேயோ ஏதோ இடிக்கிறதே? என்ற எண்ணம் தோன்றியது. ஆனால் சட்டென்று அந்தக் குரலின் வசீகரத்தில் அவன் தன்னை மறந்து போனான்.

மேடையின் பின்புறத்திலிருந்து, அந்த விழா நாயகன்

வர, அந்த விழாவிற்குரிய கமெண்ட்டுகளைக் கொடுத்துக் கொண்டிருந்த பெண் இப்பொழுது மேடைக்கு வந்தாள், வரவேற்புரை நல்குவதற்காக. சுபாஷ் சுத்தமாக அதிர்ந்து போனான். ஏனென்றால் பொன்மலரென்று இப்போது அங்கே நின்ற பெண் நிச்சயமாக சொர்ணா இல்லை.

அம்மா வர்ணித்தார்களே அதைப் போல இருந்தாள். நெட்டையாக இருந்தாள். கலையாக இருந்தாள். அந்த மேடை விளக்கினுடைய பொன் கதிர்களினூடே அவளின் முகம் இன்னும் பிரகாசித்தது. உண்மையிலேயே பொன்மலர்தான் என்று எண்ணிக் கொண்டான்.

அந்தப் பெண் மிக அழகாக வரவேற்புரை சொன்னாள். நந்தினி உடனே இவனிடம் திரும்பி, 'மாமா! பொன்மலர் ரொம்ப ஃபேமஸ் தெரியுமா காலேஜ்ல. வெரி குட் ஆரைட்டர். நிறைய பிரைசஸ் வாங்கிக் கொடுத்திருக்காங்க. அது மட்டுமில்ல. ரேடியோல ஆர்.ஜே.வா இருக்காங்க' என்றாள்.

முதுகலைப் பட்டப் படிப்பில் படிக்கிறாள் என்பதாலும், சீனியர் என்பதாலும் அவள் மரியாதையாகவே குறிப்பிட்டாள்.

'அப்படியா என்ன?' என்றான் சுபாஷ் தெரியாதவன் போல.

'ஆமா மாமா. ரொம்ப ஸிம்பிள். ஆனா அவ்ளோ டேலன்டெட். நிறைய ப்ரொஃபிஸியன்ஸி ப்ரைசஸ் எல்லாம் வாங்குவாங்க. ஆனா அமைதியா நடமாடிட்டு இருப்பாங்க' என்றாள்.

'ஓஹோ... அப்படியா?!' என்றான்.

'நிறைய புத்தகங்கள் படிப்பாங்க. லைப்ரரில உட்கார்ந்து நிறைய ரெஃபர் பண்றதை நான் பார்த்திருக்கேன். ஆனா யார்கிட்டயும் வெட்டி அரட்டை எல்லாம்



அடிக்க மாட்டாங்க. நிறைய நோட்ஸ் எல்லாம் எடுப்பாங்க. அந்த ப்ரொக்ராம்ல கூட நடுநடுவுல ஹின்ட்ஸ் மாதிரி கொடுப்பாங்க கேட்டிருக்கீங்களா?' என்றாள்.

'ம்.ம்.ம். கேட்டிருக்கிறேன்.'

'நிஜமாவே நீங்க கேட்டிருக்கீங்களா?' என்றாள்.

'ஆமாண்டா. உண்மையாகவே இந்தப் பெண்ணோட ப்ரொக்ராம்ஸ்லாம் எனக்குப் பிடிக்கும் கேட்பேன்.'

'ரியலி!' என்று ஆச்சரியமானாள் நந்தினி.

'சும்மா இல்லைடா. நம்ம கம்பெனி ப்ரொக்ராம்ஸ்லாம் அவங்க பண்றாங்களே. அதனால எனக்குத் தெரியும் என்றான்.

'ஓஹோ... அதானே பார்த்தேன். நீ அப்பா மாதிரி தானே இருப்பே. சும்மா ஆடுமா சோழியன் குடுமி? உங்க ப்ரொக்ராம் கொடுக்கிறதுனால நீ கேட்கற, இல்ல?' என்றாள்.

இதை சுத்தமாக சுபாஷ் எதிர்பார்க்கவில்லை. 'ஏன் பிஸினெஸ்னாலே உனக்கு இவ்வளவு கோபமா இருக்கு?' என்று கேட்டான்.

'பிஸினெஸ் பண்ணுங்க. நான் வேண்டாம்னு சொல்லலை. ஆனா இந்த மாதிரி ஃபங்ஷனுக்கு வரணும் இல்ல' என்றாள் அவள் கோபத்தில்.

'ஏண்டி சும்மா தொணதொணக்கறே. போன தடவை வந்தாருல்ல உங்க அப்பா. மூணு மாசத்துக்கு முன்னாடி கூட ஒரு ஃபங்ஷனுக்குக் கூப்பிட்டியே வந்தாருல்ல' என்றாள் சாந்தி.

'வந்தாரு... ஆனா இன்னைக்கு நான் ரெண்டு, மூணு ப்ரைஸ் வாங்கறேனே' என்று அவள் முணுமுணுக்க,

சுபாஷ், 'கவலைப்படாதரா. செல்ஃபோன்ல அழகா

ஃபோட்டோ எடுத்து அப்பாவுக்குக் காட்டிட லாம்' என்றான்.

'போ, மாமா நீ. அட்லீஸ்ட் எங்கிட்ட சொல்லி எக்ஸ்ப்ளெய்ன் பண்ணியிருக்கலாம்ல?' என்று கேட்டாள்.

'இதைப் பார்றா. உன்மேல் பிரியம் இருக்கிறது னாலதான் அப்பா சொல்லலை. சொன்னா நீ அழுவே. அழுது ஆர்ப்பாட்டம் பண்ணுவே. ஃப்ளைட்டில போய்ட் டிருக்கும்போது அந்த முகமே கண்ணுல வரும். மகள் அழுதா தாங்குமா? பிஸினெஸ் நல்லா போகுமா? அங்க மூட் இருக்குமா? வந்து சமாதானப்படுத்திக்கலாம்னு நினைச்சிருப்பாரு' என்றான்.

அவள் மாமாவை முறைத்துப் பார்த்தாள். 'சரியான ஆள் நீ. பயங்கரமா மஸ்கா போட்டு என் கோபத்தை யெல்லாம் தணிச்சிருவே' என்றாள்.

'குட். அதான் குட் அட்டிட்யூட். கவலைப்படாதே. நான் அத்தானுக்கு ஃபோன் பண்ணி உனக்கு நல்ல பெரிய கிஃப்ட் வாங்கிட்டு வரச் சொல்றேன். எங்க போயிருக்காரு?' என்றான்.

'ஹைதராபாத்' என்றாள் சாந்தி.

'சரி. சரி. அப்ப ஹைதராபாத்திலிருந்து முத்து வளை யல், முத்து மாலை இதெல்லாம் வாங்கிட்டு வரச் சொல் லட்டுமா?' என்று அவன் மக்கு அடிக்க அவள் சிரித்து விட்டாள்.

'பயங்கரமான ஆள் மாமா நீ. உன்னைக் கட்டிக்கப் போறவ ரொம்ப லக்கி. நல்லா மஸ்கா போட்டுருவ' என்றாள்.

'என்ன பண்றது? நீ சின்ன புள்ளையா போயிட்ட. இல்லாட்டி உன்னையே கட்டிக்கிட்டிருக்கலாம்' என்றான் அவன் கேலி செய்ய,



'அய்ய, தெரிஞ்சு தெரிஞ்சு உங்களை யாராவது கல்யாணம் பண்ணுவாங்களா? நீ பம்பு செட்டையே கட்டிட்டு அழு மாமா' என்றாள்.

அதற்குள்ளாக மறுபடியும் மேடையில் அவன் கவனம் சென்றது. பொன்மலர் மிக அழகாக கருத்துக் களை இடை இடையே கொடுத்ததையும், நகைச்சுவை யாகக் கூட பேசுவதையும் அந்த அவையே ரசித்து சிரித்தது.

சொர்ணாவும் கூட அன்றைக்கு இப்படித்தான் அழகாக கமெண்ட்ரி கொடுத்தாள். ஆனால் அதைக் காட்டிலும் இதிலே ஒரு பக்குவம் இருந்தது. கேட்பதற்கு சுகமாக இருந்தது. ஏன் பார்ப்பதற்கும் கூட சுகமாக இருக்கிறது என்று எண்ணிக் கொண்டான்.

நிச்சயமாக அந்த பொன்மலரல்ல இந்த பொன்மலர் என்று அவன் மனது சொல்லியது. கடைசியில் அவன் மனதுக்குள்ளேயே குழப்பம் ஏற்படும் போல இருந்தது. யார்தான் உண்மையான பொன்மலர்? குரலைக் கேட் டால் இவள்தான் உண்மையான பொன்மலர். ஆனால், இரண்டு குரலுக்கும் கொஞ்சமே கொஞ்சம் தான் வித்தி யாசம். ஆனாலும் அவனுடைய உள்மனது இந்தக் குரலை நன்றாக புரிந்து கொண்டது. ஒரே ஒரு வித்தியாசம் என்ன வென்றால், குரலை மட்டுமல்ல. இந்த மேடையில் பார்க் கிறபொழுது குரலுக்கு உரியவளையும் பிடிக்கிறாற் போல தோன்றியது. அவன் சற்று திடுக்கிட்டான். இது என்னடா வம்பாப் போச்சு? என்று எண்ணிக் கொண்டான்.

சட்டென்று தன்னையே உலுக்கிக் கொண்டான். 'இது ஜஸ்ட் க்யூரியாஸிட்டி. இது ஒரு பிராக்டிகல் ஜோக் காக கூட அவர்கள் செய்திருக்கலாம். கண்டுபிடிக்க வேண் டும். இதனுடைய ஆழத்தைக் கண்டுபிடிக்க வேண்டும்' என்று உறுதியெடுத்தாற்போல மனதுக்குள் சொல்லிக் கொண்டான்.

அதற்கு பிறகு அந்த விழாவிற்கு வந்த முக்கிய பேச்சாளருடைய பேச்சு சுவையாக இருக்கவே அதில் ஆழ்ந்து போனான்.

சகோதரியையும், குழந்தையையும் கொண்டுபோய் விட்டுவிட்டு வருவதற்குள்ளாகவே அவன் அலுவலகத்திலிருந்து முக்கியமான செய்திகளெல்லாம் வந்திருந்தன. அதில் ஆழ்ந்துபோய் அன்றைக்கு இரவு பன்னிரெண்டு மணி வரை ஃபைல்களைப் பார்க்க வேண்டியிருந்தது. பார்த்துவிட்டு அவன் படுக்கைக்குச் சென்றான்.

படுக்கும் பொழுதுஉறக்கம் கண்களைத் தழுவ தயாராக இருந்தது என்றாலும் கூட இரண்டு முகங்களும் மாறி மாறி அவன் மனதைக் குழப்பின. யார் இந்த சொர்ணா? யார் இந்த பொன்மலர்? இதில் யார் உண்மையான பொன்மலர்? என்ற கேள்வி அவன் உள்ளத்திலே எழும்பியது. ஆனால் உறக்கமும் கூடவே அழுத்தியது.

## அத்தியாயம் - 13

**கேவிக்** கேவி அழுகிற மனைவியை ஆழ்ந்த வேதனையுடன் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தார் ராஜரத்தினம். காமினிதான் அப்படி அழுதுகொண்டிருந்தார். எதிரிலே இறுக்கமான முகத்தோடு அமர்ந்து கொண்டிருந்தாள் சொர்ணா. இன்னொரு பக்கத்திலே என்ன செய்வது என்று புரியாமல் அமர்ந்து கொண்டிருந்தான் கிஷோர்.

'பார்த்தியாடா? எவ்வளவு கொழுப்பு இவளுக்கு? என்ன வேலை செஞ்சிருக்கா...?!' என்றார் அம்மா.

அப்போதும் கூட சொர்ணா எதிர்பார்க்கிற வார்த்தைகளல்லாமல் வேறு ஏதேதோ வார்த்தைகள்தான் காமினியின்



வெளிப்பாடாக அமைந்தன. சொர்ணா முகம் வாடி அமர்ந்து கொண்டாள்.

ராஜரத்தினம் சொர்ணாவை வேதனையுடன் பார்த்தார். 'ஏம்மா, நீ எங்களைப் புரிஞ்சுக்கவே இல்லையா?' என்று கேட்டார்.

சொர்ணா ஆழ்ந்த பார்வையுடன் பேசினாள். 'அப்பா! நாங்க உங்களைப் புரிஞ்சுக்கிட்டோம். நீங்கதான் எங்களைப் புரிஞ்சுக்கலை' என்றாள்.

'என்னம்மா புரிஞ்சுக்கலை. நாங்க ரெண்டு பேரும் உங்க ரெண்டு பேர் மேலேயும் உயிரையே வெச்சிருக்கோம்மா. உங்களுக்காகதானம்மா இந்த பாடுபடறோம்...' என்று கேட்டார்.

கிஷோர் நீண்டதொரு பெருமூச்சு விட்டான். பிறகு சொன்னான். 'அப்பா! ஒரு தண்டவாளத்தோட ரெண்டு டிராக்குல போற மாதிரி நீங்களும் நாங்களும் போயிட்டிருக்கோம். அது உங்களுக்குப் புரியுதா?' என்று கேட்டான்.

'புரியலடா. எனக்கு உங்க சைக்காலஜியே புரிய மாட்டேங்குது' என்றார் சலிப்புடன்.

'உங்களுக்குத்தாம்பா எங்களோட சைக்காலஜி புரியல' என்றான் கிஷோர்.

'அதுக்கு இப்படி ஒரு பத்திரத்தை எழுதிட்டு வந்துர்றதா?' என்று கேட்டார் ராஜரத்தினம்.

'அப்பா! இப்பவும்கூட உங்களுக்குப் புரியலியா?' என்று கேட்டான் கிஷோர்.

அப்படி ஒரு காரியத்தைச் செய்திருந்தாள் சொர்ணா. அப்பா, அம்மா இரண்டு பேரையும் அமரவைத்து அவளொரு காகிதத்தை நீட்டினாள். வாங்கிப் படித்த காமினியின் முகம் வெளுத்துப் போனது. கணவரிடம் நீட்டினாள்.

கணவரும் அதைப் படித்துப் பார்த்துவிட்டு முகம் வெளுத்துப் போனார்.

அப்படி என்னதான் எழுதியிருந்தாள் சொர்ணா அதிலே. விடுதலைப் பத்திரம் எழுதியிருந்தாள். 'எனக்குத் தேவை நீங்களெல்லாம் சம்பாதித்து வைத்திருக்கிற சொத்துக்கள் இல்லை. எனக்குத் தேவை பெற்றோர்களுடைய அன்பு. அதனால் இப்படியொரு விடுதலைப் பத்திரம் எழுதித் தருகிறேன்' என்று கூட ஒரு சின்னக் கடிதம் வேறு.

அந்த விடுதலைப் பத்திரத்திலே உங்களுடைய சொத்துக்கள் எதுவும் எனக்கு வேண்டாம் என்று எழுதிக் கொடுத்திருந்தாள். விலாவாரியாக, எப்படி ஒரு\ பத்திரம் எழுதப்பட வேண்டுமோ அப்படி பத்திரத்தை எழுதி அவர்களிடத்தில் கொடுத்தாள்.

'என்னடி இது?' என்று பார்த்த காமினியிடம் சொன்னாள், 'நாளைக்கு ரெஜிஸ்தர் பண்ணப் போறேன்' என்று.

அந்தக் கணத்தில் காமினி அதிர்ச்சியானாள். 'என்னம்மா நீ? இப்படி சொல்றே!' என்றாள் இறங்கிய குரலில்.

'ஆமாம்மா. நீங்க எனக்கு சொத்து சேர்க்கிறேன், அண்ணனுக்கு சொத்து சேர்க்கிறேன்'னு சொல்லிட்டு அலைஞ்சுக்கிட்டே இருக்கிறீங்க. எப்ப எங்களுக்கு உங்களோட அருகாமை வேணுமோ அப்ப நீங்க எங்களுக்குக் கிடைக்கிறதில்லை. என்னதான் கோடிக்கணக்கான சொத்து இருந்தாலும் உங்களோட அருகாமை இருக்கிற மாதிரி இருக்குமா? ஏன் அதை புரிஞ்சுக்க மாட்டேங்கறீங்க?' என்று கேட்டாள்.

இந்த இடைவெளிக்குள்ளாக ராஜரத்தினம் கிஷோருக்கு ஃபோன் செய்து 'உடனே வாடா, அவசரம்' என்று அழைத்திருந்தார். கிஷோரும் வந்திருந்தான். தங்கை இப்படி ஒரு காரியம் செய்வாள் என்று கிஷோர் எதிர்



பார்க்கவில்லை. கிஷோர் வந்தவுடனே இரண்டு பேரும் அவனிடத்தில் அந்தப் பத்திரத்தை நீட்டினார்கள். கிஷோர் வாங்கிப் படித்துப் பார்த்தான். திரும்பி சொர்ணாவின் முகத்தைப் பார்த்தான்.

சொர்ணா முகத்தை இறுக்கமாக வைத்துக் கொண்டு அமர்ந்திருந்தாள். 'என்னடா இது?' என்று கேட்டான் கிஷோர்.

'பின்ன என்னண்ணா பண்ணச் சொல்றே? எப்பக் கேட்டாலும் உனக்காகத்தான்டி, உனக்காகத்தான்டிங்கறாங்க. ஒரு டூ டேஸ்... டூ டேஸ் எங்கூட இருங்க அப்படீன்னா அதுக்கு பதிலா கார் வாங்கித் தர்றாங்களாம். அப்ப இவங்க டூ டேஸ்ல கொடுக்கிற அன்புக்கு கார் விலையா? இவங்களே இவங்களைக் கேவலப்படுத்திக்கலே... என்னையும் கேவலப்படுத்தறாங்க. இதை எப்படி தாங்கறது? இந்த மாதிரி ஏதாவது நெத்தியடி கொடுத்தாத்தான் புரியும்' என்றாள் அவள்.

அந்த கணத்தில் காமினி உடைந்து போனார். மகளின் குற்றச்சாட்டில் இருக்கிற உண்மை அவருக்குப் புரிந்தது. கேவிக் கேவி அழ ஆரம்பித்தாள்.

'அழு. நல்லா அழு' என்பது போல சற்றும் அசையாமல் அமர்ந்து கொண்டாள் சொர்ணா.

ராஜரத்தினமும் கொஞ்சம் வேதனை அடைந்து போனார்.

சொர்ணாவின் மனத்தில் இப்படி ஒரு ஆழமான காயம் இருக்கும் என்று அவர் எதிர்பார்க்கவில்லை.

வேலைக்காரர்களிடம் விளையாடிக் கொண்டிருப்பாள். கிஷோரிடம் சண்டை போட்டுக் கொண்டிருப்பாள். இதெல்லாம் அவர் பார்த்து ரசித்துக் கொண்டு போய் விடுவார். ஆனால், இப்படி ஒரு வேதனையை அவள்

மனத்திலே சுமந்து கொண்டிருக்கிறாள் என்பது அவருக்குப் புரியவில்லை.

'என்னம்மா இது?' என்று கேட்டார் மறுபடியும்.

சொர்ணா இப்பொழுது வாயைத் திறந்தாள்.

'ரொம்ப க்ரூஷியல் ஸ்டேஜ். அடலசெண்ட் ஸ்டேஜ். அந்தக் காலகட்டத்திலே ஒரு பெண்ணுக்கு எவ்வளவு கஷ்டங்கள் இருக்கும்னு தெரியுமா உங்களுக்கு? நீங்களும் கடந்துதானே வந்திருக்கீங்க?' என்றாள் அம்மாவின் முகத்தைப் பார்த்து.

அம்மா தன் வலது கையால் தன் வாயைப் பொத்திக் கொண்டு, அவள் பேசுவதைக் கேட்டார்.

'ரொம்ப அவசியமா ஒரு டவுட் வரும். அம்மாவைத் தேடிக்கிட்டு வருவேன். அம்மா போர்ட் மீட்டிங்ல இருக்காங்கன்னு செய்தி வரும். அப்ப எனக்கு எப்படி இருக்கும்? கடைசியில என் டவுட்டை யாருகிட்ட கேட்கறது? நம்ம வீட்டுல இருக்கிற வேலைக்காரங்ககிட்டத்தான் கேட்கணும். உங்களுக்குத் தெரியுமா? பல நேரங்கள்ல நம்ம ராமண்ணாவோட வைஃப்புதான் எனக்குத் தேவையான அட்வைஸ் கொடுத்திருக்காங்க. ஒரு அம்மாகிட்ட இருந்து கிடைக்க வேண்டிய அன்பு எனக்குக் கிடைக்கலை. டைம் கிடைக்கலை. அட்வைஸ் கிடைக்கலை. ஃபிரண்ட்ஷிப் கிடைக்கல. அப்புறம் உங்க சொத்து மட்டும் எனக்கு எதுக்கு?' என்று கேட்டாள்.

காமினி உடைந்து போனவளாக அழுதாள்.

'நீயென்னம்மா நினைச்சுக்கிட்டிருக்கே? நிறைய நிறைய நீ குவிச்சு வெச்சிருக்கிற நகைகளையெல்லாம் நான் மாட்டிக்கிட்டு திரிஞ்சா சந்தோஷப்படுவேன்னு நினைக்கிறியா? வேண்டாம்மா. பார்த்தியா நான் என்ன போட்டிருக்கேன்? சன்னமா ஒரு செயின் போட்டிருக்கேன். சன்னமா ரெண்டு வளையல் போட்டிருக்கேன். இதான்மா என் டேஸ்ட்டு. எனக்குத் தேவை உங்களோட அன்பு தான்மா' என்றாள் மறுபடியும்.



ராஜரத்தினம், 'சாரிம்மா. சாரி. நாங்க இதைப் புரிஞ்சுக்கலையோ...?' என்று கேட்டார்.

'புரிஞ்சுக்கலையோ.. இல்லைப்பா. கண்டிப்பா புரிஞ்சுக்கலை. புரிஞ்சிருந்தா எனக்கும், அண்ணனுக்கும் நீங்க கொஞ்சமாவது நேரம் ஒதுக்கி இருப்பீங்க. எங்களை ஆயாக்கள்கிட்ட வளர விட்டிருக்கமாட்டீங்க' என்றாள்.

'உனக்காகதானடி...' என்று மறுபடியும் ஆரம்பித்தாள் காமினி.

'பேசாதம்மா நீ. எனக்காகவா? நீ ஒவ்வொரு கிளப்பா போய் உட்கார்ந்து கொண்டிருந்தெல்லாம் எனக்காகவா? உங்களுக்கு ஊர், உலகத்துல பெரிய மனிதரா நடமாடணும்னு இருந்தது. அதுக்காக நேரம் செலவழிச்சீங்க. அப்ப ஏன் நீங்க ரெண்டு குழந்தைங்களை பெத்தீங்க?' என்று கேட்க வந்தவள், சட்டென்று நகத்தைக் கடித்துக் கொண்டு அமைதியாகி விட்டாள்.

ஒரு நிமிட அமைதிக்குப் பிறகு, உடைந்து போனவளாக கேவிக் கேவி அழுதாள். சட்டென்று இஷோர் எழுந்து அவளைத் தன் தோளில் சாய்த்துக் கொண்டான்.

அப்போது கூட காமினிக்கு இதுவரை அந்த மாதிரி உணர்வுகளைக் காட்டியவள் அல்ல என்பதாலோ, எழுந்து மகளுக்கு ஆறுதல் சொல்லவேண்டும் என்று தோன்றவில்லை. பார்த்துக் கொண்டே அமர்ந்திருந்தாள். ராஜரத்தினம்தான் எழுந்து சட்டென்று மகளைத் தன் தோளில் சாய்த்துக் கொண்டார்.

'நீ கேட்கறது நியாயம்தான்மா. நீ கேட்கறது நியாயம் தான்' என்றார்.

'அப்பா. ப்ளீஸ் புரிஞ்சுக்கங்க' என்று அவள் கண்களைத் துடைத்துக் கொண்டு சொன்னாள், 'இப்பவும் நான் உங்களைக் குற்றம் சாட்டறதுக்காக சொல்லலை. இன்னும் ஒரு வருஷமோ, ரெண்டு வருஷமோ எப்படியாவது உங்களை மாதிரியே ஒரு எந்திரத்தைப் பிடிச்சு எனக்குக் கல்யாணம் பண்ணி அனுப்பிச்சுருவீங்க. அட்லீஸ்ட் நான் இருக்கிற வரைக்காவது எனக்கு அந்த ஒரு பிரியத்தைக் கொடுக்கக் கூடாதா?' என்று கேட்டாள்.

அன்புக்காக கையேந்தி நிற்கிற தன் மகளைப் பார்த்தவுடன், காமினி இதயத்தில் ஒரு வெடிப்பு ஏற்பட்டது. என்ன இருந்தாலும் தாயல்லவா? அவள் உள்ளத்தின் ஆழத்திலும் அன்பு இருந்திருக்கும் அல்லவா?

அன்றைக்கு மகளைப் பெற்ற பொழுது சுரந்த பாலைப் போல, இன்றைக்கு அவளுடைய ஆழ்மனத்திலிருந்து அன்பு சுரந்தது. 'என்னடி பொண்ணே!' என்று எழுந்து மகளைக் கட்டிக் கொண்டார்.

இரண்டு பேரும் தேம்பித் தேம்பி அழுதார்கள்.

கிஷோர் திரும்பி தந்தையைப் பார்த்தான்.

மெள்ள பெருமூச்சுவிட்டுக் கொண்டார்கள்.

தந்தை கிஷோரின் அருகில் நின்று அவன் தோளைத் தன் வலக்கையால் வளைத்துக் கொண்டார். அவர் கண்கள், 'ஏம்ப்பா. நீயும் கூட இப்படியொரு நிலைமையைக் கடந்துதான் வந்தியா?' என்ற கேள்வியைக் கேட்டது.

அவன் கண்களும், 'ஆமாப்பா. இப்படியொரு நிலைமையைக் கடந்துதான் நான் வந்தேன்' என்று பதில் சொல்லியது.

இவர்களுக்கிடையே மௌனப் பரிமாற்றம் நடந்து கொண்டிருக்கையில், தாயும் மகளும் கண்ணீரைக் கொட்டிக் கொண்டார்கள்.

தன் வாழ்க்கையிலேயே காமினி முதன் முறையாக இப்படி வெடித்து அழுவதைப் பார்த்த ராஜரத்தினத்துக்கும் பாவமாக இருந்தது. உண்மையில் அவர் பெரியதொரு பிஸினெஸ் சாம்ராஜ்யத்தை நிர்வகித்துக் கொண்டிருந்தார். அந்த நிர்வாகத்துக்கே அவருக்கு நேரம் சரியாக இருந்தது. அதனால் மகளுக்கு நேரம் கொடுக்கக்கூடாது என்று அவர் நினைக்கவில்லை. சூழ்நிலை அப்படி அமைந்துவிட்டது.

மகளும், மகனும் அதைப் புரிந்து கொள்ளுகிறார்கள் என்றுதான் அவர் நினைத்துக் கொண்டிருந்தார். காமினியாவது நேரம் கொடுத்திருக்கலாம் என்பது இப்போது புரிந்தது.

அவரும் பெருத்த பணக்கார வீட்டில் பிறந்தவர். மனைவியும் பெரிய பணக்கார வீட்டிலிருந்து வந்தவள். அவரவர் வீடுகளில் தனிமனித சுதந்திரம் மதிக்கப்படுகிறது என்ற பெயரில் அவரவர்களுக்கென்று ஒரு திட்டத்தை வைத்துக் கொண்டுதான் இருந்தார்கள். அதனால் ராஜரத்தினத்துக்கு காமினியின் நடத்தை புதிதாக இருக்கவில்லை. ஏற்றுக்கொண்டார். ஆனால், சொர்ணாவுக்கு சின்ன வயதிலிருந்தே அமைந்த தோழிகளின் குடும்பங்களில் எல்லாம் அன்பான சூழல் இருந்தது. அவரவர்கள் வீட்டுக் கதைகளை வந்து சொல்லிச் சொல்லி, அவள் மனத்தில் ஒரு ஏக்கத்தை ஏற்படுத்தியிருந்தார்கள்.

சமீபகாலமாக, பொன்மலர் வீட்டைப் பார்க்கும் பொழுது அவளுக்கு இன்னமும் ஏக்கம் அதிகரித்துவிட்டது. சொல்லிச் சொல்லிப் பார்த்தாள். நடக்கவில்லை. 'இவர்களுக்கு ஏதாவதொரு அதிர்ச்சி வைத்தியம் கொடுக்கத்தான் வேண்டும் என்று எண்ணினாளோ, இல்லை உண்மையாகவே ஆழ்ந்த வேதனையின் காரணமாக இப்படி

ஒரு முடிவெடுத்தாளோ' தெரியவில்லை. ஒரு விடுதலைப் பத்திரம் தயாரித்துக் கொண்டு வந்து விட்டாள்.

கிஷோரே இதை எதிர்பார்க்கவில்லை. ஆனால், உள்ளூர அம்மா, அப்பாவுக்கு இது வேண்டும் என்கிற எண்ணம் அவனுக்குள் இருந்தது.

கண்ணைத் துடைத்துக் கொண்டு மறுபடியும் அம்மா விடம் சொன்னாள், 'நாளைக்கு நான் ரெஜிஸ்தர் பண்ணப் போறேன்' என்றாள்.

அம்மா ஆவேசமாக அந்தப் பத்திரத்தைப் பிடுங்கி கிழித்து எறிந்தாள்.

சொர்ணா கசப்பாக சிரித்தாள். 'பத்து ரூபா பத்திரம். இதை மறுபடியும் தயாரிக்க முடியாதா? இல்லை. ஐநூறோ, ஆயிரமோ எவ்வளவோ இருக்கட்டும். இதை நான் தயாரிக்க முடியாதா மறுபடியும்?' என்றாள்.

'போதும்டி. போதும். இப்ப நீ என்னைக் குத்திக் காமிச்சதே போதும். இப்ப சொருகினியே கத்தி, அதுவே போதும். நானும் உப்புதான்டி போட்டு சாப்பிடறேன். எனக்கு புரிஞ்சது' என்றாள் அம்மா.

சொர்ணா மௌனமாகப் பார்த்தாள். மேற்கொண்டு விளக்கம் சொல்லவில்லை.

கிஷோரும், ராஜரத்தினமும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். கிஷோர் மெள்ள அப்பாவிடம், 'அப்பா! ஏதோ ஒரு முக்கியமான ஃபைலைப் பார்க்க ணும் அப்படின்னு சொன்னீங்களே..' என்று கேட்டான்.

அப்பாவும், மகனும் மெள்ள நகர்ந்தார்கள்.

இத்தனை நாள் பேசாத பேச்சையெல்லாம் அம்மா வும், மகளும் அன்றைக்குப் பேசிக் கொண்டார்கள். இரவு பன்னிரெண்டு மணி ஆகியும் கூட பேச்சு நிற்கவேயில்லை.



ஃபைலைப் பார்க்கிறேன் என்று அப்பாவும், மகனும் இன்னொரு புறத்திலே பேசிக் கொண்டிருந்தார் கள். எந்த நேரத்திற்கு தூங்கினார்களோ தெரியவில்லை. அப்பாவும், மகனும் ஒரு அறையிலும், அம்மாவும், மகளும் ஒரு அறையிலுமாகத் தூங்கினார்கள்.

அடுத்த நாள் காலை வழக்கம்போல சொர்ணா இறங்கி டைனிங் டேபிளுக்கு வந்தாள். 'என்னம்மா?' என்று வந்தார் சமையற்காரர்.

'என்ன டிஃபன்?' என்று உற்சாகமாக கேட்கிற பொண்ணை அவர் பிரியமாக பார்த்தார். சற்று நேரத்தில் காமினி வேகமாக இறங்கி வந்தாள்.

எல்லா செல்வந்தர்களின் வீட்டில் இருப்பதைப் போல அவள் நன்றாகத்தான் உடை உடுத்திக் கொண்டு வந்தாள். வந்து வழக்கம் போல டெலிஃபோனிலே பேசிக் கொண்டிருக்காமல், டைனிங் டேபிளிலே அமர்ந்தாள்.

கொஞ்சம் கழித்து ராஜரத்தினம் வந்தார். அவரும் ஒரு சேரை இழுத்துப் போட்டு அமர்ந்தார்.

சமையற்காரருக்கு ஆச்சர்யம் பிய்த்துக் கொண்டு கிளம்பியது. 'ஏதாவது கேட்கலாமா?' என்று நினைக்கை யிலேயே கிஷோர் இறங்கி வந்தான்.

'என்ன முழிக்கறீங்க? என்ன டிஃபன் ரெடியா இருக்கு?' என்று கேட்டான்.

'டிஃபன், நானு, பிரெட், ஜாமு, பாப்பாவுக்கும், உங்க ளுக்கும் மட்டும்...' என்று இழுக்கவும்,

'என்ன இழுக்கறீங்க? ஏதாவது சப்பாத்தி மாவு, இட்லி மாவெல்லாம் வெச்சிருப்பீங்கல்ல. மள மளன்னு தோசை வார்த்துக் கொடுங்க' என்றான்.

'தம்பி! நொடியில தம்பி!' என்று ஓடிப் போனவர், நான்கு பேருக்கும் அவசர அவசரமாக நான்கு பிளேட்டு

களை வைத்து முதலிலே ஃபிரிட்ஜிலிருந்த பால் அல்வா வைக் கொண்டுவந்து வைத்தார்.

'என்ன விசேஷம்?' என்று கிண்டினான் கிஷோர்.

'என்ன விசேஷம் தம்பி? எனக்குத் தெரிஞ்சு நீங்க நாலு பேரும் ஒண்ணா டேபிளுக்கு வந்திருக்கிங்க. அதை விட பெரிய விசேஷம் என்ன வேணும்?' என்று அவர் உற்சாகமாவதைப் பார்த்து நெகிழ்ந்துபோனாள் சொர்ணா.

நான்கு பேரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண் டார்கள்.

செல்ஃபோன் அடித்தது. வழக்கம் போல காமினி எடுத்தாள். 'அவ்வளவுதான், இனி கிளம்பிவிடுவார்கள்' என சமையல்காரர் பார்த்துக் கொண்டு நிற்க, 'இல்லங்க தீப்தி! நெக்ஸ்ட் வீக் என்னால வர முடியாது. இல்லை. இந்த வீக்ல ஒரு டூ, த்ரீ டேஸ் வந்து கிளப் வொர்க் எல் லாம் முடிச்சுக் குடுத்திடலாம்னு இருக்கேன்' என்றாள்.

'ஏன்னு கேட்கிறீங்களா? நெக்ஸ்ட் வீக் நாங்க ஃபேமிலி டூர் கிளம்புறோம்.'

'யெஸ். ஒன் மந்த் டூர்' என்றாள்.

அந்தப் பக்கம் ஏதோ ஆச்சர்யமாகச் சொன்னாள். 'என்ன ஆச்சர்யம்? இப்பத்தான் அவருக்கும் டைம் கிடைச்சுது. நான், அவர், டாட்டர், சன் எல்லோருமா போறோம். ஒன் மந்த்...' என்று அவள் சொல்லிவிட்டு ஃபோனை ஆஃப் செய்தாள்.

கிஷோரும், சொர்ணாவும் ஒருவரை ஒருவர் மகிழ்ச் சியாகப் பார்த்துக் கொண்டார்கள். அதற்குள் கிஷோர் அம்மாவிடம், 'அம்மா! அப்பா, நானு ரெண்டு பேரும் கிளம்பிட்டா...' என்று சொல்ல,

'ஐ டோன்'ட் நோ. அப்பாவும், மகனும் என்ன அரேஞ்ச்மெண்ட் பண்றீங்களோ பண்ணுங்க. ஐ வாண்ட் டு பி வித் மை சன், மை டாட்டர், அண்ட் மை ஹஸ் பெண்ட் ஃபார் எ மந்த்' என்றாள்.



ராஜரத்தினம் குபீரென்று சிரித்தார்.

'என்னப்பா?' என்றான் கிஷோர்.

'பார்றா. ப்ரையாரிட்டியில கடைசி இடம்டா எனக்கு' என்றார் சோகமாக.

காமினி செல்லமாக முறைத்தாள்.

முதன் முறையாக அம்மாவும், அப்பாவும் தன்னிடம் அப்படி பேசுவதை கண்டு கிறங்கிப் போய் அமர்ந்திருந் தாள் சொர்ணா.

## அத்தியாயம்-14

**'ஹாய்!'** என்றபடி வந்தான் சுபாஷ்.

'ஹாய்!' என்றான் கிஷோர்.

அவ்வப்போது அந்த கிளப்புக்கு வருவான் சுபாஷ். அவ்வப்போது கிஷோரையும் சந்திப்பது உண்டு.

இன்றைக்கு சுபாஷினுடைய அத்தான், சாந்தியின் கணவரும் அங்கே அமர்ந்திருந்தார். அவர் பெயர் பால சுப்பிரமணியம்.

'பாலு அத்தான்!' என்று ஆச்சர்யமாகப் பார்த்தான் சுபாஷ்.

'ஏம்ப்பா? நீதான் கிளப்புக்கு வருவியா? நாங்க வரக்கூடாதா?' என்று அவர் சிரித்தார்.

'அப்படியெல்லாம் இல்லை. அதிசயமா இருந்தது. அத்தான்!' என்றவன், அவருக்கு அருகிலே இருந்த நாற்கா லியிலே அமர்ந்தான். இன்னும் இரண்டு, மூன்று பேர் களும் அங்கே அமர்ந்திருந்தார்கள்.

'கிஷோர்! என்ன சடனா ஃபாரின் டிரிப்'பாட்ட இருக்கு' என்றான் சுபாஷ்.

'ஆமா சார்! ஃபேமிலி டூர்' என்றான்.

'ஜமாய்ங்க. லைஃபை என்ஜாய் பண்றீங்க' என்று சிரித்தான். அப்படியே திரும்பி தனது மச்சானைப் பார்த் தான்.

'அத்தான்! நான் உங்ககிட்ட ஒரு விஷயம் பேச ணும்' என்றான்.

'பேசு. பேசு' என்று அவர் பச்சைக் கொடி காட்டினார்.

கிஷோர் இருக்கும்போது பேசலாமா, வேண்டாமா என்று அவன் யோசிக்கையிலேயே, அவர் புன்னகைத்தப் படி, 'நீ எதைப் பத்தி பேசப் போறேன்னு எனக்குத் தெரி யும். அது கிஷோர் இருந்தா பரவாயில்லை, சொல்லு' என்றார்.

'எதைப் பத்தி...' என்று இவன் நெற்றிப் புருவத்தை உயர்த்திக் கொண்டு கேட்க,

'என்ன? நான் அன்னிக்கு அந்த ஃபங்ஷனுக்கு வரலே. அதைத்தானே கேட்கப் போறே..?' என்றார் பாலு.

உண்மையிலேயே சுபாஷ் கொஞ்சம் அசந்துதான் போனான். 'பரவாயில்ல மச்சான், நீங்க பாயிண்ட்டைப் பிடிச்சிட்டீங்க' என்றான்.

'அதுகூடத் தெரியாம பிஸினெஸ் மேனா இருக்க முடியுமா?' என்று அவர் புன்னகைத்தார்.

கிஷோர் இருவரையும் மாறி மாறிப் பார்க்க, பாலுவே கிஷோரிடம் சொன்னார். 'ஒண்ணுமில்லைப்பா. என் டாட்டருக்கு காலேஜ்ல ஃபங்ஷன். நான் வர்றேன்னு சொல்லியிருந்தேன். திடீர்னு எனக்கு டெல்லியில ஒரு மீட்டிங். போயாக வேண்டி இருந்தது. சொன்னா கஷ்டப் படுவா. அதனால சொல்லாம கிளம்பிட்டேன். உடனே மா



மாகிட்ட கம்ப்ளெயின்ட். மாமா அட்வைஸ் பண்றாரு' என்றார் பாலு.

கிஷோர் மையமாகப் புன்னகைத்து வைத்தான்.

சுபாஷ் கிஷோரிடம், 'கிஷோர்! நீங்களே சொல் லுங்க. அந்தப் பொண்ணு அன்னைக்கு நாலு பரிசு வாங் குச்சு. அதுக்கு அப்பா இருந்து கைதட்டணும்னு ஆசை இருக்குமா? இருக்காதா?' என்றான்.

'எனக்கும்தாம்ப்பா அதைப் பார்த்து கை தட்ட ணும்னு ரொம்ப ஆசை. அன்னைக்கு சூழ்நிலை அப்படி ஆகிப்போச்சு' என்றார்.

சுபாஷ் ஒரு நிமிடம் மௌனமாக இருந்துவிட்டு பிறகு சொன்னான், 'அத்தான் நான் சொல்றேன்னு தப்பா நினைக்காதீங்க. பொண்ணு அடலசெண்ட் ஸ்டேஜ்ல இருக்கா. இந்த சமயத்துல பேரண்ட்ஸ் வந்து கேர் கொடுக் கணும். அது ரொம்ப முக்கியம். நீங்க ஃப்ரண்ட்ஷிப்பை ஆஃபர் பண்ணலேன்னா அந்த குழந்தை வேற எங்கேயா வது ஃப்ரண்ட்ஷிப் தேடிட்டு போயிரும். அதுக்கப்புறம் அப்படி ஆச்சே, இப்படி ஆச்சேன்னு சொல்லிட்டு கவலைப்படறதுல பிரயோசனம் இல்லை' என்றான்.

பாலு அதை நல்லவிதமாகவே எடுத்துக் கொண் டார். 'நீ சொல்றது சரிதாம்ப்பா. ஆனா, நீ நினைக்கிற மாதிரி நந்தினி ஒண்ணும் அப்படி எல்லாம் போற புள்ளை இல்லை' என்றார்.

'இல்லை அத்தான். அப்படி நினைக்காதீங்க. இப்போ தைக்கு இந்தப் பொண்ணு தெளிவா இருக்கு. நம்ம புள்ளை அப்படி எல்லாம் பண்ணாதுன்னு நாம நினைக் கிறோம். ஆனால், இந்த ஸ்டேஜுலதான் அவங்க கொஞ்சம் அஃபெக்ஷன் எதிர்பார்ப்பாங்க. இன்னும் சொல்லப்போனா ஃப்ரண்ட்ஷிப் எதிர்பார்ப்பாங்க. நாம

அவங்களை ஈக்வல்லா நடத்திட்டோம்னா, ஃப்ரண்ட் ஷிப் கொடுத்துட்டோம்னா டெஃபனெட்டா நம்ம பின்னாடி இருப்பாங்க. அப்படி இல்லாம நான் அப்பா, நீ டாட்டர், நீ பையன் எனக்குத் தெரியாதாடா. நேத்து பொறந்தவன் உனக்குத் தெரியறது எனக்குத் தெரியாதா? இப்படி எல்லாம் டீல் பண்ணோம்னா பிரச்சினைதான்' என்றான்.

அவனை உற்றுக் கவனித்தபடி சொன்ன விஷயங்களை எல்லாம் கேட்டுக் கொண்டிருந்த பாலு குபீரென்று சிரித்தார். 'அட பயலே! நீ எப்ப இருந்து இப்படி தாத்தா வானே..' என்றார்.

'ஏன் அத்தான்? நிறைய கோர்ஸஸ் நாங்க அட்டெண்ட் பண்றோம். அது இல்லாம நாங்களே செல்ஃப் இம்ப்ரூவ்மெண்ட் கிளாஸஸ் வச்சு ஸ்டூடண்ட்ஸ்க்கு நடத்தறோம். அங்க வர்ற சைக்காலஜிஸ்ட் கிட்ட குழந்தைங்க பேசறதெல்லாம் கேட்கறோம். இப்பத்த குழந்தைங்க என்ன தெரியுமா சொல்றாங்க? படி, படின்னு சொல்றாங்களே ஒழிய எங்களுக்குத் தேவையான அட்டென்ஷன் கொடுக்க மாட்டேங்கிறாங்க. எதைக் கேட்டாலும் வாங்கிக் கொடுத்தர்றாங்க. எங்களுக்கு அது வேண்டாம். கேர்தான் வேணும், அப்படின்னு கேட்கிறாங்க. அது நியாயம்தானே...' என்றான் சுபாஷ்.

கிஷோர், 'என்னவோ இவர் சொர்ணாவின் பக்கத்திலிருந்து கேட்ட மாதிரி விவரங்களைச் சொல்லுகிறாரே.. இப்பொழுது சொர்ணா கூட அதைத் தானே பெரிய புகாராக சொல்லிக் கொண்டிருக்கிறாள்' என்று உள்ளுக்குள் ஆச்சரியப்பட்டுக் கொண்டான். ஆனால், வெளியே அமைதியாக இருந்தான்.

என்ன இருந்தாலும் உறவினர்கள் பேசிக் கொள்ளுகிறார்கள், இடையிலே தான் புகுந்து கருத்து சொல்லுவது



நாகரிகமாக இருக்காது. அவர்கள் நாகரிகம் கருதி தன்னை அமர வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது புரிந்து, 'நான் வேணும்னா கொஞ்சம் அந்தப் பக்கம் போயிட்டு வரட்டுமா?' என்று எழுந்தான்.

'அட உட்காருப்பா. இது என்ன பெரிய பிரச்சினை? ஊர், உலகத்துல இல்லாத பிரச்சினை. அவன் சொல்றது கரெக்ட்டுதான். இதெல்லாம் டிஸ்கஸ் பண்ண வேண்டிய விஷயந்தான். உட்காரு' என்றார். திரும்பி மைத்துனனைப் பார்த்தார்.

'சுபாஷ்! சாரிப்பா. நான் வேணும்னு பண்ணல. போன மீட்டிங்குக்குப் போனேன். இந்த மீட்டிங் வந்து தவிர்க்க முடியாம ஆயிருச்சு' என்றார்.

சுபாஷ் ஒரு தீவிர முகபாவத்தோடு அவரைப் பார்த்தபடி சொன்னான். 'அத்தான்! அது பிரச்சினையில்ல. நீங்க சொல்லாம போனீங்க பாருங்க. அந்தப் பிள்ளைக்கு முகம் இத்தனூண்டாயிருச்சு. நீங்க உட்கார்ந்து அவளுக்கு விவரம் புரிய வெச்சுட்டு, 'பாரும்மா. அந்த ப்ரொக்ராமுக்கு இருந்த விஷயங்களைச் சொல்லி ரொம்ப தவிர்க்க முடியாத மீட்டிங்மா. நான் போயிட்டு வர்றேன். வந்துட்டு உனக்கு ஒரு ட்ரீட் கொடுக்கறேன். கண்டிப்பா நாம எங்காவது கொஞ்ச நேரம் போவோம். அப்படீன்னு ஏதாவது சொல்லி சமாதானப்படுத்திட்டு போயிருந்தீங்கன்னா, நந்தினிக்கு ஆறுதலா இருந்திருக்கும். ஏத்துக்கிட்டு இருந்திருப்பா. ஏதோ நீங்க தப்பிச்சுட்டு போன மாதிரி போனது தான் அவளுக்கு ரொம்ப வருத்தமா போச்சு. எங்கிட்ட தனியா சொல்லி அழுதுட்டா அத்தான்' என்றான்.

'ஓ.. இது வேற ஒரு பாயிண்ட் இருக்கோ...?' என்றார் பாலு.

'இது வேற ஒரு பாயிண்ட் இல்லை. இது முக்கியமான பாயிண்ட்' என்றான் சுபாஷ்.

'ம்.. ம்ம்... சரிப்பா. இனிமேல் இந்த மாதிரி பிரச்சி னைகள் வராமப் பார்த்துக்கறேன்' என்றார்.

'அத்தான்! நான் சொல்றேன்னு நினைக்காதீங்க. டெய்லி ஒரு ஹால்ஃப் ஆன்அவர் உட்கார்ந்து காலேஜ்ல என்ன நடந்தது? ஹால்ஃப் ஆன் அவர் யூ கேன் ஸ்பேர் அத்தான். தூங்கப் போறதுக்கு முன்னாடி, காலேஜ்ல என்ன நடந்தது? உன்னோட ஃப்ரண்ட்ஸ் யாரு? என் னென்ன விஷயங்கள் இருக்கு? அப்படின்னு விசாரிச் சுக்கறது நல்லது அத்தான். அவங்களும் எல்லாத்தையும் உங்ககிட்ட கொண்டாருவாங்க. ஏதோ ஒரு பையன் கலாட்டா பண்றதைக் கூட உங்ககிட்ட சொல்ற மாதிரி வெச்சுக்கணும்' என்றான்.

'சரிங்க தாத்தா' என்றார் பாலு. 'டேய், என்னடா? இவ்வளவு தூரம் எல்லாம் சொல்லிக்கிட்டு இருக்கிற?' என்று மறுபடியும் சிரித்தார்.

'இல்லைங்க அத்தான். உங்களுக்குத் தெரியும்ல. எனக்கு சைக்காலஜியில கொஞ்சம் இன்ட்ரஸ்ட் இருக்கு. புத்தகங்கள்லாம் படிக்கிறேன்ல. அதில நிறைய விஷ யங்கள் சொல்றாங்க. இப்ப நிறைய பேட்டிகள், டிஸ்க ஷன்ஸ் எல்லாத்துலயும் இந்த மாதிரி கருத்துக்கள் நிறைய வந்துக்கிட்டு இருக்கு அத்தான்' என்றான்.

'கரெக்ட்டுதாம்ப்பா. இன்னைக்குக் குழந்தைங்க ரொம்ப டெவெலப்டா இருக்காங்க. வாஸ்ட் திங்கிங் இருக்கு. அவங்களுக்கு ஈடு கொடுத்துப் போக வேண்டி யது அவசியம்தான். அதேசமயத்துல இந்த எமோஷனல் அட்டாச்மெண்ட் இல்லாம போகறதுக்கான வாய்ப்பு களும் இருக்கு. நீ சொல்றது கரெக்ட்டுதான்' என்றார்.

கிஷோர் ஆச்சர்யமாக அவர்கள் இருவரையும் பார்த் தான்.



'என்னப்பா இப்படி ஆச்சர்யமா பார்க்கறே?' என்றார் பாலு.

'இல்லை. ரொம்ப முக்கியமான ஒரு பாயின்டை நீங்க ரெண்டு பேரும் டிஸ்கஸ் பண்ணிக்கிட்டு இருக் கிறீங்க. அதை ஜாலியா டிஸ்கஸ் பண்ணிக்கிட்டு இருக் கிறீங்க. அதுதான் எனக்கு ஆச்சர்யமா இருக்கு' என்றான்.

'இதுல ஒண்ணும் ஆச்சர்யப்படறதுக்கு இல்லை. அவனை யாருன்னு நினைச்சே.. சரியான ஆளாக்கும். அப்படியே வாழைப்பழத்துல ஊசி ஏத்துவான். எனக்குக் கேட்கிற மாதிரியும் கேட்டுட்டான். உடனே சாந்திக்கு ஃபோன் பண்ணி அத்தானை வாங்கு, வாங்குன்னு வாங் கினேன் அப்படீம்பான். நந்தினிக்கு ஃபோன் பண்ணி, 'இனிமே பாரு, உங்க அப்பா உங்கிட்ட சொல்லாம எங்கேயும் போக மாட்டாரு' அப்படீம்பான். எங்கிட்ட இப்படி நைஸா பேசிருவான்' என்றார்.

உடனே கிஷோர் கூட சிரித்து விட்டான். 'நீங்க அதுக்கு அப்ரிஷியேட் பண்ணனும் சார். ரொம்ப அழகா ஹேண்டில் பண்றார் பாருங்க' என்றான்.

'இப்படியே இவனுக்கு வர்றவளையும் ஹேண்டில் பண்ணினான்னா சரி. அவள் இவனுக்கு சைக்காலஜி கத்துக் கொடுக்காமல் இருந்தா சரி' என்றார்.

'அது பார்க்கலாம், நாளைக்கு' என்று சுபாஷ் சிரித் தான்.

'உன்னை மாதிரி நான் எத்தனையோ பேர்களைப் பார்த்திருக்கேன்டா. இப்படியெல்லாம் பேசுனவங்க, விலாவாரியா பேசுனவன், ரொம்ப ஆழமா அனலைஸ் பண்ணுனவன்லாம் தோப்புக்கரணம் போடுறதை நான் பார்த்திருக்கிறேன்' என்றார்.

'அத்தான்! உங்களோட எக்ஸ்பீரியன்ஸ் எல்லாம்

இங்க சொல்லிக்கிட்டு இருக்காதீங்க. கிஷோர் என்னைப் பத்தி என்ன நினைப்பாரு?' என்றான்.

'கிஷோர் என்ன நினைக்கப் போறாரு? உன்னைப் பத்தி தெரியாதா? நீ மல்ட்டி ஃபேசட்டெடு மேன். எல்லாத்தையும் ஹேண்டில் பண்ணுவேன்னு அவனுக்குத் தெரியாதா?' என்றார்.

கிஷோர் சிரித்தான். 'உண்மைதான். இவரைப் பத்தி எல்லா இடத்துலயும் பெருமையாத்தான் சொல்றாங்க' என்றான். 'என் சிஸ்டர் சொர்ணா கூட இவர்கிட்ட பேசணும்னு சொல்லிக்கிட்டிருந்தாள்' என்றான்.

'என்ன விஷயம்?' என்றார் பாலு.

'இல்லை. அவங்க ரேடியோ ப்ரொக்ராம்ஸ் பத்தி ஏதோ டீடெய்ல்ஸ் பேசணும் அப்படின்னு சொன்னாள்' என்றான்.

'அப்படியா?' என்று வேறு விஷயங்களுக்குத் தாவினார்கள். சற்று நேரம் பேசிக்கொண்டிருந்த பாலு கிளம்பினார்.

கிளம்பியதற்குப் பிறகு, சுபாஷ் கிஷோரிடம் கேட்டான். 'என்னப்பா விஷயம்? சொர்ணா பேசணும்னு சொன்னாங்கன்னு சொன்னியே..' என்றான்.

அப்பொழுதுதான் கிஷோர் தன்னுடைய தங்கை இவனுடைய விஷயத்தில் விளையாடிய விளையாட்டை தன்னிடம் சொல்லிய விவரத்தை சொன்னான்.

சுபாஷ் மெல்ல சிரித்துக் கொண்டான். 'சின்ன பிள்ளைங்க. அப்படித்தான் இருக்கும். ஐ டேக் இட் இன் த ரைட் ஸென்ஸ். ஸ்போர்ட்டிவ்வா தான் எடுத்துக்கறேன். ஒண்ணும் பிரச்சினையில்லை' என்றான்.

'பரவாயில்லை சார். தேங்க்ஸ்' என்றான் கிஷோர்.



'விடுங்க சார். இதெல்லாம் இருக்கறதுதான்' என்றவன் குபீரென்று சிரித்தான்.

'எதுக்கு சிரிக்கறீங்க?' என்றான் கிஷோர்.

'இல்ல. உங்க சிஸ்டர் பிரில்லியண்ட்தாம்பா. நான் அன்னிக்கு போன மீட்டிங்குல கேட்டேன். என்னம்மா விஷயம்? அப்படீன்னு கேட்டேன். அதுக்கு சட்டுனு இம்ப்ரவைஸ் பண்ண மாதிரி ஒரு விளக்கம் சொன்னாங்க பாரு. இப்ப கூட நினைச்சா எனக்கு சிரிப்பாத்தான் இருக்கு. பொருத்தமான விளக்கம்தான். ஆனா அழகா மேனேஜ் பண்ணாங்க. அதை இப்ப கூட நினைச்சாலும் எனக்கு சிரிப்பாத்தான் இருக்கு' என்று அந்த விளக்கத்தைச் சொன்னான்.

கிஷோரும் கூட புன்னகைத்தான். 'பிரில்லியண்ட் தான் சார். இப்ப நீங்க பேசுன பாயிண்ட்ஸ் எல்லாம் அவளும் பேசுவா. இந்த வாரத்துல பாருங்களேன். எங்க அம்மாவையும், அப்பாவையும் இப்படித்தான் மடக்கினா. அதனாலதான் இப்ப நெக்ஸ்ட் மன்த் ஃபேமிலி டூர் போட்டுட்டாங்க. இனிமேலும் இந்த மாதிரி கேள்விகளுக்கு இடம் கொடுக்கக்கூடாது அப்படின்னு' என்றான்.

'அப்படியா! குட், குட், குட். ரொம்ப அவசியம்தான். இப்பதான் இந்த ஃபேமிலி கூட நீங்க டூர் போக முடியும். அதுக்கப்புறம் உங்களுக்கு ஃபேமிலி வந்துரும்ல?' என்றான் சுபாஷ்.

'என்னமோ உங்களுக்கெல்லாம் வராத மாதிரி பேசறீங்க. உங்களுக்கும் தான் சார் வரும். நீங்க எலிஜிபிள் பேச்சலர். நீங்க சரின்னா பொண்ணு கொடுக்க எத்தனை ஃபேமிலி தயாரா இருக்காங்க தெரியுமா? நான் ரெண்டு, மூணு தடவை உங்ககிட்ட நின்னு பேசிட்டிருந்ததைப் பார்த்துட்டே, 'கிஷோர்! சுபாஷ் உங்களுக்கு ஃப்ரண்டா?

எப்படி, என்ன? அலையன்ஸ் பார்க்கலாமா?'ன்னு கேட்டாங்க. நான்தான் பாவப்பட்டு, 'அவர் கொஞ்ச நாள் நிம்மதியா இருக்கட்டும். விட்டுடுங்க'ன்னு சொன்னேன்' என்றான்.

'அடப்பாவி! எனக்கு வந்த வாய்ப்பைக் கெடுத்திட்டீங்களே..' என்றான் சுபாஷ்.

'அப்படியா? உண்மையாகவே நீங்க அலையன்ஸ் பார்க்கறதா இருக்கிங்களா?' என்று ஆர்வமானான் கிஷோர்.

'அய்யய்யோ, இல்லையப்பா. இன்னும் டூ இயர்ஸ். அதுக்கப்புறம்தான் ஏதாவது பண்ணனும். இப்ப 'ஊம்' சொன்னா அம்மா நிறைய பொண்ணுங்களை கொண்டு வந்து நிறுத்திடுவாங்க. அதிலெல்லாம் சிக்கிக்கக்கூடாதுன்னு தெளிவா இருக்கிறேன்' என்றான்.

கிஷோர் புன்னகைத்தான். 'இதெல்லாம் சொல்லவே முடியாது சார். யார், எப்ப சிக்குவாங்க? எங்க சிக்குவாங்க? அப்படீங்கற முடிச்செல்லாம் அந்த அவனுக்குத்தான் தெரியும்' என்று கையை மேலே காட்டினான்.

'எனக்கென்னமோ அப்படித் தோணலை. நான் எப்ப சிக்குவேன்னு அநேகமா இவனுக்குந் தெரியும்' என்று தன்னைத் தானே காட்டிக் கொண்டான்.

'பார்க்கலாம் சார். ஒருவேளை நீங்க அடுத்த ஆறு மாசத்துல கல்யாணம் பண்ணிட்டு வந்து நின்னாலும் நிற்பீங்க' என்றான் கிஷோர்.

'திரும்பத் திரும்ப நீ இதையே சொல்றதைப் பார்த்தா, உங்களுக்குப் பொண்ணு பார்க்கச் சொல்லணும்னு ஐடியா வந்துருச்சு போலருக்கு. சொர்ணாகிட்ட சொல்லட்டுமா? இல்லைன்னா உங்க பேரண்ட்ஸ் கிட்ட பேசட்டுமா?' என்றான்.



'நோ, நோ, நோ. நான் நிச்சயமா இன்னும் ஒரு வருசத்துக்கு கல்யாணம் பண்ணிக்கப் போறதில்லை. அதுக்கும் முன்னாடி சொர்ணாவுக்கும் மேரேஜ் பண்ணிட்டுத்தான் நான் பண்ணனும்' என்றான்.

'தட்ஸ் நைஸ்..' என்றான் சுபாஷ்.

'வேண்ணா, சுபாஷ் சார் ஒண்ணு பண்ணுங்களேன். சொர்ணாவுக்கு ஏதாவது நல்ல மாப்பிள்ளையா இருந்தா சொல்லுங்களேன்' என்றான்.

நேரடியாக உங்களுக்கு ஏதாவது ஐடியா இருக்கிறதா? என்று கேட்கிறானோ என்று அவனுக்குத் தோன்றியது. 'கண்டிப்பா சொல்றேன்பா. நிச்சயமா அம்மாகிட்ட சொன்னா யாராவது சொல்லுவாங்க, சொல்றேன்' என்றான்.

'எனக்கு இப்போது அந்த கருத்து இல்லை' என்பதையும் அவன் சொல்லிவிட்டான்.

இரண்டு பேருமாக நேரடியாக இல்லாமல், மறைமுகமாக கேள்விகளை கேட்டுக் கொண்டு ஒரு தீர்வுக்கு வந்தார்கள் என்பது அவர்களுக்கே புரியவில்லை. ஆனால் கிஷோர் சொன்ன ஒரு வாக்கியம் பலிக்கப் போகிறது என்பது அப்போதைக்கு சுபாஷுக்குத் தெரியவில்லை.

## அத்தியாயம் - 15

**மலங்க**, மலங்க விழித்துக் கொண்டு அமர்ந்திருந்தாள் பொன்மலர். நேர் எதிரே சுபாஷ் தன்னுடைய சுழல் நாற்காலியில் அமர்ந்து கொண்டிருந்தான். இப்போது சுபாஷின் வீட்டில் அவனுடைய அலுவலகத்தில் அமர்ந்திருந்தான் சுபாஷ். இப்படி ஒன்று நடக்கும் என்றே எதிர் பார்க்காத பொன்மலர் மாட்டிக் கொண்டாற் போல விழித்துக் கொண்டிருந்தாள்.

இன்று ஞாயிற்றுக்கிழமை. கடந்த இரண்டு, மூன்று வாரங்களைப் போலவே நெருங்கின உறவினர்கள் வீட்டுத் திருமண ஏற்பாடுகளுக்காக அம்மாவும், அப்பாவும் போயிருந்தார்கள். 'நாள் முழுவதும் வரமாட்டோம்' என்று வேறு சொல்லியிருந்தார்கள்.

வழக்கமாக ஞாயிற்றுக்கிழமைகளில் தலையணையை அணைத்துப் பிடித்துக் கொண்டு ஆழ்ந்து தூங்குவதற்குத் தான் விரும்புவான் சுபாஷ். ஓய்வையும் முழுமையாக அனுபவித்துவிட வேண்டும் என்பது அவனுடைய குறிக்கோள். அதற்காக சோம்பேறித்தனமாகவும் இருக்க மாட்டான்.

காலையில் எட்டு, எட்டரை மணிக்கு எழுந்து குளித்துவிட்டு, சாப்பிட்டுவிட்டு திரும்பவும் அறைக்குப் போய் விடுவான். பிற்பகல் வரை நல்ல உறக்கம் போடுவான். அதற்குப் பிறகு உணவருந்திவிட்டு சற்று நேரம் ஃபைல்களைப் பார்த்துவிட்டு மாலை நேரங்களில் ஏதாவது ஒரு விழாவிற்குச் செல்லுவான்.

அநேகமாக அவன் இருக்கக்கூடிய கிளப்புகளில், ஞாயிற்றுக்கிழமைகளில் சாயங்காலம் கூட்டம் இருக்கும். அல்லது வேறு ஏதாவது விழாக்களுக்கு அவனை அழைத்திருப்பார்கள். கண்டிப்பாக மாதத்தில் ஒரு நாளாவது அந்த மாலை நேரத்தை பெற்றோர்களுடன் செலவழிப்பதில் அவன் குறிப்பாக இருப்பான்.

நேரத்தைப் பார்த்தான். மணி இரண்டு ஆகியிருந்தது. பிற்பகல் இரண்டு மணி. நேற்றிரவு முழுவதும் சுபாஷுக்கு உறக்கமில்லை. சிந்தனை மனதுக்குள்ளே ஓடிக் கொண்டேயிருந்தது. ஆழ்ந்த உறக்கம் கிடைக்கவில்லை. அதிகாலையில்தான் உறங்கினான். அப்போதே அவன் மனதுக்குள் ஒரு தீர்மானம் ஏற்பட்டுவிட்டது.



நேற்று என்னவோ கிஷோரிடம், 'சின்ன பிள்ளைங்க தானே.. ஏதோ விளையாடிருச்சுங்க' என்று சொல்லி விட்டு வந்தாலும் கூட, இந்த விளையாட்டுக்குப் பின்னாலே ஏதோ இருக்கிறது என்கிற எண்ணமும், ஆஃப்டர் ஆல் இரண்டு இளம்பெண்கள் சேர்ந்து கொண்டு தன்னை முட்டாளடிப்பதா என்ற கோபமும் மெல்ல, மெல்ல துவங்கி வளர ஆரம்பித்தது. அதனால்தான் இன்றைக்கு ஒரு வேலை செய்தான்.

வீராசாமியிடம் நயமாகப் பேசி, 'அந்த இரண்டு பெண்களுக்கும் ஸ்காலர்ஷிப் சேங்ஷன் பண்ணிடலாம்னு பார்க்கறேன். இருந்தாலும் ரெண்டு பொண்ணுகளும் சின்னதுகளா இருக்கு. எதுக்கும் அவங்க சிஸ்டரையும் கூட்டிட்டு வாங்க, அந்த பாப்பியை' என்று சொல்லி அவளையும் வரவழைத்தான். ஒன்றரை மணிக்கு அப்பாயின்மெண்ட் கொடுத்தான்.

ஒன்றரை மணிக்கு சரியாக அந்த பெண்கள் வந்து சேர்ந்துவிட்டார்கள். இரண்டு பெண்களுடைய விண்ணப்பங்களையும் பரிசீலித்துவிட்டு, அவர்கள் இரண்டு பேரையும் பார்த்துச் சொன்னான். 'ஓ.கே. கிரான்ட் பண்ணிடலாம். டிரஸ்ட்டுக்கு சப்மிட் பண்ணிட்டு போயிருவீங்களாம்' என்று அதை வாங்கிக் கொண்டான்.

'ரொம்ப நன்றி சார்.'

'ரொம்ப நன்றி சார்' என்று எழுந்தார்கள். கூடவே பொன்மலரும் எழுந்தாள்.

அவன் சட்டென்று இரண்டு சகோதரிகளையும் அதாவது கிருத்திகாவையும், சந்திரிகாவையும் பார்த்து, 'ஏம்மா, நீங்க ரெண்டு பேரும் கிளம்பலாம். நான் உங்க சிஸ்டர்கிட்ட அவங்க ரேடியோவுல பிராட்காஸ்ட் பண்றதுக்காக ஒரு புரோக்ராம் பத்தி பேசணும். கொஞ்ச நேரத்துல அனுப்பிடறேன். ஓ.கே.வா?' என்றான்.

இவன் உள்வயணம் அறியாத அந்தப் பெண்கள், 'சரிங்க சார், சரிங்க சார்' என்று பெரிதாக கும்பிடு போட்டு விட்டு புறப்பட்டுப் போய்விட்டார்கள்.

பொன்மலரும் கொஞ்சம் தயக்கத்தோடுதான் அமர்ந்திருந்தாள். சற்று நேரம் அவன் மேஜையிலே இருக்கக் கூடிய அந்த பேப்பர் வெயிட்டை உருட்டிக் கொண்டே அவளை ஆழமாகப் பார்த்தான்.

பொன்மலர் கொஞ்சம் விதிர்விதித்துப் போனாள். 'சார், ரேடியோ புரோகிராம்...' என்று இழுத்தாள்.

'அதுதான். ரேடியோ புரோகிராம் நடக்கணுமா? வேண்டாமா? அதை முடிவு பண்றதுக்காகத்தான் இப்ப உங்களை இருக்கச் சொன்னேன்' என்றான்.

அவள் புரியாமல் விழித்தாள்.

'ரெண்டு பொண்ணுங்களும் சேர்ந்துட்டு என்னை முட்டாளடிக்கிறீங்க. நான் இதை டாலரேட் பண்ணிக்கணுமா?' என்று கேட்டான்.

பொன்மலர் இந்த நேரடித் தாக்குதலை எதிர்பார்க்கவில்லை. 'சார், அது வந்து...' என்று இழுத்தாள். 'சொர்ணா...' என்று ஏதோ சொல்ல ஆரம்பித்தாள்.

'சொர்ணா மேட்டரை விடுங்க. நீங்கதானே பொன்மலர். உங்ககிட்டதானே நான் ஃபோன்ல பேசினேன்' என்று கேட்டான்.

அவள் கண்களில் கலவரத்துடன் அவசரமாகத் தலையாட்டினாள். 'இல்ல சார் வந்து..' என்று இழுத்தாள்.

'ஃபைவ் மினிட்ஸ் டைம் தர்றேன். யோசிச்சுக்குங்க. யோசிச்சுட்டு நடந்தது எல்லாத்தையும் எங்கிட்ட விவரமா சொல்லிர்ரணும். யூ அண்டர்ஸ்டேண்ட்' என்றான்.



அவள் அவனை கெஞ்சுகிறார் போல பார்த்தாள். 'சார், சொர்ணா ஃபாரின்...'

'தெரியும், தெரியும். அதனாலதான் இப்ப இந்த மேட்டருக்கு ஒரு முடிவு கட்டணும்னு நான் முடிவுக்கு வந்தேன். பேசாம சொல்றீங்களா? இல்லை. உங்க மேடத்துக்கு நான் வக்கீல் நோட்டீஸ் அனுப்பட்டுமா? அது மட்டுமில்ல. எல்லா ப்ரோக்ராமையும் கேன்சல் பண்ணிடுவேன். ஆல் பிகாஸ் ஆஃப் யூ. அவங்க இன்டெர்ன் என்ன பண்ணுவாங்க தெரியுமா? எல்லா நஷ்டத்துக்கும் நீங்கதான் காரணம் அப்படின்னு சொல்லி, உங்ககிட்ட சாலரியில காம்பன்சேஷன் கேட்பாங்க, ஓ.கே.வா?' என்றான்.

'அய்யோ!' என்ற குரல் அவள் வாயிலிருந்து எழும்ப எத்தனித்தபோது கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

'அய்யோதான். பின்ன ஊர், உலகத்துல எனக்கு எவ்வளவு நல்ல பேரு. கிஷோர் லாஸ்ட் வீக் எனக்கு எக்ஸ்ப்ளெயின் பண்றான். பேசாமயாவது இருக்கணும். கிஷோர்கிட்ட போயி எல்லாத்தையும் சொல்லிட்டீங்க. ஹூம். இதுல என்னை முட்டாளடிக்கிற மாதிரி விளக்கம் வேற' என்று பொரிந்து தள்ளினான், ஓரிரு நிமிடங்களில்.

அவள் கண்களில் கண்ணீர் கட்டியது. 'சார், நான் மன்னிப்பு கேட்டுக்கறேன் சார். தயவு செய்து இதைப் பெரிசு பண்ணாதீங்க சார்' என்றாள்.

'இல்ல.. இல்ல.. ஏன் இந்த முடிவுக்கு வந்தீங்க அப்படின்னு சொல்லுங்க' என்று அவன் கேட்டான்.

அவளுக்கு வேறு வழி இருக்கவில்லை. சொர்ணாவும், அவளும் பேசியதையும், நடந்த விஷயங்களையும் சொன்னாள். 'இப்ப வந்து உன்னை மீட் பண்ணுவார்

பாரு' என்று சொர்ணா சொன்னதையும், 'அநேகமா அவருக்கு இன்டரெஸ்ட் ஆச்சுன்னா நீ கல்யாணமாகி செட்டில் ஆகிடலாம்' என்று சொன்னதையும் அவனிடம் சொல்லும்போது அவளுக்கு அவமானமாக இருந்தது. கன்னக் கதுப்புகள் எல்லாம் சிவந்து போயின. 'செத்துப் போயிடலாம் போல இருக்கு' என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டே அவனிடத்தில் முழுவதையும் விளக்கினாள்.

கல்லுப் பிள்ளையார் போல முகத்தில் எந்த உணர்ச்சியும் காட்டாமல் அந்த பேப்பர் வெயிட்டை உருட்டிக் கொண்டே அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான் சுபாஷ்.

ஒரு கட்டத்துக்கு மேல், 'ப்ளீஸ் சார்.. அப்படிப் பார்க்காதீங்க' என்று கெஞ்சினாள்.

அவன் ஒரு பெருமூச்சு விட்டு விட்டு முகத்தை திருப்பிக் கொண்டான். 'இத்தனையும் செஞ்சுட்டு.. ம்ம்..' என்று உறுமினான்.

அவள் மௌனமாக அமர்ந்து கொண்டாள். ஓரிரு நிமிடங்கள் அந்த மௌனம் அப்படியே நீடித்தது.

திடீரென்று தன்னை உலுக்கிக் கொண்டவன் போல அவளைப் பார்த்து, 'இவ்வளவு என் நேமைடேமேஜ் பண்ணியிருக்கீங்களே.. என்ன நினைச்சுட்டீங்க? உடனே உங்களை வந்து பார்த்தா... ம்..' என்று உறுமியவன், 'இதுக்கு என்ன தண்டனை கொடுக்கிறது? இன் வாட் வே ஆர் யூ கோயிங் டு காம்பன்சேட் இட்?' என்று கேட்டான்.

'சார் நான், நீங்க எப்படி சொல்றீங்களோ அப்படி காம்பன்சேட் பண்றேன்' என்றாள் குளரலாக.

'எப்படிச் சொன்னாலுமா?' என்று அவன் கேட்கவும்,



திடுக்கிட்டாற்போல பார்த்து, 'அய்யோ! அப்படியில்ல சார். உங்களோட கௌரவம் பாதிக்காத வகையில, என்னோட கௌரவம் பாதிக்காத வகையில நீங்க என்ன செய்யச் சொன்னாலும் செய்யறேன் சார்' என்றாள்.

அவன் மறுபடியும் முறைத்துப் பார்த்தான். 'நிபந்தனை வேறயா?' என்றான்.

'இல்லை சார். நிபந்தனை எல்லாம் இல்ல. ப்ளீஸ் அண்டர்ஸ்டேண்ட். எங்க வீட்டுல நான் மூத்த பொண்ணு. நீங்க பார்த்து இந்த ப்ரோக்ராம் எல்லாம் நிறுத்தினீங்கன்னா, இட் வில் ரிஃப்ளெக்ட் பேட் ஆன் மி. எங்க வேலைக்குப் போனாலும் எனக்கு கஷ்டம் ஆயிடும் சார்' என்றாள்.

அவன் யோசிப்பவன் போல மறுபடியும் டேபிள் வெயிட்டை உருட்டினான். 'ம்ம்ம்... நீங்க சொல்றதும் சரிதான். உங்க ஃபேமிலியையும் பார்க்க வேண்டியிருக்கு. அப்படின்னா நான் சொல்றதை செய்யறீங்களா?' என்று கேட்டான்.

அவள் வேகமாக தலையை உருட்டினாள்.

'சரி, காலேஜ் வொர்க்கிங் டேய்ஸ் எப்போ?' என்று கேட்டான்.

'திங்கள்லருந்து வெள்ளி முடிய சார். சில நாட்கள் சனிக்கிழமை ஹாஃப் எ டே இருக்கும்' என்றாள்.

'ஓ.கே. அப்படீன்னா காலேஜ் இல்லாத சனிக்கிழமையும், ஞாயிற்றுக்கிழமை ஆஃப்டர் நூனும் இங்கே வேலைக்கு வந்திரணும்' என்றான்.

'இங்க? வேலைக்கு? என்ன வேலை சார்..' என்று அவள் இழுக்க,

அவன் அலட்சியமாக சுற்றிலும் கையைக் காட்டினான். 'சுற்றிலும் பாருங்க. எவ்ளோ ஃபைல்ஸ் இருக்கு.

இதெல்லாம் எனக்கு டீல் பண்றதுக்கு வீட்டுல ஒரு ஆள் தேவை இருக்கு. என்னதான் என்னை வெச்சு விளையாடிட்டாலும் கூட நம்பிக்கையான பொண்ணா தெரியுது. இந்த ஷெல்ஃப்ல கான்ஃபிடன்ஷியல் ஃபைல்ஸ் எல்லாம் இருக்கு. இதெல்லாம் பாத்துக் கொடுக்க வேண்டியது' என்றான்.

'சார், எனக்கு ஃபைல் பார்க்கறதுக்கு எல்லாம் தெரியாது சார்...' என்று அவள் இழுத்தாள்.

'எல்லாருமே தெரிஞ்சுக்கிட்டா பிறந்தாங்க. கத்துக்கறாங்கதானே. டேலி த்ரீ டோஸ் கோர்ஸ். நான் பே பண்றேன். போய் படிச்சுக்கோங்க. அப்புறம் ஃபைல் பார்க்க நான் சொல்லித் தர்றேன்.'

'உங்களுக்கு டைம் இருக்குமா சார்?' என்று அவள் இழுத்தாள்.

'தேவைன்னா டைம் இருக்கத்தான் செய்யும். சாட்டர்டே ஆஃப்டர் நூன்ல ஒரு ஒன் ஹவர் சொல்லித் தர்றேன். ஞாயிற்றுக்கிழமை ஆஃப்டர் நூன்ஸ் நான் இங்கதான் இருப்பேன்' என்றான்.

'சரிங்க சார். சரிங்க சார். நான் வீட்டுல சொல்லிட்டு..' என்று அவள் திரும்பி அவனை நம்பிக்கையோடு பார்த்து, 'ஏன் சார்? இந்த வீராசாமி மாமாவை எங்க வீட்டுல கொஞ்சம் சொல்லச் சொல்ல முடியுமா?' என்றாள்.

'ம்.. அது வேண்ணா செய்யலாம்' என்றான் கெத்தாக.

அவளுக்கு உள்ளுக்குள்ளே கோபம் வந்தது. தேவையில்லாமல் சொர்ணா இப்படி மாட்டி விட்டுவிட்டாளே, இவர் வேறு எல்லாவற்றையும் வாயிலிருந்து பிடுங்கிக் கொண்டாரே, என்று அவளுக்கு பயமாக இருந்தது.



'ம்... அப்புறம் தனியா வேலை செய்யறோம்னு எல்லாம் நினைக்க வேண்டியதில்லை. வீராசாமி இங்கேயேதான் இருப்பாரு. பாதுகாப்புக்கெல்லாம் ஒண்ணும் பயம் இல்லை. அநேகமா என்னைப் பத்தி இன்னும் வெளியில ஒண்ணும் கெட்ட பேர் இல்லைன்னு நினைக்கிறேன்' என்றான்.

'அய்யய்யோ.. அப்படி எல்லாம் இல்லை சார்' என்றாள் அவள் பதட்டமாக.

'ம்.. அது' என்றான்.

'சார்! எப்ப இருந்து வரட்டும்?' என்றாள் அவள்.

'ஏன்? இன்னைக்கே கூட ஜாயின் பண்ணிரலாம்' என்றான்.

'நான் இன்னும் வீட்டுல சொல்லலியே சார்' என்றாள்.

'ஓ.கே. போய் ஒன் ஹவர் எக்ஸ்ப்ளெயின் பண்ணிட்டு, வந்து ஜாயின் பண்ணிக்கோங்க. த்ரீ ஓ கிளாக். யு கேன் கம் அண்ட் ஜாயின்' என்றான்.

'சார்! அது எப்படி..?' என்று அவள் இழுக்க,

'தட் இஸ் யுவர் ஹெட் ஏக். எனக்கு அதெல்லாம் வேணாம். வீராசாமி அண்ணாவை வேண்ணா அனுப்பறேன். கூட்டிட்டுப் போங்க. போய் ஒன் அவர் எக்ஸ்ப்ளெயின் பண்ணி என்ன வேணும்னாலும் சொல்லுங்க. உங்களுக்குத்தான் தில்லுமுல்லு, ஆள்மாறாட்டம் எல்லாம் தெரியுதில்ல. செய்யலாம்' என்றான்.

அவளுக்கு மானமே போனாற்போல இருந்தது. பல்லைக் கடித்துக் கொண்டு நின்றாள்.

'போலாம்மா. டு ஃபிஃப்டீன் ஆச்சு. உங்களுக்கு ஃபார்ட்டி ஃபைவ் மினிட்ஸ். ஓ.கே. வி வில் மேக் இட்

த்ரீ ஃபிஃப்டீன். த்ரீ ஃபிஃப்டீனுக்கு நீங்க வந்து ஜாயின் பண்றீங்க' என்றான்.

அவள் விதிர்விதிர்ப்புடன் தலையாட்டிவிட்டு நகர்கையில், 'ஹலோ!' என்று மறுபடியும் அழைத்தான்.

அவள் பதறிக் கொண்டு திரும்பி நின்றாள்.

'இதுக்கு தனியா சாலரி கொடுத்துருவேன். சும்மா எல்லாம் செய்ய வேண்டியதில்லை' என்றான்.

அவள் தலையாட்டிவிட்டு மறுபடியும் நகர, 'ஹலோ! இது என்னவிதமான தண்டனைன்னு கேட்க மாட்டீங்களா?' என்று கேட்டான்.

அவள், 'நீங்களே சொல்லுங்கள்' என்று கேட்பது போல் பாவமாகப் பார்த்துக் கொண்டு நிற்க, 'பெரிய வீடுகள்ல எப்படி நடந்துக்கணும். பிஸினெஸ் மேக்னட்ஸ் மாதிரி இருக்கக் கூடியவங்ககிட்ட எப்படி நடந்துக்கணும்கறதுக்கு ட்ரெயினிங் வேண்டாம்? அதுக்குத்தான்' என்றான்.

'சரிங்க சார்' என்றாள் அவள். என்.சி.சி. பையனைப் போல விறைப்பாக நின்றபடி, 'அப்ப நான் போயிட்டு...' என்று இழுக்க,

'ம்.. ம்.. டைம் ஆயிடுச்சுன்னா அப்புறம் திரும்பி வர லேட்டாயிடும். த்ரீ ஃபிஃப்டீன்னுக்கு வந்து சேந்துரணும். இன்னிக்கு நாள் நல்லா இருக்கு. நாலரை-ஆறு தான் ராகு. அதனாலதான் உன்னை த்ரீ ஃபிஃப்டீனுக்கு வரச் சொல்றேன். யு மே கோ நௌ'' என்றான்.

அவள் விட்டால் போதுமென அங்கிருந்து வேகமாக நகர்ந்தாள். இடுப்பு வரை தொங்கிய அவளுடைய கூந்தலின் நுனி சுருள் முடியாக பந்தாக இருக்க, அவள் தலையை அசைத்து நடப்பதை பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தான்.



அவன் கண்களில் விசித்திரமான ஒரு பார்வை இருந்தது. முகத்தில் ஆழமான ஒரு புன்னகை தோன்றி அப்படியே நிலைத்து நின்றது.

## அத்தியாயம் - 16

**வ**ரிசையாக நின்று கொண்டிருந்தார்கள் இளைஞர்கள். டாக்டர்களும், நர்சுகளும் பரபரவென்று நடமாடிக் கொண்டிருந்தார்கள்.

அன்று சனிக்கிழமை காலை நேரம். அது ஒரு ரத்ததான முகாம். அந்த முகாமைத் தொடங்கி வைப்பதற்காக சுபாஷும் அழைக்கப்பட்டிருந்தான்.

பத்து மணிக்கு நிகழ்ச்சி ஆரம்பிக்கும் என்றார்கள். சுபாஷ் சரியாக பத்து மணிக்கு அங்கே போய் தயாராக நின்றிருந்தான். அதற்கும் சற்று முன்பாகவே டாக்டர்கள் தங்களுடைய ஆஸ்பத்திரி வேனில் இறங்கியிருந்தார்கள்.

புகழ்பெற்ற மருத்துவமனையின் சார்பாக நடத்தப்படும் ரத்ததான முகாம் அது. அன்றைக்கு பெருந்தலைவர் காமராஜரின் பிறந்த நாள். அவருடைய பிறந்த நாளைக் கொண்டாடுவதற்காக ஒரு அரசியல் அமைப்பு மருத்துவமனையுடன் சேர்ந்து அதனை ஏற்பாடு செய்திருந்தது.

தமிழ்நாட்டுக் குழந்தைகளுக்கு அந்த காலத்திலே கல்வி கண்ணைத் திறந்தவர் என்பதால், அவர் மீது சுபாஷுக்கு எப்போதும் ஒரு மரியாதை உண்டு. அதிலும் சுபாஷின் தாத்தா சுதந்திரப் போராட்ட வீரராக இருந்ததாலோ என்னவோ அடிக்கடி அவனுக்கு அந்தக் காலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை எல்லாம் சொல்லுவார். அந்த அடிப்படையில் காமராஜரை ஒரு தலைவராக அவனுக்கு மிகவும் பிடிக்கும். தன்னுடைய தாய்க்காக ஒரு நெருக்கு

மூாயை விருதுபட்டியில் இருந்த ஒரு அலுவல் அதிகாரி போட்டுக் கொடுத்தார் என்பது தெரிந்ததுமே, 'அது என்ன என் தாய்க்கு மட்டும் ஸ்பெஷலாக.. அப்படி எல்லாம் ஒண்ணும் இல்லை. ஊருல இருக்கறவங்கள்லாம் எப்படி கஷ்டப்படுறாங்களோ அப்படியே அவங்களும் கஷ்டப் படட்டும். அது என்ன அவங்களுக்கு ஸ்பெஷல் குழாய்?' என்று உடனடியாக துண்டிக்கச் செய்த தலைவர் அவர். இறக்கும்போது அவரிடம் ஏதோ நூறு ரூபாய் அறுபத் தைந்து காசோ, அந்த மாதிரி ஏதோ மிகக் குறைவான தொகைதான் வைத்திருந்தார் என்பதை அவன் படித் திருந்தான்.

இன்றைய அரசியல் நடப்புக்களில் அவன் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளவில்லை என்றாலும், கோடிக்கணக் கில் புழங்குகிற ஊழல்கள் அவன் மனத்தையும் பாதித் திருந்தது. அதனால் கர்மவீரர் காமராஜரின் பெயரால் நடத்தப்படுகிற ரத்ததான முகாம் என்று சொன்னவுடனே, உடனடியாக ஒத்துக்கொண்டான். சரியான நேரத்திற்கு வரவும் செய்தான். ஏழெட்டு கல்லூரிகளில் இருந்து மாணவர்கள் வந்திருந்தார்கள். ஆர்வமுள்ள மாணவர்கள். வரிசையாக நின்று கொண்டிருந்தார்கள்.

சுபாஷ் தானும் ரத்தம் கொடுக்க விரும்புவதாகச் சொன்னான்.

'பரவாயில்லை சார்! நீங்க துவக்கி வைச்சா போதும்' என்ற அமைப்பாளர் அவனுடைய ரத்தம் எந்த வகையைச் சார்ந்தது என்று விசாரித்தார்.

'பி பாசிட்டிவ்' என்றான்.

'அது கொஞ்சம் கிடைக்கும் சார். ஒண்ணும் பிரச் சினையில்லை. அப்படி ஏதாவது தேவைன்னா நாங்க உங்களைக் கூப்பிட்டுக்கறோம்' என்றார்கள்.



'சரி' என்று அவன் ஓரிரு நிமிடங்கள் பேசி அந்த முகாமைத் துவக்கி வைத்துவிட்டு, 'கொஞ்சநேரம் இருக்கிறேன்' என்று ஒரு பக்கமாக ஒதுங்கிக் கொண் டான். ஒதுங்கிக் கொண்டான் என்றால் ஒரு பக்கமாக ஒரு நாற்காலியைப் போட்டுக் கொண்டு அமர்ந்துகொண் டான்.

வந்திருந்த மாணவர்களில் ஒரு சிலரை மருத்துவர் கள் தனியாக அழைத்துப் பேசி அனுப்பி வைத்தார்கள். ஏனென்று விசாரித்தான் சுபாஷ்.

அந்த மாணவர்கள் முதல் நாளிரவோ அல்லது காலையிலோ மது அருந்தியிருக்கிறார்கள். அதனால் அவர் களுடைய ரத்தத்தை எடுத்துக் கொள்ள முடியாது என்று சொல்லிவிட்டார்கள். சுபாஷுக்கு வருத்தமாக இருந்தது.

மிகப் பெரிய செல்வந்தக் குடும்பத்தில் அவன் பிறந்தான் என்று சொல்ல முடியாது. நடுத்தர குடும்பத் தில்தான் அவன் பிறந்தான். ஆனால், அவனுடைய தந்தை யினுடைய உழைப்பும், அவனுடைய உழைப்புமாக சேர்ந்து அந்த குடும்பம் இப்போது மிக உயர்ந்த நிலை யில் இருந்தது.

தந்தை சின்னதாக ஆரம்பித்த ஒரு லேத்தை வைத்துக் கொண்டுதான், அதனை இத்தனை சித்து வேலைகள் செய்து, மிகப்பெரிய கம்பெனியாக உருவாக்கியிருந்தான்.

உழைப்பு, நேர்மை, சரியான நேரத்தில் பணத்தை கொடுப்பது, வாங்குவது என்று அவன் சில கட்டுப் பாடான திட்டங்களை வைத்துக் கொண்டதால், இந்த அளவிற்கு வர முடிந்தது. ஆனால், இளம் வயது மாணவர் கள் இப்படி மதுப் பழக்கத்திற்கு அடிமையாவதைப் பார்த்து அவனுக்கு வருத்தமாக இருந்தது. இவர்களுக் கெல்லாம் கவுன்சிலிங் கொடுக்க வேண்டும் என்று அவன் கருதினான்.

'இப்போதெல்லாம் விசேஷங்கள் என்றாலே மது அருந்துவது, மாணவர்கள் பிறந்த நாளுக்காகட்டும், ஏன் ஃபெயிலானால் கூட பார்ட்டி கொடுத்துக் கொள்கிறார் கள்' என்று யாரோ ஒரு ஜோக் போல சொன்னது இப்போது அவனுக்கு நினைவுக்கு வந்தது. இது தொடர்பான இயக் கங்களில் தான் தீவிரமாக பங்கெடுத்துக் கொள்ள வேண் டும் என்று அப்பொழுது முடிவெடுத்துக் கொண்டான்.

சற்று நேரம் சிந்தனையில் ஆழ்ந்தபடி திரும்பிப் பார்த்தான். தூரத்திலே, அதாவது ஒரு பத்து, இருபது பேருக் குப் பின்னாலே அந்த க்யூவிலே நிற்கிற உருவம் தனக்கு மிகவும் பரிச்சயமான உருவமாகத் தெரிகிறதே என்று பார்த்தான்.

'பொன்மலர் போலிருக்கிறதே..' என்று நினைத் தான். 'போலிருக்கிறதே என்ன? பொன்மலரேதான்' என்று அவனுக்குப் புரிந்தது.

கண்களில் சுவாரஸ்யம் கூடியது. 'ரத்ததான முகா முக்கு வந்திருக்கிறாளே இந்தப் பெண்!' என்று எண்ணிக் கொண்டான் போலும்.

அந்த அமைப்பாளர்களில் ஒருவரான ஒரு டாக்ட ரிடம், 'சார்! அவங்க எனக்குத் தெரிஞ்சவங்க. கொஞ்சம் இங்க வரச் சொல்றீங்களா?' என்பது போல செய்தி அனுப்பினான். பொன்மலர் அழைத்து வரப்பட்டாள்.

'உட்காருங்க' என்று எதிரிலே இருக்கிற நாற்காலி யிலே அமரச் சொன்னான்.

அவள் நடுங்கிக் கொண்டே அமர்ந்தாள்.

'என்ன பொன்மலர்? ரத்ததானம் எல்லாம் கொடுக்க றீங்க போலிருக்கு' என்றான்.

'ஆமா சார்! எங்க காலேஜ்ல இருந்து ஜூனியர்ஸ் எல்லாம் என்னை சுத்தி இருக்கறவங்க எல்லாம்



வந்திருக்காங்க. நானும் அவங்களோட ஒண்ணா ஜாயின் பண்ணிட்டு வந்திருக்கேன்' என்றாள்.

'ரொம்ப நிறைய ரத்தம் இருக்கு போலருக்கு. தானம் பண்ண வந்துட்டீங்க' என்றான் கிண்டலாக.

'சார்! யார் வேணும்னாலும் தானம் பண்ணலாம். தெரியுங்களா? சிக்ஸ் ஹவர்ஸோ, எய்ட் ஹவர்ஸோ சொல்றாங்க. அதுக்குள்ள ரத்தம் மறுபடியும் ஊறிடுமாம்' என்றாள்.

'ம். அப்படியா?' என்றான் கிண்டலாக.

அவன் கிண்டல் செய்கிறான் என்பதை அறிந்து அவள் பேசாமல் அமர்ந்து கொண்டாள்.

'சரி. நான் சும்மா வேடிக்கைக்காக சொன்னேன். ஒரு நல்ல காஸ்க்காக கொடுக்கறீங்க. ஓ.கே. வாழ்த்துக்கள். சரி, நான் வேண்ணா இருந்து உங்களை பிக்கப் பண் ணிட்டு போகட்டுமா?' என்று கேட்டான்.

'அய்யய்யோ.. வேணாம் சார். இப்ப உங்ககிட்ட பேசுனதுக்கே இங்கெல்லாம் என்ன கமெண்ட்ஸ் வருமோ..?' என்றாள்.

'என்ன கமெண்ட் வரும்? கிளம்பினதுக்கப்புறம் தெரியும். ராஜ மரியாதை கிடைக்கும் தெரியுமா?' என் றான் அவன்.

'அதான் எனக்கு கஷ்டமா இருக்கு. எனக்கு இந்த மாதிரி செய்யும்போது, நல்லது செய்யும்போது எனக்கு விளம்பரமே பிடிக்காது' என்றாள்.

'சூப்பர் தத்துவம்!' என்று சிரித்தவன், 'ஓ.கே. நான் கிளம்பறேன்' என்று கிளம்பிவிட்டான்.

உண்மையிலேயே அவன் கிளம்பிப் போனதற்குப் பிறகு, 'சுபாஷை எப்படித் தெரியும்? சுபாஷை எப்படித் தெரியும்?' என்று தோழிகள் உலுக்கினார்கள்.

'எங்க தெருவிற்குப் பின் தெருவுலதான் இருக்காரு. நான் ஆர்.ஜே.வா வொர்க் பண்ற எஃப்.எம்.ல அவரோட புரோக்ராம்ஸ் எல்லாம் பண்ணுவோம். அப்படி பழக்கம்' என்று சொல்லி சமாளித்தாள்.

'லக்கிடி நீ. கூப்பிட்டு வைச்சுப் பேசுறாரு' என்றார்கள் தோழிகள்.

அவளுக்கு வெறுப்பாக இருந்தது. 'என்ன லக்கு? தேவையில்லாமல் தலையைக் கொடுத்து மாட்டிக்கிட்டிருக்கிறோம். உரலுக்குள்ள தலையைக் கொடுத்த மாதிரி இழுக்கவும் முடியாமல், உள்ளே சிக்கிக்கவும் முடியாமல் நான் பட்டுட்டிருக்கிற அவஸ்தை எனக்குதானடி தெரியும்' என்று நினைத்துக் கொண்டாள். சொல்லவா முடியும்? சொல்லவில்லை.

'இப்போது மட்டுமென்ன? மிரட்டல் தொனி இல்லாமல் நன்றாக பேசிவிட்டு செல்கிறார்' என்று நினைத்துக் கொண்டாள்.

அப்படி நினைத்துக் கொள்ளும்போதே, 'அய்யோ இன்னிக்கு ஆஃப்டர் நூன் வேற வேலைக்குப் போகணுமே...' என்று எண்ணிக் கொண்டாள்.

போன வாரத்தில் வேலையில் சேருவதற்குள்ளாக, பெற்றோர்களுக்குப் புரிய வைப்பதற்குள்ளாக போதும், போதுமென்றாகிவிட்டது. உண்மையை எங்கே சொல்ல முடிந்தது? அதற்குப் பதிலாக என்னென்னவோ கதையளந்தாள். 'நம்ம குடும்பம் கஷ்டப்படற குடும்பமாம். அதனால உதவி செய்யறதாம், அதுக்காக சும்மா பணம் கொடுத்தா நான் வாங்கிக்க மாட்டேன்னு தெரியுமாம். அதனால் வேலையா கொடுத்திருக்கிறாராம்' என்றெல்லாம் வீராசாமி மாமா மூலமாக அவன் சொல்லி அனுப்பியதைக் கேட்டவுடன் அவளுக்கு அடிவயிற்றிலிருந்து



கோபம் கிளம்பியது. 'நேற்று மிரட்டிய மிரட்டல் என்ன? இன்றைக்கு புளுகுகிற புளுகு என்ன?' என்று எண்ணிக் கொண்டாள். வீராசாமி மாமா சொல்லுவதைக் கேட்பதற்கு அவளுக்குப் பொறுமையில்லை. 'காபி போடுகிறேன் பேர்வழி' என்று உள்ளே போய்விட்டு வந்தாள். அதனால் அதற்குப் பின்பு வீராசாமி என்ன சொன்னார் என்பது அவளுக்குத் தெரியாது. தெரிந்து கொள்ள விரும்பவில்லை.

இப்பொழுது நினைத்துக் கொண்டாள். 'என்ன? த்ரீ, ஃபோர் ஹவர்ஸ் வந்து வேலை செஞ்சு கொடுக்கணும். அதானே? வந்திர்றேன்' என்று மனதுக்குள் கருவிக் கொண்டாள். ஆனால், அன்றைக்குக் கதை வேறுவிதமாகப் போய்விட்டது.

ரத்ததான முகாம் முடிந்ததற்குப் பிறகு, அங்கேயே சாப்பிட்டுவிட்டு வீட்டுக்கு வந்தாள். சற்று நேரம் ஓய்வெடுத்துக் கொண்டு மூன்று மணிக்குப் போய்விடலாம் என்று நினைத்தாள். அப்போது வீராசாமியிடம் இருந்து ஃபோன் வந்தது.

'அம்மணி! இன்றைக்கு ரெஸ்ட் எடுத்துக்கறதாம். இன்னைக்கு வர வேண்டாமாம். தம்பி சொன்னாப்ல' என்று ஃபோன் வந்தது.

அவளுக்கு கோபமாக வந்தது. 'வா'ன்னா வரணும். 'போ'ன்னா போகணும். பெரிய டிரில் மாஸ்டர். இந்த சொர்ணா வேற நம்மளை சிக்க வைச்சுட்டுப் போயிட்டா' என்று அவள் கோபமெல்லாம் சொர்ணாவின் மேல் திரும்பியது.

கோபத்தையெல்லாம் ஒரு பக்கம் மூட்டைக் கட்டி வைத்துவிட்டு, நன்றாக படுத்து இரண்டு மணி நேரம் தூங்கினாள். நான்கு மணி, நாலரை மணி இருக்கும். வீராசாமி மறுபடியும் அழைத்தார்.

'ஏம்மா வீட்டிலதான் இருக்கியா?' என்று கேட்டார்.

'ஆமாம் மாமா. வீட்டுலதான் இருக்கேன்' என்றாள் அவள்.

'நான் வரலாம்னுட்டு இருக்கேன். பார்க்கறதுக்கு' என்றார்.

'அய்யோ.. என்ன பெரிய விஷயம் இது ரத்தம் கொடுத்தது. இதுக்கெல்லாம் பார்க்கணும்னுட்டு..' என்று வெட்கப்பட்டாள் பொன்மலர்.

'இல்லைம்மா. நீ உன்னோட சக்திக்கு ஏதோ ஒரு சேவை பண்ற இல்லே! அதைப் பாராட்டணுமில்ல. அதனால வர்றேன்' என்றார்.

'என்னவோ செய்யுங்க மாமா' என்றாள் அவள் மறுபடியும் வெட்கத்துடன்.

ஐந்து மணி இருக்கும். வீராசாமி வந்து நின்றார்.

'மாமா நிறைய ரத்தம் கொடுத்திருக்கேன். அதுக்கு ஒரு அஞ்சாறு ஆப்பிளாவது சாப்பிடணும். கொண்டு வந்திருக்கீங்களா?' என்று கேலி செய்தாள் பொன்மலர்.

'இதைப் பாரும்மா. ஒரு கூடையே கொண்டு வந்து இறக்கிர்றேன். இதெல்லாம் ஒண்ணும் பெரிய விஷயமே இல்லை. எனக்கு யார் இருக்காங்க. உனக்கு ஆப்பிள் வாங்கிக் கொடுக்கிறது எனக்குப் பெரிய சந்தோஷந்தான்' என்றார் வீராசாமி.

'சரி, சரி, உள்ளே வாங்க', என்று இவள் வரவேற்க, வீராசாமி திரும்பித் திரும்பி ஒரு பக்கமாக பார்த்தார்.

'என்ன மாமா?' என்று கேட்டாள் அவள்.

'இல்லை, தம்பி வந்திருக்குது' என்றார்.

'தம்பியா? சாரா? சார் எதுக்கு இங்க வந்திருக்காரு?' என்று அவள் பதட்டமாக குடும்பத்தினர் எல்லாருமே பதட்டமானார்கள்.



'இல்லை. உங்க ஹவுஸ் ஓனர்கிட்ட ஒரு விஷயம் பேச வேண்டியிருந்தது. அதனால வந்தேன். வரலாமா உள்ளே?' என்றபடி தன் முழு உயரத்துக்குமாக வந்து நின்ற அவனை அந்த குடும்பமே பிரமிப்பாகப் பார்த்தது.

அந்த பிரமிப்பையெல்லாம் உள்வாங்கியபடி அவளை ஆழமாக பார்த்தபடி உள்ளே நுழைந்தான் சுபாஷ் சந்திர போஸ்.

## அத்தியாயம் - 17

ஃபைலில் ஆழ்ந்திருந்தார்கள் சுபாஷும் பொன்மலரும்.

ஞாயிற்றுக்கிழமை.

பொன்மலர் இந்த இரண்டு வாரங்களுக்குள்ளாகவே ஓரளவு தெளிந்திருந்தாள். முதல் வாரத்தில் அவளுக்கு அச்சமாக இருந்தது. அடுத்த சனிக்கிழமை தான் அவள் ரத்ததானம் செய்துவிட்டு வந்ததாலோ என்னவோ 'வர வேண்டாம்' என்று சொல்லிவிட்டான். மறுநாள் ஞாயிற்றுக் கிழமை அவள் வந்தபொழுது அவளை அமர்த்தி, இரண்டு மணி நேரம் அவள் கூடவே இருந்து, ஃபைல்களையெல்லாம் எப்படிப் பார்க்க வேண்டும் என்பதை எல்லாம் சொல்லிக் கொடுத்தான்.

அதிசயமான விஷயம் என்னவென்றால் அவளை இந்த வேலைக்கு வர வேண்டும் என்று சொன்ன பொழுது மிரட்டிய மிரட்டலுக்கும், இப்போது தன்னை வழிநடத்துகிற சுபாஷுக்கும் சற்றும் சம்பந்தமே இல்லை என்பது போல நடந்து கொண்டான். அதனால் இரண்டாவது வாரத்திலேயே அவள் தெளிவாகி இருந்தாள்.

ஞாயிற்றுக்கிழமை சேர்ந்ததால் சொல்லப்போனால்

இது இரண்டாவது வாரம் என்றுகூட வைத்துக் கொள்ள லாம். இது மூன்றாவது ஞாயிற்றுக்கிழமை. இதற்கிடை யிலே முந்தைய நாள் அதாவது சனிக்கிழமை, ஒரு முக்கியமான விஷயம் நடந்தேறியது.

அந்த சனிக்கிழமை அவளுக்கு பிறந்த நாள். காலை யில் அம்மா, அப்பாவுடன் கோவிலுக்குப் போய்விட்டு வந்து, சகோதரிகளுடனாக வீட்டிலே, சிறிய அளவிலே கொண்டாடிக் கொண்டார்கள்.

புதிய துணிகள் வேண்டும் என்றெல்லாம் அவள் எப்போதும் அப்பாவை வற்புறுத்திக் கேட்டதேயில்லை. இருந்தாலும் மூன்று குழந்தைகளுக்குமே பிறந்த நாளன்று தன்னால் இயன்ற அளவிலே ஒரு புத்தாடை எடுத்துக் கொடுப்பது அப்பாவினுடைய வழக்கமாக இருந்தது.

அதுபோலவே அன்றைக்கும் அவர் எடுத்துக் கொடுத் திருந்தார். அதை மகிழ்ச்சியாக உடுத்திக் கொண்டிருந் தாள் பொன்மலர். நல்லவேளையாக அன்றைக்கு கல்லூரி இருக்கவில்லை. காலையில் பிறந்த நாள் கொண்டாட் டங்களை முடித்துக் கொண்டு பிற்பகலில்தான் அலுவல கத்திற்கு வந்தாள்.

அது மட்டுமில்லாமல் அவளுடைய ரேடியோ புரோக்ராம் அன்றைக்கு முற்பகலிலேயே முடித்துவிட் டிருந்தாள். அலுவலகத்தில் சொல்லி தன்னுடைய நேரத்தை சனிக்கிழமைகளிலும், ஞாயிற்றுக்கிழமைகளி லும் முற்பகலிலே இருக்கிற மாதிரி வாங்கிக் கொண் டிருந்தாள்.

எல்லாவற்றையும் இந்த இரண்டு நாட்கள் சுபாஷி னுடைய அலுவலகத்திற்கு வருவதற்கேற்ப மாற்றிக் கொண்டாள். ஏனென்றால் அவள் மனதுக்குள்ளேயே தாங்கள் செய்தது தவறு என்றொரு உறுத்தல் இருந்தது.



இப்படி வந்து வேலை செய்து கொடுப்பதனால் சுபாஷி னுடைய மனதில் அமைதி ஏற்படுமென்றால் நல்லதுதான் என்ற எண்ணம் அவளுக்கும் திடப்பட்டிருந்தது.

முதல் நாள் சனிக்கிழமை பிற்பகல் உற்சாகமாக அவள் அலுவலகத்திற்கு வந்தாள். இரண்டு மணிக்கு உள்ளே நுழையும்போதே அதிசயமாக சுபாஷ் இருக்கை யில் அமர்ந்து கொண்டிருந்தான். சனிக்கிழமைகளில் சாதாரணமாக, கடந்த இரண்டு சனிக்கிழமைகளில் பார்த்த விதத்தில் இரண்டு மணிக்கெல்லாம் அவன் அலு வலகத்தில் இருப்பதில்லை. அவளுடைய வேலைகள், அவளுடைய டேபிளில் குறித்து வைக்கப்பட்டிருக்கும். குறித்துக் கொள்வாள். செய்து கொண்டிருப்பாள். இரண் டரை மணி வாக்கில், அல்லது மூனு மணி வாக்கில் இறங்கி வந்தால் ஒரு அரை மணி நேரம் அவளுடன் இருந்து சொல்ல வேண்டியதை சொல்லிவிட்டு கிளம்பிவிடுவான்.

இரண்டு மணிக்குக் கிளம்பினால் சில நாட்களில் ஐந்து மணிக்கு திரும்பி வருவது உண்டு. சில நாட்களில் வராமல் போவதும் உண்டு. ஆனால், ஞாயிற்றுக்கிழமை பிற்பகலில் சுத்தமாக இரண்டு மணி நேரம் அவளோடு அமர்வது என்பது கடந்த மூன்று வாரங்களாக வழக்க மாகப் போய்விட்டிருந்தது.

அவள் மகிழ்ச்சியாக உள்ளே நுழைவதைப் பார்த் தான் சுபாஷ். அவன் கண்களில் ஆழமான ஒரு பார்வை இருந்தது.

''வெல்கம்! அண்ட் ஹேப்பி பர்த் டே'' என்றான்.

பொன்மலர் திடுக்கிட்டுப் போனாள். 'தே.. தேங்க்யூ' என்று தடுமாறினாள்.

'ஏன்? நாங்க பர்த்டே விஷ் பண்ணா அவ்ளோ பயமா இருக்கு?' என்றான் அவன் கிண்டலாக.

'இல்லை. உங்களுக்கு எப்படித் தெரியும்னு..' என்று அவள் இழுத்தாள்.

'பயோடேட்டான்னு ஒண்ணு கொடுத்திருக்கீங்கள்ல. அதுல பார்த்து இருப்போம்ல' என்றான் அவன்.

'எனி வே. தேங்க் யூ சார்' என்றாள் அவள் மகிழ்ச்சியுடன்.

'சரி, வாங்க. உட்காருங்க' என்றான்.

அவள் மெல்ல அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்து, 'சார், நான் உங்களை விட சின்னவதான், 'வா, போ'ன்னே கூப்பிடலாம்' என்றாள்.

'அப்படீங்கறே..!?' என்றான் அவன் ஏதோ அந்த வாய்ப்புக்காக காத்திருந்தவன் போல.

அவளே கூட ஒரு நிமிடம் விதிர்த்துவிட்டு சிரித்துவிட்டாள். அவள் சிரிப்பைப் பார்த்துவிட்டு அவனும் புன்னகைத்தான். அவளுக்குப் பொருத்தமான அந்த இளம் பச்சை நிறத்தில் அவள் சுடிதார் அணிந்திருந்தாள். அதற்குத் தோதாக கழுத்துக்கு சற்று இறுக்கமாக ஒரு முத்துமாலை அணிந்திருந்தாள். தலையை குளித்திருந்ததாலோ என்னவோ முகத்திலே ஒரு புத்துணர்ச்சி இருந்தது. பார்ப்பதற்கே சந்தோஷமாக இருந்தது போலும்.

'என்ன ரொம்ப ஹேப்பியா இருக்கீங்க? கிராண்ட் ஃபங்ஷனா?' என்றான்.

அவள் புன்னகைத்தாள். 'அப்படி எல்லாம் இல்லை சார். எங்க வீட்டுல எல்லாம் கிராண்ட் ஃபங்ஷன் நடத்தறதுக்கு எங்கே போறது? அதுவுமில்லாம ஒரு பர்த்டேக்காக ரொம்ப செலவு பண்றதுங்கறது பிடிக்காது... அப்புறம் கட்டுப்படியாகாது' என்றாள்.

அவன் புன்னகையுடன் பார்த்துக் கொண்டிருந்தான்.



'அப்புறம் என்ன செலிபிரேட் பண்ணீங்க இன்னைக்கு?' என்றான்.

'என்ன செலிபிரேட் பண்றது? காலையில கோவிலுக்குப் போயிட்டு வந்தோம். வழக்கமாக ஏழைகளின் வீட்டுல செய்யற மாதிரி குளோப் ஜாமூன் அம்மா செஞ்சாங்க. சாப்பிட்டோம். கொஞ்சநேரம் அப்பா, அம்மா கிட்ட, தங்கச்சிங்ககிட்ட பேசிட்டு இருந்துட்டு ரேடியோ ஸ்டேஷன் போய்ட்டு நேரா இங்கே வரேன்' என்றாள்.

'சாப்பிட்டாச்சா?' என்று கேட்டான்.

'ம்ம்.. அம்மா வடை, பாயாசம் எல்லாம் வச்சிருந்தாங்க' என்றாள்.

'அப்ப எங்களுக்குக் கிடையாதா?' என்று கேட்டான்.

அவள் திகைத்துப் போய்ப் பார்க்க,

'இல்லை, இல்லை. சும்மா தமாஷுக்குக் கேட்டேன்' என்று மழுப்பிவிட்டான்.

ஒரு மணி நேரம் அன்றைக்கு அவளோடு அமர்ந்திருந்தான். அந்த ஒரு மணி நேரம் முடிந்ததற்குப் பிறகு, 'இன்னைக்கு எனக்கு கொஞ்சம் வேலை இருக்கு. இல்லாட்டி கூட உட்கார்ந்திருவேன்' என்றான். பிறகு ஹாலுக்குப் போனான்.

அதற்குள்ளாக அம்மா கமலாட்சி அங்கே இருந்து வந்தாள். 'ஏம்மா பொன்மலர்! இங்கே வா!' என்று கூப்பிட்டார்.

பொன்மலர் எழுந்து போனாள்.

'நல்ல பொண்ணும்மா நீ! பொறந்த நாளுன்னு சொல்ல மாட்டியா?' என்று கேட்டார். ஹாலில் அப்பாவும் ஒருபுறமாக அமர்ந்து கொண்டிருந்தார். இதை எல்லாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்.

'தம்பி இப்பதான் சொன்னான். அவசரமா வீரா சாமியை அனுப்பிச்சு ஸ்வீட், காரம் வாங்கிட்டு வந்தேன். இந்தா வாங்கிக்கோ!' என்று கொடுத்தார்.

'பரவாயில்லைம்மா, பரவாயில்லை..' என்று அவள் சொல்ல,

'அதெல்லாம் இல்லை. வாங்கிக்க, வாங்கிக்க' என்றார்.

'சரிங்கம்மா', என்று அவள் சட்டென்று அம்மாவின் காலில் விழுந்தாள்.

'ஐஸ்! ஐஸ்!' என்று சிரித்தான் சுபாஷ்.

வெட்கத்தால் அவள் முகம் சிவந்தது. 'அப்படியெல் லாம் இல்லைங்க சார்' என்றாள்.

'நான் ஃபிரிட்ஜிலே ஐஸ் இருக்கு. அதைச் சொன் னேன்' என்றான் சுபாஷ்.

அதற்குள்ளாக அம்மா அவளை பூஜையறைக்கு அழைத்துப் போய், பூஜை அறையிலிருந்து குங்குமம் எடுத்து அவள் நெற்றியிலே வைத்துவிட்டு ஒரு தட்டை எடுத்து நீட்டினாள்.

அந்த தட்டிலே ரொம்பவும் பெரிய விலையில் இல்லாமலும், அதற்காக மிகவும் குறைவான விலையில் இல்லாமலும், நடுத்தர விலையிலே ஒரு பட்டுப் புடவை யும், ஜாக்கெட்டும் இருந்தது. அவள் திகைத்துப் போனாள்.

''அம்மா! என்னை தர்மசங்கடப்படுத்தாதீங்க. தயவு செய்து வேண்டாம்மா இதெல்லாம்', என்றாள்.

'இதப் பாரடி கண்ணம்மா! நீ இந்த வீட்டுக்கு வந்து போயிட்டு இருக்கே. எங்கள்ல ஒருத்தி ஆயிட்டே. வாங்கிக்கோ' என்றார்.

அவள் திரும்பி சுபாஷைப் பார்த்தாள்.



சுபாஷ் கண்ணமர்த்தி, 'வாங்கிக்க' என்பது போலச் சொன்னான்.

வாங்கிக் கொண்டாள். பிறகு மகிழ்ச்சியாக அங்கிருந்து கிளம்பினாள். இதுவரையிலும் அவள் சுபாஷினுடைய தந்தையிடம் பேசியதில்லை. அவர் எதி ரிலே வந்தால், எழுந்து நிற்பாள். வணக்கம் சொல்லு வாள். அதேபோல இப்போது போகும்பொழுதும் அவர் சிட் அவுட்டிலே ஸோஃபாவிலே அமர்ந்திருந்தார்.

'வணக்கம் சார்' என்று பவ்யமாக வணக்கம் சொல்லிவிட்டு, குடுகுடுவென்று ஓடிவிட்டாள்.

அவள் போவதை பார்த்துக் கொண்டேயிருந்தார் தந்தை. இதெல்லாம் அவளுக்கப்போது தெரியாது. பிறகு எழுந்து வந்து தந்தை மனைவியிடம் ஏதோ குசுகுசு வென்று பேசினார்.

இந்த இடைவேளையிலே, 'அப்பா! எனக்குக் கொஞ்சம் வேலையிருக்கு. நான் அப்ஸ்டேர்ஸ் போறேன்' என்று சொல்லிவிட்டு விசிலடித்துக் கொண்டே படி யேறிச் செல்கிற மகனை ஆழ்ந்த பார்வையுடன் பார்த் தார். பிறகு திரும்பி மனைவியைப் பார்த்தார். ஏதேதோ சிந்தனைகள் அவர் முகத்திலே ஓடியது.

சுபாஷ் அன்றைக்கு வெளியே போய்விட்டு வரும் போதே ஒன்பது மணி ஆகிவிட்டது. 'அப்பா! ஏதோ ஒரு புத்தகக் கண்காட்சி ஓஃப் கெஸ்ட்டா கூப்பிட்டாங்கள்ல. அதுக்குப் போய்விட்டு வந்தேன்' என்று வந்தான் மகன்.

'நல்லதுப்பா, நல்லபடியா நடந்துச்சா? சாப்பிடு' என்றார்.

அவன் சாப்பிட்டான். அம்மாவும், அப்பாவும் அவன் சாப்பிடுவதை மேற்பார்வை பார்த்தார்கள். அம்மா பரி மாறுவார், சில நேரங்களில். அப்பா எதிரில் இருக்கிற

ஸோஃபாவில் அமர்ந்து கொண்டு பார்த்துக் கொண்டிருப்பார். சில முக்கியமான அலுவலக விஷயங்களை அந்த நேரத்தில் பேசுவான் சுபாஷ். அதேபோல இன்றைக்கும் பேசினான்.

'ம்ம்.. ம்ம்.. அப்படியா?' என்று அவர் கேட்டுக் கொண்டார். சில ஆலோசனைகளை அவரும் சொன்னார். அவன் மனதிலே குறித்து வைத்துக் கொண்டான். சாப்பிட்டு முடித்ததற்குப் பிறகு, தன்னுடைய பாக்கெட்டில் எப்போதும் ஒரு சின்ன குறிப்பேடு வைத்திருப்பான். அந்த குறிப்பேட்டை எடுத்து அதிலே அவர் சொன்ன கருத்துக்களை குறித்து வைத்துக் கொண்டான்.

'சரிப்பா! ஐ வில் டேக் கேர். பார்த்துக்கறேன். திங்கட்கிழமை அன்னைக்கு இதை பண்ணிரலாம்' என்று சொல்லிவிட்டு, அடுத்த வாரங்களுக்கான சில முக்கிய திட்டங்களை அவரிடம் பேசிவிட்டு, தன்னுயை அறைக்குப் போவதாகச் சொல்லிப்போனான்.

மறுபடியும், துள்ளலான நடையுடன் படியேறிச் செல்லுகிற மகனைப் பார்த்துக் கொண்டிருந்தார் தந்தை. மேலே போய் தன்னுடைய அறையிலே ஏதோ ஒரு புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டு, காலை நீட்டிக் கொண்ட சுபாஷுக்கு திடீரென்று அந்த நிகழ்வு ஞாபகத்திற்கு வந்தது.

போன வாரம் ஞாயிற்றுக்கிழமை என்று அவனுக்கு நினைவு. பொன்மலர் அவசரமாகக் கிளம்பும்போது அவளுடைய பையிலிருந்து புத்தகங்கள் பொலபொலவென்று உதிர்ந்தன. நான்கு புத்தகங்களுக்கு மேல் இருந்தது. 'எண்ணங்கள்' என்று பல துறையைச் சார்ந்த புத்தகங்கள். நான்காவதாக மேலே விழுந்த புத்தகத்தின் மேல் அவன் கண் பார்வை ஓடியது. 'வெற்றுப்படகு', 'ஓஷோ' என்று இருந்த புத்தகத்தைப் பார்த்தவுடன், அவன் ஒற்றைப் புருவம் உயர்ந்தது.



'ஓஷோ எல்லாம் படிக்கிறீங்களா?' என்று கேட்டான்.

அவள் புன்னகைத்தாள். 'சும்மா படிப்பேன் சார்' என்றாள்.

'சும்மா படிக்கிறதா? குழப்பி விட்டுருவாரே இவரு..' என்றான் சுபாஷ்.

அவள் அந்த புத்தகங்களை கையிலே எடுத்துக் கொண்டு, தன்னுடைய பேக்கில் வைத்துக் கொண்டே சொன்னாள். 'குழம்பினாத்தான் சார், தெளிவு கிடைக்கும். வெற்றுப்படகா எப்படி வெச்சுக்கறதுன்னு நாம தெரிஞ்சுக்கணும் இல்ல. அதை ஓஷோ சொல்லித் தர்றாருல்ல' என்றாள்.

'அப்படீங்களா பாட்டி?' என்றான் அவன்.

'போங்க சார்' என்று வெட்கத்துடன் கிளம்பிப் போனாள்.

இப்போது அவனுக்கு அதெல்லாம் நினைவுக்கு வந்தது. உற்சாகமாக இருக்கிறாள். எல்லாப் பணிகளிலும் ஆர்வமாக ஈடுபடுகிறாள். ஒரு நாள் கூட தன்னுடைய ஏழ்மையைப் பற்றி அவள் தாழ்வாக நினைக்கவும் இல்லை, பேசவும் இல்லை. தன்னிரக்கம் என்ற வார்த்தைக்கே இடமில்லாமல் இந்தப் பெண் இந்த வாழ்க்கையை எதிர்கொள்கிறாள்.

அதே சமயத்தில் பல சங்கங்களில், பலவிதமான பெண்களை பார்க்கிற அனுபவம் அவனுக்கு ஞாபகம் வந்தது. சில பெண்கள் 'எப்படியடா இவனைக் கொக்கிப் போடலாம்?' என்று பார்த்துக் கொண்டிருப்பார்கள். அந்தத் திருமண இடங்களில் பெண்கள் அவர்களுக்குள்ளாக

பேசிக் கொள்வதை அவன் அவ்வப்போது காதில் வாங்கியதுண்டு. எந்தப் பெண்ணும் தன்னிடத்தில் இருக் கிறவற்றை பற்றி திருப்தியாக பேசி அவன் கேட்ட மாதிரி நினைவுக்கு வரவேயில்லை, தன் அம்மாவைத் தவிர, என்று எண்ணிக் கொண்டான்.

தங்களுடைய குறைபாடுகளை மறைத்துக் கொள் வதற்காக, அடுத்தவர் பற்றி குறைபாடுகள் பேசி, வம்பு பேசுவதைத்தான் அவன் கேட்டிருக்கிறான். ஆனால் இந்த இளம்பெண் எவ்வளவோ பிரச்சினைகள் இருந்தபோதும், வாழ்க்கையை எவ்வளவு இனிமையாக எதிர்கொள் கிறாள், என்று எண்ணியபோது, அவன் இதழ்க்கடை யோரத்தில் புன்னகை தோன்றியது.

அதே நேரத்தில், 'நான் உள்ளே வரலாமாப்பா?' என்று கேட்டார் அப்பா.

'அப்பா!' என்று பதறியடித்துக் கொண்டு எழுந்தான்.

'கொஞ்சம் பேசணும்பா' என்று உள்ளே நுழைந்தார் அப்பா.

## அத்தியாயம் - 18

**மூ**ன்றாவது ஞாயிற்றுக்கிழமை.

சுபாஷ் சிந்தனையுடன் பொன்மலரைப் பார்த்துக் கொண்டிருந்தான். பொன்மலர் வேலையிலே ஆழ்ந்திருந் தாள்.

அவளுக்கு முந்தின தினம் பிறந்த நாள் நினைவுகள் ஒரு பக்கம் ஓடின என்றால், அன்றிரவு அவளுடைய வீட்டிலேயும் ஒரு முக்கிய விஷயம் நடந்திருந்தது.

சொர்ணாவிடமிருந்து பிறந்த நாள் வாழ்த்துக்கள் சொல்லி ஃபோன் வந்தது. வெளிநாட்டுப் பயணத்தில் இருந்தபோது கூட தன்னை மறக்காமல் அவள் அழைத்துப்





பேசியது, நினைவுக்கு வந்தது. கூடவே இன்னொன்று அவளை உறுத்தியது.

முதன் முதலாக அலுவலகத்திற்கு வந்தபோது சுபாஷ் மிரட்டலாக சொல்லியிருந்தான், 'சொர்ணா ஏதாவது ஃபாரின்லயிருந்து காண்டாக்ட் பண்ணினா, நீங்க இங்க வேலை செய்யறதை சொல்லக்கூடாது. சொர்ணா வரட் டும். அவளுக்கு வேற ட்ரீட்மெண்ட் இருக்கு' என்பது போல மிரட்டியிருந்தான்.

சொர்ணா பேசும்பொழுது அவளிடம் சொல்லிவிட லாமா என்று நினைத்தாள் பொன்மலர். உடனே சுபாஷி னுடைய மிரட்டல் நினைவுக்கு வந்ததால், 'வேண்டாம். ஏற்கனவே இருக்கிற பிரச்சினைகள் போதும். இதில் சுபாஷின் பேச்சை மீறி சொல்லிவிட்டு, அதனால் எதுவும் சிக்கல் வந்துவிடக் கூடாது' என்று எண்ணிக்கொண்டாள். ஆனால், சொர்ணா பேசி முடித்ததற்குப் பின்பு பொன் மலரின் மனதில் ஒரு எண்ணம் ஓடியது.

இந்த மூன்று வார காலமாக சுபாஷின் பங்களா விற்குப் போய் வந்ததிலே அவளுக்கு ஒரு விஷயம் புரிந் திருந்தது. சொர்ணாவின் பெற்றோர்களைப் போல் அல்லாமல், சுபாஷ் எங்கே அன்பும், பாசமும் கொடுக்கப் பட வேண்டுமோ அங்கே கொடுப்பதையும், எங்கே வியாபாரத்தனமாக இருக்க வேண்டுமோ அங்கே இருப் பதையும் இந்த இரண்டும் ஒன்றை ஒன்று பாதிக்காத அளவிலே தெளிவாகக் கையாளுவதையும் பார்த்து பிரமித்துப் போயிருந்தாள் அவள்.

தாயின் அருகில் இருக்கும்போது அவனொரு சின்னக் குழந்தையைப் போல தாயைக் கொண்டாடிக் கொள்வதையும், தந்தையின் அருகில் இருக்கும்போது ஒரு மரியாதையோடு அவரோடு பழகிக் கொள்வதையும் பார்த்து ஆச்சரியப்பட்டுப் போனாள்.

தங்கள் அலுவல்களில் இருக்கும்போதுதான், அதுவும் அப்பா ஓய்வில் இருக்கும்போதுதான் அவனை வம்பிழுப்பான். அல்லது அவனிடத்திலே ஏதாவது மிரட்டலாக பேசுவான்.

இன்றைக்கு சுபாஷினுடைய அப்பா வெளியே போயிருந்தார். அதனால் பொன்மலருக்கு தனக்கு முந்தைய நாள் தோன்றிய எண்ணம் இன்னும் வலுப்பட்டது. 'பாவம் சொர்ணா. ஒருவேளை சுபாஷைக் கல்யாணம் செய்து கொண்டால் அவளுக்கு அவள் வீட்டில் கிடைக்காத அன்பெல்லாம் கிடைக்கக்கூடும் அல்லவா? இரண்டு பேருக்கும் வாழ்க்கை தரத்தின் அடிப்படையில் பார்த்தால் எல்லாவிதமான பொருத்தங்களும் இருந்தது' என்று தோன்றியது. இப்போது அது நினைவுக்கு வர அவள் நிமிர்ந்து சுபாஷைப் பார்த்தாள்.

'ஹலோ! எங்கோ டைவெர்ஷன் ஆகிப் போற மாதிரி இருக்கு' என்றான் சுபாஷ்.

அவள் பிடிபட்டவள் போல விழித்தாள். ஆனால், உடனே தேறிக் கொண்டு அவனிடத்திலே, 'சார். நான் ஒரு விஷயம் சொல்லட்டா?' என்றாள்.

'சொல்லேன்' என்பது போல அவன் பார்க்க,

'சொர்ணா ரொம்ப நல்லவ சார்' என்றாள்.

அவன் குபீரென்று சிரித்தான். 'இந்த ஃபைல்ஸ் வொர்க்குக்கு நடுவுல சொல்ல வேண்டிய விஷயமா அது?' என்று கேட்டான்.

'இல்லை சார். உண்மையிலேயே சொர்ணா ரொம்ப நல்லவ' என்றாள்.

அவன் ஃபைலை நகர்த்தி வைத்துவிட்டு, பின்னால் சாய்ந்து அமர்ந்தான். 'சரி, சொல்ல வந்ததைச் சொல்லு' என்பதுபோல.



'சார். அவ்வளவு நல்ல பொண்ணுக்கு வசதி இருக்கு. பணம் இருக்கு. கார் இருக்கு. ஆனால் வீட்டுல முழுமையான அன்பு கிடைக்கிறதில்லை சார்' என்றாள்.

அவன் குறும்பாக புன்னகைத்துவிட்டு, 'உனக்கு லேட்டஸ்ட் விஷயம் தெரியாதா? அதெல்லாம் முடிஞ்சு போன கதை. இப்ப சொர்ணா கொடி பிடிச்சு போராட்டம் நடத்தி அவங்கப்பா, அம்மாவுக்கு அவளுக்கு என்ன தேவைன்னு புரிய வெச்சுட்டாப்ல. தெரியுமா? அதனால தான் இப்ப ஃபேமிலி டூர் போயிருக்காங்க. கிஷோர் சொன்னாப்ல' என்றான்.

பொன்மலர் புன்னகைத்தாள். 'இருக்கட்டும் சார். அது எனக்கும் தெரியும். ஆனால், அவளுக்கு ஒரு நல்ல மாப்பிள்ளை, அதுவும் பெற்றவங்ககிட்ட அன்பு காட்டற மாதிரி ஒரு மாப்பிள்ளை. குடும்பம்னா என்னன்னு தெரிஞ்ச ஒரு மாப்பிள்ளை கிடைச்சா நல்லா இருக்கும்ல' என்றாள்.

சுபாஷுக்கு லேசாக புரிகிறார்போல தோன்றியது. 'என்னம்மா.. ரெக்கமண்டேஷனா?' என்று கேட்டான்.

அவள் நாக்கைக் கடித்துக் கொண்டாள். 'இவ்வளவு வெளிப்படையாகவா நாம் சொல்லிவிட்டோம்?' என்பது போல. 'இல்லை சார். நான் ஜஸ்ட் சொன்னேன். உங்களுக்குத் தெரிஞ்சவங்க யாராவது, ஏன் நீங்களே கூட....' என்றாள்.

அவன் கடுப்பானான். 'இப்ப இதெல்லாம் பேசற நேரமா? இதே வேற யாராவது பேசியிருந்தா...' என்று ஆரம்பித்தவன், நாக்கைக் கடித்துக் கொண்டான். 'யு ஆர் ஸ்பாயிலிங் மை மூட்' என்றான்.

'சாரி சார். சாரி சார்' என்றாள்.

அவள் படுகின்ற அவஸ்தையை அவன் குறுகுறு

வென்று பார்த்தான். 'சொர்ணா உனக்கு ரெக்கமண்டேஷன் பண்ணுவாளா, யாருக்காவது?' என்றான்.

'தெரியலை சார். ஆனால், அவள் ரொம்ப நல்ல பொண்ணு' என்றாள்.

'தெரியும்மா. எனக்கு நல்ல பொண்ணுன்னு தெரியும். இப்போதைக்கு வேலையைப் பார்க்கலாமா?' என்றான்.

அவள் முகம் வாடிவிட்டது.

'ஓ.கே. ஓ.கே. இந்த ஃபைலை மட்டும் கம்ப்ளீட் பண்ணிக் கொண்டு வா. உன்னோட டேபிளுக்கு போயிரலாம்' என்றான்.

அவள் எழுந்து அவளுடைய டேபிளுக்குச் சென்றாள்.

அவன் அலுவலக அறையாக வைத்துக் கொண்டிருந்த அறை, பெரிய அறையாக இருந்தது. அவன் முகம் பார்க்கிற மாதிரி அமர்ந்து வேலை செய்வது அவளுக்கு தர்மசங்கடமாக இருக்கிறது என்பதை புரிந்து கொண்டதனாலோ என்னவோ ஒரு தடுப்பு வைத்துக் கொடுத்திருந்தான்.

பொன்மலர் அவசரமாக கையிலே இருந்த ஃபைலை எடுத்துக் கொண்டு போனாள். போகும்பொழுதே தன் தலையில் தானே ஒரு குட்டு வைத்துக் கொண்டு, சென்று அவளுடைய டேபிளில் அமர்ந்து கொண்டாள்.

அவள் அப்படி தனக்குத் தானே குட்டு வைத்துக் கொண்டு போவதை சுவாரஸ்யமாக பார்த்தபடி அமர்ந்திருந்தான் சுபாஷ்.

அதேநேரத்தில், 'ஹாய் சுபாஷ்!' என்ற குரலோடு சாந்தி உள்ளே வந்தாள். அவளுடைய மகளும் வந்தாள்.

'எங்கே பெரியப்பாவைக் காணோம்?' என்றபடி உள்ளே வந்தாள் சாந்தி.



'அப்பா ஏதோ முக்கியமான வேலைக்காக போயிருக்காங்க' என்றான் சுபாஷ்.

சட்டென்று உள்ளே நுழைந்த சாந்தி, சற்றும் யோசிக்காமல், 'என்ன ஆஃபிஸ்லேயே அழகான ஒரு பியூட்டிஃபுல்லான கேர்ள் செட்டப் பண்ணியிருக்கியாம்' என்றாள்.

அவன் கடகடவென்று சிரித்துவிட்டான். 'ஆமா, செட்டப் பண்ணியிருக்கோம். இப்ப என்ன அதுக்கு?' என்றான்.

'அதானே பார்த்தேன். சீக்கிரமா செட்டில் ஆகுப்பா' என்று சொல்லிவிட்டு, 'பெரியம்மா இருக்காங்களா?' என்றாள்.

'ம். பெரியம்மா இருக்காங்க. போ போ' என்றான்.

சாந்தி ஒரு அரை மணி நேரம் போல் பெரியம்மாவிடம் பேசிவிட்டு வந்தாள். 'சுபாஷ்! அவசரமா வந்தேன். இந்த வழியா ஒரு வேலையா வந்தேன். எட்டிப் பார்க்காம போக முடியல. இன்னொரு நாளைக்கு வந்து டீடெயிலா பேசலாம். ஓ.கே.' என்று சொல்லிவிட்டு போய்விட்டாள்.

சகோதரி இருக்கிற அந்த அரைமணி வேளையில், அந்த அறையில் இருக்காமல் அவனும் போய் இடையில் பேசிவிட்டு அலுவலகத்திற்கு வந்தான். நுழைவதற்குள்ளாக சாந்தி கிளம்பியதால் அவளைப் போய் வழியனுப்பிவிட்டு உள்ளே வந்தான்.

அலுவலக அறையில் தன் டேபிளுக்கு வந்து அமர்ந்த போதுதான் கவனித்தான். பொன்மலர் அமர்ந்திருந்த பக்கத்திலே இருந்து விசும்பல் சத்தம் மெதுவாகக் கேட்டது. திகைத்துப் போனான். எழுந்து போய்ப் பார்த்தால் பொன்மலர் தாரை தாரையாகக் கண்ணீர் விட்டுக் கொண்டு தேம்பி அழுது கொண்டிருந்தாள். சுபாஷ்

திகைத்துப் போனான். சட்டென்று ஒரு சேரை இழுத்துப் போட்டுக் கொண்டு எதிரிலே அமர்ந்தான்.

'ஹலோ! என்ன... என்ன ஆச்சு? எதுக்கு இப்படி ஃபீல் பண்ற?' என்று கேட்டான்.

அவள் தன் இடது கையில் ஆட்காட்டி விரலை மட்டும் நீட்டிக் கொண்டு சாந்தி போன திசையைக் காட்டி, 'நீங்க.. நீங்க... அவங்க... அவங்க...' என்று குழறினாள்.

'நாங்க, நாங்க. அவங்க, அவங்க. என்ன... சொல்லு?' என்றான்.

'அவங்க, நீங்க செட்டப்புன்னு சொல்றாங்க' என்று அவமானம் நிறைந்த முகத்தோடு சொன்னாள்.

சுபாஷ் ஒரு நிமிடம் திகைத்துப் போனான். 'ஓ..' என்று தலையிலே கையை வைத்துக் கொண்டான்.

'அதுக்கு நீங்களும் ஆமான்னு சொல்றீங்க' என்று தேம்பினாள்.

'அது விளையாட்டுக்குப்பா' என்றான்.

'விளையாட்டுன்னாலும் இப்படியெல்லாமா பேசறது. ஐ டோண்ட் லைக் இட்' என்றாள் அவள்.

அவன் சட்டென்று பின்னால் சாய்ந்து அமர்ந்து கொண்டான். அவளுடைய முகபாவத்தை ஆழ்ந்து பார்த்தான். 'ஐ யம் சாரி. நான் சொல்லியிருக்கக் கூடாது' என்றான் உண்மையான பாவத்துடன். அவள் அவனைப் பார்த்தாள். அவன் முகத்திலும் வேதனை தெரிந்தது. அவள் விசும்பல் சட்டென்று நின்றது.

'பரவால்ல' என்றாள் அரை மனதுடன்.

'இல்லை. இல்லை. நான்.. நான் அப்படிச் சொல்லியிருக்கக் கூடாது. ஐயம் சாரி. நீ அப்படிப்பட்ட பொண்ணு



இல்லை. நான்... நான்... சாரி' என்றான் மறுபடியும் வேதனையுடன்.

அவனுடைய வேதனையைப் பார்த்தவுடன் அவள் மனம் இளகிவிட்டது. 'பரவாயில்ல, பரவாயில்ல' என்றாள் விசும்பலுடன்.

'இல்லை. இல்லை. இதை நான் வந்து எப்படி காம்பன்ஸேட் பண்ணனும் சொல்லு. நீ என்ன தண்டனை கொடுத்தாலும் ஏத்துக்கறேன்' என்றான்.

'ஐயோ சார். பெரிய, பெரிய வார்த்தைங்கள்லாம் சொல்லாதீங்க. பட் எனக்கு செட்டப்புங்கற வார்த்தை ரொம்ப தாக்கிருச்சு' என்றாள்.

'ஆமா, நீ உண்மையிலேயே நல்ல பொண்ணு. உன்னை நான் இப்படி அவமானப்படுத்தியிருக்கக் கூடாது. அந்த மாதிரி சொல்லியிருக்கக்கூடாது' என்றான் அவன் மறுபடியும் வேதனையுடன்.

இப்போது அவனை சமாதானப்படுத்துவது அவளுடைய முறையாகப் போய்விட்டது. அத்தனை வேதனை அந்த முகத்திலே தெரிந்தது.

'பொன்மலர்! நான் உன்னை ரொம்ப மதிக்கிறேன். விளையாட்டாக் கூட அதை நான் அக்காகிட்ட சொல்லியிருக்க கூடாது. அப்படியெல்லாம் சொல்லாதேக்கா, அப்படின்னு சொல்லியிருக்கணும், இல்ல.. ஐ யம் வெரி சாரிம்மா' என்றான் மறுபடியும்.

'ஆமா, நீங்க செட்டப்புன்னு சொல்லியிருக்கக்கூடாது' என்றாள் அவள் மறுபடியும்.

'ஓ.கே. ஓ.கே.' என்று அவன் தேறிக்கொண்டு, ஒரு நிமிடம் ஆழ்ந்த அமைதிக்குப் பின்பு சொன்னான். 'ஏன் பொன்மலர்? செட்டப்புன்னு சொல்லக்கூடாது. ஓ.கே. பேசாம கல்யாணம் பண்ணிக்கலாமா?'' என்றான்.

அவள் திகைத்துப் போய் அவனைப் பார்த்தாள். 'சார், நீங்க ரொம்ப விளையாடுறீங்க' என்றாள் ஒரு நிமிடம் கழித்து.

'இல்லை. இப்ப நான் விளையாடலை. ஐ யம் சீரியஸ். ஐ... எப்படி சொல்றது. எனக்கு உன்னை ரொம்ப பிடிச்சிருக்கு. சீரியஸாத்தான் கேட்கறேன். என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறாயா?' என்று கேட்டான்.

அவள் சட்டென்று எழுந்தாள். தனது ஹேண்ட் பேக்கை எடுத்தாள். 'நான் வரேன் சார்' என்று கிளம்பினாள்.

'ஒரு நிமிஷம். உட்கார்' என்றான். அந்த குரலில் தெரிந்த அழுத்தத்தைப் பார்த்து அவள் பயந்து போய் அமர்ந்தாள்.

'நான் இப்ப ஒண்ணும் உன்னை பண்ணப் போறதில்ல. ஐ ஜஸ்ட் மேட் எ ப்ரோபோஸஸ். நான் ஒரு ப்ரோபோஸஸ் சொல்லியிருக்கேன். பயந்து ஓட வேண்டிய அவசியம் இல்ல அதுக்கு. நல்லா யோசிச்சுப் பாரு. நீ ஏழைப் பொண்ணு. உன்னை எக்ஸ்ப்ளாயிட் பண்ணனும்கிறதுக்காகவோ, அல்லது வேற எந்த காரணத்துக்காகவோ நான் இதை சொல்லல. ஐ சிம்ப்ளி லைக் யூ. ஐ சிம்ப்ளி லவ் யூ'' என்றான்.

அவள் தடுமாற்றத்துடன் தலையைக் குனிந்து அமர்ந்து கொண்டாள். 'நீங்க.. உங்க அந்தஸ்துக்கு..' என்று அவள் மெதுவாக நிமிர்ந்து ஆரம்பித்தபொழுதே.

'அதெல்லாம் அப்புறம். அந்த பக்கம் வெச்சாச்சு. ஒரே ஒரு விஷயம்தான் இப்ப நடுவில. எனக்கு உன்னை பிடிச்சிருக்கு. உன்னை என்னுடைய வாழ்க்கை துணையா வாழ்நாள் முழுக்க கூடவெச்சிக்கணும்னு நான் நினைக்கிறேன். நீ இருந்தா என் வாழ்க்கை சந்தோஷமா



இருக்கும் அப்படின்னு நான் நினைக்கிறேன். இப்படியொரு ப்ரோபோஸல் ஏதாவது செஞ்சிருவேன். அப்படின்னு தானே பயந்து, பயந்து என்னென்னவோ திட்டம் போட்டீங்க. நீங்க திட்டம் போட்டதுனாலதான் இப்படியெல்லாம் ஆச்சோ என்னவோ தெரியல. ஆனா, நான் உன்னை வற்புறுத்த மாட்டேன். நீ யோசிச்சு முடிவு சொல்லு. ஓ.கே. சொல்லு' என்றான்.

அவள் மறுபடியும் அவனை திகைப்புடன் பார்த்துவிட்டு, 'எங்க பேரண்ட்ஸ் எல்லாம் ஒத்துக்க மாட்டாங்க. உங்க பேரண்ட்ஸ்...' என்று அவள் ஆரம்பிக்க,

'அதெல்லாம் என்னோட தலைவலி. நான் ஹேண்டில் பண்ணிக்கிறேன். உனக்கு பிரியமா? ஓ.கே.வா? சொல்லு' என்றான்.

அவள் சற்று நேரம் தலையைக் குனிந்து கொண்டாள். நிமிர்ந்து பார்த்து, 'எனக்கு பிரமிப்பாத்தான் இருக்கு. எனக்குத் தெரியல' என்றாள்.

'குட். இதுதான் உங்கிட்ட எனக்கு பிடிச்சது. ஆஹா, அப்படியான்னு நீ உடனே ஓ.கே. சொல்லலை. நீ பணத்துக்கு மயங்க மாட்டேன்னு எனக்குத் தெரியும். அதையெல்லாம்தான் இப்ப நான் கொஞ்ச காலமா உன்னை அப்சேர்வ் பண்ணி புரிஞ்சிக்கிட்டேன். எந்த வசதியும், எந்த வாய்ப்பும், எந்த பணமும் உன்னை மடக்க முடியாதுன்னு தெரியும். அதனால ஸ்ட்ரெயிட்டாவே நான் சிம்பிளா சொல்றேன். என்னுடைய அன்பையும், உயிரையும் உனக்காக கொட்டி வாரி இறைக்க நான் தயாரா இருக்கேன். நீ, அதை ஏத்துக்க தயாரா இருக்கியா?' என்றான்.

அவள் மறுபடியும் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

'நீ இப்ப கிளம்பலாம். மூணு நாள் டைம் தர்றேன். புதன்கிழமை உனக்கு ரேடியோ புரோகிராம் இருக்கா?' என்றான்.

'இல்லை' என்றான் அவன்.

'அப்படியே இருந்தாலும் நான் வந்து பிக்கப் பண்ணிக்கறேன். லெட் அஸ் டாக். ஓ.கே.' என்றான்.

அவள், 'விட்டால் போதும்' என்பது போல, வேகமாக பையை எடுத்துக் கொண்டு போவதை, தன்னுடைய இருக்கைக்கு வந்து அமர்ந்தபடி ஆழமாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவனுடைய இருக்கையில் அமர்ந்தபடி பார்த்தாலே பங்களாவின் கேட் வரை தெரியும் என்பதால், அவள் வேக வேகமாக நடந்து கேட்டைத் திறந்து வெளியே நின்று திரும்பவும் பங்களாவை ஒருமுறை பார்த்துவிட்டு பீதியடைந்தவள் போல போவதை, அவன் ஆழ்ந்த சிந்தனையுடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

## அத்தியாயம் - 19

மிகுந்த கலக்கமடைந்து விட்டாள் பொன்மலர். உறக்கமே வரவில்லை. புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தாள்.

எப்போதும் தலைமாட்டுக்கு அருகிலே வைத்திருக்கக்கூடிய அந்த செல்ஃபோன் ஒளி காட்டி சிரித்தது. சட்டென்று அதை ஆஃப் செய்துவிட்டாள்.

விட்டால் போதும் என்று சுபாஷின் பங்களாவிலிருந்து வீட்டுக்கு வந்து சேர்ந்தாள். அவள் முகத்தைப் பார்த்த அம்மா கூட, 'ஏன்டி? ஏன் இப்படி இருக்க? என்ன ஆச்சு?' என்று கேட்டார்.

'ஒண்ணும் இல்லைம்மா.. லேசா தலைவலி'' என்றாள்.

'ஓவரா அலைஞ்சுக்கறே. வேண்ணா அந்த தம்பி



கிட்ட சொல்லிறேன்டி. சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை வர முடியாதுன்னு' என்றார்.

அவள் அவசரமாக அம்மாவின் முகத்தைப் பார்த்து, 'இல்லம்மா. இல்லம்மா. அதெல்லாம் ஒண்ணும் சொல்ல வேண்டாம். அங்க வேலை எனக்கு பிரச்சினையே இல்லை. இன்னிக்கு கொஞ்சம் பஸ்ஸில கூட்டம். வரும் போதே கொஞ்சம் கஷ்டமா இருந்துச்சு' என்று எதையோ சொல்லி சமாளித்தாள்.

அம்மாவும் அவளை உற்றுப் பார்த்துவிட்டு, அதற்கு மேல் குடையவில்லை. உணவு உண்ணும்போதும், கொஞ்ச நேரம் 'படிக்கிறேன் பேர்வழி' என்று புத்தகத்தை வைத்துக் கொண்டிருந்த போதும், படுக்கையை விரித்த போதும், அவள் ஒரு எந்திர கதியில் செய்து கொண்டிருந்தாளே ஒழிய, உள்ளே அளவொண்ணாத அச்சம் ஓடிக் கொண்டிருந்தது.

'தேவையில்லாமல் தலைவலியை வாங்கிக் கொண்டோமோ..' என்று தோன்றியது.

உறக்கம் வருவதற்கு பதினோரு மணிக்கு மேல் ஆகிவிட்டது. கண்ணயர்ந்தாள். ஆனால், திடீரென்று ஒரு மணி வாக்கில் விழிப்பு வந்தது. திடுக்கிட்டு விழித்தெழுந்து அமர்ந்தாள். வேர்த்துக் கொட்டிவிட்டது. செல்ஃபோனைப் பார்த்தாள். செல்ஃபோன் இருண்டு கிடந்தது. அதற்கு மறுபடியும் உயிர் கொடுத்தாள். வரிசையாக மூன்று மெசேஜ்களை, சுபாஷ் அனுப்பியிருந்தான். முதல் குறுஞ்செய்தியில்,

'பயப்படாதே! பயப்படறதுக்கு எதுவுமே இல்லை. நல்லா யோசி. அவசரம் ஒண்ணும் இல்லை' என்று இருந்தது.

அடுத்த குறுஞ்செய்தியில், 'எதுவும் கட்டாயமில்லை.

உன்னை எந்தவிதத்திலும் நான் கட்டாயப்படுத்த மாட்டேன். யோசிச்சு முடிவு சொன்னால் போதும். டோன்ட் வொர்ரி' என்று இருந்தது.

மூன்றாவது குறுஞ்செய்தியில், 'எதைப் பற்றியும் இப்போதைக்கு கவலைப்பட வேண்டாம். குட் நைட், டேக் ரெஸ்ட்' என்று இருந்தது.

லேசான புன்னகை அவள் முகத்தில் அரும்பியது. தனது வலது கையால் அந்த சின்ன செல்ஃபோனை பிடித்துக் கொண்டு, சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்தாள். அந்த கணத்தில் அவளுக்கு, அந்த உண்மை, முகத்தில் மோதி அறைந்தது. அது தனக்கும் சுபாஷைப் பிடிக்கிறது என்பதுதான்.

முகம் குப்பென்று சிவந்தது. உடலுக்குள்ளே ஏதோ ஒரு உணர்வு தோன்றிய மாதிரி இருந்தது. திகைத்துப் போய் சற்று நேரம் அமர்ந்துவிட்டாள். இனிமையும், கவலையும், பரவசமும், வேதனையும் நிறைந்தாற் போன்ற அந்த உணர்வு, அவளுக்குள்ளே ஒரு பெரிய ரசாயன மாற்றத்தை ஏற்படுத்தியது.

'சரி பார்க்கலாம். நாளைக்கு என்ன நடக்கிறது?' என்பது போல, மனதைத் தேற்றிக் கொண்டு, கட்டிலில் இழுத்துப் போர்த்தி படுத்தாள். முகத்தில் புன்னகை உறைந்தது.

ஒரு மணி நேர நிகழ்ச்சியை முடித்துவிட்டு, ஓய்வறைக்கு வந்தாள் பொன்மலர்.

இன்றைக்கு செவ்வாய்க்கிழமை. 'புதன்கிழமை வரைக்கும் காலம் கொடுத்திருப்பதாக சுபாஷ் சொன்னாரே, என்ன பதிலைச் சொல்வது? பேசாமல் போகாமல் விட்டுவிடலாமா?' என்று கூட முடிவெடுத்தாள்.

அந்த நேரத்தில் 'அவர்கள் நிறுவனத்தினுடைய



நிர்வாகி அவளை அழைத்தார்' என்று அலுவலக உதவியாள் வந்து சொன்னான்.

போனாள். மேடம் முகத்தில் ஒரு பெரிய புன்னகை இந்த கோடிக்கும், அந்த கோடிக்கும் படர்ந்திருந்தது.

'மேடம்!' என்றாள் அவளும் முகத்திலே மகிழ்ச்சியைத் தேக்கிக் கொண்டு.

'அம்மா! ஒரு குட் நியூஸ். ஒரு பெரிய புரோகிராமுக்கு சுபாஷ் ஸ்பான்சர் பண்றேன்னு சொல்லியிருக்காரு. அது விஷயமா டிஸ்கஸ் பண்றதுக்கு இப்ப வர்றாராம்' என்றார்.

'பெரிய வலையா விரிச்சாச்சு' என்று எண்ணிக் கொண்டாள் பொன்மலர் ஒரு புறத்திலே கோபமாக. ஆனால், மறுபுறத்தில் உள்ளம் துள்ளியது. 'பார்த்தே நான்கு நாட்களுக்கு மேல் ஆகிவிட்டது' என்று ஒருபுறம் எண்ணம் எழ, மற்றொரு புறம் அவள் மனம் சிரித்தது.

'எங்கடி நாலு நாள். சன் டேதான் குண்டை போட்டது. திங்கள் ஒரு நாள்தானே. இன்னைக்கு செவ்வாய். இப்ப என்ன ஈவ்னிங் ஆறு, ஏழு மணி' என்று அவளை கேலி செய்தது.

அவள் முகத்திலும் மகிழ்ச்சி தெரிவதைப் பார்த்த நிறுவன நிர்வாகிக்கு கொஞ்சம் சந்தோஷம். 'சரிம்மா. நீ ஃப்ரெஷ் பண்ணிட்டு வா. உங்கிட்ட ஏதோ தனியா டென் மினிட்ஸ் பேசணும்னாரு. நீங்க அந்த ரூம்ல உட்கார்ந்து டிஸ்கஸ் பண்ணிட்டு வந்துருங்க' என்றார்.

'மேடம்... எங்கிட்ட தனியா..?'

'அம்மா! பெரிய ஆஃபர் வரும்மா. புரோகிராமை நீ இப்படி இப்படி பண்ணனும்னு ஏதாவது சொல்லுவாரா இருக்கும். கேட்டுக்கோயேன்மா. அதுல என்னம்மா தப்பு?!' என்றார்.

'சரி, கேட்டுக் கொள்கிறேன்' என்று தலையாட்டி விட்டு தயாரானாள்.

அடுத்த பத்தாவது நிமிடத்தில் சுபாஷ் அங்கு வந்து சேர்ந்தான். முக்கியமானவர்கள் வந்தால் பேசுவதற் கென்று தனியாக ஒரு அறை இருந்தது. அழகிய ஸோஃ பாக்கள் போடப்பட்டு இருக்கும் அறை அது. அந்த அறைக்கு அழைத்துச் சென்று,

'சரி, பேசிட்டிருங்க' என்று சொல்லிவிட்டு நகர்ந்தார் மேடம்.

சுபாஷ் அந்த நீள ஸோஃபாவின் ஒரு பகுதியில் அமர்ந்தான். சுபாஷ் அமர்ந்தவுடனேயே அந்த ஸோஃபா வுக்கே ஏதோ கம்பீரம் வந்தாற் போல அவள் மனதில் தோன்றியது. தன்னையும் அறியாமல் லேசாக முறுவலித் தாள்.

குறுகுறுவென்று அவளைப் பார்த்தான் அவன். அவள் முகம் சிவந்துவிட்டது. 'உட்கார்றது..' என்று எதிரிலே இருந்த சீட்டைக் காட்டினான்.

அவள் தயங்கியபடியே அமர்ந்தாள்.

'என்ன முடிவுன்னு எல்லாம் கேட்கலை' என்று ஆரம்பித்தான்.

'இல்லை சார். நானே உங்ககிட்ட சொல்லலாம் னுட்டு இருந்தேன். நான் இனிமே வேலைக்கு வரலை' என்று அவள் ஆரம்பித்தாள்.

அவன் ஆழமாக அவளைப் பார்த்தான். 'தெரியும். நீ இப்படி ஏதாவது முடிவு சொல்லுவேன்னு. அதனால தான் நானே இன்னைக்கு வந்தேன்' என்றான்.

அவள் தலையைக் குனிந்து கொண்டாள். இடது கையிலுள்ள நகங்களை நீவி நீவி கொடுத்தாள்.

அநாகரிகமான பார்வை இல்லை என்றாலும் கூட,



தன்னை முழுவதும் அளந்து கொண்டிருக்கிறது அவனது பார்வை என்று அவளுக்கு புரிந்தது. மெல்ல நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். ஏதோ சொல்ல வாயெடுக்கு முன்பு, அவன் வலது கையை உயர்த்தி 'இரு' என்பது போல காட்டிவிட்டு பேசினான்.

'நல்லா யோசிச்சுப் பாரு. நான் சிட்டிக்குள்ள ஒரு பெரிய பிஸினெஸ் மேன். என் வீட்டுக்கு ஒரு பொண்ணு வேலைக்கு வர்றா. ஒரு டூ, த்ரீ வீக்ஸ் வந்து திடீர்னு வரலை அப்படீன்னா, என்னைப் பத்தி என்ன நினைப் பாங்க? அதுக்காகவாவது நீ வர மாட்டியா?' என்றான். அதில் லேசான கெஞ்சுதலும் இருக்கவே அவளுடைய மனம் உருகிவிட்டது. சட்டென்று தலையை உருட்டினாள்.

'சரிங்க சார். நான் வரேன் சார். ஆனா...' என்று இழுக்க, அவனே மறுபடியும் பேசினான். 'இந்த விஷ யத்தைப் பத்தி நான் மறுபடியும் பேச மாட்டேன். நீ படிச்சு முடிக்கிற வரைக்கும் இதைப் பத்தி நான் பேச மாட்டேன். யூ ஃபினிஷ் ஆஃப் யுவர் ஸ்டடீஸ். அப்புறம் பார்த்துக்கலாம்' என்றான்.

அவள் முகத்தில் பெரிய நிம்மதி தோன்றியது. அப்படி தோன்றிய நிம்மதியைப் பார்த்தவுடன் அவனுக் குள் லேசாக வலித்தது போலும். அதை அவளும் சட் டென்று புரிந்து கொண்டாள்.

'இல்லை சார். உங்களை எதுவும் தப்பா..'

'ஓ.கே. ஓ.கே. பேசி முடிச்சாச்சு. இந்த வீக் நீ கண்டிப்பா வர்றே' என்று சொன்னான்.

அதற்குப் பிறகு உண்மையாகவே தங்களுடைய கம்பெனி விளம்பரத்தை எப்படி கொடுக்க வேண்டும் என்பதைப் போல, ஒரு ஐந்து நிமிடங்கள் அவளிடம் பேசிவிட்டு, மின்னலாக விடைபெற்றுக் கொண்டு போய் விட்டான்.

பொன்மலர் தவறாமல் அந்த வாரம் சென்றாள். இரண்டு மணிக்கு அவள் அலுவலகத்தில் நுழைந்து, அவளுக்கென்று வைக்கப்பட்டிருந்த ரெஜிஸ்டரில் கையெழுத்துப் போட்டுவிட்டு, மேஜையைப் பார்த்த பொழுது, மேஜை மேல் கொஞ்சம் ஃபைல்கள் அவளுக்காகக் காத்துக் கொண்டிருந்தன.

முதல் ஃபைலை எடுத்துத் திறந்தாள். உள்ளே ஒரு சின்னத் தாளில் 'வெல்கம்' என்று எழுதியிருந்தது. அவளையுமறியாமல் முகத்தில் புன்னகை தோன்றியது.

ஒரு மணி நேரம் கழித்து எப்போதும் போல, கேஷுவலாக வருவது போல சுபாஷ் வந்தான். 'அப்புறம்மா. வொர்க்கைப் பார்க்கலாமா?' என்றான்.

அவள் அவசரமாக 'குட் ஆஃப்டர் நூன்' சொன்னாள்.

'ஓ.கே. ஓ.கே. குட் ஆஃப்டர்நூன். உட்காரு' என்றவன், வேலையை பற்றி மட்டுமே பேசினான். வேறெதுவுமே பேசவில்லை.

பொன்மலருக்கு ஏனோ அதுவும் அவ்வளவாகப் பிடிக்கவில்லை. முன்பெல்லாம் கொஞ்சம் கேலி செய்வான். ஏதாவது வம்பிழுப்பான். அவளும் சில செய்திகளை அவனிடத்திலே பரிமாறிக் கொள்ளுவாள். இப்பொழுது அந்த நட்பெல்லாம் இல்லாமல் இருந்தது ஏனோ அவளுக்கு கஷ்டமாக இருந்தது. பொறுக்க முடியாமல் ஒரு கட்டத்தில் தானே பேச்சை ஆரம்பித்தாள்.

'சார்' என்றாள்.

'என்ன?' என்று கண்பார்வையாலேயே கேட்டான்.

'இல்லை, நீங்க கோபமா இருக்கீங்க' என்றாள்.

'அப்படியெல்லாம் ஒண்ணும் இல்லையே' என்றான்.

'அப்ப சரி. நான் ஒண்ணு கேட்கலாமா?' என்றாள்.

'கேளு' என்றான்.



'சார், நீங்க சொன்னீங்களே... சொர்ணாகிட்ட எதுவும் பிரச்சினை பண்ணாதீங்க சார். அவளுக்கு வேற திட்டம் வெச்சிருக்கேன்னு சொன்னீங்களே... தயவு செய்து அப்படியெல்லாம் எதுவும் பேசிராதீங்க சார்' என்றாள்.

அவன் கண்களில் குறுகுறுப்பு தோன்றியது. இதழ்க்கடையில் லேசான ஒரு கேலிப் புன்னகை தோன்றியது. 'ம்ம்.. ம்.. வேற ஏதாவது கேப்பியாக்கும்னு நினைச்சேன்' என்றான்.

'இல்லை சார். வேற எதுவும் எனக்கு இப்போதைக்கு வேண்டாம். இதுக்கு மட்டும் நீங்க சரின்னு சொல்லுங்க சார். அவள் என் வெல் விஷ்ஷர் சார். அவள் வேணும்னு பண்ணலை சார்' என்றாள்.

'ஓ.கே. ஓ.கே. யோசிக்கலாம். இப்ப வொர்க்கை முடிப்போம்' என்றான்.

அவளுக்கு வெறுத்துப் போனது. மறுபடியும் ஒரு மணி நேரம் அவனோடு அமர்ந்து வேலை முடித்ததற்குப் பிறகு, திரும்பவும் அவன் முகத்தைப் பார்த்தாள்.

'சார்... ப்ளீஸ்' என்றாள்.

அவன் ரிலாக்ஸ்டாக தனது இருக்கையில் சாய்ந்து அமர்ந்தான். கண்களில் குறும்பு மின்னியது.

'ஓ.கே. உனக்காக நான் ஒத்துக்கறேன். அப்படின்னா எனக்கு என்ன தருவே?' என்றான்.

அவள் திடுக்கிட்டுப் போனாள். 'என்.. என்ன.. என்ன தரணும்?' என்றாள்.

'என்ன தரணும்னா? கேட்டதெல்லாம் தந்துருவியா? அந்த இதயத்தைத் தூக்கி அப்படியே இங்க கொடு. அப்படின்னா கொடுத்துருவியா?' என்றான்.

அவள் பதில் பேச முடியாமல் திணறிப்போனாள்.

லேசாக சிரித்தான். இதுவரையில்லாமல் வித்தியாச மான அந்த சிரிப்பு அவளை என்னவோ செய்தது. உடலில் மின்சாரம் பாய்ந்தாற்போல உணர்ந்தாள்.

'ப்ளீஸ் சுபாஷ்..' என்றாள் தன்னை மறந்து.

அவன் கண்கள் மின்னின. தன்னை மீறித்தான் அவள் சொல்லியிருக்கிறாள் என்பதைப் புரிந்துகொண்ட வன், 'ஐய்யோ பெண்ணே...' என்பது போல சிரித்துக் கொண்டு, அதைக் காட்டிக் கொள்ளாதவனாக, மேற் கொண்டு பேசினான்.

'ஓ.கே. கிராண்டெட். ஆனா, அதுக்கு என்ன தர்றே'ன்னு கேட்டேனே?'

'நீங்களே என் கௌரவம் பாதிக்காத மாதிரி..'

'கேட்கணுமாக்கும்..!' என்றவன், 'அதுக்குக் கேட்கா மலேயே இருக்கலாம்' என்றான்.

'சார்.. ப்ளீஸ்..' என்றாள் அவள் மறுபடி.

'ஓ.கே. ஓ.கே. முதன் முதலா எங்கிட்ட ஒரு கோரிக்கை வெச்சிருக்கிறே. அதை எப்படி வேண்டாம்னு சொல்லுறது? கொடுத்துருவோம்' என்றான். கலகல வென்று சிரித்தான்.

அவள் கண் சிமிட்ட மறந்து அந்த சிரிப்பை உள் வாங்கிக் கொண்டு இருக்கிறோம் என்பதுகூட புரியாமல், அவனை ஆழ்ந்து பார்த்துக் கொண்டிருந்தாள். மீளவும் அவனிடத்தில் அதே போன்ற வித்தியாசமான சிரிப்பு மலர்ந்தது.

'இன்னைக்கு தப்பிச்சிட்டே. ஆனா, என்னிக்காவது நான் கேட்கறதை கொடுத்துத்தான் ஆகணும்' என்றான்.

'சார், ப்ளீஸ். வொர்க் பார்க்கலாமா?' என்றாள் அவள்.

'ஓ.கே. பார்க்கலாமே..' என்று அவன் மறுபடியும் ஃபைலில் ஆழ்ந்தான்.



எப்படிப் பேசினாலும் அவனோடு இருக்கிறது தனக்கு பிடிக்கிறது என்பது தெரிந்த பொன்மலர், எதை யும் வெளிக்காட்டாதிருக்க படாதபாடு பட்டு விட்டாள். ஆனால், வீட்டுக்குச் செல்லும்பொழுது அவள் ஆழ்மனது சொன்னது, 'இதிலிருந்து தப்பிக்க வேண்டுமென்றால் இதுதான் சரியான நேரம். இப்போது விட்டுவிட்டால் உனக்கான வாய்ப்பு இருக்காது' என்று.

ஒன்றும் செய்வதற்கில்லாத கையாலாகாத்தனத் தோடு, வரும் நாட்களை நாம் பார்க்க இருக்கிறோம் என்று அவளுக்குள்ளே ஒரு வேதனை தோன்றியது. அந்த வேதனை அவளுக்கு வேண்டியதாகவும் இருந்தது.

## அத்தியாயம் - 20

சொர்ணா திகைத்துப் போய் அமர்ந்திருந்தாள்.

'நிஜம்மாவாடி சொல்றே? இவ்வளவு எல்லாம் நடந்திருக்கா? நீ ஏன் எனக்கு ஃபோன்ல சொல்லலை' என்று கேட்டாள்.

'நீ அவ்வளவு தூரத்துல இருந்து ஃபோன் பண்ற. உங்கிட்ட எப்படி சொல்றது? உன்னோட என்ஜாய் மெண்ட் ஸ்பாயில் பண்ற மாதிரி இருக்கும்ல. ரொம்ப நாள் கழிச்சு பேரண்ட்ஸ் கூட, பிரதர் கூட போயிருக்கே. நான் எப்படி உன்னை தொந்தரவு பண்றதுன்னுதான் நான் சொல்லலை' என்றாள்.

'என்னடி பெரிய தொந்தரவு? உங்கிட்ட ஃபோன்ல பேசுன மாதிரி நான் சுபாஷ்கிட்டயும் பேசியிருப்பேன்ல' என்றாள்.

'அதனாலதாண்டி நான் வேண்டாம்னு நினைச்சேன். என்னா அவரு உங்கிட்ட இதெல்லாம் சொல்லக்கூடாது.

ஃபாரின்ல இருந்து வந்ததுக்கப்புறம் பார்த்துக்கலாம். அப்படின்னு சொன்னாரு' என்றாள்.

'என்னடி அவரு? பெரிய கோட்டை செவுரு. அந்தாளு உன்னைய மிரட்டியிருக்காரு. நான் ஆனா சுபாஷ் இப்படி பண்ணுவாருன்னு நினைக்கவே இல்லை. ரொம்ப சீப் டெக்னிக்' என்றாள்.

நியாயப்படி சொர்ணா அப்படி பேசும்போது, பொன் மலருக்கு மகிழ்ச்சியாக இருந்திருக்க வேண்டும். அதற்கு மாறாக கொஞ்சம் கோபமாக வந்தது.

'இல்லடி, அப்படியெல்லாம் இல்லடி. நல்லவருதான்' என்றாள்.

'என்ன நல்லவரு? கிட்டத்தட்ட உன்னை பிளாக் மெயில் பண்ணியிருக்காரு. வீக் எண்ட் டெய்ஸ்ல உன்னை வரச் சொல்லி வேலை வாங்கறாரு. நீயும் கொஞ்சம் கூட யோசிக்காம சரின்னு ஒத்துண்டிருக்கறே' என்றாள்.

'என்னை வேற என்ன பண்ணச் சொல்றே? அவரு எம்.டி. மேடத்துக்கிட்ட வந்து பேசறேன். எல்லா புரோ கிராமையும் கேன்சல் பண்ணுவேன் அப்படின்னு எல் லாம் சொல்றாரு. அதுவும் இல்லாம என்னால புரோகிராம் கேன்சல் ஆனா, மேடம் ஒண்ணு என்னை வெளியே அனுப்புவாங்க. இல்லைன்னா லாஸ் ஆன பணத்துக்கு காம்பன்ஸேட் பண்ணச் சொல்லி கேட்பாங்க, அப்படின்னு எல்லாம் சொன்னாருடி.' என்றாள்.

சொர்ணா குபீரென்று சிரித்தாள். 'ஏண்டி, அப்படி யெல்லாம் நடக்குமா?' என்றாள்.

'ஏன் நடக்காது? நல்லா யோசிச்சுப் பாரு. மேஜரா ஒரு கம்பெனியிலிருந்து அவங்களுக்கு பிஸினெஸ் வந்து கிட்டிருக்கு. என்னால அது தடைபட்டா, அந்த கோபத்தை என் மேலதான் காட்டுவாங்க' என்றாள்.

சொர்ணா இப்போது மௌனமாக உள்வாங்கிக் கொண்டாள். 'ஆமா, அதுவும் ஒரு பாயிண்டு தான்'



என்றாள். 'நான்தான் எம்.டி.கிட்ட பேசியிருக்கேனடி, அவங்க ஒத்துக்கிட்டாங்களே' என்றாள்.

'ஏதோ விளையாட்டுங்கற அளவுல அவங்க ஒத்துக்கு வாங்கடி. ஆனா பிஸினெஸ்ஸையே பாதிச்சுதுன்னா எப்படி ஒத்துக்குவாங்க' என்றாள்.

'அதுவும் கரெக்ட்தான்' என்று சுரத்து இறங்கினாள் சொர்ணா.

'ஒருவேளை நீ இருந்தாக்கூட உங்க கம்பெனி யில இருந்து அதை காம்பன்ஸேட் பண்ணி பிஸினெஸ் கொடுப்பீங்க. நான் எங்கே போறது?' என்றாள்.

'அதுவும் கரெக்ட்தான்' என்றாள் சொர்ணா மறுபடி யும்.

இப்போது தனது வலது உள்ளங்கையை எடுத்து, இடது கைப் புறங்கையின் மேல் வைத்து நீவியபடி பொன்மலர் மெதுவாக சொன்னாள். 'எனக்கும் ஒண்ணும் பெரிய கஷ்டம் இல்லை. ஸாட்டர்டே ஒரு த்ரீ அவர்ஸ். சண்டே ஒரு த்ரீ அவர்ஸ். அதுக்கு அவர் பே பண்றேன்னு வேறே சொன்னாரு. சரி. இதை ஏன் தண்டனையா எடுத்துக்கறது? இது அவங்க தொழிலைப் பத்தி எல்லாம் தெரிஞ்சுக்கறதுக்கு நமக்கு ஒரு வாய்ப்பா இருக்குமே.. அப்படின்னுதான் நானும் ஒத்துக்கிட்டேன்' என்றாள்.

சொர்ணாவின் முகத்தில் புன்னகை மலர்ந்தது. 'ஓ.கே. ஓ.கே. பரவாயில்லை. விடு. உன் பர்த் டே எல்லாம் செலிபிரேட் பண்ணினாங்கறே' என்றாள்.

'ஆமா. எனக்கு அந்த ஆன்ட்டி பட்டுப் புடவை எல்லாம் வைச்சு கொடுத்தாங்க' என்றாள்.

'சரி, சரி. ஏதோ ஒருவிதத்துல உனக்கு ஹெல்ப் பண்ணனும்னு பண்ணியிருப்பார் போல. நேரடியா சொன்னா ஒத்து வராது. அதனால மிரட்டி, இரட்டி உட்கார வெச்சுட்டாரு' என்றாள்.

'ஆமாடி.. நல்லவர்தான்' என்றாள்.

'சரிடி. பத்து சர்ட்டிஃபிகேட் கொடுத்துட்ட இதோட. நல்லவர், நல்லவருன்னு.'

'இல்லை. எதுக்கு சொல்றேன்னா, நீ ஏதாவது அவர் கிட்ட போய் சண்டை போட்டுறாதே' என்றாள்.

'எப்படி சண்டை போடாம இருக்கிறது? நீதான்டி சொன்னே. அந்த சொர்ணா வரட்டும். அவங்களுக்கு வேற ட்ரீட்மெண்ட் வெச்சருக்கேன் அப்படின்னு சொன்னாருன்னு. என்னடி ட்ரீட்மெண்ட் பண்ணிருவாரு அந்த ஆளு' என்றாள்.

'போடி, அந்த ஆளு, இந்த ஆளுன்னு எல்லாம் சொல்லாதே' என்றாள் பொன்மலர்.

'இதப் பார்றா. கிட்டத்தட்ட பிளாக்மெயில் பண்ணி, வொர்க்கை எக்ஸ்ட்ராக்ட் பண்ணிட்டு, சீட் பண்ணிட்டிருக்காரு ஒரு ஆளு. அவரை அந்த ஆளு, இந்த ஆளுன்னு சொல்லக் கூடாதாமாம். பின்ன என்ன? மகா கனம் பொருந்திய சுபாஷ் சந்திபோஸ் அவர்கள்னு சொல்லணுமா?' என்று கேட்டாள்.

'நான் அப்படின்னு சொல்லல. கொஞ்சம் மரியாதையா பேசு' என்றாள்.

'சரிங்கம்மா, சரி. இனிமே மரியாதைக் கொடுத்து பேசறேன். என்ன ட்ரீட்மெண்ட் கொடுப்பாராம் எனக்கு? கொடுக்கட்டும் பார்க்கலாம்' என்றாள்.

உடனே பொன்மலர், 'இல்லை. அப்படியெல்லாம் எதுவும் இனிமே உங்கிட்ட பேசமாட்டார்' என்றாள்.

'அதெப்படி சொல்றே?' என்று கேட்டாள்.

'இல்லை. அதுவும் நானே ரெக்வஸ்ட் பண்ணேன்.
சார், சொர்ணாகிட்ட எந்த பிரச்சினையும் வேண்டாம்.
சொர்ணா ரொம்ப நல்லவ, அப்படின்னு சொன்னேன்'
என்றாள்.

'ம். ரெக்கமண்டேஷன் வேறயா?' என்றாள். 'சரி, அதுக்கு அவர் என்ன சொன்னாரு?' என்று கேட்டாள்.



'அதுக்கு சுபாஷ், முதன் முதலா நீ ஒரு கோரிக்கை வெச்சிருக்கே. இங்க வேலைக்கு வந்ததுக்கு அப்புறம். உனக்காக நான் விட்டுடறேன், ஒண்ணும் பிரச்சினை பண்றதில்லை, அப்படின்னுட்டார்' என்றாள்.

'இல்லைன்னா பெரிய பிரச்சினை பண்ணிடுவாரா?' என்று கேட்டாள்.

'அது தெரியாதுடி. அட்லீஸ்ட் உங்கிட்ட கேட்கலாம்ல. நாம ஆள் மாறாட்டம் பண்ணியிருக்கோம்தானே. அது தப்புதானே. அட்லீஸ்ட் சொர்ணாவும், இன்னொரு பொண்ணும் சேர்ந்து இந்த மாதிரி பண்ணினாங்க அப்படின்னு சொல்லி எல்லார்கிட்டயும் சொன்னா, அது உன் நேமை டேமேஜ் பண்ணாதா?' என்று கேட்டாள்.

சொர்ணா சற்று யோசித்துவிட்டு, 'ஆமா, எங்க சர்க்கிள்ல, அதுவும் இந்த பணக்கார சர்க்கிள்ல இப்படியெல்லாம் ஏதாவது மேட்டர் கிடைச்சதுன்னு வைச்சுக்கயேன். அதுக்கு வர்ணம் பூசி, அழகுபடுத்தி கண்ணு, காது, மூக்கு எல்லாம் வெச்சு பில்ட் அப் பண்ணி பேசிக்குவாங்க' என்றாள்.

'ஆமாடி. அது மட்டுமில்லாம, உனக்கும் கல்யாணம் ஆகிற வயசு. எனக்கும் எங்க வீட்டுல ஏதாவது பார்ப்பாங்கல்ல. அதனாலதான் நானும் இந்த மேட்டரை இப்படியே முடிச்சுக்கலாம்னு சொல்லிட்டு, கிட்டத்தட்ட அவருகிட்ட மன்னிப்பு கேட்ட மாதிரிதான்டி போய் வேலை செஞ்சுக்கிட்டு இருக்கறேன்' என்றாள்.

சொர்ணா, அவள் சொல்லுகிற விதத்தைப் பார்த்தவுடன் சிரித்துவிட்டாள். நெகிழ்ந்தும் போனாள். எழுந்து பொன்மலரின் இரு கன்னத்தையும் தடவி, 'ஸ்வீட் கேர்ள்டி நீ' என்றாள்.

'ஆமா சொர்ணா, முண்டறதை விட, இண்டறது பெரிசுன்னு சொல்லுவாங்க. நம்ம பிகேவியர்னால நாம ஒண்ணும் வேணும்னு செய்யலை. யதார்த்தமாதான் அது

நடந்ததுன்னு அவருக்குப் புரிய வெச்சுட்டோம்னா பிரச்சினை சால்வ் ஆயிரும்ல. அதுவரைக்கும் அங்கே பார்ட் டைம் ஜாப்பா போறேன்னு வெச்சுக்கலாமே..' என்றாள். ஆனால், ஓரத்தில் இப்படிச் சொல்லும்போது கூட, 'உனக்காக நான் அவர்கிட்ட பேசினேன். உன்னைக் கல்யாணம் பண்ணிக்கச் சொல்லிக் கேட்டேன்' என்று சொல்லலாமா என்று நினைத்தாள்.

'இதை யார்றீ உன்னை செய்யச் சொன்னாங்க?' என்று அவள் கோபித்துக் கொண்டால் என்ன செய்வது என்ற எண்ணமும் தோன்றியது. ஆனால், இதுவரையிலும் தோழியிடம் எதையும் மறைத்ததில்லை என்பதால், மெதுவாக அதையும் சொன்னாள்.

'இல்லை சொர்ணா, எனக்கு இன்னொரு எண்ணமும் இருந்தது' என்றாள்.

'என்ன?' என்றாள் சொர்ணா.

'அவர் வந்து அவரோட பேரண்ட்ஸ்கிட்ட ரொம்ப அஃபெக்ஷனா இருக்காரு. ஃபேமிலி டியூட்டி எல்லாம் கரெக்டா செய்யறாரு. அதனால, நான் என்ன நினைச்சேன்னா ஒருவேளை உனக்கு...' என்று இழுக்க, சொர்ணா இப்பொழுது உண்மையாகவே அவளை முறைத்தாள்.

'ஏன்டி! அப்படி கிப்படி அவர்கிட்ட ஏதாவது சொன்னியா?' என்றாள் கவலையுடன்.

'ஆமா. சொர்ணா ரொம்ப நல்லவ. நீங்க கூட ஏதாவது ப்ரோபோஸல் பார்க்கறதா இருந்தா.. அப்படின்னு சொன்னேன்' என்றாள்.

சொர்ணாவுக்கு உண்மையிலேயே கோபம் வந்தது. 'ஏய், அறிவிருக்கா உனக்கு? இப்படியெல்லாமா போய் யாருகிட்டயாவது சொல்லுவாங்க?' என்று கேட்டாள். 'பாலிஷ்டா பிகேவ் பண்ணணும்டி இதுல எல்லாம்' என்றாள்.

'எனக்கு அந்த பாலிஷ் எல்லாம் தெரியலடி. நான் ஸ்ட்ரெயிட்டா பேசிட்டேன்' என்றாள்.



'அதுக்கு அவர் என்ன சொன்னாரு?' என்று கேட்டாள்.

'இல்ல. சொர்ணா உனக்காக இப்படியெல்லாம் ரெக்கமண்ட் பண்ணுவாளா?' என்று கேட்டார். 'அது எனக்கு தெரியாது சார். ஆனா சொர்ணா ரொம்ப நல்லவ, அப்படின்னு சொன்னேன்' என்றாள்.

'மக்கு, மக்கு' என்று மறுபடியும் தலையிலடித்துக் கொண்ட சொர்ணா, 'இங்க பாரு. எங்க பேரண்ஸ் எனக்கொரு அலையன்ஸ் பார்த்துட்டாங்க போல இருக்கு. ஏன்டி அப்படியெல்லாம் போயி சுபாஷ்கிட்ட சொன்னே?' என்றாள்.

'இருந்தாலும் சுபாஷ் ஒத்துக்க மாட்டாருன்னுதான் நான் நினைக்கிறேன்' என்றாள்.

'ஏன்? ஏன் அப்படி சொல்றே?' என்று இப்பொழுது சிந்தனையுடன் பார்த்தாள் சொர்ணா.

அவளுக்கு ஏதோ பொறி தட்டுகிற மாதிரி இருந்தது. 'என்னடி விஷயம்? முழுங்கி முழுங்கி பேசறே, சொல்லு' என்று கேட்டாள்.

'இல்லை. என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறியா'ன்னு எங்கிட்ட கேட்டாரு' என்றாள்.

சொர்ணா இப்போதுதான் முதலில் அதிர்ந்ததை விட முழுவதுமாக அதிர்ந்து போனாள். 'ஏய் என்ன சொல்றே? நிஜம்மாவா?' என்று கேட்டாள்.

'ஆமா. ப்ரோபோஸ் பண்ணாரு' என்று சாந்தி வந்தவுடன் நடந்ததை எல்லாம் சொன்னாள்.

சொர்ணா தீவிர சிந்தனையில் ஆழ்ந்தாள். 'அப்ப நாம பயப்பட்டதுதான் நிஜம்மா நடந்திருக்கு போல இருக்கு' என்றாள்.

'ஆமாடி. அதுக்கு அவர் என்ன தெரியுமா சொல்றாரு? நீங்க ரெண்டு பேரும் பேசித்தான் எனக்கு அந்த ஐடியாவே கொடுத்திட்டீங்க, அப்படிங்கறாரு' என்றாள்.

சொர்ணா குபீரென்று சிரித்தாள். 'இது ஒரு சாக்கா போச்சாக்கும்' என்றவள், 'நீ என்ன முடிவு செஞ்சிருக்கே?' என்று கேட்டாள்.

'இல்லை சொர்ணா. இது ஒத்துவராது. நான் விலகிக்கிறேன், அப்படின்னு சொன்னேன். ஆனா அதுக்கு அவரு, நீ இந்த மாதிரி மூணு வாரம் வந்துட்டு விலகுனின்னா என் பேரு என்ன ஆகிறது? எல்லாரும் என்னையில்ல தப்பா பேசுவாங்க, அதனால படிப்பு முடியற வரைக்குமாவது வா. உனக்கு டைம் தர்றேன். படிப்பு முடியற வரைக்கும் யோசி. அப்புறம் ஒரு முடிவு எடுக்கலாம். கம்பல்ஷன் எல்லாம் இல்லை, அப்படின்னு சொல்லியிருக்காரு' என்று குழந்தையைப் போல ஒப்பித்தாள்.

சொர்ணா ஆழ்ந்த சிந்தனையுடன் அவளைப் பார்த்தாள். 'ஆ பர்ஸனலா அவரைப் பத்தி உனக்கு என்ன தோணுது?' என்று கேட்டாள்.

'வெரி நைஸ் பர்ஸன்டி. அதெல்லாம் குறையே சொல்ல முடியாது. ஆனா, எனக்கு அது எட்டாத நிலா. நான் அவ்வளவு பெரிய உயரத்துக்கு எல்லாம் ஆசைப்படக் கூடாது. அது என் தகுதிக்கு மீறின விஷயம்' என்றாள்.

'ம்..' என்று சொர்ணா உள்வாங்கிக் கொண்டாள். 'நான் வேணும்னா சுபாஷ்கிட்ட பேசட்டுமா?' என்றாள்.

'வேண்டாம்டி. அந்த தப்பை மட்டும் நீ செஞ்சுடாதே. நான் மூணு மாசம் வேலை பண்ணிட்டு, படிப்பை முடிச்சுட்டு வேற எங்கேயாவது ஜாப் வாங்கிட்டு போயிரப் போறேன். கௌரவமா ஒதுங்கிக்கப் போறேன்' என்றாள்.

சொர்ணா சட்டென்று அவள் முகவாயை நிமித்தி, அவள் கண்களை ஆழ்ந்து பார்த்தபடி கேட்டாள். 'அப்படின்னா உன் மனசுல எந்த சலனமும் இல்லையா?' என்று கேட்டாள்.



அந்த நிமிடத்தில் பொன்மலர் உடைந்து போனாள். அவளுடைய கண்களிலிருந்து கரகரவென்று கண்ணீர் வழிந்தது. 'என்னை என்ன சொல்லச் சொல்றே?' என்றாள்.

'உள்ளதைச் சொல்லு' என்று கேட்டாள் சொர்ணா.

சொர்ணாவின் கைகளை அப்புறமாக நகர்த்தி விட்டு, அவள் தலையைக் குனிந்து கொண்டாள். 'நான்தான் சொன்னேனடி. அது எட்டாத நிலான்னு. யார் வேணா ஆசைப்படலாம். வானத்தில இருக்கிற நிலாவைப் பிடிக்கலாம்னு. ஆனா கைக்குக் கிடைக்கணுமில்ல' என்றாள்.

'அடிப்பாவி! உனக்குத்தான் கைக்குக் கிடைக்க ரெடியா இருக்கே!' என்றாள்.

'இல்லை சொர்ணா, நிறைய பிராக்டிகல் டிஃபிகல்டீஸ் இருக்கு. நான் அப்படி ஒரு இடத்தைப் பார்த்துட்டு போயிட்டா, அடுத்த ரெண்டு பொண்ணுங்களுக்கும் அம்மா, அப்பா என்ன பண்ணுவாங்க. அப்படி போய் அவங்களை டோட்டலா டிபெண்ட் பண்ணி வாழறதெல்லாம் எனக்கு பிடிக்கலடி. இது ஒத்து வராது. அவருக்கு இது ஒரு சலனம். கௌரவமா இருந்துட்டு ஒதுங்கிரலாம் அப்படின்னு நினைக்கிறேன்' என்றாள்.

சொர்ணா நீண்டதொரு பெருமூச்சு விட்டாள். 'அறிவுப்பூர்வமா யோசிச்சா நீ சொல்றதுதான் கரெக்ட்டுன்னு தோணுது. ஆனா எப்படிடீ இதை மனசுல வெச்சுட்டு வாழ்வே?' என்றாள்.

'பரவாயில்லடி. வாழ்க்கை இப்படித்தான் இருக்கும். இன்னும் ரெண்டு பொண்ணுங்களையும் கரையேத்தறதுக்கு அம்மா, அப்பாவுக்கு உதவி செஞ்சுட்டு நான் இப்படியே இருந்துர்றேன்' என்றாள்.

'எப்படியே..? கன்னிகாஸ்திரீயா போகப் போறியா? இல்லை. சாமியாரிணியா போகப் போறியா?' என்று கேட்டாள்.

'இப்படி சலனத்துக்கு எல்லாம் ஆட்படறவங்க எப்படிநீ அப்படி போக முடியும்?' என்று கேட்டாள்.

'எனக்கும் வாழ்க்கையில ஒரு வசந்தம் வந்தது. வந்து போனது. அப்படின்னு நான் நினைச்சுக்கறேன். இதுதான் எனக்கு விதிக்கப்பட்டது அப்படின்னு நான் நினைக்க றேன்' என்றாள்.

சொர்ணா ஒன்றும் பேசவில்லை. சற்று நேரம் சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள். 'சரிடி. பார்க்கலாம். யோசிப்போம். இப்ப எந்த டெசிஷனும் எடுக்காதே. லெட் திங்ஸ் பி ஆஸ் தே ஆர்' என்றாள்.

'நானும் அப்படித்தான்டி யோசிச்சிருக்கேன்' என்றாள் பொன்மலர்.

அவ்வளவும் பேசிவிட்டு, சந்திப்பு முடிந்து சொர்ணா அவள் வீட்டுக்குச் சென்றுவிட்டாள். பொன்மலர் தன் வீட்டுக்குச் சென்றுவிட்டாள்.

இரவு எட்டு மணி இருக்கும். ஒரு ஃபோன் வந்தது.

'என்ன? என்ன சொல்றீங்க?' என்று கிட்டத்தட்ட அலறலாகக் கேட்டாள் பொன்மலர்.

அவ்வளவுதான். அன்றைக்கெல்லாம் அவள் சொர்ணாவிடம் பேசி வைத்ததும், தான் எடுத்த முடிவுகளும், ஆக எல்லா விஷயங்களும் காற்றில் பறக்க, பதட்டமும், கண்ணீருமாக அவள் அம்மா, அப்பாவிடம் சொல்லிக் கொண்டு வீட்டிலிருந்து கிளம்பினாள்.

## அத்தியாயம் - 21

**கண்ணீ**ரும், கம்பலையுமாக பதறிப் போய் நிற்கிற பொன்மலரைப் பார்த்தான் சுபாஷ்.

இடது கையிலே பெரியதாக ஒரு கட்டு. டிரைவிங்கின் போது, ஏதோ கவனக்குறைவால் காரை ஒடித்துத் திருப்பியபோது, மரத்துப் பக்கமாக போய் மாட்டி நின்றுவிட்டதாம். இவன் கை ஸடீயரிங்கில் சிக்கியோ, சீட்டுக்கு நடுவே சிக்கியோ, எப்படியோ ஃபிராக்ஸர் ஆகியிருந்தது.



இடது கையில் கட்டுப் போட்டு இப்போதுதான் வீடு வந்து சேர்ந்திருந்தார்கள். அப்பா சாப்பிடப் போயிருந்தார். அம்மா கமலாட்சி அவருக்கு சாப்பிடக் கொடுத்துவிட்டு வந்து விடுகிறேன் என்று அந்தப் பக்கம் போயிருந்தார்.

கண்களும், முகமும் கலங்கிப் போயிருக்க, கண்ணீர் விடுகிற பொன்மலரைப் பார்த்தான் சுபாஷ். 'ஹேய்... எதுக்கு இப்ப இப்படி அழறே?' என்றான்.

'எப்படி ஆச்சு? எப்பவும் நீங்க இவ்வளவு கேர்லெஸ்ஸா இருக்க மாட்டீங்களே?' என்றாள் அவள் ஆதங்கத்துடன்.

'எல்லாத்துக்கும் நீதான் காரணம்' என்றான்.

அவள் திடுக்கிட்டுப் போய் அவனைப் பார்த்தாள்.

'என்ன... என்ன சொல்றீங்க?' என்றாள்.

'பின்ன மூணு மாசம் கழிச்சு இவ என்ன சொல்லுவா? நாம என்னடான்னா இவ நினைப்பாவே சுத்திக்கிட்டு இருக்கிறோம். இந்த புள்ளைக்கு புரிய மாட்டேங்குதே.. அப்படீன்னு யோசிச்சுக்கிட்டே போனேன். எதிர்ல ஒரு பெரிய லாரி வந்துச்சு. அது பெரிய நீளமான லாரி. கவனிக்கலை. கடைசி நேரத்துல அவசரமா திருப்பினேன். இடதுபக்கம் போய் மரத்துல மாட்டிக்கிச்சு' என்றான்.

அவள் மறுபடியும் வெடித்து அழுதாள்.

'ஏய்! இப்படி அழுதேன்னா அம்மா, அப்பா வந்து 'என்ன?'ன்னு கேட்பாங்க' என்றான் அவன்.

அவள் சட்டென்று முகத்தைத் துடைத்துக் கொண்டாள்.

'எல்லாத்துக்கும் நான்தான் காரணமா?' என்றாள்.

அவள் திடுக்கிட்டுப் போய் அவனைப் பார்த்தான்.

'என்ன.. என்ன சொல்றீங்க?' என்றாள்.

'பின்ன மூணு மாசம் கழிச்சு இவ என்ன சொல்லுவா? நாம என்னடான்னா இவ நினைப்பாவே சுத்திக்கிட்டு இருக்கிறோம். இந்த புள்ளைக்கு புரிய மாட்டேங்குதே... அப்படின்னு யோசிச்சுட்டே போனேன். எதிர்ல ஒரு பெரிய லாரி வந்துச்சு. அது பெரிய நீளமான லாரி. கவனிக்கலை. கடைசி நேரத்துல அவசரமா திருப்பினேன். இடதுபக்கம் போய் மரத்துல மாட்டிக்கிச்சு' என்றான்.

அவள் மறுபடியும் வெடித்து அழுதாள்.

'ஏய்! இப்படி அழுதேன்னா அம்மா, அப்பா வந்து 'என்ன?'ன்னு கேட்பாங்க' என்றான் அவன்.

அவள் சட்டென்று முகத்தைத் துடைத்துக் கொண்டாள்.

'எல்லாத்துக்கும் நான்தான் காரணமா?' என்றாள்.

'ஆமா, ஒரு மனுஷன் உருகிட்டு திரியுறானே.. அவனுக்கு கண்டிஷன் வேற. பேசவே கூடாது, பார்க்கவே கூடாது அப்படின்னு. எனக்குப் பார்க்காம இருக்க முடியல. எதிர்ல உட்கார வெச்சிட்டு ஒண்ணுமே பேசக்கூடாதுன்னா எப்படி?' என்றான்.

அவள் முகம் சிவந்தது. 'நாந்தான் இந்த பிரச்சினையே வேண்டாம்னு சொன்னேனே. நீங்க உங்களுக்கு ஏத்த மாதிரி, உங்க தகுதிக்கு ஏத்த மாதிரி ஒரு பொண்ணை...' என்று அவள் முடிக்கும் முன்பாகவே,

'பொய். இனிமேலும் பொய் பேசிட்டிருந்தா பல்லை உடைச்சிருவேன்' என்றான்.

'உடைச்சிருங்க. நானும் ஒரு கட்டு போட்டுட்டு பக்கத்துல உட்கார்ந்துக்கறேன்' என்றாள்.

அவன் புன்னகைத்தான். லேசாக கையை அசைத்தவுடன் முகம் சுழித்தான்.

'அசைக்காதீங்க, அசைக்காதீங்க' என்றாள் அவள்.

'ஓ.கே. ஓ.கே.' என்றவன், 'இப்ப இப்படி தேம்பி



அழுறியே! இந்த கரிசனம் மனசுல ஓரத்துல இருந்தா கொஞ்சமாவது கோடி காட்டியிருக்காம்ல' என்றான்.

'இது ஒண்ணும் அந்த மாதிரி கரிசனம் இல்லை, என் எம்ப்ளாயர்..' என்றாள்.

'மறுபடியும் மறுபடியும் பொய் பேசறாடா. பல்லை உடைச்சா கட்டு போடறேங்கறே. ம்ம்ம்... வேற என்ன செய்யலாம்' என்று யோசிப்பவன் போல் நடித்தான்.

அவள் அழுதுகொண்டே சிரித்தாள்.

'ஏய் மக்கு, உங்கிட்ட இருந்து எனக்கு பதில் வந்தாச்சு, தெரியுமா?' என்றான் அவன்.

அவள் திகைத்துப் போய் பார்த்தாள்.

'ஆமா, பதில் வந்தாச்சு' என்றான்.

'பதில் வந்தா, அப்புறம் எதுக்கு இப்படி போய் இடிச்சுருக்கீங்க?' என்றாள்.

'இன்னும் கன்ஃபார்ம் ஆகலியே... அது உன்னை மீறி வந்த விஷயம் ஆச்சே. நீ இன்னும் அதை ஒத்துக்க மாட்டேங்கறியே. வாட்ஸ் யுவர் பிராப்ளம்?' என்றான் மறுபடியும்.

'நாந்தான் சொல்றேனே.. உங்க அந்தஸ்துக்கு..' என்று அவள் இழுக்க,

'கை ரெடியாகட்டும். அப்புறம் வெச்சுக்கறேன்' என்றான்.

'நீங்க புரிஞ்சுக்க மாட்டேங்கறீங்க. உங்க அப்பா, அம்மாகிட்டயே நீங்க சொல்லிப் பாருங்க. என்ன விளைவாகும்? அப்படின்னு தெரியும்' என்றாள் அவள் மெல்லிய குரலில். பேசும்போதே திரும்பித் திரும்பி அப்பா, அம்மா வருகிறார்களா என்று பார்த்துக் கொண்டாள்.

'அடட.. உன் தலையில இவ்வளவுதானா? அசட்டுப் பொண்ணே. அவங்ககிட்ட இத்தனை நாள் பேசாமலா இருப்பேன். ஒரு வயசுப் பொண்ணு ஆஃபீஸுக்கு

வர்றதுக்கு அலவ் பண்ணியிருக்காங்க. அதுவும் வீட்டுக்கு தெரியாமயா ஒத்துக்கிட்டு இருப்பாங்க' என்றான்.

அவள் சுத்தமாக அதிர்ந்து போனாள்.

'நிஜமா சொல்றீங்களா?' என்றாள்.

'இங்க பாரு. எங்க அப்பா, அம்மாவுக்கு என் மேல நம்பிக்கை இருக்கு. நான் ஒண்ணும் சும்மா ஜஸ்ட் லைக் தட் யாரையோ ஒருத்தரை எல்லாம் சூஸ் பண்ணிட மாட்டேன்னு அவங்களுக்குத் தெரியும். என்னுடைய பிரியத்துக்கு பாத்திரமாகக்கூடிய ஒரு பொண்ணைத்தான் நான் செலக்ட் பண்ணுவேன், அப்படின்னு அவங்களுக்குத் தெரியும் கண்ணம்மா' என்றான்.

அவள் திருதிருவென விழித்தாள்.

'உட்கார். சேரைப் போட்டு பக்கத்துல உட்காரு' என்றான்.

அவள் தயங்கியபடியே அருகிலே அமர்ந்தாள்.

'நீ முதல் நாள் வந்தியே அன்னைக்கே அப்பாவுக்கு சந்தேகம் வந்தாச்சு. பர்த் டே கொண்டாடினோமே, பர்த் டே அன்னைக்கே அப்பா எங்கிட்ட வந்து பேசிட்டாரு.'

'அப்படியா?' என்றாள் அவள்.

'எங்க அம்மா, அப்பாவைத்தான் நகர்த்துறது கஷ்டம். நான் அவங்களையே கன்வின்ஸ் பண்ணிட்டேன். இனி உங்க அம்மா, அப்பாவை கன்வின்ஸ் பண்றது ஒண்ணும் கஷ்டம் இல்லை. நான் வந்து பேசறேன்' என்றான்.

'சரி, முதல்ல உங்களுக்கு கையெல்லாம் சரியாகட்டும்' என்றாள்.

'எங்கே இன்னொரு தடவை சொல்லு' என்றான்.

'எதை?' என்றாள் அவள்.

'சரி அப்படின்னு சொன்னியே. அதை காது குளிர சொன்னீன்னா இந்த கை சீக்கிரம் சரியாகிடும்' என்றான்.



'சரி, உங்க இஷ்டம்' என்றாள் அவள் தலையைக் குனிந்து கொண்டு.

அவன் விட்டால் எழுந்து குதித்துவிடுவான் போல இருந்தது. 'சே, இந்த நேரம் பார்த்து இந்த கையில ஃபிராக்சர் ஆகிடுச்சு. ம்... ஒண்ணுமே பண்ண முடியாதே..' என்றான்.

அவள் வெட்கத்துடன் சிரித்தாள்.

'ரொம்ப தைரியங்க உங்களுக்கு' என்றாள்.

'என்ன தைரியம்?' என்றான் அவன்.

'கொஞ்ச தூரத்துல உங்க அம்மா, அப்பா ரெண்டு பேரும் சாப்பிட்டுட்டு இருக்காங்க. இங்க நீங்க இப்படியெல்லாம் பேசறீங்களே' என்றாள்.

'ஏய் மக்கு. உங்கிட்ட பேசணும்னுதான் அவங்க விட்டுட்டு போயிருக்காங்க. இப்படியாவது பையனுக்கு கை சரியானால் பரவாயில்லை, அப்படின்னு அவங்க நினைக்கிறாங்க' என்றான்.

'அப்பா... குடும்பமே பயங்கர சதிகாரங்க' என்றாள் அவள்.

அவன் சிரித்தான். 'இப்பவாவது புரிஞ்சுக்கிட்டீன்னா சரி' என்றான்.

'என்ன? சதிகார குடும்பம்னா..?'

'ஹேய்... குடும்பத்தை பத்தியெல்லாம் குறை சொல்லாதே. ஏன்னா, இனிமேல் அது உன்னோட குடும்பம். தெரிஞ்சுக்க' என்றான்.

'ஆமா, இல்ல' என்று வெட்கத்துடன் சிரித்தாள்.

'நான் நேத்து சொர்ணாகிட்ட பேசினேன்' என்றாள்.

'அதான் எல்லாம் உளறிக் கொட்டி கிளறி மூடிட்டியாமே.. சொர்ணா வந்து எங்கிட்ட கேட்டாள்' என்றாள்.

'சொர்ணா, உங்ககிட்ட கேட்டாளா?' என்று அதிர்ச்சியானான்.

'ஆமா, தோழிக்கு ஏதாவது பிரச்சினை வந்திரக் கூடாதுல்லே. அவ என்கிட்ட வந்து கேட்டாள். சீரியஸா திங் பண்ணிட்டிருக்கீங்களா? இல்லை, சும்மா விளையாட்டா அவளை டீஸ் பண்றீங்களா? அவ நல்ல பொண்ணு. அவளை ஏமாத்தினீங்கன்னா நாளைக்கு அவ தாங்க மாட்டா. ம்.. அப்படின்னு ஏகப்பட்ட ரெக்கமண்டேஷன்பா உன்னைப் பத்தி' என்றான்.

'எப்ப பேசுனா?' என்றாள்.

'நேத்து நைட்டுதான். அவகிட்டயும் நான் இன்னும் முடிவு பண்ணலை. அவங்களுக்கும், எனக்கும் ஏணி வைச்சாலும் எட்டாதுன்னு சொன்னியாமே... எட்டாத நிலான்னியாம்.. அதைத்தான் கேட்டு எனக்கு மூட் அவுட் ஆகிடுச்சு' என்றான்.

அவள் தலையைக் குனிந்து கொண்டாள். 'ஐ யம் ஸாரி' என்றாள்.

'என்னத்த ஸாரி. நைட் ஃபுல்லா தூங்கலை. காலைலயும் அதே நினைப்பு. தினம் தினம் எதிர்த்தாப்ல... தினமும் இல்லைன்னாலும் அட்லீஸ்ட் வாரத்துக்கு ரெண்டு நாளும் பட்டாம்பூச்சி மாதிரி எதிர்ல நடமாடிக்கிட்டு, கடைசில பெரிசா வேட்டு வைச்சா மனசு எப்படித் தாங்கும்?' என்றான்.

அவள் என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் அவனைப் பார்த்து நின்றாள்.

'இப்பவாவது நான் ஒத்துக்கறேன்னு ஒப்பனா சொல்லேன்..' என்றான்.

அவள் அவனை அன்புடன் பார்த்தான். பிறகு சொன்னாள். 'இவ்வளவு பேசுனதுக்கப்புறம் அது உங்களுக்குப் புரியாதா? ஆனாலும் எங்க அம்மா, அப்பா ஒத்துக்கணும்' என்றாள்.

'அது என் தலைவலி. எங்க அம்மா, அப்பா சொல்லிட்டாங்க. உங்க அம்மா, அப்பாகிட்ட பேசி சம்மதம் வாங்கிர்றோம்னு. இன்னும் என்ன வேணும் உனக்கு?' என்றான்.

'எனக்கு அதுதான் வேணும்' என்றாள் அவள்.

அவன் கிறக்கமாக அவளைப் பார்த்தான். 'அப்ப நான் வேணாமா? உனக்காக கையை ஒடிச்சிருக்கிறேன். ம்.. உன் நினைப்புல ஏங்கிப் போயி.. என்னைப் பத்தி நீ யோசிக்க மாட்டியா?' என்றான்.

அவள், 'அப்படியில்ல..' என்று இழுத்தாள்.

'வேற எப்படியாம்? பாரு. வலியில துடிச்சிட்டிருக்கிறேன். லைட்டா உன் கையால தொட்டு ஒரு ஆறுதல் சொல்லலாம்ல...' என்றான்.

அவள் வெட்கத்துடன் கையை நீட்டினாள்.

'ஹேய்... உனக்கு ஒரு விஷயம் தெரியுமா?' என்றான்.

'என்ன?' என்றாள்.

'போன வாரமே நீ என்னை சுபாஷ்னு கூப்பிட்டாச்சு. தெரியுமா?' என்று அன்றைக்கு அவள் தன்னையே மறந்து, 'சுபாஷ்' என்று சொன்னதை குறிப்பிட்டு காட்டினான்.

அவள் முகம் சிவந்து போனது. 'அப்படியா? உளறிட்டேன்' என்றாள்.

'அப்படியே உளறு. அதுதான் நல்லா இருக்கு. இப்பவும் கொஞ்சம் உளறினீன்னா எனக்கு சுகமா இருக்கும்' என்றான்.

'அதான் நீங்க உளர்றீங்களே..' என்றாள் அவள்.

'இன்னமும் நான் கேட்டது கிடைக்கலை அம்மணி' என்றான் அவன்.

அவள் தன் வலக்கரத்தால், அவனுடைய இடக்கரத்தை தொட்டாள். அவன் சட்டென்று அவனுடைய கரத்தைப் பிடித்து எடுத்து, அந்த அடிபட்ட கரத்தின்

மேல், அந்த கட்டின் மேல் வைத்தான். அவள் மெதுவாக கையைப் பிடித்தாள்.

'வேண்டாங்க. வலிக்கப் போகுது' என்றாள்.

'இல்லையில்ல. சும்மா கையை வைய்யி. போதும்' என்றான்.

அவள் அப்படியே கையை வைத்துக் கொள்ள, சற்று நேரம் அவன் கண்களை மூடி மெய்மறந்து அமர்ந்திருந் தான். அவள் வெட்கத்துடன் தலையைக் குனிந்து கொண்டு அருகிலே நின்றாள்.

'இதுதான். இந்த ட்ரீட்மெண்டுதாம்பா நமக்கு வேணும். அதனால கை சரியாகற வரைக்கும் கூடவே இருப்பியாம்' என்றான்.

அவள் 'காலேஜ்?' என்றாள்.

'காலேஜ் போன நேரம் போகத்தான் அம்மணி. கை சீக்கிரம் சரியானாதான் கல்யாணத்துக்கு ஏற்பாடு பண்ண முடியும்..' என்று அவன் இழுக்க, அவள் சிரித்தாள்.

'நான் இவ்வளவு பேசறேனே, நீ ஏதாவது திருப்பி என்கிட்ட பேசமாட்டியா?' என்றான் அவன் ஏக்கத்துடன்.

'என்ன பேசறதாம்? எனக்கும்தான் இப்ப உங்களைப் பிடிச்சிருச்சு. போன தடவை நீங்க கலகலன்னு சிரிச்சீங் களே... அந்த சிரிப்பேதான் என் மனசுக்குள்ள ஓடிட்டிருந் தது. ஆனால், அத்தனையும் மீறி நானும்தான் பொய் சொன்னேன்' என்றாள் அவள்.

'என்ன பொய்?'

'நீங்க மீறுன இடம், மீறுன அந்தஸ்து, அதனால வேண்டாம்னு சொல்லிட்டிருந்தேன் நேத்து வரைக்கும்' என்றாள்.

அவன் மறுபடியும் அவளை ஆழமாகப் பார்த்தான்.

'ப்ளீஸ்... அப்படிப் பார்க்காதீங்க. எனக்கு கஷ்டமா இருக்கு' என்றாள்.



'இப்போதைக்கு என்ன பண்ண முடியும்? பார்க்கத் தானே முடியும். அதுகூட செய்யக் கூடாதுன்னு சொன் னீன்னா...' என்றான் அவன் கிறக்கமாக.

'இல்லை. வேண்டாம். பெரியவங்க எல்லாம் இருக் காங்க' என்றாள்.

அவன் ஒரு பெருமூச்சு விட்டுவிட்டு, 'ம்... திடீர்னு வந்தாலும் வருவாங்க' என்றான். 'அதுக்காக..' என்று நிறுத்தினான்.

அவள் மெல்ல கைகளை எடுத்துக் கொண்டாள்.

'ஏய்! ஒரே தடவை சுபாஷ்னு கூப்பிடு' என்றான்.

'பேசாம இருங்க' என்றாள்.

'பேசாம இருங்க சுபாஷ்னு சொல்லு' என்றான் அவன்.

'சும்மா இருங்க சுபாஷ்' என்றாள்.

'ஐ... ரைமிங்கா சொல்றா' என்று சிரித்தான்.

அவளும் சிரித்தாள். ஆனால், அவள் உள் மனசிலே, 'இன்னமும் எல்லாம் முடிந்துவிடவில்லை. இனிமே தான் பிரச்சினைகள் ஆரம்பிக்கப் போகின்றன' என்பது தெரிந்தது. எப்படியும் சுபாஷின் வீட்டினர் தனது பெற் றோர்களை கேட்கப் போகிறார்கள். அப்பாவைப் பற்றி அவளுக்குத் தெரியும். மிகுந்த சுயமரியாதைக்காரர். என்ன சொல்லுவாரோ என்று எண்ணியபோது, அவள் உள்ளத் திலே அச்சமும் ஏற்பட்டது.

'என்ன கவலை?' என்று கேட்டான் அவன்.

'இல்லை. அப்பா ரொம்ப சுயமரியாதைக்காரவுங்க. எப்பவும் பணக்காரங்ககிட்ட இருந்து விலகித்தாம்மா இருக்கணும்னு சொல்லுவாங்க. அதை நினைச்சாத் தான்...' என்று இழுத்தாள்.

அவன் முகத்திலும் சிந்தனை தோன்றியது.

அவளது வலக்கரத்தை தன் வலக்கையால் பிடித்துக் கொண்டான். 'கவலைப்படாதே, எப்படியாவது பேசி

நான் சரி பண்றேன். நீ எனக்கு வேணும் அப்படிங்கறப்ப அதுக்கான எல்லா முயற்சியும் நான் எடுப்பேன்லடா' என்றான். அந்த குரலிலும், அந்த அன்பிலும் சொக்கி நின்றவளாக, 'இனி அடுத்து என்ன?' என்ற யோசனையில் ஆழ்ந்தாள் பொன்மலர்.

## அத்தியாயம் - 22

**'கெட்டிமேளம், கெட்டிமேளம்'** என்று முழங்கினார் ஒரு பக்கம்.

பொன்மலரின் கழுத்தில் மங்கல நாண் பூட்டி நிமிர்ந்தான் சுபாஷ். பொன்மலருக்கு அது ஏதோ கனவைப் போலவே இருந்தது. அப்படியும், இப்படியுமாக ஆறு மாதங்கள் ஓடியிருந்தது.

சுபாஷின் கைகளுக்கு கட்டுப்போட்டதற்குப் பிறகு ஆறு மாதங்கள் ஆகியிருந்தது. இரண்டு, மூன்று மாதங்கள் அவனுடைய கை சரியாவதற்காக காத்திருக்க வேண்டியிருந்தது. அதேசமயத்தில் பொன்மலரின் படிப்பு முடியட்டும் என்பதிலே உறுதியாக இருந்தான் சுபாஷ். ஏற்கனவே அவன் தன் தந்தையிடம் பேசி வைத்திருந்ததால், அவர்கள் குடும்பத்தில் இந்த ஏற்பாட்டுக்கு சம்மதிக்க வைப்பதில் பெரிய பிரச்சினை எதுவும் இருக்கவில்லை. ஆனால், பொன்மலரின் அப்பா உண்மையிலேயே பயந்து போனார். இது என்ன விளையாட்டுக் காரியமா? வாழ்க்கைப் பிரச்சினை. அவர்களுடைய குடும்பத்தினுடைய தகுதி என்ன? நமது குடும்பத்தினுடைய தகுதி என்ன? அவர்கள் எதிர்பார்ப்புக்கு நம்மால் செய்ய முடியுமா? என்றெல்லாம் பெருத்த கவலையில் ஆழ்ந்துவிட்டார். ஆனால், ஒன்று மட்டும் அவருக்கும் புரிந்தது. சுபாஷுக்கு கையிலே அடிபட்டுவிட்டது என்று சொன்னவுடனேயே மகள் பதறியடித்துக் கொண்டு ஓடிய விதத்தில், அவள் உள்ளம் சுபாஷினிடத்தில் லயித்துக் கிடக்கிறது என்பது புரிந்தது.



அடிவயிற்றிலிருந்து எழுந்த வேதனையுடன் கலங்கிப் போய் அவள் ஓடியதைப் பார்த்த அந்த நிமிடமே அவருக்கு பிரியம் புரிந்தது. ஆனால், அவளுடைய ஈடுபாடு அந்த பையனுக்குத் தெரியுமா? இது நடக்குமா! என்று யோசித்தபடி கண்டும் காணாமல் இருந்தார்.

சுபாஷுக்கு கை கட்டு பிரிக்கப்பட்டு ஒரு மாதம் போயிருக்கும். திடீரென்று ஒரு நாள், சுபாஷின் பெற்றோர்கள் இரண்டு பேரும் அவர்களது வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தார்கள். அடித்துப் பிடித்துக் கொண்டு வரவேற்றார்கள் பொன்மலரின் பெற்றோர்.

சுபாஷின் தந்தை நேரடியாகவே விஷயத்திற்கு வந்தார். 'எங்க பையனுக்கு உங்க பொண்ணை பிடிச்சிருக்கு. எங்க பையன்தான் எங்களுக்கு முக்கியம். அவனோட சந்தோஷம்தான் எங்களுக்கு முக்கியம். அதனாலதான் பொண்ணு கேட்டு வந்திருக்கோம்' என்று நேரடியாக விஷயத்திற்கு வந்தார்.

பொன்மலரின் அப்பா இதை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாலும், இப்பொழுது தயக்கத்துடன் பதில் சொன்னார். 'எனக்கும் அரசல், புரசலா தெரிஞ்சுதுங்க. ஆனா நல்லா யோசிச்சுக்குங்க. உங்க தரம் வேற, எங்க தரம் வேற. உங்க லெவலுக்கு, உங்க எதிர்பார்ப்புக்கு எல்லாம் எங்களால செய்ய முடியாது. ஏதோ என்னால முடிஞ்சது ஒரு பத்து, பதினைஞ்சு பவுன் சேர்த்து வைச்சிருக்கேன். கல்யாண செலவுக்குன்னு ஒரு ரெண்டு, மூணு லட்ச ரூபா வைச்சிருக்கிறேன். இதுக்கு மேல என்னால செய்ய முடியாது. ஏன்னா, இதுக்கு அப்புறம் பொண்ணுங்க ரெண்டு பேரு இருக்காங்க. அவங்களை படிக்க வைக்கணும். அதுக்கு இனிமேல்தான் நான் சம்பாதிச்சு சேர்த்து வைக்கணும. இப்படியொரு குடும்பத்துல உங்க தகுதிக்கு நீங்க எப்படிங்கய்யா பொண்ணு எடுப்பீங்க' என்று கேட்டார் யதார்த்தமாக.

அந்த எதார்த்தமே ராஜரத்தினம் மனதை கவர்ந்தது. கமலாட்சியைத் திரும்பி பார்த்தார். பிறகு புன்னகைத்த படி சொன்னார். 'வாழ்க்கையில என்னங்க வேணும். எதார்த்தமா இருக்கணும். முன்ன ஒண்ணு, பின்ன ஒண்ணு பேசக்கூடாது. உங்க நிலைமை என்னமோ அதை சொல்லிட்டீங்க. உங்களால எது முடியுமோ அதை சொல்லிட்டீங்க. எது முடியுமோ அதை செய்யுங்க. கஷ்டப்பட்டுக்காதிங்க. வேண்ணா இப்படிக் கூட செய்யுங்க. ரெண்டு, மூணு லட்சம் எல்லாம் நீங்க செலவு பண்ண வேண்டாம். ஆனா அதுக்குன்னு உங்க பொண்ணுக்கு நாங்களே செலவு பண்ணி கல்யாணம் பண்ணிட்டு போனாலும் உங்க மனசுல ஒரு உறுத்தல் இருக்கும். அதனால, நகை என்னமோ போடுங்க. நகையைப் பத்தி நாங்க கேட்கலை. ஒரு லட்ச ரூபா ஏதாவது ஒரு ஐட்டத்தை எடுத்து செலவு பண்ணிருங்க. அவ்வளவுதான்' என்றார். அதுவும் கூட நீங்க பணமா கொடுக்க வேண்டாம். ஏதாவது ஒரு விஷயத்தை நாங்க ஒதுக்கி வைச்சிரோம். அதுக்கு கொடுத்திடுங்க' என்றார்.

பொன்மலரின் அப்பா மிகவும் மகிழ்ந்து போனார். அந்த பேச்சுக்குப் பிறகு எல்லாமே வேகமாக நடந்து முடிந்தது.

'என்னடி, கழுத்துல மாங்கல்யம் ஏறியாச்சா? அப்புறம் என்ன புரோக்ராம்?' என்று கேட்டாள் சொர்ணா.

'தெரியலைடி. அவரைத்தான் கேட்கணும்' என்றாள்.

'இதெல்லாம் சும்மா. உனக்கு சொல்லாமயா இருப்பாரு' என்று கேலி செய்தாள் சொர்ணா.

'இல்லை. ஒரு வாரம் பத்து நாள் அம்மா, அப்பாவோட இருந்துட்டு அதுக்கப்புறம் ஒரு ஒன்வீக் மட்டும் எங்கயாவது வெளியில போலாம்னு சொல்லியிருக்காரு' என்றாள்.

'ஜமாய்ங்கம்மா... ஜமாய்ங்க' என்று சந்தோஷமானாள் சொர்ணா.



சொர்ணாவின் முகத்தை ஆழ்ந்து பார்த்தாள் பொன்மலர். 'இந்த சொர்ணாவைத்தானே அவருக்குக் கல்யாணம் பண்ணி வைக்க வேண்டும் என்றிருந்தோம். ஆனால், கதை மாறிப் போய், இப்போது, அவள் தனக்கு வாழ்த்து சொல்லிக் கொண்டிருக்கிறாள், என்று எண்ணிக்கொண்டாள்.

'ஏண்டி அவரு... உங்ககிட்ட எப்படி விழுந்தாராம்?' என்று கேட்டாள் சொர்ணா.

'அந்த சோகக் கதையைத்தான் இன்னும் அவரு சொல்லலையேடி எனக்கு' என்று சிரித்தாள் பொன்மலர். அந்த சிரிப்புக்குப் பின்னாலே மகிழ்ச்சி பொங்கிக் கொண்டிருந்தது என்பதை சொர்ணா அறிவாள்.

'நல்லா விவரமா கேட்டுக்கோ. அப்பத்தான் அதை வெச்சுட்டு நாளைக்கு மிரட்ட முடியும்' என்றாள் சொர்ணா.

'மிரட்டறதா..? அவரு என்னை மிரட்டினா பத்தாதா? மிரட்டி, மிரட்டியேதானே என்னை பிளாக் மெயில் பண்ணாரு' எனறு வெட்கத்துடன் புன்னகைத்தாள் பொன்மலர்.

அப்போது அங்கே வந்தான் சுபாஷ். 'என்ன? மறுபடியும் ரெண்டு பேரும் என்னத்துக்கு பிளான் பண்ணிக்கிட்டு இருக்கீங்க?' என்று கேட்டான்.

'இல்ல. நீங்க மிரட்டி, மிரட்டி மீன் பிடிச்ச விதத்தை அம்மணி விளக்கமா சொல்லிக்கிட்டிருக்காப்ல. நான் கேட்டுக்கிட்டு இருக்கிறேன்' என்றாள் சொர்ணா.

சுபாஷ் சிரித்தான்.

'ஆனாலும் பாவம். அவளை ஓவரா மிரட்டிட்டீங்க' என்றாள் சொர்ணா.

'பின்ன? மிரட்டலேன்னா அம்மணி வேலைக்கு வந்திருப்பாங்களா? ம்.. அதுக்கான விளக்கம் எல்லாம் நாங்க சொல்லிக்கிறோம்' என்றான் சுபாஷ்.

'ஆமாமா, சொல்லிக்குங்க. அவங்களுக்குப் புரிஞ்சா சரி. இப்ப அந்த பக்கம் போங்க, எங்களை டிஸ்டர்ப் பண்ணாதீங்கன்னு சொல்றீங்களா?' என்று கேட்டாள் சொர்ணா.

'ஐய்யய்யோ... அப்படி எல்லாம் சொல்லுவோமா? எங்களுக்கு டிஸ்டர்பன்ஸ் வேண்டாம்னு நினைக்கறப்போ நாங்க பறந்துருவோம்ல..' என்றான் சுபாஷ்.

'சும்மா இருங்க' என்றாள் பொன்மலர் வெட்கத்துடன்.

அவன் அவளிடம் லேசாகப் புன்னகைத்தான்.

சொர்ணா கொஞ்சம் அந்தப் பக்கம் திரும்பிய நேரத்தில், 'இப்போதைக்கு சும்மாதான் இருந்தாகணும். என்ன பண்றது?' என்றான் சோகமாக.

மறுபடியும் 'சும்மா இருங்க' என்று சொல்ல ஆரம்பித்தவள், நாக்கைக் கடித்துக் கொண்டு வாயை மூடிக் கொண்டாள். அவன் கிறக்கமாக அவளைப் பார்த்து சிரித்தான். 'எல்லா விளக்கமும் தனியா சொல்றேன்' என்றான்.

அதேபோல, அவர்களுடைய தேனிலவின்போது எல்லா விளக்கங்களையும் சொன்னான். சொல்லும் போதே, அவனுக்கு வாய் கொள்ளாச் சிரிப்பு.

'அசடு! மக்கு. இப்படி யாராவது பிளாக்மெயில் பண்ணா பயந்துர்றதா?' என்று கேட்டான்.

'என்னை என்ன பண்ணச் சொல்றீங்க? என்னை சும்மா மிரட்டுனா கூட பரவாயில்ல. மேடத்தோட பிஸினெஸ் அஃபெக்ட் ஆச்சுன்னா.. அவங்க சும்மாவே டென்ஷன் ஆவாங்க. நீங்க சொன்ன மாதிரி திருப்பி என்னை எல்லா பணத்தையும் கட்டுன்னு சொன்னா என்ன பண்றது?' என்றாள்.

'அப்படி யாராவது சொல்லுவாங்களா?' என்று அவன் சிரித்தான். அவள் அவனை வெறித்துப் பார்த்தாள்.

'சும்மாதான் அப்ப விரட்டுனீங்களா?' என்றாள்.



'அட, ஆண்டவா! அது புரியலையா உனக்கு? இப்பதான் புரிஞ்சுதா?' என்றான்.

'அதான் சொர்ணா சொன்னா, 'இப்படியெல்லாம் யாராவது ஏமாறுவாங்களாடி'ன்னு. ஆனா, நான் விளக்கம் சொன்னவுடனே அவளும், 'இருக்கும்டி' அப்படின்னாளே..' என்றாள்.

'ஆமா, உங்கிட்ட சொல்லிட்டு அப்புறம் எங்கிட்ட வந்து பேசுனாப்பல' என்றான்.

'என்ன பேசுனா?' என்றாள்.

'அவ ரொம்ப நல்ல பொண்ணு. அவ பாவம். எதார்த்தமானவ. அவளைப் போய் இப்படியெல்லாம் மிரட்டியிருக்கீங்க. பயந்து போயிருக்கா. ஏன் சார் இப்படியெல்லாம் பண்றீங்க?' அப்படின்னு வந்து கேட்டாள்' என்று சொல்லிக் கொண்டே மெல்ல அவளைத் தன் பக்கத்திலே இழுத்துக் கொண்டான்.

'நீங்க என்ன சொன்னீங்க?' என்று கேட்டாள் அவள்.

'என்னத்த சொல்றது? அப்படி மயங்கிக் கிடக்கிறேன். 'எத்தைத் தின்னா பித்தம் தெளியும்'னு ஏதேதோ சொல்லி அவளை மடக்கி, வாரத்துக்கு ரெண்டு நாள் என் ஆஃபிஸுல வேலை பண்ற மாதிரி பண்ணியிருக்கேன். அப்பதானே பார்க்க முடியும். எடுத்தவுடனே சொன்னா பயந்து எங்காவது போயிருவா. ஓடிப் போயிருவா அவ. அவ்வளவு பயந்திருக்கா. அதனால அவளுக்கு எங்கிட்ட பழகறதுக்கு ஒரு வாய்ப்பு கொடுக்கணும்ல அப்படின்னு சொன்னேன்' என்றான்.

'அப்போ இதெல்லாம் நீங்க திட்டம் போட்டு பண்ணினீங்களா?' என்று கேட்டாள்.

'அப்புறம் நீங்க மட்டும் திட்டம் போட்டுப் பண்ணலியா? ரெண்டு தோழிகளும் சேர்ந்து என்ன பண்ணினீங்க? ஏதோ, என்னமோ நான் எடுத்தவுடனே உன் பின்னாடி அலையற மாதிரியும்.. அதை எப்படி தவிர்க்

கிறதுன்னு பேர் மாத்தி, ஆள் மாறாட்டம்... என்னென்ன வேலை செஞ்சிங்க?' என்று கேட்டான்.

அவள் வெட்கத்துடன் சிரித்தாள். 'ஆன சும்மா சொல்லக்கூடாது. சொர்ணாவுக்கு அப்பவே பட்டிருக்குது. இந்த ஆள் ஃபோன்ல டைரக்ட்டா வர்றான் அப்ப டின்னா, ஏதோ விஷயம் இருக்கு அப்படின்னு அவளுக்கு அப்பவே புரிஞ்சிருக்கு' என்றான்.

'ஆமாங்க அவ அப்பவே சொன்னா. இன்னிக்கு உன்னை வந்து பார்க்க வருவார் பாரு அப்படின்னு சொன்னாள். அதே மாதிரி நீங்க வந்தீங்களா? அதுலதான் நான் பயந்துட்டேன்' என்றாள்.

'என்ன பயந்துட்டே? உன்னை நான் தூக்கிட்டு போயிருவாங்கன்னு பயந்துட்டியா?' என்று கேட்டான்.

'ஆமா, இப்ப தூக்கிட்டுத் தானே வந்துட்டீங்க' என்றாள்.

'யாரு? நாங்க தூக்கினோமா? இல்லை, நீ எங்களை அலேக்கா தூக்கினியா? அப்படியே தூக்கிட்டீங்களே...!' என்றான்.

மறுபடியும் அவள், 'சும்மா இருங்க' என்று ஆரம் பிப்பதற்கு முன்பாக, அவனே 'சும்மா இருங்க' என்று சொல்லி நடித்துக் காட்டினான்.

அவள் பொய்யாக அவன் மார்பில் குத்தினாள். அவன் ஆசையாய் அதை வாங்கிக் கொண்டான்.

'நியாயப்படி நாந்தான் உங்க மேல ஆக்ஷன் எடுக்க ணும். தெரியுமா?' என்றான்.

அவள் கேள்விக்குறியாகப் பார்க்க, 'பின்ன ரெண்டு பொண்ணுகளும் சேர்ந்துட்டு என்னை முட்டாளாக்கு நீங்க, இல்ல? இதுல உன் ஃப்ரெண்டு சொர்ணா இருக் காங்களே... அவங்க ஒரு விளக்கம் வேற' என்றான்.

அவள் குபீரென்று சிரித்தாள். 'ஆமா, சொர்ணா சொன்னா. பரவாயில்லடி. உனக்கு டபக்குன்னு அந்த



நேரத்துல விளக்கம் தோணுச்சேன்னு கூட நான் கேட் டேன்' என்றாள்.

'அதுலதான் நான் கொஞ்சம் ஏமாந்துட்டேன். இருக் குமோ... அப்படின்னு கூட எனக்கு சந்தேகம் வந்தது. அப்படி ஒரு விளக்கம். என் பேரு சொர்ண புஷ்பா. அதை மொழிபெயர்த்தா, பொன்மலர்ன்னு வரும். அதனால நான் தான் பொன்மலர். அப்படின்னு வெச்சுக்கிட்டேன். நாந்தான் பொன்மலருன்னு அடிச்சு சொன்னாப்பல' என்றான். கண்களில் லேசான கோபம் கூட ஏறியது.

அவள் மறுபடியும் சிரித்தாள்.

'சிரிக்காதடி' என்று அவன் சற்று நேரம் அவளைப் பேசவிடாதபடி செய்தான்.

அவனுடைய பதில்களினாலும், கேள்விகளினாலும், உடல் மொழியாலும் அவளை திகைத்துப் போய் அவன் மார்பிலே ஒட்டிக் கொண்டாள்.

'ஆனா எப்படியோ நம்ம கதையோட ஆரம்பத்தி லேயே இதுதான் நடக்கப்போகுது அப்படின்னு சொர்ணா முடிவு பண்ணிட்டா. அதுக்காகவாவது சொர்ணாவுக்கு நான் நன்றி செலுத்தணும். அதான் அவங்க வீட்டுக்கு சொல்லியிருக்கேன். ஒரு நல்ல மாப்பிள்ளையா..' என்றான்.

அவள் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

'ஆமா, நீ சொல்லுவியே, குடும்பம்னா என்னன்னு, அன்புன்னா என்னன்னு தெரிஞ்ச ஒரு நல்ல ஆளா ரெக்கமண்ட் பண்ணியிருக்கேன். இனிமேல் உன்னோட சொர்ணாவும் ஹேப்பியா இருப்பாங்க. ஓ.கே.வா..?' என்றான்.

அவள் முகம் மலர்ந்தது. சட்டென்று அவள் முகம் நோக்கி குனிந்தான். சற்று நேரம் அவளைத் திணறடித்து விட்டு பிறகு நிமிர்ந்து சொன்னான். 'எந்த பாயின்ட்ல நான் ரொம்ப உண்மையா, உன்னைத் தீவிரமா காதலிக்க ஆரம்பிச்சேன், தெரியுமா?' என்று கேட்டான்.

அவள் வெட்கத்துடன் பார்க்க, 'சொர்ணா ரொம்ப நல்ல பொண்ணு. அவளை நீங்க கூட கல்யாணம் பண்ணிக்கலாம்னு ரெக்கமண்ட் பண்ண பார்த்தியா? அந்த நிமிஷத்துலதான் ஐயா சுத்தமா கவுந்தேன்' என்றான்.

'போதுமே, ரொம்ப கவுந்திட்டீங்க. அதுக்கப்புறம் தானே ரொம்ப மிரட்டினீங்க' என்றாள்.

'ஆமா, இன்னொண்ணு தெரியுமா? நீங்க சுபாஷ் அப்படின்னு ஒரு நாள் கூப்பிட்டீங்க பார்த்தீங்களா? அன்னைக்கு எங்களுக்கு உங்களோட மனசு ஃபுல்லா புரிஞ்சுடிச்சுல்ல. அதுக்கப்புறம்தானே விளையாட்டே ஆரம்பிச்சோம்' என்றான்.

'அப்புறம் ஏன்? என்னைப் பத்தி யோசனை பண்ணிட்டுப் போய் வண்டியை மரத்துல முட்டினீங்களாம்?' என்றாள்.

'இல்லை. எனக்கு திடீர்னு தோணிடுச்சு. நீயும் கொஞ்சம் ஸ்ட்ராங் பர்சனாலிட்டிதான். இந்த அந்தஸ்துனால இந்த கல்யாணம் ஒத்துவராது அப்படின்னு சொல்லி, அந்த பாயிண்ட்ல ஸ்டேண்ட் பண்ணிருவியோ? அப்படின்னு கொஞ்சம் கலக்கமா போச்சு. அது இந்த காதெல்லாம் வந்துச்சுன்னா, எப்பேர்ப்பட்ட மனிதனையும் கொஞ்சம் ஆட்டி வெச்சுரும் தெரியும்ல' என்றான்.

'இல்லைங்க. இப்பகூட எனக்கு அந்த பயம் இருக்கு' என்றாள் அவள்.

அவன் அவளை அன்புடன் அணைத்துக் கொண்டான். 'எப்பவுமே உனக்கு அந்த பயம் தேவையில்லை. ஒரு விஷயம் புரிஞ்சுக்கோ. எங்க ஃபேமிலி ஒண்ணும் எடுத்தவுடனேயே பணக்காரங்களா இல்லை. சாதாரணமாத்தான் நாங்க ஆரம்பிச்சோம். உழைப்புனாலயும், அப்பாவோட கைடன்ஸ்னாலயும், கொஞ்சம் உலகம் தெரிஞ்சுதனாலயும் இந்த அளவுக்கு வந்திருக்கிறோம். நீயும் ஒண்ணும் எந்தவிதத்திலயும் குறைஞ்சவ இல்ல. படிப்பு இருக்கு. அறிவு இருக்கு. இருக்குல்ல...' என்றான்.



'ம்ம்.. லொள்ளுதானே' என்றாள் அவள்.

'அப்படிங்கறே. லொள்ளுன்னா என்னன்னு காமிச்சுருவோமா?' என்று அவன் மேலும் சற்று நேரம் அவளிடம் விளையாடிக் கொண்டான். அவளும் இடம் கொடுத்தாள்.

'என்னுடைய சக்திக்கு தகுந்த மாதிரி உன்னுடைய திறமை எதுன்னு கண்டுபிடிச்சு, நீ உழைச்சியே..' என்றான்.

'ஆமா. நானும் உங்ககிட்ட கேட்கணும்னு நினைச்சேன். என்ன விஷயம் உங்களுக்கு என்னை பிடிக்க வெச்சது?' என்று கேட்டாள்.

'அதுதான் அம்மணி சொல்ல வர்றேன். உன்னோட சக்திக்கு பார்ட் டைமா ஒரு வேலை செஞ்சு குடும்பத்தை சேவ் பண்ணனும்னு நினைச்சியே.. அது பிடிச்சது. இப்படி அழகா, எளிமையா டிரெஸ் பண்ணிட்டு அலையறியே.. அது பிடிச்சது. அன்னிக்கு எல்லாரும் தூங்கிப் போனாக்கூட ஏதோ ஒரு விஷயம் தப்பா இருக்கு. அந்த பெரியவரோட குரல்ல ஏதோ ஒரு வித்தியாசம் தெரியுதுன்னு கண்டுபிடிச்சு, எதிர்த்த வீட்டுக்கு குரல் கொடுத்து, அவங்களைக் கூப்பிட்டு, அந்த நாயக்கர் வீட்டு தாத்தாவுக்கு ஹெல்ப் பண்ணினியே.. அது பிடிச்சது. இரத்ததான முகாம்ல பார்த்தேன் பார்த்தியா, அப்ப இன்னும் கொஞ்சம் ஐயா தன்னை இழந்துட்டார்னு வையேன்' என்றான்.

அவள் அவனுடைய புகழ்ச்சியைக் கேட்டு வெட்கத்துடன், 'போதும் ரொம்ப ஒண்ணும் புகழ வேண்டாம்' என்றாள்.

'இல்லைடா.. வெறும் ஃபிஸிகல் பர்சனாலிட்டியைப் பார்த்து நான் அட்ராக்ட் ஆகிடலைன்னு நீ புரிஞ்சுக்கணும் இல்ல. நான் உன் மேல வெச்சிருக்கிற ஜெனியூனான அஃபெக்ஷன் உனக்குத் தெரியணும் இல்லை. அது சரி. இப்படி ஏதாவது எங்கிட்ட பிடிச்சதா அம்மணிக்கு இல்லையா? கொஞ்சம் சொன்னா காது குளிர கேட்டுக்குவோம்ல' என்றான்.

அவள் அவனை நிமிர்ந்து பார்த்துவிட்டு வெட்கத்துடன், 'ரொம்ப மிரட்டினீங்களே.. அது ரொம்ப பிடிச்சது' என்றாள்.

'ரியலி..' என்று அவன் ஆச்சர்யமாகச் சிரிக்க, 'ஆமா, என்னதான் நீங்க மிரட்டினாலும் அதுல ஒரு தீவிரம் இல்லை. அது ஏதோ எனக்கு வித்தியாசமா தெரிஞ்சது. ஏதோ ஒரு உரிமையா பண்ற மாதிரி தெரிஞ்சது. அது என்னை கொஞ்சம் டிஸ்டர்ப்தான் பண்ணுச்சு' என்றாள்.

'அப்பாடா, இப்பத்தான் மனசுக்கேத்த ஒரு விஷயமா வந்துருக்கு' என்றான் அவன்.

'பொன்மலர், உனக்கு இன்னொரு விஷயம் சொல்லணும்' என்றான்.

'சொல்லுங்க', என்றாள்.

'நீங்க குடியிருக்கீங்களே அந்த வீடு, அந்த வீட்டை நான் விலைக்கு வாங்கிட்டேன். தெரியுமா?' என்றான்.

அவள் ஆச்சரியமாகப் பார்க்க, 'பின்ன எதுக்கு நான் அன்னிக்கு வந்தேன். உன்னைப் பார்க்கறது மட்டும் இல்லை. வீராசாமி அண்ணா சொன்னாரு, அந்த வீட்டுல குடியிருக்கிற பெரியவங்க ரெண்டு பேரும் அந்த வீட்டை விற்கிறதா பிளான் பண்ணிட்டு இருக்காங்கன்னு. சரி, வாங்குவோம். அப்படின்னுதான் வந்தேன். ஏன்னா அவங்க குழந்தைங்க எல்லாம் ஃபாரின்ல இருக்காங்களாம். அவங்க யாரும் இங்க வரப் போறதில்ல, அப்படிங்கறதால வீட்டை வித்தரலாம். ஆனா அவங்களோட சொந்த வீடுங்கறதால, அவங்க ஆயுசு வரைக்கும் அங்க இருக்கறதுக்கு வசதியா பர்மிட் பண்றவங்ககிட்டதான் விக்கிறது அப்படிங்கிற ஒரு முடிவுல இருந்தாங்க. அதனால வாங்கிட்டேன்' என்றான்.

இப்போது பொன்மலருக்குப் புரிந்தது. திடீரென்று இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்பாக, அவர்கள் வீட்டுக்கு ஆர்.சி. போடுவதாக வாக்கு கொடுத்தார்களே.. அதெல்லாம் இவரோட ஏற்பாடுதானா?' என்று.



'உங்க அப்பாவுக்கும் நல்ல இடத்துல வேலை சொல்லியிருக்கேன். அவரோட கெபாசிட்டிக்கு தகுந்த மாதிரி வேலை. ஓரளவு நல்ல சம்பளமும் வாங்கித் தர்ற மாதிரி ஏற்பாடு பண்ணியிருக்கேன். உன்னோட சிஸ்டர்ஸ் ரெண்டு பேரோட ஃபியூச்சரையும் பத்தி நீ கவலைப்பட வேண்டியதில்லை. அவங்களுக்கு என்னென்ன செய்யணுமோ, நான் செய்வேன்' என்றான்.

அவள் நெகிழ்வுடன் அவனைப் பார்த்தாள். லேசாகக் கண்களில் கண்ணீர் கட்டியது.

'ம்ம்... வேண்டாம். வேண்டாம். இதெல்லாம் வேண்டாம். உனக்கு உண்மையிலேயே எனக்கு நன்றி சொல்லணும்னு இருந்தா, வேற மாதிரி நீ சொல்லலாம்' என்றான்.

அவள், 'இனிமே அதுதானே எனக்கு வேலை. லைஃப் லாங்கா..' என்று சொல்லிவிட்டு, அதேவேகத்தில் அவன் மார்பில் முகத்தை புதைத்துக் கொண்டாள். அந்த வெட்கத்தை அவன் ரசித்து சிரித்தான்.

'பொன்மலர்! நீ என் உயிர் அப்படிங்கறது, நீதான் பொன்மலர் அப்படின்னு தெரிஞ்சதுமே புரிஞ்சு போச்சு. அந்த கோவில்ல உன்னைப் பார்த்தேன் பாரு. அப்ப இருந்தே உன் மேல எனக்கு ஒரு ஆர்வம் இருந்துச்சு. அதுக்கப்புறம் அந்த இரத்ததான முகாம்ல பார்த்தவுடனே தெளிவா இவள்தான் உனக்கான ஆள் அப்படிங்கறது மனசுல பதிஞ்சிருச்சு. அப்படி உயிருக்குள்ள உன்னைப் பத்தின நினைப்பு, தேன் மாதிரி இனிமையா வளர்ந்துட்டே இருந்திருக்கு. தெரியுதா? 'உடம்பை வளர்த்தேன், உயிர் வளர்த்தேனே' அப்படின்னு திருமூலர் பாட்டோ, என்னவோ படிச்சிருக்கேன். அது மாதிரி உயிர்ல உன்னை வளர்த்தேன். நீ என் உயிர் வளர் தேன்' என்றான் அவன் சிலேடையாக.

'தமிழ் கூட நல்லா பேசறீங்களாட்ட இருக்கு' என்றாள் அவள் குரலே எழும்பாத ஒரு குரலில்.

'வேற எல்லாமே நல்லா பேசுவோம். பேசறது மட்டும் இல்லை. செயல்லயும் நாங்க கெட்டிக்காரங்க தான்' என்றான்.

'சே. உங்ககிட்ட பேசவே முடியாது' என்றாள் அவள்.

'பேசாதேன்னுதான் நான் சொல்றேன்' என்றான்.

'சரி. நான் பேசாம இருக்கேன். ஆனா, அதை மட்டும் இன்னொரு தடவை சொல்லுங்க' என்றாள்.

'எதை?' என்றான் அவன்.

'இப்ப சொன்னீங்களே.. அது ஏதோ உயிர் வளர்த் தேனே...' என்று கேட்டாள் அவள்.

அவன் சட்டென்று டேபிளில் இருந்த ஒரு பேடை எடுத்து, அதிலே எழுதிக் காட்டினான்.

உயிர் வளர்த்தேனே!

உயிர் வளர்(த்)தேனே.. என்று சிலேடையாக்கிக் காட்டினான்.

அவள் வெட்கத்துடன் அவன் மார்பில் முகம் புதைத் தாள்.

அவனது அந்த வருணனைக்கான நன்றியை பல விதங்களில் வெளிப்படுத்தினாள். அந்தஸ்தை மீறிய அன்பு அங்கே மழையாகப் பொழிந்தது.

இரண்டு உள்ளங்களுக்கிடையே இணைப்பு ஏற்படு மானால், எந்தத் தடையும் தடையாக இருக்காது என்பது அங்கே நிரூபிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. இரண்டு உள்ளங்களிலும் மகிழ்வே பொங்கிக் கொண்டிருந்தது. இனி வர இருக்கும் வாழ்விலும் அதுவே பொங்கி வழி யும் என்பதை உணர்ந்து, இருவரும் தங்களை மறந்து, சிரித்து மகிழ்ந்தார்கள்.

திருமகள்
நிலையம்

